
செ. யோகநாதன்

நாவல்கள்





செ. யோகநாதன் நாவல்கள்

பாகம் : ஒன்று



ராஜராஜன் பதிப்பகம்
19, கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர்,
சென்னை - 600 017

Rs. **100**

SE. YOGANATHAN NOVELGAL - PART I

by

SE. YOGANATHAN

First Edition 2004

Published by

RAJARAJAN PATHIPPAGAM

19 Kannadhasan Salai

T. Nagar, Chennai - 600 017

Typeset at

Skill Computers

Chennai - 600 018

Printed at

Mani Offset

Chennai - 5

பொருளடக்கம்

1. இரவல் தாய்நாடு 11

2. சாதிகள் இல்லையடி பாப்பா! 72

3. இருள் கொண்ட அறைகள் 115

4. கண்ணில் தெரியுதொரு தோற்றம் 151

நானும், நான் சொல்கிற கதைகளும்

அசைவற்று நிற்கின்ற பசிய வாழைமரங்கள்.
தரையைக் கீறி மெதுவாகத் தலை உயர்த்துகிற
அவற்றின் கன்றுகள். இவற்றின் பின்னே
உயர்ந்து நிற்கின்ற பப்பாசி மரங்களில்
குலையாகக் காய்ந்த்திருக்கின்ற காய்களிடையே
அடிப்பாகம் சிவந்திருக்கிற அரைப் பழங்கள்.
அவற்றைக் கொத்த முடியாமல் இனத்தை
அழைக்கின்ற இரண்டு காகங்கள். பப்பாசிக்குத்
தோழனாக உடலெல்லாம் முட்கள் போர்த்த
முருக்கமரம். பப்பாசியின் நிழல் கோட்டின் கீழே
பிஞ்சும் பூவுமாய் மாதுளை மரம். அதனடியினிலே
சுறுசுறுப்பாக ஓடி விளையாடிப் பாட்டுப்
பாடித் திரிகின்ற அணிற் பிள்ளைகள்.
அணிற் பிள்ளைகயோடு ஒரு பிள்ளையாக
விளையாடிட ஆர்வ முறுகின்ற
எனது மகள் ஜெயபாரதி.....

இந்தத் தொகுதிக்கு முன்னுரை எழுதுவதற்காய்
இம்மேசையிலே உட்கார்ந்திருக்கையில்

என்னெதிரேயுள்ள ஜன்னலின் வழியாக
நான் காண்கின்ற காட்சிகள் இவை.
இந்தக் காட்சிகளை என் கண்ணெதிரே இழந்து,
என் முன்னே பழகி என்னோடு அறிமுகமான
பாத்திரங்களையெல்லாம் அர்த்தத்தோடு நான் கதை
களாக எழுதியதெல்லாம் இம்மேசையிலே இருந்துதான்.
இதுபோலவே இருபது வருஷங்களாக வெவ்வேறு
மேசைகளிலும், மேசைகளே இல்லாமலும், மத்தியான
வேளைகளில் ஆறுதலாயும், ஓர் இரவின் நடுநிசிவரை
அவசரமாயும், ஆத்திரத்தோடும், சாந்தமாயும்,
கிளர்வினோடும் எனது சிருஷ்டிகளை
உருவாக்கியிருக்கின்றேன்.

ஆயினும் என் கதைகள் தானாக உருவானவையல்ல.
என் சூழ்நிலை உந்துதல்கள், எனது நம்பிக்கைகள்,
இளவயதிலேயிருந்து நான் பங்கு கொண்டு
நேசித்து, பயின்று, ஊர்வலம் வந்து, எனது
இயலுகின்ற உடனடித் தன்மையான எழுத்தையளித்து
வரும் நான் பிணைந்துள்ள இயக்கத்தின் கோட்பாடுகள்
நான் பிறந்ததிலிருந்து இன்றுவரை கண்டு பேசி,
மகிழ்ந்து, கலந்து உறவாடி, துன்புற்று அந்தத்
துன்பங்கள் ஒழிந்து போக விரும்புகின்ற மக்கள் மேல்
நான் கொண்ட நேசம் ஆகியவையினாலே
என்னில் விளைந்த சிந்தனையும், சீற்றமும்,
நம்பிக்கையும், நம்பிக்கையீனமும், ஆவேசங்களும்,
நெகிழ்வுகளுமே என் கதைகளாக மாறின.

எனவே இவையெல்லாம் எனது வாழ்வின்
குறிப்புகளே. இவ்விதத்தில் எனது மூன்று
குறுநாவல் தொகுதிகளிலும், இரண்டு
சிறுகதைத் தொகுதிகளிலும், நூலுருப் பெறாத
கதைகள், கட்டுரைகள், கவிதைகள், நாவல்களிலும்
இந்த அம்சங்களையே எனது வாசகர்கள்
தரிசிக்க முடியும். தனி மனித, தேசிய, சர்வதேசிய
வாழ்வினில் நடந்தொழிந்த, நடைபெறுகின்ற
விஷயங்களையே எனது பாத்திரங்கள் விமர்சித்து,
விவாதித்து, ஏற்று - சினத்தோடு மீறி, கால்களினாலே
மிதித்து துவம்சம் செய்து, கைகளால் ஏற்று
கண்களில் ஒற்றிக் கொள்ளுகின்றன. இவர்களோடு
நான் இருக்கிறேன்; இல்லாமலும் நிற்கின்றேன்.
ஆயினும் இங்குமங்குமாய் என்னோடும்
உங்களோடும் கலந்து நிற்கின்றவர்களே இவர்கள்.
கொஞ்சம் நினைவைச் சுரண்டிப் பாருங்கள்.
நீங்களே இதனை ஒப்புக் கொண்டு,
''அடடா, இவனை, இவளை, இவற்றை
நாமே சந்தித்திருக்கின்றோமே...'' என்று
சந்தோஷம் கொப்புளிக்கத் துணுக்குறுவீர்கள்.
மறுகணம், ''நாமே இவற்றை எழுதியிருக்கலாமே...''
என்றுகூட அங்கலாய்ப்பீர்கள்.

எழுதிவிட்டு நிமிர்கையிலே என் மேசையெதிரே
ஜன்னல் கம்பிகளைப் பிடித்தபடி அகல விரித்திட்ட
கண்களுடன், எதையோ கேட்க நினைக்கின்ற
இதழ்களின் துடிப்போடு ஜெயபாரதி நிற்கின்றாள்.

என் முகத்தின் உணர்ச்சியினை வாசித்தே
அவள் கதைப்பிற்கு பழகி விட்டாள்.
நான் மலர்ந்தேன்.
''அப்பா, என்ன செய்யிறீங்கள்?''
''கதை எழுதிறன்...''
''கதையா எழுதிறீங்கள்?''
''ஓம்...''
சிறிது நேரம் யோசிக்கின்றாள். ஐந்துவயது யோசனை.
''ஏனப்பா கதை எழுதிறீங்கள்?''
இவள் ஐந்து வயதினை மீறிய சுட்டி. நான் எதைச்
சொல்லலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கையிலே
ஜன்னல் கம்பிகளின் ஊடே வளையமிட்டுப்
பறக்கின்றது ஒரு வண்ணாத்திப்பூச்சி. கறுப்புப்
பின்னணியில் மஞ்சளும் வெள்ளையுமாகப் பொட்டிட்ட,
கண்களுக்கு இனிய வண்ணாத்திப்பூச்சி.
இயக்கந் தெரியாத சுறுசுறுப்பான கீற்றுக்
கால்களுள்ள வண்ணாத்திப்பூச்சி. இவளின்
பரபரக்கின்ற கண்களில், முகத்தில்
மின்னுகிற ஆர்வம். வளைய வந்த
வண்ணாத்திப் பூச்சி லாவகமாய்க் கீழே
பதிந்து, குறுக்குப் புறமாய் உருவிப் பறந்து
மாதுளம்பூவில் சென்று மலர்ப் பூஞ்சிறகுகளை
விசிறி மெல்லவே கவிந்து
உட்காருகின்றது இவளின் கண்களோடு.
''அப்பா... அதைப் பிடிச்சுத் தாருங்க...''
கெஞ்சலோடான மெல்லிய பிடிவாதம். அந்தப்
பூச்சியைப் பிடிக்க இவளே பறந்திடுவாளோ என

நினைக்கத் தூண்டுகின்ற ஏக்கம் கண்களிலே.
வசப்படாத காரியம் என்று முடிவோடு
நான் பதில் கூறுகின்றேன்.
''அண்ணாவைக் கூப்பிட்டுப் பிடியுங்கோ... அப்பா
கதை எழுதவேணும்... சத்யன். தங்கச்சிக்கு
இந்த வண்ணாத்தியைப் பிடிச்சிக் குடுங்கோ...''
அவளின் முகத்திலே வசீகரமான கோபம், சந்தோஷம்
வாடுகின்ற வதனத்தோடு ஜன்னலடியிலிருந்து இறங்கி
மாதுளம்பூக்களைத் தேடுகின்ற வண்ணாத்திப்
பூச்சியைப் பார்த்தவாறே எனக்காக அவளின்
முணுமுணுப்பு:
''அப்பாவுக்கு நெடுகக் கதை எழுதிறதே வேலை!''
இப்போது எனக்குச் சிரிப்பு. இவளின் வார்த்தைகள்
மீண்டும் மனதின் செவிகளிலே;
''ஏனப்பா கதையெழுதிறீர்கள்?''
நான் எழுதத் தொடங்கிய நாளிலிருந்தே இதைப் பற்றிய
பூரண பிரக்ஞை எனக்குண்டு. 'கிருதயுகம் எழுக!' என்று
உரைத்த பாரதியின் குரல் கொண்ட, யுகமாற்றம்
வேண்டுகிறோர் அணியிலே நான் ஒருவன்.
இந்த எழுத்துக்களை, கதைகளை அதற்காகவே
எழுதுகிறேன் என்று என் சின்னஞ்சிறு மகளிடம்
இப்போது சொல்லியென்ன... ஆனால்
என் நம்பிக்கை இது:
எனது மகள் பெரியவளாகி, இக்கதைகளை
வாசிக்கையில், எனது கதையில் பல
அவளின் ஆச்சரியத்துக்கு உரியவனாய் -

நம்பமுடியாதவையாய் - இவையெல்லாம்
அப்பாவின் காலத்தில் நடந்தனவா எனச்
சினக்க வைக்கிற மனச் சுருக்கத்தினை
அளிக்குமென நம்புகிறேன். ஏனென்றால் -
என் மகள், எனது கதைகள் சித்தரிக்கிற
பிரச்சினைகள், கொடுமைகள் நீங்கிய
பொற்காலத்திலே தான் வாழ்வாள். அப்போது
இந்த ஜன்னலின் பின்னே இருந்து அவளது
தகப்பன் கதைகள் எழுதியதற்கான
காரணத்தை அவள் தெளிந்து கொள்வாள்.

இந்த வாழை இலைகள் மனதினுள் இறைக்கிற பசுமை -
வண்ணாத்திப் பூச்சியின் சுறுசுறுப்பு - மாதுளம்பூக்களின்
புன்னகை - இவையாக நான் உணர்கிற திரு.நர்மதா
ராமலிங்கம் இல்லாவிடில் அழகிய இத்தொகுதி
சாத்தியமேயில்லை. கவிஞன் 'பாப்ரியா' எனது
எல்லா முயற்சிகளிலும் பங்காளி. இருவருமே
என்னால் மறந்திட முடியா நன்றிக்குரியவர்கள்;
அவர்களுக்கு என் நன்றிகள்.

செ.யோகநாதன்.

செ. யோகநாதன் நாவல்கள்

பாகம் : ஒன்று

இரவல் தாய்நாடு

1

அந்தத் தந்தியின் வாசகங்கள் என்னைத் திடுக்கிட வைத்து, பின்னர் இனிமையானதொரு மகிழ்விலே கொண்டு வந்து நிறுத்தின. திடீரென்று ஒரு நாள் அமெரிக்காவிலிருந்து, தான் இலங்கைக்கு வந்து குதிக்கப் போவதாக இடையிடையே அருளம்பலம் எனக்குக் கடிதங்களில் குறிப்பிட்டிருந்த போதிலும், அவை எனது மனந்தனிலே வெறுஞ் சொற் கூட்டங்களாலேயே எழுதப்பட்டிருந்தன. இப்போது அச்சொற் கூட்டங்கள் உண்மை வடிவாகி அவன் நாளைய மறுதினம் இலங்கையிலே காலடி எடுத்து வைக்கப் போவது உண்மையாகின்றது.

தான் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கின்ற மில் வாக்கியையும், தனது பிறந்த மண்ணான ஆம்பலூரையும் ஒப்பிட்டுப் பார்த்து அவன் எனக்கு எழுதியிருந்த கடிதத்தின் வரிகள் இப்போது அர்த்தம் பொதிந்த தாபத்தோடு எனது காதுகளில் கேட்கின்றன...

அவனை இப்பொழுது நினைக்கையிலும், பதினைந்து வருஷங்களுக்கு முந்திய முகமே மனதிலே தோன்றி வடிவழிகின்றது. இடையே நான் கேட்டுக் கொண்டதின் பேரில் இரு புகைப்படங்களை எனக்கு அனுப்பி வைத்திருக்கின்றான். ஆய்வுக்கூடத்தில் இருக்கின்ற போது ஒரு பத்திரிகைக்காக அதன் நிருபரே எடுத்த புகைப்படம்.

அவனது அந்தத் தீட்சண்யமான உருண்ட கண்கள், கண்ணாடியின் பின்னும் சுடர் விட்டுத் தெரிந்தன. நெற்றியினை மூடிய அடர்கேசம், கூரிய மூக்கு, முன்னரைவிட முகத்தினில் சதை வைத்து குறுந்தாடியோடு இலேசாக உருவம் மாறியிருந்தான். பார்த்தவுடன் மரியாதையை நெஞ்சினுள் எழுவிக்கின்ற தோற்றம். எப்படியிருப்பினும் பதினைந்து

வருஷங்களிற்கு முந்திய முகமும், அவனது அட்டகாசச் சிரிப்புந்தான் இப்போதும் எல்லாவற்றையும் மீறிக் கொண்டு எனக்கு முன்னே தோன்றி, பரிச்சயங் கொள்கின்றன.

அருளம்பலமும் நானும் பாலவகுப்பிலிருந்து ஒன்றாகவே படித்தோம். பல்கலைக் கழகம் சென்றோம். அவன் பல்கலைக் கழகத்திலேயே விரிவுரையாளனாகி, பின்னர் புலமைப் பரிசில் பெற்று அமெரிக்கா சென்று, புலமைப் பரிசுக் காலம் முடிந்ததின் பிறகு அந்தப் பல்கலைக் கழகத்தின் பிடிவாதமான வேண்டு கோளின் பேரில், விவசாய ஆராய்ச்சிப் பிரிவிலேயே தரித்து விட்டான். அவனது ஒரே உறவாயிருந்த தாயாரும் இறந்து போய்விட்டாள். அதற்கும் அவனால் ஊருக்கு வரமுடிய வில்லை. இங்கிருந்து போனநாளிலிருந்து என்னோடு வாஞ்சை யான தொடர்பு வைத்திருக்கிறான், பதினைந்து வருஷங்கள்!

இலங்கைப் பத்திரிகைகளிலே அவனது பெயர் அடிக்கடி அடிபடும். பிறநாட்டு சஞ்சிகைகள் பெருந்தொகை பணம் சன்மானமாகக் கொடுத்து அவனிடம் வாங்கிப் பிரசுரித்த கட்டுரைகளை இப்பத்திரிகைகள் நன்றி தெரிவித்து மறு பிரசுரஞ் செய்து கொண்டிருக்கின்றன. யூனெஸ்கோவின் விவசாய ஆராய்ச்சிப்பிரிவு, அவனது பல ஆய்வுகளை வழவழப்பான தாளிலே தடித்த புத்தகங்களாக வெளியிட்டிருக்கின்றது. உலக உணவு விவசாய நிறுவனம் சிறந்த ஆய்வாளனாக அவனைத் தெரிந்தெடுத்து மூன்று ஆண்டுகளுக்கு தொடர்ந்து தங்கப் பதக்கங்களை வழங்கியிருக்கின்றது.

யூனெஸ்கோவின் விருப்பத்தின் பேரில் ஸாம்பியா, நைஜீரியா, பொஸ்வானா ஆகிய இடங்களிற்கு விவசாயப்பிரிவு ஆலோசகனாக ஒன்பது மாதங்கள் சென்று கடமையாற்றி யிருக்கின்றான் அவன். பூகர்ப்பத்தின் விவசாய அறிவாளி களிடையே அவன் மதிப்பு வாய்ந்தவன். இவற்றையெல்லாம் எனது நண்பர்களுக்கு நான் தெரிவிக்கின்றபோது என்னை யறியாத பெருமிதம் என்னை ஆட்கொண்டு நான் உற்சாகமாகி விடுவேன். இதே வேளையிலே, கடந்த பதினைந்தாண்டு காலமாக ஒரேபாடப் புத்தகங்களினை இராகம் தப்பாமற் சொல்லிக் கொடுக்கின்ற எனது ஆசிரியத் தொழிலையும் நினைத்து என்னையறியாமல் இலேசாக வருத்தப் பட்டிருக்கின்றேன். இது இலேசான காயமே ஆயினும், தொடுகின்ற நேரமெல்லாமல் வலிக்கின்ற மாறாத ரணமென நான் உணர்கின்றேன்.

நான் மாணவனாயிருந்து படித்த காலத்திலே - படித்ததைத் தான் இன்னும் பயிற்றுவித்து வருகின்றேன். ஆனால் நான் மாணவனாயிருக்கையில் இருந்த உலகம் எவ்வளவிற்கு பழமையாகி விட்டதென்பதை அருளம்பலத்தின் நீண்ட கடிதங்கள் எனக்குப் பிரத்தியட்சமாக உணர்த்தி நின்றன. மாறி முன்னேறி வருகின்ற விஞ்ஞானப் புதுமைகளைப் பற்றி ஆர்வந்தொனிக்க எளிமையோடு மிகவும் விளக்கமாக அவன் நீண்ட கடிதங்களை எழுதுவான். அப்படி எழுதிக் கொண்டிருக்கையில், அவனுக்குள்ளே பிறந்த மண்ணினைப் பிரிந்திருக்கிற தாபம் சிலிர்த்துக் கொண்டெழுந்து விடுவதையும் நான அநேக தடவைகள் உணர்ந்திருக்கின்றேன்:

''மில்வாக்கி நகரின் வயற்பரப்பிலே நின்று மண் பரி சோதனை செய்து கொண்டிருந்தபோது திடீரென்று எங்களூரின் நினைவு வந்தது. வயல் வரம்பெல்லாம் நடந்து திரிந்து வயலின் முடிவிலேயுள்ள பரட்டைக் காட்டினுள் கொய்யாப் பழங்களைப் பிடுங்கித் தின்ன வேண்டும் என்ற மூர்க்கமான ஆசையும் மனதினுள்ளே இடறியது. நாதன், எப்படித்தான் இருப்பினும் எங்களூரின் பனைவடலிகளின் நடுவேயிருந்து புதிதாக இறக்கிய நுரை புஸி புஸிக்கின்ற பனங் கள்ளினை ஊதி ஊதிக் குடித்துவிட்டு, நெடுங்குளத்தில் விழுந்து சுழியோடி மகிழ்வதற்கு நிகராக உலகிலே என்ன இன்பம் இருக்க முடியும்?''

அவனது இவ்வரிகள் என்னைப் பேராச்சரியத்தினுள் அமிழ்த்தும், மறுகணமே அவனது வியப்பிற்குரிய சுபாவத்தினை எண்ணி நான் புன்னகை செய்து கொள்வேன்.

அவனை ஆம்பலூருக்குக் கூட்டிச் செல்ல வேண்டும். நகரத்திலே வந்து குடும்பமாய் ஊன்றிய பின்னர் நானும் ஆர்வத்தோடு கிராமத்திற்குச் செல்ல வாய்ப்புகள் இருக்க வில்லை. அருளினது விருப்பப்படியே குளத்தினைத் துளாவி, நுரைக்குமிழி விடுகின்ற புதுக்கள்ளினை மாந்தி, வயல் வரப்புகளில் நடந்து போய் பரட்டைக் காட்டினுள் சிறு கொய்யாப் பழங்களையும், காரைக்காய்களையும் பிடுங்கித் தின்று, (இப்போது ஈச்சமரங்களில் பிஞ்சுதான் பிடிக்கத் தொடங்கியிருக்கும்.) ஒன்றையடிப் பாதையினால் நடந்து போய், வீதியிலே - வேப்பமர நிழலிலேயுள்ள தென்னோலை வேய்ந்த சின்னக் கடையிலே அவித்த பனங்கிழங்கு வாங்கிப்

பிளந்து, பீலியினை வீசிவிட்டு தும்பு நீக்கி முறிமுறியாக்கித் தின்ன வேண்டும். முற்றலில்லாத நல்ல குருத்துக்கிழங்காக, அதுதான் அருளுக்கு நல்ல விருப்பம்.

தந்தியின் வாசகங்கள் என் மனதினுள்ள எழுப்பிய மகிழ்வு, பரபரப்பாக சிறகடித்துப் பறந்து திரிகையில் திடீரென்று என்னுள்ளே மெலிதான வேதனை பரவி வருவதனையும் நான் உணர்ந்து கொண்டேன். வெளியே - இதோ என் கண்ணெதிரிலேயே வீதியிலே பயங்கர உணர்வினையும், அச்சுறுத்தல்களையும் சல்வீனியாச் செடிகளாய் விதைத்தவாறே பொலிஸ், இராணுவ ஜீப் வண்டிகள் உறுமலுடன் குறுக்கு மறுக்காக விரைந்து கொண்டிருக்கின்றன. கவச மோட்டார்களின் அச்சந்தருகிற தோற்றமும், உறுக்குகின்ற குரலும், நீட்டிய துப்பாக்கி முனையும் யுத்த கள உணர்வினை நெஞ்சினுள்ளே எழ வைக்கின்றன.

வீதியிலே நடமாடுகின்ற மக்களின் முகங்களில் மௌனம் இறுகி உறைந்து போய்க் கிடப்பினும் அதன் அடியாழத்திலே பயங்கர உணர்வு துடித்துக் கொண்டிருப்பதை உணர முடிகின்றது. என்னுள்ளே, பிறருள்ளே, எவ்வெவ்விடத்திலும் இதுவே. இந்த நிமிஷத்திலேதான், அருளின் வருகை என்னுள்ளே சங்கடத்தைத் தோற்றுவிக்கின்றது. ஏற்கனவே தனது வருகையினைப் பற்றி அருள் எனக்குத் தெரிவித்திருப்பானாயின் இங்கு வருவதைச் சிறிது காலத்திற்கு ஒத்திப் போடும்படி அவனுக்கு எழுதியிருக்கலாம். இனி என்ன செய்வது?

அருளை, விமான நிலையத்திற்குச் சென்று கூட்டிவர வேண்டுமாயின் இன்று மாலை - அல்லது நாளைக் காலையில் நான் இங்கிருந்து கொழும்புக்குப் புறப்பட்டு விட வேண்டும்.

''எனக்கென்னவோ நீங்கள் இரவுப் பயணம் போகிறது பயமாயிருக்குது. நீங்கள் நாளைக்குக் காலையிலை வெளிக்கிடுங்கோ... எயர்போட்டிலை அவர் வந்திறங்கினதும் உடனடியாக வந்து ரயிலைப் பிடிச்சு வீட்டுக்கு வந்திடுங்கோ...''

பயம் பூசிய முகத்தினோடு என்னெதிரே நிற்கிறாள் சிவா, எனது மனைவி. இலேசிலே எதற்கும் கவலைப்படாத, கலவரப்படாத அவளது வார்த்தைகளில் நிறைந்த பயமும், படபடப்பும்.

"இல்லை சிவம், நீர் ஒன்றுக்கும் பயப்படத் தேவையில்லை. நான் காலையிலைதான் போகப்போறேன். வீட்டையும் சுத்தமாக்க வேணும். மூன் அறையை அருளுக்கு கொடுப்பம். கன காலத்திற்குப் பிறகு வருகிற அவனுக்கு நல்ல வசதிகள் செய்து கொடுக்க வேணும்."

'ஒரு வீட்டினை மில்வாக்கியில் ஏனோதானோ என்று வைத்துக் கொள்ள முடியாது. ஒரு வீட்டை - வீட்டைச் சுற்றியெல்லாம் எப்படி வைத்துக் கொள்ள வேண்டுமென்று சட்ட விதிகள் உள்ளன. எப்போதுமே பசுமை குன்றாமல் புல் குறிப்பிட்ட உயரத்திற்கு வளர்ந்திருக்க வேண்டும். வாசலின் முன்னே பூத்துக் குலுங்குகின்ற செடிகளை வளர்க்க வேண்டும்' - அருள் எப்போதோ கடிதத்தில் என்னோடு பேசியவை காதோடு கேட்டன.

எங்கள் வீட்டு முன் அறை, இப்போது புதுக்கோலம் கண்டது. அறையின் இடது புறத்து ஜன்னலைத் திறந்தால் தோகையாய் இலைகள் தள்ளி பசுமையாய் நிற்கிற வாழைக் கூட்டம்; பரபரப்பும் ஆர்வமும் தொனிக்க அறையினுள் எட்டிப் பார்க்க முனைகிறதைப் போல கண்களை நினைக்கத் தூண்டுகின்ற வாழைத் தாய்களும் கன்றுகளும். சடைத்துப் பரவி காயும் பிஞ்சுகளும் கனக்க கர்ப்பிணிப் பெண்ணின் ஆயாசத்தோடு நிற்கிற தோடை மரம். முன்புற ஜன்னல் வழியாக - மனதையும் உடலையும் வருடி வருகின்ற தென்றற் காற்றினை அணைந்து இலைகளால் எட்டித் துரத்துகின்ற வயதான வேம்பு. சிறிது குள்ளமான மல்லிகைப் பந்தல், பந்தல் கம்புகளில் ஓடிப்பிடித்து கண்களினை அலைகின்ற அணிற்பிள்ளைகள்.

இக்காட்சிகள் என் மனதில் இனிமையினைப் பெய்தன. ஒரு கணம் எனது எண்ணம் முன்னோடிச் சென்றது...

அறைக்குள் நுழைகின்றான் அருள். ஜன்னல்களைத் திறந்து விடுகின்றான். கண்கள் பளீரிட லயிக்கின்றான். அட்டகாசமிட்டுச் சிரிக்கின்றான்:

"நாதன், என்ன இனிய இடமப்பா இது... மில்வாக்கி பிச்சை வாங்க வேணும்... சா... வாழ்க்கை முழுவதும் இங்கேயே உன்னோடேயே இருந்திடலாம்..."

ஜன்னலடியில் நின்ற நான் என்னையறியாமலே சிரித்தேன். சிவாவுக்கு அதிசயமாகப் போய்விட்டது, கேட்டாள், சொன்னேன்.

''என்னவோ இனி ஒரு கரைச்சலும் வராமல் இருந்தால் சரி...''

மீண்டும் கவலையோடு சொன்னாள் சிவா.

''திடீர் திடீரென்று ஒவ்வொரு இடத்திலும் பொலிஸ்காரர் சோதனை போடுகிறார்கள். அவர்கள் என்னதான் இடையூறு செய்தாலும் பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்குது... அந்தப் பொலிஸ் இன்ஸ்பெக்டரைச் சுட்டுக் கொன்றவர்களைப் பிடிக்கிற வரையிலும் இந்த நரக வேதனை தொடரும் போலை இருக்குது...''

சிவா சொல்வது உண்மைதான். அந்தப் பொலிஸ் இன்ஸ்பெக்டர், இனந்தெரியாத இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டு ஒரு கிழமை கழிந்துவிட்ட போதிலும் இதுவரையில் யாருமே கைதுசெய்யப்பட வில்லை. முன்னர் பல இளைஞர்கள் அநியாயமாக கைது செய்யப்பட்டு குரூரமான சித்திரவதைகளுக்கு உள்ளானதற்கு காரணமாயிருந்தவர் என்பதற்காகவே இந்தப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பழிவாங்கப் பட்டார் என எங்குமே பரவலாகப் பேசிக் கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவம் நடைபெற்றதற்கு அடுத்த நாள் மாலை, சிவா பாடசாலையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கையில் அவள் வந்த மோட்டார்காரும் பொலிஸாரின் பரிசோத னைக்குள்ளாயிற்று. வெளியே எல்லோரையும் இறக்கிக் கைகளை உயர்த்திக் கொண்டு நிற்கும்படி கட்டளையிடப் பட்டது. காரையே புரட்டிப் புரட்டி எடுத்தார்கள். எட்டு வயதுச் சிறுமி - ராணியின் டிபன் காரியரையும் கழற்றித் தட்டுத் தட்டாகச் சோதித்தார்கள். காரில் ஏறிக் கொண்டதும் ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை.

வெட்கையும் அழுகையும் அவமானமும் பிடுங்கித் தின்றன அவர்களை. கண்களிலே நீர் முட்டிற்று. சிவா அன்றிரவு மூழுவதும் கண்ணுறங்கவில்லை. கொதிக்கப் பதைக்கின்ற வெய்யிலிலே, காரிலிருந்து தங்களைக் கீழே இறக்கிவிட்டு கைகளை உயர்த்தி வரிசையாக நிற்க வைத்து பொலிஸார் மேற்கண்ட அருவருக்கத்தக்க பரிசோதனைகளையும், அவர்கள் பொழிந்த வகைமாரிகளையும் நினைத்து அவன் வெந்து வெதும்பிக் கொண்டிருந்தாள்.

''கொலை செய்த குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கட்டும். அதைப்பற்றி ஒன்றுமில்லை. அது அவர்களுடைய கடமைதான்.

ஆனால் கண்ணுக்குப் படுகிற எல்லோரையுமே குற்றவாளிகளாக நினைத்து அவமரியாதை செய்கிறதைத்தான் பொறுக்க முடியேல்லை... காரிலை வந்த பிள்ளைகளெல்லாம் பயந்து ஏங்கி விட்டுதுகள்...''

தளதளத்த சிவாவை நான் தேற்றினேன்.

அந்தச் சம்பவம் நடைபெற்று ஏழு நாட்களாகி விட்டன. முதல் நாள் ஏற்பட்ட அனுபவத்திற்குப் பின்னர, பாடசாலைக்கு 'சுகவீன லீவு' அனுப்பிவிட்டு வீட்டிலேயே நின்று விட்டாள் சிவா.

2

''எனது ஆய்வுக் கூடத்தில் வேலை செய்து கொண்டிருக்கையிலும், மாணவருக்கு விரிவுரையாற்றுகிற வேளையிலும் நான் பிறந்த ஆம்பலூரின் யோசனை அடிக்கடி என்னுள்ளே முளைத்தெழும். அமெரிக்காவிலிருந்து விவசாயத்துறைக்கு செய்கிற முன்னேற்றங்களை நான் பிறந்த தேசத்திற்குச் செய்ய வேண்டுமென்கிற வெறி பிறக்கும். நான் வாழ்ந்த மில்வாக்கியில் என்னோடு ஜெர்மனிய, யூத, பொலீஷ், இந்திய இளைஞர்கள் நெருங்கிப் பழகுகிறார்கள். அவர்களின் இருதய அந்தரங்கத்தினுள் என் மனத்திலேயுள்ள ஆசைகளே நிறைந்திருந்ததை நான் அறிவேன். நாதன், விவசாயத் துறையிலே நான் பல புதிய கண்டுபிடிப்புகளைச் செய்திருக்கின்றேன். இந்தச் சாதனைகளுக்கான விருதுகள் கிடைக்கும் போதெல்லாம் ஏனோ என்னுடைய கிராமம், இலைப் பசளைகளையும் சாணகத்தையுமே உரமாகப் பெறுகின்ற பாளம் பாளமான, மழையையே நம்பி - வான் பார்த்திருக்கிற அதன் வயல்கள், மாடுகட்டி உழுகிற ஏர்கள், வானிலே பறக்கின்ற ஆகாய விமானங்களை மகா அதிசயமாகக் கருதி வயல்வெளிகளில் நின்று அண்ணாந்து பார்த்துக் 'கூ' விடுகின்ற கோவணங்கட்டிய சிறுவர் கூட்டம் என்பனதான் எனது கண்ணெதிரே அழியாத சித்திரங்களாக விரிந்து மறையும்... விஞ்ஞான முன்னேற்றங்களிலிருந்து எத்தனையோ வருஷங்கள் பின்னே நிற்கின்ற எனது தேசத்திற்கு, அது முன்னேற்றமடைவதற்காக என்னாலான முழுப் பங்களிப்பையும் செய்ய வேண்டுமென்று நான் ஏங்கிக் கொண்டிருந்தேன்...''

அனுராதபுரத்தின் சின்னச்சின்ன வயல்துண்டுகளை புகையிரதம் தாண்டிக் கொண்டிருக்கையில் அவற்றைப் பார்த்த வாறே உணர்ச்சி ததும்பிய குரலிற் சொல்லிக் கொண்டிருந்தான் அருள்.

விமான நிலையத்தினுள் சுங்கப் பகுதியினரின் வழமையான பரிசோதனைகள் முடிந்து, ஆர்வமூறிய கண்களின் தேடுதலோடு வெளியே வந்தான் அருள். மில்வாக்கியின் வயல்வெளியில் அருள் நின்று எடுத்துக் கொண்ட முழு உருவப் புகைப் படத்தினை மனத்தில் பதித்து அழுத்தியிருந்தேன். சற்று முன்னரே பறித்தெடுத்த ஆரோக்கியமான முட்டைக் கோஸ் போல நின்ற அருளினை பார்த்துப் புன்னகை செய்தேன்.

• அருள் என்னைக் கட்டித் தழுவிய வாத்ஸல்யத்தில் நான் சிலிர்த்துப் போய் எனது வயதுகள் பலவற்றினை என்னிலிருந்து இழந்து வளரிளம் பருவத்தில் மனந்தரித்து மீண்டேன். அருள் நன்றாகச் சிவந்திருந்தான். தொட்டால் இரத்தங் கன்றித் தெரியத்தக்க சிவப்பு. அடர்ந்து நெற்றியினை மறைக்கின்ற கேசம். கருமையாய் தடித்த புருவம். கண்ணாடியின் பின்னே சுடரிடுகிற தீட்சண்யமான கண்கள். குறுந்தாடி. சுறுசுறுப்போடு கூடிய ஆறடி உயர வாட்ட சாட்டம். எனது முதுகிலே தட்டிவிட்டு அட்டகாசமாகச் சிரித்தான்.

''எத்தனை வருஷங்களிற்குப் பிறகு சந்தித்திருக்கிறோம்...''

நான் ஆங்கிலத்திலே பதில் சொல்லத் தொடங்கியதும் முகத்திலே கோபமான பாவனையினை மாட்டிக் கொண்டான் அருள்.

''தமிழைப்பேசு, கேட்க நல்ல ஆசை. மில்வாக்கியில் கம்ப்யூட்டர் எஞ்சினியர் கிருஷ்ணமூர்த்தியோடை மட்டுந்தான் தமிழைப் பேசிக் கொண்டிருந்தன். நல்ல அறிவாளி... ஆனால் நாங்கள் சந்திச்சுக் கொள்ளுறது ரொம்பக் குறைவு... இவ்வளவு நாளாயும் மனம் விட்டுப் பேச ஆளில்லாமல் ரொம்ப சங்கடப்பட்டுப் போனேன்...''

உச்சரிப்பில் தமிழ்நாடு ஒலித்தது.

''சரி, இப்ப ஒரு காரை வாடகைக்குப் பிடித்துக் கொண்டு ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போயிடுவோம்...''

மீண்டும் அட்டகாசமாகச் சிரித்தான் அருள்.

''பஸ்தான் நல்லது. பஸ்ஸிலேயே போயிடலாம்...''

எனக்குத் திக்கென்றது. இப்போதைய சூழ்நிலையில் பஸ்ஸிலே பிரயாணம் செய்வது புத்திசாலித்தனமான செயலாக எனக்குத் தோன்றவில்லை. தெரிந்து கொண்டே சங்கடங்களை விலைக்கு வாங்க முயல்கிற புத்தியீனமான செயல் இது என்று என்னை மனம் எச்சரித்தது. கொழும்பிலிருந்து கட்டுநாயகா விமானத் தளத்திற்கு நான் பஸ்ஸிலேயே பயணம் செய்தேன்.

எனக்குத் தெரிந்த இரண்டு தமிழர்கள் - கல்வி வட்டார அதிகாரி பரமசாமி, பாடநூல் ஆசிரியர் க.சிவனேசன் - பஸ்ஸின் நடு இருக்கைகளில் உட்கார்ந்திருந்தனர். நான் மனம் மகிழ்ந்து முகம் மலர நினைத்து அவர்களைப் பார்க்கையில் அவர்கள் முகங்கள் சிரிக்கப் பயந்திருந்ததை உணர்ந்து வெளியே ஓடிக் கொண்டிருக்கிற காட்சிகளில் கண் பதித்தேன்.

நான் எதையாவது கூறி, அருளை பஸ்ஸில் ஏற விடாமல் தடுப்பதற்கு முன்னர் விமானத் தளத்தருகே நின்ற பஸ்ஸில் துள்ளியவாறு ஏறி உட்கார்ந்து கொண்டான் அருள்.

''பிளேனிலையிருந்து பார்க்கிற போது என்ன அழகு தெரியுமா எமது நாடு! ஒரு நாள் லொஸ் ஏஞ்சல்சுக்கு மேலாலை, இரவு நேரத்திலை விமானம் பறந்து கொண்டிருந்த போதுகீழே பார்த்தேன் நான். நட்சத்திரங்கள் நிறைந்த ஆகாயத்தை மண்ணிலை இருந்து பார்ப்பது போலை லொஸ் ஏஞ்சல்ஸ் மின்சார வெளிச்சத்திலை கீழே தெரிஞ்சுது... ஆனால் இதெல் லாம் செய்கை... எமது நாடு? பசுமையான தென்னைகள்; நீலக் கடற்கரை; வழிந்தோடுகிற நதிகள்; அசுத்தம் பழுதாக்காத இயற்கை. நீட, தீடச்ணு ச் ஞணுச்தணுடிணூதடூ டூச்ணஞீ!''

தாயைப் பிரிந்திருந்த குழந்தையின் குரலிலே அவன் பரபரத்தான். நான் பின்புறமாகத் திரும்பிப் பார்த்தேன். இரண்டு சிவந்த பயமுறுத்துகின்ற கண்கள். பழையபடியே திரும்பி அருளைப் பார்த்த போதிலும் பிடரிப் பக்கமாக அந்த இரண்டு கண்களும் என்னை எரித்துக் கொண்டிருப்பதனை உணர்ந்து கொண்டேன் நான்.

''மலைநாட்டிலையுள்ள பெரிய மரங்களையெல்லாம் வெட்டி அழித்து வெள்ளையன் தேயிலை, ரப்பர்த் தோட்டங் களை எப்போ உண்டாக்கினானோ அப்பவே எங்களுடைய தேசம் அழியத் தொடங்கி விட்டுது. மரங்களையெல்லாம்

வெட்டி காடுகளை இல்லாமற் செய்ததாலை, மழை இல்லாமற் போய் ஆறுகளெல்லாம் ஒழுங்கு மாறிப் போயிட்டுது. பல ஆறுகள் ரொம்ப வரண்டு போய் வெறும் மணல் வழியாகப் போயிட்டுது... மழை பெய்யிற காலத்தில் இதாலை சில பகுதியிலை வெள்ளப் பெருக்கு. மற்றச் சில பகுதியிலை கடும் வரட்சி. விசித்திரமான நிலைமை இது. தேயிலை, ரப்பரை நட்டு அதன் மூலமாகவே தான் பெருத்த லாபத்தைப் பெற்று எங்களினுடைய விவசாயத்தையே வெள்ளையன் ரொம்பவும் அழிச்சிட்டான். இதையெல்லாம் மீள்விக்க வேணும்... எத்தினையோ தேசங்கள், ஆராய்ச்சியாலும் மக்களினுடைய கடுமையான முயற்சியாலும் முன்னுக்கு வந்திட்டுதுகள்...

''ஸாம்பியாவிலை யூனெஸ்கோ றீசெச் ரீமோடை நான் போய் வேலை செய்திருக்கிறன். ஒரு புது இன நெல்லை ஸாம்பியாவிற்கு நான் அறிமுகப் படுத்தினபோது அந்த மக்கள் அதை விளைவிக்கிறதிலை காட்டின ஆர்வத்தை என்னாலை மறக்கவே முடியவில்லை... இது போலவேதான் நைஜீரியா விலும் நிலக்கடலை வகையிலை நாங்கள் புது இனங்களை அறிமுகம் செய்த போது அந்த மக்கள் மிகக் கவனமாக அதைச் செய்தனர். அந்த இடமெல்லாம் நித்திரையிலையிருந்து விழிச்சிட்டுது. அப்படியிருக்க நாங்கள் முன்னேறுகிறது பெரிய விஷயமில்லை... அதே விதத்திலை இந்தத் தேசத்தினுடைய விவசாய்த்தைத் திருத்தி அமைக்க நாங்கள் மிக கஷ்டப்பட்டு நம்பிக்கையோடை உழைக்க வேணும்...''

பின்புறமிருந்து வந்த''கொட்டியா... கொட்டியா'' என்ற கரகரத்த குரல், எங்களின் காதுகளை உறுத்தின.

எனக்கு நிலைமை நன்கு விளங்கி விட்டது. நாங்கள் பேசுகின்ற தமிழ், எங்களின் பின்னாலே இருக்கின்றவனுக்கு எரிச்சலூட்டுகின்றது என்பதனை அவன் எச்சரிக்கையோடு உணர்த்துகின்றானென்பதனை நான் தெரிந்து கொண்டேன். இதனை அருளும் தெரிந்து கொண்டோனோ என்பதை என்னால் அனுமானித்துக் கொள்ள முடியவில்லை. அருள், குறுந்தாடியை நீவி விட்டவாறே கண்களில் கேள்வியோடு என்னை வினவினான்:

''பின்னாலுள்ளவன் சிங்களத்திலை என்ன சொல்கிறான்?''

''அது எங்களைப் பற்றியல்ல'' - நான் அக்கறையற்றவன் போலப் பதில் சொல்லிச் சமாளித்துக் கொண்டேன்.

பஸ்ஸிலிருந்து இறங்கி, கோட்டை புகையிரத நிலையத் திற்குச் சென்று புகையிரதத்தில் ஏறிக் கொண்டோம். வழமைக்கு மாறாக புகையிரதம் வெறிச்சோடியிருந்தது.

"அருள், இப்போதைக்கு நீர் என்னோடை இங்கிலீஷிலேயே பேசிக் கொள்ளலாம். பல விஷயங்களை உம்மிடமிருந்து அறிந்து கொள்ள எனக்கு மிகவும் ஆசையாக இருக்கிறது. தமிழிலை நீர் பல விஷயங்களை தெளிவாகச் சொல்ல முடியாமல் போய்விடும் அல்லவா?"

நான் மனதினுள்ளே வைத்திருந்த காரணத்தினை அருள் உணர்த்திருக்க நியாயமில்லை; சில நிமிஷ யோசனையின் பின்னர் ஒப்புக் கொண்டான் மெல்லிய சிரிப்போடு.

அனுராதபுரத்தினை புகையிரதம் தாண்டிக் கொண்டிருக்கை யில், தனக்குப் பக்கத்திலிருந்தவர் படித்து முடித்துவிட்டு மடித்துக் கொண்டிருந்த ஆங்கிலத் தினசரியினை அருள் வாங்கிக் கொண்டான். பக்கங்களினை மேலோட்டமாக மேய்ந்தவன், திடீரென்று ஒரு பக்கத்தினைக் கூர்ந்து வாசித்தான். மீண்டும் திருப்பி வாசித்தான். இன்னொரு முறை நிதானித்து வாசித்தான். பின்னர் அந்தப் பக்கத்தினை மடித்து எனது முகத்திற்கு நேரே நீட்டினான்.

"What a Shame!" என்ற சொற்களினை ஆத்திரத்தோடும் அவமதிப்போடும் உச்சரித்த அருளினது முகம் இரத்தச் சிவப்பாகியிருந்தது.

ஒரு அமைச்சரின் பேச்சு அது. 'பொது பரீட்சைகளில் பரீட்சை வினாத்தாள்களைப் பார்வையிட்டுத் திருத்துகிற தமிழ்க் கல்விமான்கள் மிகவும் இழிந்த மோசடிகளில் ஈடுபடுகின்றனர். 'அவர்கள், அதிகளவான புள்ளிகளினை தமிழ் மாணவர்களுக்கு அள்ளிப் போடுவதால்தான் தமிழர்கள் அதிக தொகையினராக - டொக்டர்களாயும், இஞ்சினியர்களாயும், வேறு உயர் பதவிகளுக்கும் வர முடிகின்றது. இதுதகைய ஆபத்திலிருந்து சிங்கள மக்களைப் பாதுகாப்பதற்காகவும், சிங்கள மாணவர் களின் நலன்களைப் பேணுவதற்காகவும் இன அடிப்படையிலே உயர் கல்விக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இது தவிர்க்கப்பட முடியாதது மட்டுமல்ல, நியாயமானதுங் கூட? என்று ஆவேசத்தோடு வாதாடிக் கொண்டிருந்தார் அமைச்சர்.

எனக்கு இத்தகைய குரல் புதுமையானதோ அதிர்ச்சியூட்ட வல்லதோ இல்லை. இனவாதத்தையே நியாயப் படுத்தி வருகிற பத்திரிகைகளை பணங்கொடுத்து வாங்குவதில்லையென்று நான் முடிவெடுத்திருந்த போதிலும், எப்படியோ அவை கண்ணிலே பட்டு விடுகின்றன. இத்தகைய செய்திகளின் பரிச்சயங்கள், மனதை குறைந்த அளவிலேயே பாதிக்கிற புளித்துப் போன சமாச்சாரங்கள் ஆய்விட்டன. நான் கோபமாக உருவெடுத்த அருளை, கட்டுப்படுத்த முடியாத பரிதாபத்தோடு பார்த்தேன்.

''பதினைந்து வருஷங்களிற்குப் பிறகு, மிகவும் உயரிய நம்பிக்கைகளினைச் சுமந்து கொண்டு தாயக மண்ணிலே காலடி எடுத்து வைத்திருக்கின்ற எனது அருமையான நண்பனே, உனது கனவுகள் எவ்வளவு பரிதாபகரமாக நொறுங்கிப் போகப் போகின்றன...? உனது உடைந்த மனதினை நான் எப்படி ஆறுதல் படுத்தப் போகின்றேன்?'

''ஒரு மினிஸ்டரின் பேச்சா இது? எவ்விதமான பொறுப்போ, கண்ணியமோ கொஞ்சங்கூட இல்லாமல் இப்படியா ஒரு இனமக்களின் மீது சேற்றை வாரிஅடிப்பது?''

ஆங்கிலத்திலேகூறிக் கொண்டு போனவன் தமிழிற்கு மாறினான்:

''இந்த மினிஸ்டரை நான் அவசியம் சந்திக்க வேணும். இதைப்பற்றி என்னுடைய கருத்தைச் சொல்ல வேணும். முதலிலை அவருக்கு இதையிட்டு ஒரு கடிதம் எழுத வேணும்...''

அவனை மிகவும் பரபரப்பிலாழ்த்திய அந்த கருத்தையிட்டு அந்தக் கொம்பார்ட்மென்ரில் இருந்த யாருமே அக்கறைப் பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் அவனையும், அவனது வார்த்தைகளையும் முற்றிலும் புதிதாகச் சந்தித்த முக பாவம் அவர்களில் உறைந்து போயிருந்தது.

வவுனியா ஸ்ரேஷனில் புகையிரதம் நின்று பெருமூச்சோடு புறப்பட்டது. அருளைப் பார்த்தேன். ஆழமான யோசனையில் மூழ்கிப் போயிருந்தான்.

ஆம்பலூரை பதினைந்து வருஷங்கள் மிகக் குறைந்த அளவிலேயே சேதப்படுத்தியிருந்தன. நாளுக்கு இருமுறை மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருக்கிற அரசாங்கத் திற்குரிய பஸ் வண்டிகள், புதிதாக சில தபாற்பெட்டிகள், சிறிது

அகட்டப் பெற்று தாரூற்றியுள்ள பிரதானவீதி. பிரதான வீதியிலிருந்து ஊர்மனையை ஊடறுத்துச் செல்கிற மக்கி ஒழுங்கைகள். நவீன முறையில் அரசாங்கக் கள்ளுத் தவறணை, இவை பதினைந்து வருஷ காலத்திற்குள்ளான அறிமுகங்கள். ஆயினும் இவையெல்லாம் எங்களின் மனதினை அவ்வள வாகப் பாதிக்கவில்லை.

துண்டு துண்டான சிறிய வயல்கள், அவற்றில் வடபுறத்திலே தாமரைப் பூக்கள் நிறைந்து எந்நேரமும் சலசலப்பற்றிருக்கிற நெடுங்குளம். இப்போது அதன் வடக்கரையில் நூறு யாரினுள் அடங்குகிற அகலங்குறைந்த நீளமான அணை. அதன் கரையோரத்திலே நீளப்போக்காக அடர்ந்து செழித்திருக்கிற அலரிச் செடிகள் வெள்ளையும், சிவப்புமாகக் கொத்துக் கொத்தாகப் பூக்களினைச் சிலிர்த்து மென்மணங் கமழ்ந்தவாறே, அவை வணங்கவெனவே நிர்மாணிக்கப்பட்டது போன்ற பிள்ளையார் கோவில்.

ஒருமுறை கடிதத்திலே, எனக்கு அக்கோவிலைப் பற்றி அருள் விசாரித்து எழுதியிருக்கிறான். அதற்கு நான் பதிலும் எழுதவில்லை. என்னைப் போலவே, அவனுக்கும் இப்போது அச்சம்பவம் ஞாபகத்திற்கு வந்திருக்கலாம். அவ்வூரில் நாங்களிருந்தபோது எங்களின் அபிமானத்துக்குரியவர் அப்பிள்ளையார், அழகிய கற்சிற்பம். அப்படியொரு கருணையும், கனிவும், பொலிவும் நிறைந்த பிள்ளையாரை நான் வேறு எங்குமே கண்டதில்லை.

எங்களுக்கு ஒரு நண்பனாகிவிட்ட அப்பிள்ளையார் கோவிலில் ஒருமுறை பெரிய திருட்டு நடந்துவிட்டது. பிள்ளையாரின் பீடத்தையும் நெருடி விட்டார்கள். அடுத்த நாளே அந்தப் பிள்ளையாரை, பக்கத்திலிருந்த கிணற்றினுள் இறக்கி விட்டார்கள். அப்போதுஞ் சரி, இப்போதுஞ் சரி அதற்கான காரணம் எங்களுக்குத் தெரியவில்லை. இளநெஞ்சிலே அதுவேயொரு மறவாத சோகமாகி விட்டது. இப்போது புதிய பிள்ளையார் அழகாக நிர்மாணிக்கப்பட்ட கோயிலில் வீற்றிருக்கிறார்.

அருள் என்னைப் பார்த்தான்.

''கிணற்றுக்குள்ளை இருந்த பிள்ளையார் இப்ப எங்கையென்று விசாரிக்க வேணும்...''

அந்தக் கோயிலின் பின்னணியிலே அதே பரட்டைக் காடு. பிஞ்சுகளைத் தெறித்து நிற்கிற கொய்யாப் பற்றைகள், ஈஞ்சுகள், பனை வடலிகள், சாணகக் கும்பங்களால் சூழப்பட்டிருக்கிற காரை மரங்கள், இவற்றின் மருங்காக அசைபோட்டுக் கிடக்கிற மாட்டுக் கூட்டம். 'ஹைய்... ஹைய்' என்று இடையிடையே குருவிகளின் ஒலிக் குழப்பங்களை மேவி வருகிற மாடு மேய்க்கிற சிறுவர்களின் அதட்டல் ஓசை, மாறாத கோலமாய் எங்களின் முன்னே, நாங்கள் வளரிளம் பருவத்திலே உலவிய இடங்களெல்லாம் எம்மை எதிர் கொண்டபோது - நான் அருளைப் பார்த்தேன்.

சுறுசுறுப்பான பரவசம் முகத்திலும், மெல்லிய சீட்டியிலும் பரவியிருந்தன. பளிச்சென்று அவனது பழைய தோற்றம் கண்களிலே தோன்றி மறைந்தது.

அவன் சட்டென்று என்னைப் பார்த்த பார்வையிலே, எனது உணர்வுகளையே அவனிடம் கண்டு கொண்டேன்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் போயிறங்கி இரவு படுத்திருந்துவிட்டு, மறுநாள் அதிகாலை பஸ்ஸில் ஏறி, ஆம்பலூர் வந்து விட்டோம். எனது உறவினரின் வீட்டில் தங்கியிருக்க ஏற்கெனவே ஏற்பாடுகள் செய்திருந்தேன். சிவா, கொஞ்சம் தயங்கினாளாயினும், தற்போதைக்கு கிராமங்களிலிருப்பது பாதுகாப்பு என்று எனது யோசனையை ஏற்று எங்களிற்கு விடை தந்திருந்தாள்.

போயிறங்கின அன்று, வாசனையோடு குமுகுமுவென்று நுரையரும்புகின்ற புத்தம் புதிய கள்ளினை பனையோலைப் புழாவிலே உறிஞ்சி உறிஞ்சி அனுபவித்துக் குடித்தான் அருள். இறாலை உட்புதைத்துச் சுட்ட வடையை ருசித்து கள்ளோடு சேர்த்துத் தின்ற அவனை வெற்றிவேலு புதினமாகப் பார்த்துக் கொண்டு தன்னை மறந்திருந்தான். அணைக்கட்டில் சிறுவர்கள் ஆச்சரியத்தோடு பார்த்தபடியே நிற்கக் குளத்தினைத் துளாவினான். தாமரைக் கிழங்குகளைப் பிடுங்கி பக்குவமாக தாமரை இலையினுள்ளே கட்டிக் கொண்டான். கொய்யாப் பிஞ்சுகளைப் பிடுங்கித் தின்றான்.

இடுப்பிலிருந்து அடிக்கடி வழுவும் வேட்டியை முடிச்சுப் போட்டுக் கட்டிக் கொண்டு கால்களினைக் கொஞ்சம் வித்தியாசமாக வைத்து நடந்தான். தன்னைக் காண வந்திருந்த முதியவர்களோடு பணிவாகப் பேசினான். அவனது

பெற்றோர்களைப் பற்றி பெருமிதமாக அவர்கள் நினைவு கூர்ந்த போது இவனது முகம், அளவற்ற மகிழ்வினையும் மரியாதையையும் வெளிப்படுத்திற்று. அவனோடு இளமைப் பருவத்திலே ஒன்றாகப் படித்த பெண்கள் இப்போது குழந்தை குட்டிகள் சூழவந்து, தன்னை 'தம்பீ' என்று அழைத்தபோது இவனுக்கு மனதினுள்ளே அட்டகாசமானச் சிரிப்புப் பொங்கிற்று; சிரிக்காமல் நேயமாய்க் கண்களால் பேசினான்.

வயல் வரம்பினால் நடந்து கொண்டிருக்கையில் திடீரென நின்றான் அருள். வயலினுள்ளே இறங்கி, பயிர்க் கட்டைகளை விலக்கி ஒருபிடி மணலினை தோண்டி அள்ளி உள்ளங்கையிலே போட்டு, சிறிய மணற்கட்டிகளைப் பொடிப் பொடியாக உதிர்த்துப் பார்த்து விட்டு சட்டைப் பைக்குள்ளிருந்த கவர் ஒன்றினை எடுத்து அதனுள் மண் பொடியினை மிகக் கவன மாகக் கொட்டி கவரை மடித்து மீண்டும் பைக்குள் வைத்துவிட்டு கைகளைத் தட்டிக் கொண்டான்.

''இந்த மண்ணிலை சில மாறுதல்களைச் செய்து பொன்னையே விளைவிக்கலாம் நாதன். நைஜீரியாவிலே நான் இதைவிட மோசமான நிலத்திலை நிலக்கடலை விளைச்சலை அதிகரிக்கத்தக்கதாக அவர்களுக்கு உதவியான ஆலோசனை களைக் கொடுத்திருக்கிறன். எங்களின்ரை விவசாயிகளிட்டை நல்ல உற்சாகமிருக்குது. வழியைக் காட்டி விட்டால் எங்களின்ரை உதவியில்லாமலே அவர்கள் நல்லாக முன்னுக்கு வந்திடுவார்கள்... இதிலை நெல்லின் இனத்தை மாற்றி புதிய உரத்தைப் பாவிக்க வேணும். மாற்றுப் பயிராக எள்ளையும் போடலாம்...''

அவனது வார்த்தைகள் இடையே தடைப்பட்டன. தனது ஆராய்ச்சித் துறையினிலே மனம் மூழ்கிப் போயிருக்கலாம். அந்தத் தீட்சண்யமான கண்களிலே மேலும் ஒளி தவழ்ந்தது. கண்ணாடியினை அணிந்திருக்கின்ற மையினால் மூக்கின் தொடக்க மேட்டில் விழுந்திருக்கிற கருப்பு அடையாளத்தினை பெருவிரலால் தேய்த்தவாறே இலேசாகப் புன்னகைத்தான்.

''இந்த ஊரிலையுள்ள கமக்காறரையெல்லாம் நான் அவசியம் சந்திக்க வேணும். அவர்களோடை எல்லாம் கதைச்சு, டிஸ்கஸ் பண்ணினதுக்குப் பிறகுதான் என்னுடைய யோசனைகளை அவர்களுக்குச் சொல்ல முடியும்... என்ரை யோசனைகளையும், அனுபவங்களையும் என்னுடைய

கிராமத்திலையிருந்துதான் தொடங்கி பிறகு அக்றிகல்ச்சர் மினிஸ்ட்ரிக்குப் போய் ஒரு வேலை தேடிக் கொள்ள வேணும்...''

சொல்லிக் கொண்டு போனவன் இடையிலை நிறுத்தி உரக்கச் சிரித்தான்; கண்களிலே கண்ணீர் துளும்புமளவிற்குச் சிரிப்பு.

''நான் ஸ்டேட்சிலை இருக்கிறபோது, என்னை தங்களுக்கு எடுக்கிறதுக்கு ஐந்து யூனிவேர்சிட்டிகள் போட்டி போட்டுது நாதன். அவர்களுடைய முயற்சியால் நான் வெகு இலகுவாக அமெரிக்கப் பிரஜையாக்கப் பட்டேன் தெரியுமா...? இப்ப நான் என்னுடைய தாய்நாட்டிலே உத்தியோகம் தேடப் போகிறேன்... என்ன அதிசயம் பார்த்தியா?''

அவன் வேகமாகப் பேசுகையில் தமிழ் தடக்கித் திக்கியது. இப்போதுதான் அவனில் எனக்கு அதியமுண்டாக்கியது. அவனுடைய கடிதத்தின் ஒவ்வொரு வரிகளும், சதையும் ரத்தமும் ஒலியும் உணர்வுமாய் இதோ என் கண்முன்னாலே அவனாகவே கேட்டுக் கொண்டிருக்கின்றது. குறுந்தாடியினை நீவிவிட்டபடி என் முகத்தினிலே கொக்கியிட்ட கேள்வி வளையத்தினை தெளிவாகவே கண்டு விட்டவனாய் மீண்டும் புருவம் நெரியச் சிரித்தான் அருள்.

''உண்மைதான். இனி நான் இங்கேயே தங்கி, எனது தேசத்தின் விவசாய அபிவிருத்திக்குப் பாடுபடவே நினைக்கிறேன். நான் பிறந்த மண்ணுக்கே எனது உழைப்புச் சொந்தமாக வேணும். எனது அப்பு கலப்பையாலை கொத்திக் கிளறி பயிர் செய்த வயலிலை என்னுடைய அறிவாலை பயிர்களெல்லாம் நல்ல விளைச்சலைத் தரவேணும்... இது என்னுடைய ஆசை; கனவு; எல்லாம்...''

நான் அருளைப் பார்த்தேன். தீர்க்கமான முடிவினை வார்த்தைகளோடு வெளிப்படுத்திற்கு முகம். வேட்டித் தலைப்பைச் சிறிது தூக்கி முழங்காலளவில் மடித்துக் கட்டிக் கொண்டே அருள் தன்னை மறந்த உற்சாகத்தோடு ஆங்கிலத் திற்கு மாறினான்:

''எத்தனையோ இரவுகள், மில்வாக்கியில் எனது வீட்டின் குளிர்ந்த அறையினுள்ளேயிருந்து யன்னல் வழியாக வானத்தைப் பார்த்து நான் ஏங்கிக் கொண்டிருந்திருக்கிறேன் தெரியுமா? ஒரு அனாதையைப் போல, தாயை இழந்த மழலைக்

குழந்தையைப் போல, வெளியே நேரமாக ஆகக் கவிழ்ந்து வீட்டுப் பாதைகளினை மூடுகின்ற பனிப் படலங்களைப் போல என்னை இங்கே கட்டிப் பிணைத்திருக்கிற எல்லாத் தளைகளையும் அறுத்தெறிந்து விட்டு எனது கிராமத்தின் வைக்கோற் போர்களில் நிலை மறந்து உருள வேண்டுமென்ற ஆசை மனத்தினுள்ளே பீறிட்டெழும்... இந்தக் கிராமத்தை, இந்தத் தாய் மண்ணை, இதன் வறுமையினை, அறியாமையினை, சச்சரவுகளை எண்ணி எனக்குள்ளேயே வெம்பி வெதும்பியிருக்கிறேன்... என்னவோ ஒரு துன்பங்கலந்த கனமான வெறுமை...''

அம்மணமாயிருந்த வானவெளியின் பின்னணியிலே பச்சைக்கிளிகள் நிரை வகுத்துப் பறந்து திரிந்தன. எதிரேயுள்ள பெரிய வேம்பு சடைத்துச் சிலிர்த்து தன் பின்னணி மரங்களை மறைத்து நின்றது. இந்த வேம்பிற்கு வலது புறத்திலிருந்த பெரிய வெளியிலே தான் நாங்கள் தாச்சி விளையாடியிருக்கின்றோம். கிட்டிப்புள் அடித்திருக்கிறோம். வாரோட்டம் ஓடியிருக்கிறோம். இப்போது அவ்விடமானது காவிழாச் செடிகளாலும், நாயுருவிகளாலும், வெள்ளெருக்குகளாலும் மூடுண்டுபோய் தும்பிகள் பறக்கின்ற திடலாகி விட்டது.

திடலின் இடதுபுறத்திலே சிறியதொரு பெட்டிக்கடை. மீசைக்கார உரிமையாளர் எங்களைப் பார்வையினால் இனந் தேடிக் கொண்டிருக்கிறார். அவருக்கெதிரேயுள்ள சின்னஞ்சிறு மேசையில் பனை ஓடியல், பழங்கள், வெற்றிலைக்கூறு, வறுத்த நிலக்கடலை, கடையைத் தாண்டுகையில் மெல்லிய குரல்கள் எங்களைப் பற்றிய விபரங்களினை ஒன்றுக்கொன்று அரையுங் குறையுமாய் பறிமாறிக் கொள்வது தெளிவாகவே கேட்கின்றது.

மௌனமாய் வந்து கொண்டிருந்த அருளின் கண்கள் தெருவின் அருகோடுள்ள வயல் மேட்டிலேயே இன்னமும் பதிந்திருந்தன.

''என்ன அழகான உழைப்பு!'' என்று ஆங்கிலத்தில் கூறியவாறு, வயல்வரப்பினிலே உழவாரத்தினால் அறுகம் புல்லினைச் செதுக்கி, அதை வலித்து அள்ளி, வேரில் அப்பிய கட்டி மணலினை உலுப்பி உதறி புல்லைத் தனியாக எடுத்து நார்க்கடகத்தினுள் திணிக்கிற, கறுப்பு நிறமான தலையில் அள்ளு கொண்டை முடிந்த பத்து வயதுச் சிறுமியின் அக்கறையினை எனக்குச் சுட்டிக்காட்டினான் அருள்.

''அப்படியானால் இனி நிரந்தரமாக இங்கேயே...'' நான் இழுத்தேன்.

''நிரந்தரமாக இங்கேயே தங்கி உத்தியோகம் பார்க்க அரசாங்கத்திடம் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும். இங்குள்ள விவசாய முறையினை நுட்பமாக ஆய்வு செய்த பின்னர், இந்த மண்ணிற்கு ஏற்ற வகையில் எனது வழி முறைகளினை வகுத்துச் செயற்பட வேண்டும். இதற்கு இந்தக் கிராம இளைஞர்களின் உதவி எனக்கு அவசியம். இரண்டு நாட்கள் இந்த ஊரிலேயே ஓய்வு நாளை கழித்து மறுநாள் கொழும்பிற்குப் போய் 'அமைச்சு அலுவலகத்தில் பேசி முடிவெடுக்க வேண்டும் அவசரமாக...'

பதினைந்து வருட காலமாக உயர்பீடத்திலே சகல வசதிகளோடுமிருந்த இவனது முடிவு என்னுள்ளே பல கேள்விகளை எழுப்பிற்று. அவனது முடிவின் பலாபலன்கள் என்னவாக அமையுமென்பதனை என்னால் மேலோட்டமாகக் கூட கற்பனை செய்து கொள்ள முடியவில்லை; மிகவும் சாதாரண பாவத்திலிருந்தது அருளின் முகம்.

மெதுவாக அவன் கூறினான்:

''பதினைந்து வருஷங்களாக இந்த உணர்ச்சி என்னுள்ளே ததும்பிக் கொண்டேயிருந்தது. வருஷம் ஆக ஆக இவ்வுணர்ச்சி என்னுள்ளே மிக ஆழமாக ஊன்றி வளர்ந்தது. எனக்கு ஒவ்வொரு வெற்றி கிடைக்கின்ற போதும், ஏதோ ஒரு அந்நியத்தனம் எனக்கு ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது. முயற்சியின் முடிவிலே வெற்றி கிடைக்கின்ற போதும், அதோடு சேர்ந்து வெற்றுணர்வொன்றும் என்னுள்ளே தலைநீட்டிற்று... என்னவோ என்னுடைய மன உணர்வுகளையும், ஆர்வங்களையும் நீ உணர முடிந்தால் நல்லது நாதன்...''

அன்று மாலையிலே சில இளைஞர்கள் அருளைச் சந்திக்க வென வந்தார்கள். உற்சாகமான முகங்கள். இளஞ் சூரியனைப் போல. இதே வயதிலே படிப்பையும், குறும்புகளையும், விளையாட்டுக்களையும், வளரிளம் பருவத்துக் கனவுகளையும் தவிர வேறெதையுமே அறியாதவர்களாக நாங்கள் வாழ்ந்திருந்தோம். ஆனால், இதோ எங்கள் முன்னாலேயுள்ள இளைஞர்களின் சிந்தனைக்குள்ளே உலகம் ஒரு சின்னப் பந்தாகி உருள்கின்றது. தமிழ் மாணவர்கள், இலங்கை இளைஞர்கள், அமெரிக்க வாலிபர் கிளர்ச்சிகள், நீக்ரோக்கள் போராட்டம்,

பாலஸ்தீனப் பிரச்சினைகள் பற்றியெல்லாம் அவர்கள் மிகவும் உற்சாகத்துடன் அக்கறை தொனிக்கின்ற குரலினிலே பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சொன்னவற்றிலே பல விஷயங்கள், இப்போதுதான் நான் அறிய நேர்ந்தவை என்பதை நான் ஒப்புக் கொள்ளவே வேண்டும்.

ஆப்பிரிக்க, நீக்ரோ மக்களின் தற்போதைய பொருளாதார, அரசியல், கலாச்சார வாழ்வு பற்றிய தனது நேரடியான அனுபவங்களைப் பற்றி அவர்களுக்கு கூறிய அருள், ஆப்பிரிக்க, நீக்ரோ மக்களைப் பற்றிய சில புத்தகங்களை தனது வீட்டிலே விட்டுவிட்டு வந்தமைக்காக மனம் வருந்திக் கொண்டான். அடுத்த முறை அவற்றைத் தவறாது கொண்டு வருவதாகச் சொன்னான். இலங்கையைப் பற்றி அருள் முற்றாகவே அறிந்து கொள்ளாத பல புதிய விஷங்களைப் பற்றி, இக்கொடுமைகளெல்லாம் தனக்கே தான் நடந்தன என்று சீறுகின்ற ஆவேச உணர்வினோடு எடுத்துரைத்துக் கொண்டிருந் தான் செல்வராசா. கறுப்பு நிறமான, அடர்ந்த சுருள் முடியுட னான, முன்பல்லில் ஒன்றையிழந்த உயர்ந்த தோற்றமுள்ள தெளிவாக உரையாடுந் திறனுள்ள இளைஞன் - செல்வராசா.

''உங்களுக்கு இது தெளிவாகத் தெரிந்திருக்க நியாயமில்லை. உலகத்திலையுள்ள எந்த ஒரு நாட்டிலேயாவது இத்தகைய தொரு வஞ்சனையான திட்டமிருக்கிறதோ எனக்குத் தெரியாது. இலங்கையிலே கல்வித் துறையைப் பொறுத்தவரை தமிழர்களே முன்னணியில் நிற்கிறார்களென்றும் அவர்களே டொக்டர் களாயும், இஞ்சினியர்களாயும், ஏனைய துறைகளுக்கும் தெரிவாகி உயர் பதவிகளை ஆக்கிரமிக்கிறார்களென்றும் ஆட்சியாளர்களால் கருதப்பட்டு, கல்வியமைப்பிலே மிகப் பாரதூரமான மாறுதல் கொண்டு வரப்பெற்றது. இதனை 'தரப்படுத்தல் முறை' என்று கூறினார்கள். மாவட்ட அடிப்படையிலான கோட்டா முறையில் இன ரீதியாக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். ஒருமாவட்டத்திலே 162 புள்ளிகள் பெற்ற மாணவன் தெரிவான போது, 240 புள்ளிகள் எடுத்த வேறொரு மாவட்ட மாணவனுக்கு பல்கலைக் கழக அனுமதி மறுக்கப்பட்டது. இது தமிழ் இளைஞர்களை நம்பிக்கையின்மையின் விழிப்பிற்கு கொண்டு சென்றது...''

செல்வராசாவின் முகத்திலே பீறிட்ட ஆத்திர உணர்வு இப்பொழுது அருளின் முகத்திலே மெதுமெதுவாகப் படியத்

தொடங்கியதை நான் அவதானித்தேன். அவனது தீட்சண்ய மான கண்களிலே நிறைய வினாக்கள் தெரிந்தன.

''1972ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியல் அமைப்புத் திட்டம் தமிழரை இரண்டாந்தரப் பிரஜைகளின் நிலைமைக்குத் தள்ளிற்று. தமிழ் இளைஞர்கள் இந்தத் திட்டத்தினை மிகவும் தீவிரமாக எதிர்த்தனர். இவர்களின் மேல் அடக்குமுறைகள் கொடூரமாக கட்டவிழ்த்து விடப்பட்டன. நூற்றுக்கணக்கான இளைஞர்கள் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு எவ்விதமான விசாரணையுமின்றி சிறையிலே வைக்கப்பட்டனர். சிறையில் சொல்ல முடியாத சித்திரவதைகள். அரை உயிரோடும், சேதமுற்ற மனத்தோடும், நிரந்தரமாகவே ஊனமுற்றுமே இவர்களில் பலர் சிறையிலிருந்து வெளியே வந்தனர். சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக அழைத்து வரப்பட்ட பெண்ணொருத்தி நிர்வாணமாக்கப் பெற்று எல்லாவித சித்திரவதைக் கொடுமைகளுக்கும் ஆளானாள். இன்னொரு இளைஞனின் ஆண்குறியினை மோட்டார் சைக்கிளின் புகை போக்கிற்குள் புகுத்திவிட்டு மோட்டார் சைக்கிளை 'ஸ்ராட்' பண்ணினான் ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர். இதனால் அந்த இளைஞன் தனது ஆண்மையையே இழந்து நடைப் பிணமாகி விட்டான்.''

செல்வராசாவின் குரல் கலங்கித் தளதளத்தது. அந்த நிகழ்ச்சிகளில் மனமழுந்தி சில நிமிஷங்கள் மௌனமாகி யிருந்தான். நிலவிய மௌனம் எல்லோரதும் மன நிலைதனை உணர்த்திற்று.

''1974ஆம் ஆண்டு, யாழ்பாணத்திலே உலகத் தமிழா ராய்ச்சி மகாநாடு நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடியிருந்த இம்மகாநாட்டில் வேண்டுமென்றே குழப்பம் உருவாக்கப்பட்டது. பொலிசார் மக்களை அடித்து விரட்டினர்... பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டனர். பொலிஸ் அட்டூழியத்தினால் ஒன்பது தமிழர் அதே மைதானத்தில் பரிதாபகரமாக உயிரிழந்தனர். முதல் நாள் திருமண வீடாயிருந்த யாழ்ப்பாணம், மறு தினம் மிலேச்சர்கள் தாக்கிய நகரத்தினைப் போல சேதமுற்று மயான வெளியாய் - சோகமே உருவெடுத்திருந்தது... ஏற்கனவே கசப்புணர்வின் எல்லைக்கே போய்விட்ட இளைஞர்களை இச்சம்பவம் பொறுமையை இழக்க வைத்தது... சிறையிலிருக்கையில் சிங்களக் கிளர்ச்சி யாளர்களான இளைஞர்களை இவர்கள் சந்திக்க நேர்ந்தது.

1971ஆம் ஆண்டு சிங்களப் பிரதேசங்களிலே அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக மக்கள் விடுதலை முன்னணி என்ற இயக்கம் ஆயுதப்புரட்சியை மேற்கொண்டது. இதனை அரசாங்கம் முளையிலேயே கிள்ளியெறிந்தது. பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டு பெருந்தொகையானோர் சிறைகளில் அடைக்கப்பட்டனர்... அத்தகைய இளைஞர்களோடு பழகி அவர்களது அனுபவங்களை இத்தமிழ் இளைஞர்கள் அறிந்து கொண்டனர். இதன் விளைவாக வன்முறைகளைக் கையாளத் தொடங்கினர். ஆனால் காரணத்தினை அறிந்து அவைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக அதற்கு எண்ணெய் ஊற்றி எரிய வைத்து ஆதாயம் பெறுவதிலேயே ஆட்சியாளர்கள் கவனமாயிருந்தனர்.''

''அப்படியானால் புதிய அரசாங்கம் இவைகளைத் தீர்க்க எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையா?'' என்று கேட்டான் அருள்.

''அப்படிச் சொல்லிக் கொண்டுதான் ஆட்சியைப் பிடித்தார்கள். ஆனால் நிலைமையோ முன்பைவிட இப்போது மோசமாகி விட்டது...''

அலட்சியச் சிரிப்பொன்று செல்வராசாவின் முகத்திலே உதிர்ந்தது. அருள் எதையோ சொல்ல வாயெடுத்தான். அதே நேரத்தில் வெளியே நாய்கள் பயங்கரமாகக் குரைக்க ஆரம்பித்தன. நான் மனந்திடுக்காட்டோடு எழுந்து வெளியே போனேன். மனம் திக்கென்றது. வாசலிலிருந்து சிறிது தூரந்தள்ளி பொலிஸ் ஜீப் நின்றது. அவ்வீட்டைச் சுற்றியிருந்த வேலியின் ஓரமாக வீட்டை வியூகமாகச் சுற்றி, யூனிபோம் அணியாத சிலர் துப்பாக்கிகளோடு சுடுவதற்குத் தயாராக நின்று கொண்டிருந்தனர். என்ன செய்வதென்றே தெரியாது திகைத்துப் போய் நின்ற என்னை செல்வராசாவின் குரல்தான் சுயநிலைக்கு கொண்டு வந்தது.

''இதைப் பார்த்துப் பயப்படாதீங்க... பொலிஸ் எங்களைத் தேடித்தான் வந்திருக்குது...''

செல்வராசா மெலிதான புன்னகையோடு சொல்லிவிட்டு முன்னே காலடி எடுத்து வைத்தான்.

4

செல்வராசாவின் தகப்பன் முருகேசுவை அடையாளங் கண்டு கொண்ட அருள், கனிவும் ஆதரவும் பொங்க அவரைப் பார்த்தான். கறுத்த ஆஜானுபாகுவான தோற்றம். திருநீறணிந்த பளீரென்கிற நெற்றி. சிறிய குடுமி. கடுக்கன் அணிந்த காது. வேட்டி மட்டுமே உடுத்து தோளிலே வெள்ளைச் சால்வை. அவர்தான் எங்களூரின் அம்மன் கோவில் பூசகர். இப்போது அவரது முகம் வாட்டமுற்று மங்கிப் பேதலித்திருந்தது. அவரைப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே இறந்த காலம் மனமேடைதனில் சுவடு பதித்து நடந்தது. அம்மன் கோவிலிலே பங்குனிப் பொங்கலன்று கிராமம் முழுவதுமே பக்திப் பரவசத்தோடு கூடி நிற்கும். பூசகர் முருகேசு உடுக்கையை கையினில் எடுத்து மெதுவாகத் தட்டியவுடனே எங்குமே மௌனம் ஆட்சி செய்யும்.

''அம்பாள் ஆட்சியே...'' என்ற கணீரிடுகின்ற குரல் வலிமை மிகு மந்திரமாகி எல்லோரையும் அது போலக் குரலிட வைத்து கைகளை உயர்த்திக் குவிய வைக்கும். பிறகு அவர் பாடுவார். உடுக்கையும் அவரோடு சேர்ந்து ஆவேசந் துள்ளிடப் பாடும். உடலையே சிலிர்க்க வைக்கின்ற விதத்தில் அந்த உடுக்கையொலி, இன்னிசையாய், கெஞ்சலாய், உரிமையாய், தோத்திரங்களாய் அம்மனைப் பணிந்து மெல்லென ஓயும்... அது சாதாரண உடுக்கை ஒலிதான். ஆனால் முருகேசுவின் கை விரல்களது நர்த்தனத்திலே எல்லா உணர்வுகளையுமே நெகிழவைத்து இன்னிசைப் பேரியக்கமாக அது செயற்படு கின்றது. முருகேசு வெறும் பூசாரி மட்டுமல்ல. சத்தியவான், யாருமே பழிக்கத் துணியாத சாது. அவரை நிமிர்ந்து சினக்க யாராலே முடியும்?

''என்ன நீங்கள் இப்படிக் கலங்கிப் போயிட்டீர்கள்...? உங்களைப் போல ஒரு நல்ல மனிஷருடைய பிள்ளைக்கு எக்காலமும் ஒரு கஷ்டமுமே வரமாட்டுது. நான் இதை உறுதியாகத்தான் சொல்லுகிறேன்... செல்வராசாவைக் கூட்டிக்கொண்டு போன பொலிஸ்காரர் எப்பிடியும் அவனைத் திருப்பிக் கொண்டு வந்துவிடத் தானே வேணும். ஒரு குற்றமும் செய்யாத இவளை அவர்கள் என்ன செய்ய முடியும்?''

முருகேசு வெறித்த பார்வையோடு மௌனமாயிருந்தார். அருளின் சொற்கள் அவரளவில் வெறும் ஆறுதல் வார்த்தை களாகி காற்றோடு கலந்து போயின என்பதனை மாற்றமேயுறாத சோகஞ் சுமந்த முகம் தெளிவாகவே சொல்லிக் கொண்டிருந்தது. சிவா, முருகேசுவுக்கு தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

''பொலிஸ்காரர் பொதுமக்களோடை நடந்து கொள்கிற முறை நீங்கள் நினைக்கிறது போலை இந்த நாட்டிலை இல்லை. அவர்கள் தங்களினுடைய கையிலை சட்டத்தை எடுத்துக் கொண்டு நடக்கிறார்கள். அவர்கள் எதையும் பேசலாம்... எவருக்கும் என்ன தண்டனையும் கொடுக்கலாம்... பள்ளிக்கூட மாணவனிலை இருந்து எம்.பி. எதிர்க்கட்சித் தலைவர் வரைக்கும் இந்தப் பிரதேசத்திலை பொலிசாராலை மூர்க்கத்தனமாகத் தாக்கப் பட்டிருக்கிறார்கள்... இதனாலைதான் பொலிஸ்காரர் கையிலை பிடிபட்டது என்ற உடனேயே எவரும் பயப்பட்டு நடுங்க வேண்டியிருக்குது...''

உடைந்து போன குரலிலே சொல்லிக் கொண்டிருந்த சிவாவை மௌனத்தோடு நோக்கிய முருகேசு எனது பக்கமாகப் பார்வையைத் திருப்பினார். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டு தாழ்ந்த குரலில் மெதுவாகக் கூறினார்:

''தம்பி, நீங்கள் யாராவது செல்வராசாவினுடைய முதுகைப் பார்த்திருக்கிறியளோ?''

நாங்கள் ஒன்றுமே பேசாமல் ஒருவரையொருவர் பார்த்தவாறு, 'இல்லை' என்ற பதிலினை மௌனத்தாலேயே கூறினோம்.

''அவனுடைய முதுகிலை பதினாறு அடிகாயங்களின் தளும்புகளிருக்கின்றன. வெளிப்பார்வைக்கு ஆண் பலவானைப் போல இருந்தாலும், உண்மையிலை ஒட்டி வைத்திருக்கிற பாவைப் பிள்ளைதான் அவன். அவனை மெல்லிய கயிற்றாலை காலிலை பிணைந்து உயரத்திலை தலைகீழாகக் கட்டித் தூக்கி விட்டு, கயிறு அறுந்து அவன் நிலத்திலை விழ,அவனுடைய நெஞ்சிலை சப்பாத்திக் காலாலை மிதித்து உழக்கிக் கூட இருக்கிறார்கள். இப்பவே அவன் வீச்சாக நடக்கவோ அல்லது கஷ்டமான வேலைகள் செய்யவோ முடியாதிருக்கிறான். ஒழுங்கான நித்திரையில்லை. உடம்பின் நோவைத் தாங்க முடியாமல் படுக்கையிலை கிடந்து அவன் படுகிற வேதனைகளை என்னாலை தாங்க முடிகிறதில்லை.

பழைய நோவினாலை சில வேளை அவன் இரத்தமாகவே வாந்தியெடுப்பான். ஆனால் தன்னுடைய இந்தக் கஷ்டங்களை யெல்லாம் அவன் யாருக்குமே வாய் திறந்து சொல்கிறதில்லை... விரதமிருக்கிறவனைப் போல கண்களை மூடிக் கொண்டு அவன் கட்டிலிலை படுத்துக் கிடக்கிறதைப் பார்த்தால் என்னால தாங்க முடிகிறதில்லை. வயதுக்கு மீறியிருக்கிற மனவலிமையாலை தான் அவன் இப்படி வாழ்கிறான். எனக்குள்ள ஒரே செல்வமும் அவன்தான். ஒரே கவலையும் அவன்தான்...''

முருகேசு துயர் கவியப் பெருமூச்சு விட்டார்.

''அதனாலைதான் இப்ப செல்வராசாவைப் பொலிஸ் கொண்டு போனதுக்காக நான் பயப்படுகிறேன்... அம்பாளாச்சியே, இனி அடி விழுந்தால் இதுதான் அவனுக்குக் கடைசியாக இருக்கும்... எனக்கு அது நல்லாவே தெரியும்...''

விம்மியழுதது முருகேசுவின் குரல். பெற்ற மனம் சூழலினை மறந்து, தனியேயிருந்து புலம்புகிறாற்போல கண்ணீராய்ச் சிந்தி, கரைந்து வெதும்பிற்று. இது தாளாத துயரந்தான். எனக்கு உலகின் எல்லாவற்றின் மீதுமே வெறுப்புப் பொங்கி, வீதியிலே இறங்கி ஓடிப்போய் இத்தனைக்கும் காரணமான எதிரியை குத்திக் கொதறிச் சரிக்க வேண்டுமென்கிற ஆவேசம் சீறிற்று... எந்த மனிதாபிமானமுள்ள மனிதனுக்கும் இத்தகைய உணர்வே தோன்றியிருக்குமென நினைக்கின்றேன்...

ஒரு அப்பாவி; கிராமத்தின் ஒதுக்குப் புறத்திலே தானுண்டு, தன்பாடுண்டு என்று வாழ்கின்ற இரக்கமும் தர்ம உணர்வும், உழைப்புத் திறனுமுள்ள இம்மனிதன்; இம்மனிதனது மகன் யாருக்குமே எந்தக் கெடுதலும் செய்தறியாத இளங்குருத்து - இப்போதே வண்டுகள் மூர்க்கத்தோடு கொதறிக் குடைந்து வெறுங் கோதாகி விட்ட இளங்குருத்து - மூரட்டு எருமைகளே, கொஞ்சமும் மன இரக்கமில்லையா உங்களுக்கு? உங்களுக்கு இப்படியொரு சகோதரனிருந்தால் பூட்ஸ் காலால் உழக்கி அவனது நெஞ்சினைக் குடைவீர்களா? இப்படி உங்கள் அப்பனின் மனதினை போர்த் தேங்காயாக்கி சல்லி சல்லியாக நொருக்கிச் சிதறடிப்பீர்களா?

''இவ்வளவுக்கும் என்னுடைய மகன் செய்த குற்றம் என்ன?''

தன்னைச் சுதாரித்துக் கொண்டு உணர்ச்சிப் பிழம்பாக அசைவற்றிருந்த அருளைப் பார்த்தவாறே செல்வராசாவின் கதையினை எங்கள் கண்முன்னே கொண்டு வந்தார் முருகேசு...

எங்களைப் போலவே ஆம்பலூரில் படிப்பிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து, எங்களின் எல்லைகளை மீறிச் சிந்தித்து ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போய் வந்தான் செல்வராசா. தகப்பனைப் போலவே நீதி நியாயத்திற்குக் கட்டுப்படும், மிதித்த இடத்துப் புல்லுஞ் சாகாத ஆதர்ஸவானாயிருந்தான் கிராமத் திற்கு. அந்த நிலைமை காரணமாகவே, மாணவர் தலைவர் என்ற தகுதியையும், மதிப்பையும் ஆசிரியர்களிடமும் மாணவர்களிட மும் ஏகாலத்திலே பெற்று, நகரத்தின் அனைத்துக் கல்லூரிகளும் பிரதிநிதித்துவம் பெற்றிருந்த மாணவர் சம்மேளனத்தின் தலைவனாகவும் தெரிவு செய்யப்பட்டான். அவன் தலைவ னான அதே வருஷத்திலேதான், அரசாங்கமும் பல்கலைக் கழகத் தேர்விற்கு தரப்படுத்தல் முறையினையும் அறிமுகப்படுத்தியது.

தமிழ் மாணவர்களை முற்றாகப் பாதிக்கின்ற இன அடிப் படையிலான இத்தேர்வு முறை, திறமையினடிப்படையிலேயே மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது என்ற முறையினை மாற்றி, இன அடிப்படையிலேயே மாணவர்களைப் பல்கலைக் கழகத்திற்கு அனுமதிப்பது என்ற நிலைமையினை உருவாக்கிற்று. ஏற்கனவே - ஆறு சிங்களவர் உத்தியோகம் பெற வாய்ப்பிருந்தால், ஒரே ஒரு தமிழரே உத்தியோகம் கிடைக்கப் பெறுவார் என்ற நிலையிருந்தது. சில வேளை அதுவுமே தமிழருக்குக் கிடைக்காமல் போயிற்று. ஆயினும் அத்தகைய சூழ்நிலையிலேயும் உயர்கல்வி பெறுவதற்காக தகைமை இவ்விதம் மட்டுப் படுத்தப் பட்டிருக்கவில்லை. புதிதாக அமுலுக்கு வந்த தரப்படுத்தல் முறை மாணவர்களை எதிர்காலம் பற்றிய பீதிக்குள்ளாக்கிற்று. பீதியினால் ஆத்திரமும், ஆத்திர வசத்தினால் இளமைக்கே உரிய ஆத்திர உணர்வும் பொங்கியெழுந்தது. மாணவர்களின் இதயசீறள்ற்றம், பொதுக் கூட்டங்களாய், துண்டுப் பிரசுரங்களாய், சுவரொட்டிகளாய், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களாய் முனைகொண்டு முளை கொண்டு பெருகிற்று...

''இல்லை... நீங்கள் நினைக்கிறதுபோலை நாங்கள் எந்த அரசியல் கட்சிக்குமே பகடைக் காய்களாய் உருளவில்லை. இந்தத் தரப்படுத்தல் முறையாலை மிக மோசமான பாதிப்புக்கு ஆளாகிறது மாணவர்களாகிய நாங்கள்தான். எங்களி னுடைய எதிர் காலத்தைக் கருதித்தான் நாங்கள் எதிர்ப்பியக்கத்தைத் தொடங்கி இந்த ஊர்வலத்தை நடத்திக் கொண்டிருக்கிறம்...''

தன் எதிரிலே, வெள்ளை நிறச் சீருடையினுள் களங்கமற்ற முகத்தோடு வெகு உறுதியோடு அச்சமற்றவனாகப் பேசிக் கொண்டிருக்கிற அந்தக் கறுப்பு நிற இளைஞனை மிரட்டுகின்ற பார்வையினோடு நோக்கினார் மழமழப்பான இறுகிப்போன முக பாவமுள்ள அந்தப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்.

''இப்ப, இந்த நிமிஷத்திலேயே உன்னை நான் கைது செய்து சிறையினுள்ளே கொண்டு போய் அடைக்கலாம் தெரியுமா?''

டப்டப்பென்று சப்பாத்திக்காலை மிதித்து ஓசை எழுப்பிய வண்ணம் அங்குமிங்குமாக நடந்தபடி, பொலிஸ் ஸ்டேஷனுக்கு வெளியே மருதமர நிழலின் கீழே குழுமி நிற்கின்ற சீருடைகளை நோட்டம் விட்டார் பொலிஸ் இன்ஸ்பெக்டர்.

''என்னைச் சிறைக்குள்ளை போடத் தக்கதாக நானொரு குற்றமும் செய்யவில்லை... அப்பிடி இல்லையென்று என்னை நீங்கள் கைது செய்தாலும் அதுக்காக நான் பயப்படப் போறதில்லை; மடியிலை கனமில்லாத போது ஏன் பயப்பிட வேணும்...''

இன்ஸ்பெக்டரின் மனம் திடீரென வெறுமை கொண்டது. செல்வராசாவைக் கையினில் எட்டிப் பிடித்தபோதே அவன் வியர்த்து விதிர் விதிர்த்து மிரண்டு நடுங்கி, சாஷ்டாங்கமாக தன்னுடைய காலடியிலே விழுவதற்கு ஆயத்தமாகி, தான் இனி ஒருபோதுமே இப்படியான ஊர்வலப் பக்கம் தலையே வைத்துப் படுக்க மாட்டேன் என்று சத்தியம் செய்து தருவான் எனத்தான் இன்ஸ்பெக்டர் எதிர்பார்த்திருந்தார்.

அவனோ, ''கையை விடுங்கள்... நான் பின்னாலேயே வருகிறேன்...'' என்று கூறிக்கொண்டே அவரைத் தொடர்ந்து பொலிஸ் ஸ்டேஷனுக்குள் வந்து நின்றான்.

பயமுறுத்துகிற பொலிஸ் ஸ்டேசன் அறை. பார்வையில் படுகிற ரிமாண்ட் அறைக்குள் குத்தியவாறு பரிதாபகரமாகத் தோற்றமளிக்கிற சந்தேக நபர்கள். 'நீயுமா?' என்று அவனை வரவேற்புக் கொள்ளுகிற அவர்களின் மங்கிய கண்கள்.

''இனிமேல் இப்படியான காரியங்களிலை ஈடுபடுகிற தில்லை என்று வாக்குமூலம் தந்திட்டு நீர் உடனே வீட்டுக்குப் போய்விடலாம்... எனக்கும் உன்னுடைய வயதிலை ஒருமகன் இருக்கிறான் என்ற காரணத்தாலேயே உன்னிலை நான் கருணை காட்ட வேண்டி இருக்குது. யூ அண்டஸ்ராண்ட் மீ...''

செல்வராசாவின் மனதினுள்ளே சிரிப்புச் சுழித்தது.

''உன்னுடைய எதிர்காலத்தை யோசித்துத்தான் இந்த முடிவுக்கு நான் வந்திருக்கிறேன். என்ன? நான் சொல்லிக் கொண்டேயிருக்கிறேன். நீயோ ஒன்றுமே ஒன்றுமே கதைக்காமல் வாயை மூடிக் கொண்டிருக்கிறாய்?''

சற்று அதட்டலாக வெளிவந்த அவரது குரலினால், தனது யோசனையிலிருந்து விடுபட்டவனைப் போல அவரை ஏறிட்டான் செல்வராசா.

''உங்களுடைய வீட்டிலேயே பிரச்சினைகள் இருக்குது, பார்த்தீங்களோ ஸேர்... உங்களுடைய மகனுக்காகவும் நாங்கள் போராடுகிறோம்... இதனாலை நீங்களும் அல்லவோ எங்களுக்கு ஆதரவு தரவேணும்...''

இன்ஸ்பெக்டரின் நெஞ்சிற்குள் அவ்வார்த்தைகள் நெருப்புத்தணல்களாய் விழுந்தன. பற்களை நரும்பிக் கொண்டார். கட்டற்றுப் பிரவகித்த ஆத்திரம் கண்களின் சிவப்பினில் தொனித்தது. அவனுடைய ஒவ்வொரு பல்லையும் தனித்தனியே உடைத்தெறியக் கைகள் துருதுருத்தன. அவரிடம் விசாரணைக்கென்று வந்து ஊனப்படாமலே வீடு திரும்பிச் செல்கின்ற செல்வராசாவின் மீது இவருக்குப் பெரியதொரு வன்மம் தோன்றியது, அவரையறியாமலே.

அந்த அடுத்த முறை விரைவிலேயே வந்துவிட்டது. சமய சந்தர்ப்பங்களினை எண்ணிப் பாராமல் கல்வியமைச்சர் தமிழ்ப் பிரதேசங்களிற்கு உத்தியோகப்பூர்வமான விஜயமொன்றினை மேற்கொண்டார். நகரத்துச் சுவர்களின் உடலெல்லாம் சுலோகங்கள்.

''இனவாதியே, மாணவர் விரோதியே திரும்பிப் போ!'

தெருக்களெல்லாம் அமைச்சருக்கு எதிர்ப்புக் குரலிடும் எழுத்துக்களில் மிதந்தன. சந்திகளில் நின்ற முதிய நிழல் மரங்களிலும், மின்சாரக் கம்பங்களிலும் அசைந்தாடுகிற கறுப்புக் கொடிகள்.

''இதெல்லாம் உன்னுடைய வேலைதான்.''

பொலிஸ் இன்ஸ்பெக்டர் இறுகிய குரலினிலே அவன் மீது சுமத்திய குற்றச்சாட்டைக் கேட்டவுடன் எதுவுமே அறியாத செல்வராசா தன்னையே மீறி, சூழ்நிலையை மறந்து சிரித்தான்.

அவ்வளவுதான், பளார்... பளார்... வாயிடுக்கினில் இரத்தம் துளிர்ந்தது. அதைத்த முகத்தோடு மெதுவாக வாயின் முன்புறத்திலே கை வைத்தான். இரத்தம் பிசுபிசுத்தது, பல்லொன்று நெருடி சொல்ல முடியாத வேதனை பிடரியையும் நெஞ்சையும் பிய்த்துப் பிறாண்டியது. சில கணங்களிலேயே அவன் மயக்கமுற்றுச் சரிந்துவிட்டான்.

அமைச்சரின் சுற்றுலா முடிகின்ற வரையில் அவரது பாதுகாப்புக் கருதி இவனோடு மூவருக்கு 'ரிமாண்ட்'. அபாயகர மான பேர்வழிகள், அமைச்சருக்கு வெடிகுண்டு எறியவும் திட்டமிருந்திருக்கின்றது. இவனது வீட்டின் முன்புறத்தில் உருண்டை வடிவத்தில் ஏதோ பொருள் கைப்பற்றப்பட்டு இரசாயண பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. சந்தேகமில்லை. வெடிகுண்டு தயாரிப்பு முயற்சிதான்.

நள்ளிரவு. இவர்கள் மூவரும் நிர்வாணமாக்கப்பட்டனர். பொலிஸ்காரரின் மன அழுக்குகளை இவர்கள் செயற்படுத்த மறுத்தமையில் இவர்கள் ஆண் குறியில் சிகரெட்டின் தணல்முனை அழுந்திப் பதிந்தது. நகங்களில் குண்டூசிகள் செருகப் பெற்று இரத்தம் மொட்டுகளாகச் சொட்டிற்று. ஒவ்வொருவரின் கையிலும் சிறிய இரும்புக் குழாயினைக் கொடுத்து அதனை மற்றவரின் மலவாசலினுள் நுழைக்கும்படி மர்ம அடிகள், வேதனை ஓலமிட்டது. தாளாத வேதனைக்கு நிவாரணந்தேடி, வெடிமருந்து குழைத்ததாக ஈனஸ்வரமாக ஒப்புதல் வாக்குமூலமளித்தான் ஒருவன்.

இச்சம்பவங்கள் பற்றிய அந்தரங்க அறிக்கையினை மிகவும் கூர்மையாக, ஒருமுறைக்கு இருமுறையாக வாசித்துவிட்டு, பொலிஸ் இன்ஸ்பெக்டரை தனக்கு அருகாக அழைத்து நிறுத்தி, ''எனது மெய்ப்பாதுகாவலராகப் பணியாற்றுவதற்கு உமக்குச் சம்மதந்தானே?'' எனக் கேட்டார்.

''எனது உயிரைப் பாதுகாத்து, தேசத்தில் தர்மம் தழைக்க வைத்துள்ள உம்மைப் பற்றி பிரதம மந்திரியிடம் விதந்துரைப் பேன்'' என்று அமைச்சர் கூறியபோது, 'நான் என்றைக்கும் உங்களின் கீழ்ப்படிவுள்ள அரசாங்க ஊழியன்' என உடல் வளைவினாலே பதில் சொன்னார் இன்ஸ்பெக்டர்.

மறுநாள், அமைச்சர் தொலைபேசி மூலம் இன்ஸ்பெக்டருக் கான அவசர இடமாற்றத்தை உறுதிப்படுத்தி அவரைத் தன்னோடு அழைத்துச் சென்றார்.

புதிதாக பதவியேற்ற இன்ஸ்பெக்டர், பதவி உயர்வினை அநேக வருஷங்களாகவே எதிர்பார்த்திருந்தவர். பலருக்குப் பல்லிளித்தும், வேண்டியன செய்தும் கருமம் ஒப்பேறாமையினால் கொதித்துப் போயிருந்தார். இது நல்ல சமயம். அதுவும் தமிழன் பதவி உயர்வு பெற்றுச் செல்கின்றபோது நான் மட்டும் சும்மா இருப்பதா என நினைத்துக் கொண்டார். 'ஒரே கல்லில் இரண்டு காய். பறைத் தமிழனுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேணும்...'

மீண்டும் மூன்று இளைஞர்களும் நிர்வாணம். ஜன்னலோடு கைகள் கட்டப்பட்டு நா வரளத்தக்க சித்திரவதை. தணற் சட்டிக்குள்ளே மிளகாய்த்தூள் கொட்டப் பெற்று அறையெங்கும் காரப்புகை கெம்பி வழிந்தது. ஒரே ஓலம். மீண்டும் வெளியே தள்ளி சுவரோடு தலைகளினை மோதுதல், மூக்கிலிருந்தும் நெற்றியிலிருந்தும் அரும்பிக் கசகசக்கின்ற இரத்தம். கைகளினைச் சுவரோடு வைத்திருக்கும்படி கூறிவிட்டு கழுத்துப் புறத்திலும், இடுப்பின் சரிவுகளிலும், முழங்கால் முட்டுகளிலும் குண்டாந்தடித் தாக்குதல்.

இருவர் வேதனை தாங்கமுடியாது அலறினார்கள்; சவுக்கடியினால் ஈனஸ்வரமாக அலறித் துடிக்கின்ற குதிரைக்குட்டியின் ஓசையில், முதுகில் உப்போடு கலந்த மிளகாய்ப்பொடி இறைக்கப்பட்டது. கசிகின்ற வரிவரியான இரத்தக் கோடுகளில், சதையின் ஆவெனப் பிளந்த வெடிப்புகளில் மிளகாய்த்தூள் அப்பிய எரிவு - கண்களை, மூளையை, மூக்குத் துவாரங்களை, கன்னப் பொட்டுகளை, இதயத்தை, அடிவயிற்றை, உள்ளங்கால்களை, விதைகளைச் சுண்டி, பிராண்டி இழுத்து நெருப்பாய் அழுத்துகின்ற நெஞ்சை நார்நாராய்ப் பிய்க்கின்ற எரிவு...

"நாங்கள் வெடிகுண்டு செய்தோம்... செய்..தோஒஒம்"

வாக்குமூலம் இருவரிடமிருந்தும் பதிவாயிற்று. என்ன சொன்னோமென்றே நினைவில்லாத அவ்விருவரும், எழுதப்பட்டதென்னவென்று தெரியாத வாக்குமூலத் தாளினில் கையெழுத்திட்டனர்.

இன்ஸ்பெக்டரின் பார்வை எதையுமே பேசாமல் வன்மத்தோடு நடக்கின்ற செல்வராசாவின் மேலே ஆழத்தோடு

படர்ந்து பரவியது. 'இவ்வளவு சித்திரவதைக்கும் அசைந்திடாத இவனிடம் ஏதாவது ரகசியம் இருக்க வேண்டும்; அதிலே ஒரு சந்தேகமும் இல்லை.'

''நீதானடா இது 'பிளான்' பண்ணினது. நீ சரியான பயங்கரவாதி...''

எல்லாமே அரைகுறை வடிவில், எல்லாமே அரைகுறை ஒலியில், உயிரே கழன்று நழுவிப் போய்க் கொண்டிருக்கிற நிலையில், தாகத்துக்காய் கெஞ்சுகின்ற நாக்கோடு தடுமாறித் தத்தளிக்கின்ற அவனை ஓங்கி உதைத்தார் இன்ஸ்பெக்டர். அந்தக் கணத்தின் மின்வெட்டுத் தாக்குதலில் தளர்ந்து மடிந்து வாயிலிருந்து இரத்தம் 'களுக்'கென வழிய சருகாய் நிலத்தோடு மடங்கினான் செல்வராசா.

''றாஸ்கல்... வாயே திறக்கிறானில்லை. இப்ப வாய் திறக்கும் பாரடா...''

கூரையை நிமிர்ந்து நோக்கினார் இன்ஸ்பெக்டர். மெல்லிய கயிற்றினை எடுத்து கொன்ஸ்டபிளிடம் வீசினார். உத்திரத்திலே செல்வராசா தலை கீழாகத் தூக்கிக்கட்டப்பட்டான். அவனுக்கும் நிலத்திற்கும் எட்டடி இடைத்தூரம். கட்டப்பட்ட சில நிமிஷங்களினில் கயிறு இற்று அற இவன் மடாரென நிலத்தில் துவண்டு விழுந்தான் -

எங்கோ எலும்பு மடங்கிற்று. சதை பம்மி வீங்கி, மெதுவாக புஜத்திலே இரத்தம் கொள கொளவெனப் பீறி வழிந்தது. நரம்புகள் ஒன்றையொன்று சுண்டி இழுத்துப் பின்னர் ஓய்ந்து மீண்டும் இழவுண்டு உடல் முழுவதுமே வலித்தாற் போல உலுப்பல். இப்போது எல்லா வலியும், நோயும் அற்றுப் போய் மெல்ல மெல்ல உடல் எங்கேயோ இழுத்துச் செல்லப் படுவதைப் போல...

''நாயே உண்மை சொல்லுடா...''

கைகள் மடங்கி, மடங்கிய நிலையிலே கிடந்த செல்வ ராசாவின் நெஞ்சில் பூட்ஸின் அடிப்பாகத்தால் ஊன்றி நசித்தார் இன்ஸ்பெக்டர். இப்போதும் செல்வராசா வாய் திறக்கவில்லை.

5

அட்வகேட் ஜெயக்குமாரும், அருளும், நானும் முருகேசுவையும் கூட்டிக்கொண்டு நகரப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றோம். பொலிஸ் நிலையத்தில் பந்தோபஸ்து மிகவும் கடுமை. நுழையும் ஒவ்வொருவரையும் நோட்டமிடும் கண்கள் பின் தொடர்ந்தன. நாங்கள் நால்வரும் 'விசாரணைகள்' பகுதிக்கு முன் சென்று உட்கார்ந்து கொண்டோம்.

ஜெயகுமார் தனக்குத் தெரிந்த அதிகாரிகள் யாராவது காணப்படுகின்றனரா என்று பார்வையிடுவதற்காக எழுந்து சென்றார்... 'விசாரணைகள்' பகுதியில் விசாரணை செய்துபதில் சொல்பவரைத் தவிர ஏனைய எல்லாம் அசையாமலிருந்தன.

நாங்கள் சென்று அரை மணி நேரங்கழிந்த பின்னர், பொலிஸ்காரன் ஓர் பெரியதொரு 'ரிஜிஸ்ட்டரை'க் கொண்டு வந்து 'விசாரணைகள்' மேஜையில் வைத்து விட்டு சாவகாசமாக கதிரையை இழுத்துப் போட்டவாறு மணிக்கூட்டைப் பார்த்தார்.

பின்னர் சில நிமிஷங்கள் கழிய எங்களைப் பார்த்தார். கண்கள் கேட்டன: 'என்ன விஷயம்?' இதே வேளையில் ஜெயக்குமார் அவ்விடத்திற்குப் போக, நாங்களும் அவரைப் பின் தொடர்ந்தோம். ஆங்கிலத்தில் கேட்டார் ஜெயகுமார். சிங்களத்தில் பதில் வந்தது.

''இரண்டு நாட்களாக யாருமே ரிமாண்டிற்கு கொண்டு வரப்படவில்லை. கொஞ்ச நேரம் பொறுங்கள்... என்ன பெயர்? முருகேசு... செல்வராஜா... சரி, பொலிஸ் விசாரணைக்கு வந்தவரா என்று பார்த்துச் சொல்கிறேன்...''

பதினைந்து நிமிஷங்களிற்குப் பிறகு பதில் கிடைத்தது. 'முருகேசு செல்வராசா என்ற பேர்வழியை நகரப் பொலிஸார் கைது செய்யவோ அல்லது இங்கு விசாரணைக்காகவோ அழைத்து வரவில்லை. அப்படியொரு நபரைப் பற்றியே இவர்கள் அறியமாட்டார்கள்.' நான் மற்றவர்களைப் பார்த்தேன். பேயறைந்தாற் போல அதிர்ந்து கறுத்திருந்தது முருகேசனின் முகம். பரபரப்பும் ஆத்திரமும் கண்களிலே துடித்துக் கொண்டிருந்தன அருளிற்கு. நிதானமான குரலிலே சொன்னார் ஜெயகுமார்.

''இவர்களை விசாரிக்கிறதை விட எஸ்.பி.யோடை கதைக்கிறதுதான் நல்லது. சிலவேளை கீழ்மட்டத்திலை இருக்கிற இவையவளுக்கும் விஷயந் தெரியாமலிருக்கலாம்...''

பகீரதப் பிரயத்தனங்களின் பின்னர் எஸ்.பி.யின் அறைக்குச் சென்றோம். அவரது அறையினுள் இரண்டு கதிரைகள் மட்டுமே போடப்பட்டிருந்தன.

ஜெயக்குமார் உட்கார, நான் முருகேசுவைப் பார்க்க எஸ்.பி. அருளை உட்காரும்படி சைகை காட்ட, அருள் ''இவருடைய அலுவலாகத்தான் உங்களோடு கதைக்க வந்தோம்'' என்று கூறியவனாய் முருகேசுவை உட்கார வைக்க, எஸ்.பி.யின் முகம் லேசாகக் கறுத்தது.

''யெஸ்... மிஸ்டர்...'' கறுத்த அங்கியணிந்திருந்த ஜெயகுமாரைப் பார்த்து கனத்த குரலில் இழுத்தார் எஸ்.பி.

தன்னை அறிமுகப் படுத்தியவாறு வந்ததற்கான காரணத்தைச் சொன்னார் ஜெயக்குமார்.

எஸ்.பி. சில நிமிஷங்கள் யோசனையில் ஆழ்ந்தார். பின்னர் பிடரியைச் சொறிந்து கொண்டு தொலைபேசியை எடுத்து அசிரத்தையாக எண்களைச் சுழற்றினார். எதிர் முனையிலே யிருந்து கிடைத்த பதிலினைச் சொன்னார். முன்னைய பதில்; அட்சரசுத்தங் முறையாமல்.

அருள் இப்போது தொடங்கினான்:

''நான் என்னுடைய கண்களாலேயே கண்டேன். யார் சொன்னதையும் அவர்கள் கேட்கத் தயாராயிருக்கவில்லை. ஒரு கொலைகாரனைக் கைது செய்வதற்குக்கூட சில விதிமுறைகள் உள்ளன. இவை எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டு செல்வராசா என்ற அந்த அப்பாவியை பொலிஸ் வானுக்குள் ஏற்றிச் செல்வதை நான் நேரிலேயே கண்டேன்...''

தேவையில்லாமல் குறுக்கிட்டுப் பேசுகிறீர் என்று கூறுகிறாற் போல அருளை ஏறிட்டுப் பார்த்தார் எஸ்.பி.

''அவர்களெல்லாம் இந்தப் பொலிஸ் ஸ்டேசனைச் சேர்ந்தவர்கள் என்று உமக்கு எப்படித் தெரியும்? எதையும் ஆதாரமில்லாமல் இந்த இடத்தில் கதைக்கக் கூடாது...''

எஸ்.பி.யின் குரலே சற்று அதட்டியது.

ஜெயகுமாரைப் பார்த்தான் அருள். கொதிக்கின்ற பார்வை. அவனது மனதினுள்ளே இறந்த காலக் காட்சிகள் மின்னலாகத் தோன்றி அழிந்தன.

''வந்தவர்கள் அடையாளம் காண்பிக்க முடியாதவாறு நீளக்காற் சட்டையும், வெள்ளை பனியனும் அணிந்திருந் தார்கள். எல்லோரது கைகளிலும் துவக்குகள் இருந்தன. உங்க்ளுக்கு யூனிபோமோ, அடையாள அட்டையோ இல்லையோ...? அரஸ்ட் வாரண்டோடை வந்திருக்கிறீர்களா என்று நான் கேட்டபோது, என்னை மிகுந்த ஆத்திரத்தோடு முறைத்தனர். எனது முகவரியை மட்டும் எழுதிக் கொண்டு, நாங்கள் பொலிசார் - அதிகாரத்தோடுதான் வந்திருக்கிறோம். மேலும் இதைப் பற்றி விபரமறிய வேண்டுமென்றால் நகரப் பொலிஸில் போய்க் கேளுங்கள் என்றனர். அவ்வளவுதான் விஷயம். எல்லாம் ஒரே குழப்பமான நடைமுறையாக, மனித உரிமைகளை மீறுகின்ற விஷயமாக இருக்கிறது. இதையிட்டு யாரோடு இனிப் பேசவேண்டி வருமோ தெரியவில்லை...''

அருளினது நிதானமான அச்சமற்ற வார்த்தைகள் எஸ்.பி. யைச் சில கணங்களிற்கு யோசிக்க வைத்தன. அருளினது உருவம், பொலிஸ் சம்பிரதாயங்களைப் பற்றி கொஞ்சமும் அக்கறைப்படாத உண்மையின் தேடல். சரளமான ஆங்கில உரையாடல் என்பன பிரச்னையின் பிம்பத்தினை சிறிது மாற்றங் காண வைத்தது என்பதனை இன்ஸ்பெக்டரின் புருவ நெரிப்பு தெளிவு படுத்திற்று. குறுந்தாடியை நீவிக் கொண்டிருக்கிற அருளைப் பார்த்தபடியே தொலைபேசியினை எடுத்தார். நிமிஷங்கள் கரைந்தன.

''முருகேசு செல்வராஜா... சரி. சரி... அவனேதான்...''

தொலைபேசியை வைத்துவிட்டு அவர்களை ஊடுருவினார் எஸ்.பி.

''பிரச்னை இப்போது சிக்கலாகிவிட்டது. செல்வராஜா தேடப்பட்டு வருகிற நபர். கொழும்பிலிருந்து வந்த பொலிஸார் தான் கைது செய்திருக்கிறார்கள். இத்தகைய கேசுகளை விசாரணை முடியும்வரை வெளியே விட மாட்டார்கள். எதற்கும் நீங்கள் ஒருமுறை இராணுவ முகாமில் போய்க் கேட்டுப் பாருங்கள்...''

''கைது செய்யப்பட்டுள்ள நபர் எங்கு வைக்கப்பட்டுள்ளார் என்பதனை பெற்றோருக்குக்கூட அறிவிக்காமல்...''

அருளின் குரலை எஸ்.பி. வெட்டினார்.

''மிஸ்டர்... இது என்னுடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற் பட்ட விஷயம்... பை த வே... உங்களுடைய விலாசமும் எங்களுக்குத் தேவைப்படும், சொல்லுங்கள்.''

இரண்டாவது முறையாகவும் பொலிசாருக்கு அருள் எனது முகவரியைக் கூறினான்.

இன்னொரு நாட்டோடு யுத்தத்திற்கு தயார் நிலையில் நிற்கிறாற் போன்ற சூழ்நிலை ராணுவ முகாமிலே. டிரக்குகள், கவச மோட்டார்கள், ஜீப் வண்டிகள், இராணுவ சிப்பாய்கள் வாசலில் துப்பாக்கிகளோடு விறைத்துப் போய் நின்றனர். எங்களைக் கண்டதும் எங்கள் நெஞ்சுக்கு நேராக துப்பாக்கி முனைகள் நீண்டன. அடுத்த காலடி வைத்தால் சூடு விழுமென்ற எச்சரிக்கை... நின்றோம்.

ஜெயகுமார் சிங்களத்தில் சொன்னார்.

பதிலையும் எங்களுக்கு மொழி பெயர்த்தார்: ''ஒருவர் மட்டுமே உள்ளே போகலாம்... இரத்த உரித்தாளி. அதாவது நெருங்கின சொந்தக்காரர் மட்டும்.''

யார் போவது?

'இவர்களோடு போய் நான் என்ன பாஷையிலே பேசிக் கொள்வது? நீங்கள் யாராவது போய்க் கதைத்து விட்டு வாருங்கள்' என்றது முருகேசுவின் முகம்.

''நான் போகிறேன்...''

வைராக்கியம் மேவிய முகத்தினோடு அருள் முன்வந்தான். ஜெயகுமார் திருப்தியோடு தலையசைத்தார்.

''ஆனாலும் இவர்களோடு வெகு நிதானமாகக் கதைக்க வேண்டும். அவர்கள் ஆத்திரப் படுத்தினாலும் எக்காரணத்தை யிட்டும் நீர் ஆத்திரப்படக் கூடாது. முக்கியமான விஷயம் செல்வராசாவை வெளியிலே கொண்டு வருவதுதான்... உம்மை யாரென்று கேட்டால் செல்வராசாவின் ஒன்றுவிட்ட சகோதரன் என்று சொல்ல வேண்டும்... அனேகமாக இராணுவ அதிகாரி இங்கிலிஷ் தெரிந்தவராக இருப்பார்... அவரோடு மனம் விட்டுக் கதைக்கவும் முடியும்...''

நாங்கள் மூவரும் அருளை உள்ளே அனுப்பிவிட்டு வீதியோரமாக மகோகனி மரத்தின் கீழேயுள்ள தேநீர்க் கடை யொன்றினுள் சென்று உட்கார்ந்து கொண்டோம். சூரியனின் மந்தார வெய்யில் இலேசான தலையிடியினை உண்டாக்கிக் கொண்டிருந்தது. எல்லாவற்றையும்விட மனம் எல்லையில்லாத அழுந்துதல்களால் சோர்ந்து பொருமியவாறிருந்தது. ஒன்றுமே பேசிக் கொள்ளாமல் முக்கால் மணித்தியாலம் ஆமை வேகத்தினில் கழிந்த வேளையில், வெளியே அருள் வந்து கொண்டிருந்தான். எங்கள் மனம் சொல்லவொண்ணாத ஆவலில் பரபரத்தது.

''ஒன்றும் பிரயோசனமில்லை... செல்வராசா இங்கேயும் இல்லையாம். இங்கேயெல்லாம் கேட்டு ஒரு பிரயோசனமு மில்லைப் போலிருக்கிறது... நான் இன்றைக்கு கொழும்பிற்குப் போய் ஒரு முடிவு கண்டு வரவேணும்... 'டிக்டேட்டர்ஷிப் கவர்ண்மென்ற்' ஒன்ளறிலைகூட இப்பிடி நடவாது...''

அருளின் குரலில் அழுத்தமான முடிவு தொனித்தது.

நான் அருளைத் தடுக்க முயன்றேன்.

''இப்போதைய சூழ்நிலையில் கொழும்புப் பயணம் புத்திசாலித்தனமானதில்லை. இங்கேயே முயற்சி செய்வதுதான் பிரயோசனமாயிருக்கும்...''

அருளய் என்னைப் பார்த்தான். அர்த்தபுஷ்டியோடு.

''இல்லை... நான் போயே ஆகவேணும்...''

6

பாடசாலை முடிவடைந்து திரும்பி வந்த சிவாவின் முகம் வாடிக் களைத்திருந்ததை அவதானித்தேன். இந்தக் கிழமை முழுவதுமே பரபரப்பாகக் கழிந்து, அவளின் நாளாந்தப் பேச்சுக்களே ஆத்திரத்தோடு, முகந்தெரியாததோர் எதிரியை ஆக்ரோஷமாக விமர்சித்து சாடுவது போல அமைந்திருந்தன. நாளாந்தம் பொலிஸ் கெடுபிடிகளும் இராணுவத்தினரின் திடீர்ப் பரிசோதனைப் பாய்ச்சல்களும் எல்லோரையுமே மனஞ்சலிக்க வைத்து, அன்றாட வாழ்வின் ஒழுங்குகளையே குலைத்து அவர்களின் கண்களிலும் செய்கைகளிலும் அச்சத்தையே தெளித்திருந்தன.

நேற்று மாலைப் புகையிரதத்தில் அருள் கொழும்பிற்குச் சென்றது ஒரு புறத்திலே எங்களை கவலையில் ஆழ்த்தி யிருந்தது. எந்த நேரத்தில், எங்கே என்ன நிகழுமோ என்பது யாருக்குமே தெரியாததொன்றாயிருந்ததால் மனமே குழம்பிக் கொண்டிருந்தது.

நான் அருளிற்காக ஒதுக்கப்பட்ட முன் அறையினுள்ளே சென்று ஜன்னல்களைத் திறந்து விட்டேன். மெல்லிய காற்று அறையினுள்ளே குளுகுளு வென்று நுழைந்தது ஒரு சுட்டிப் பையனைப் போல. 'ட்டுவிக் ட்டுவிக்' என அணில்கள் பாடியவாறே அங்குமிங்குமாய் சுறுசுறுப்பாகத் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன. ஒன்றையொன்று தொட்டும் தடவியும் கண்களை நிறைத்தன செழித்த வாழையிலைகள்.

நான் மேசையின் முன்புறமாக வந்து அமர்ந்து கொண்டேன். எதிரே அழகிய மணிக்கூட்டொன்றை மாட்டியிருந்தான். ஒவ்வொரு மணியாகின்ற போதும், மணிக்கூட்டின் தலைப் பகுதியிலுள்ள வீட்டு வடிவத்துள்ளிருந்து வெளியே வந்து எட்டிப் பார்த்து நேரம் ஒலிக்கின்ற குருவியோடு அமைந்த அலங்கார மணிக்கூடு. குருவி எட்டிப் பார்த்து இப்போதுமணி சொல்லிவிட்டு உள்ளே போய் விட்டது, இனிமையானதொரு சங்கீதமாக.

மேசையின் ஓரம் டைப்ரைட்டர். முக்கால்வாசிப் பக்கம் வரை அடித்த கட்டுரை மெஷினிலேயே கிடந்தது. அதன் அருகேயுள்ள ஃபைலினுள் ஏற்கனவே அவன் டைப் செய்த இரண்டு பக்கங்கள் 'வாஷிங்டன் போஸ்'டுக்கும், 'மில்வாக்கி நியூஸ்' பத்திரிகைகளுக்கும் இலங்கையின் தற்போதைய நிலை பற்றி வெகு அப்பட்டமாகச் சொல்கிற கட்டுரை. பின்தங்கிய பிரதேசங்களில் விவசாய அபிவிருத்தி, மண் ஆய்வு, உரமிடல் பிரச்சினை பற்றி இவன் எழுதிய ஆங்கில நூல்கள். லெஸ்டர் பிரவுன் எழுதி 'சிட்டி' தமிழில் மொழி பெயர்த்து வாசகர் வட்டம் வெளியிட்ட 'அறிவின் அறுவடை' தமிழ்ப் புத்தகம்.

இதே லெஸ்டர் பிறவுணை அருளுடன் ஒப்பிட்டு, லெஸ்டர்பிறபுணை விட அறிவாற்றல் மிக்கவன் அருள் என எழுதப்பட்ட ஒரு பத்திரிகைக் கட்டுரை நினைவிற்கு வந்தது. மனதிலூறிய ஆச்சரியத்தோடு அந்தப் புத்தகத்தை எடுத்தேன். 'பசுமைப் புரட்சிக்காய் விஞ்ஞானப்புதுமைகள் விளைக்கின்ற... லெஸ்டர் பிறவுணை விஞ்சிய ஆய்வாளன் அருளிற்கு - லட்சுமி

கிருஷ்ணமூர்த்தி, வாசகர் வட்டம்' என எழுதிக் கையொப்பமிடப் பட்டிருந்தது. என்னையறியாமலே எனது மனம் பெருமிதத்தால் விம்மிற்று.

'இவனுடைய எண்ணங்கள் எவ்வளவு பேரை வசீகரித் திருக்கின்றன... அத்தகைய பெருமைக்கும் கௌரவத்துக்குமுரிய அருள்...'' என நெஞ்சிலிருந்து மறுகணமே பெருமூச்சு சீறியது.

'எல்லா வசதிகளையும் தூக்கியெறிந்துவிட்டு, தனது தாய் நாட்டிற்குத் திரும்பி வந்து தனது அனுபவங்களையும், ஆராய்ச்சி முடிவுகளையும் பிரயோகித்து விவசாயத் துறையில் பெருமாற்றங்கள் செய்ய வேண்டுமென்று நிறைந்த ஆசைகளோடு வந்தான் அருள். தான் பிறந்து வளர்ந்த மண்ணில் நடந்து திரிவதே பெரும் பேறெனக் கருதிய அவன், இந்த அறையினுள்ளே ஒரே ஒரு முழு நாள் தன்னும் தங்க முடியாதவனாக, ஆறுதலாயிருந்து என்னோடு கதைக்க முடியாதவனாக...'

வெளியே காலடிச் சத்தம் கேட்டது. நான் எழுந்து வெளியே போனேன். சோர்ந்த முகத்தோடு ஜெயகுமாரும், முருகேசுவும் நின்றனர்.

''எவ்வளவு முயற்சிகள் செய்தும் செல்வராசாவைப் பற்றி ஒரு தகவலுமே அறிய முடியவில்லை. பாராளுமன்ற உறுப்பினரைச் சந்தித்து விஷயத்தைக் கூறியபோது அவரும் மிக பரபரப்புக் கொண்டு தொடர்புகளைக் கையாண்டும் ஒரு பதிலையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. அவர்களுக்கும் உதாசீனமான பதில்களே வருகின்றன. எம்.பி. மாரே இப்போது தமது உயிரையும், உடமைகளையும் பாதுகாத்துக் கொள்ள முடியாத சூழ்நிலைக்குள்ளாகி இருக்கிறார்கள். இந்த நிலைமையிலை யார்தான் என்ன செய்ய முடியும்?''

மனதிலே மொய்த்திருக்கின்ற பிரச்சினைகளின் தாக்கம், ஜெயகுமாரின் சொற்களில் அழுந்தித் தொனித்தது.

''பிறந்த மண்ணிலேயே பாதுகாப்பில்லாத நிலை. அந்நிய மண்ணிலே ஒதுங்கிக் கொண்டு வாழ்க்கை நடத்துகிற நிலைமை வந்திட்டுது. எந்நேரம், என்ன நடக்குமோ என்று தெரியாம லிருக்கிறது...''

தனது 'டை'யை கழுத்திலிருந்து முடிச்சைக் கழற்றி உதறி மடித்துக் கொண்டார் ஜெயகுமார். ஐம்பது வயதான, தலை

முழுவதும் வெள்ளை வெளேரென நரைத்துப் போன, தனது மனசாட்சிக்கு சரியென்று படுகின்ற வழக்குகளை மட்டுமே ஏற்று அதனால் இதுவரை திருமணமாகாமலும், வாடகை அறையிலும் வாழ்ந்து வருகிற ஜெயகுமாரை நான் புதிய மனிதராகப் பார்த்தேன். ஒரு சதங்கூட வாங்காமல், தனது எல்லா வேலைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு நியாய மொன்றுக்காக எங்களோடு அலைகின்ற இந்த மனிதருக்கு எப்படி நன்றி சொல்லலாம்?

சிவா உள்ளேயிருந்து தேநீர் கொண்டு வந்தாள்.

''மத்தியானம் நீங்கள் இருவருமே சாப்பிட்டிருக்க மாட்டீர்கள். சாப்பாடு வைத்திருக்கின்றேன்... கால் முகம் கழுவி விட்டு வந்து சாப்பிடுங்கோ...''

முருகேசு அவளை நிமிர்ந்து பார்த்த பார்வையிலே நிறைந்த வாத்சல்யம். ஜெயகுமார் வாயினால் உஸ்ஸிட்டுக் களைப் பாறிய பின் தேநீர்க் கோப்பையினை எடுத்து உறிஞ்சினார்.

''எங்குமே பதட்டமாகத்தான் இருக்குது...''

சிவா நாற்காலியில் உட்கார்ந்தாள்.

''எங்களினுடைய பள்ளிக்கூடத்திலை இன்றைக்குப் பெரிய சலசலப்பு. அட்டூழியங்களெல்லாம் அளவுக்கு மேலாகிக் கொண்டு வருகுது...''

நான், சிவாவைப் பார்த்தேன்.

''நேற்று இரவு யாரோ எங்களினுடைய பள்ளிக்கூட மதிற்சுவர்களிலை 'ஆயுதப் படையினரே, உங்களின் கொலைகாரத்தனமான அட்டூழியங்களை நிறுத்தி விட்டுத் திரும்பிச் செல்லுங்கள்' என்று பெரிய எழுத்துக்களிலை மையாலை எழுதிவிட்டார்கள். காலையிலை பெரியதொரு இராணுவப் படையே பள்ளிக்கூடத்திற்கு வந்திட்டுது. இராணுவ அதிகாரி பள்ளிக்கூட மாணவர்களைக் கொண்டு இந்தச் சுலோ கங்களையெல்லாம் அழித்துவிடச் சொன்னபோது பிரின்ஸ்பல் அதற்கு மறுப்புச் சொல்லிவிட்டார்... இராணுவத்தினருக்கு இதனாலை சரியான ஆத்திரம். பிரின்ஸ்பலை மிரட்டிப் பார்த்திருக்கிறார்கள். அவர் ஒன்றுக்கும் பயப்பிடாத மனிதன், அசைந்தே கொடுக்கவில்லை... ஒன்றுமே செய்ய வழியில்லாத இராணுவத்தினர் வீதியாலை அப்போது போய்க் கொண்டிருந்த சில இளைஞர்களைத் தடுத்து நிறுத்தி, துப்பாக்கி முனையில்

அவர்களை வைத்து அந்தச் சுலோகங்களையெல்லாம் அழிப்பித்திருக்கிறார்கள். பிரின்ஸ்பலை, இரவு வீட்டில் வந்து சந்திக்கிறதாக அந்த இராணுவஅதிகாரி சொல்லிவிட்டுப் போயிருக்கிறான்...''

ஜெயகுமாரின் முகத்திலே கவலை படர்ந்தது.

''அந்த ஆளுக்கு இராணுவம் ஒரு தீங்கும் செய்யாதே?''

கவலை படர்ந்திருந்த சிவாவின் முகத்திலே லேசான புன்னகை ஒளியை மலர்த்தியது.

''அவர் இன்றைக்குத் தன்னுடைய வீட்டிலே தங்க மாட்டார். நாங்கள் அதற்குரிய ஏற்பாடுகளை வெகு அவதானமாகச் செய்திருக்கிறம். அவர் ஒரு தனியாள். ஆனபடியாலை பிரச்சினைகளும் குறைவானவர்...''

ஜெயக்குமார் அருளைப் பற்றி கவலையோடு விசாரித்தார். செல்வராசாவின் விஷயமாக அமைச்சரைச் சந்திக்கச் சென்றிருந்த அருள் எதுவித பிரச்சினையும் இல்லாமல் திரும்பி வந்துவிட வேண்டுமென்பதே எங்களின் மனத் துடிப்பாயிருந்தது. அருள், தான் நம்புகின்ற நியாயத்திற்காக எதையுமே செய்யக் கூடியவன். நியாயத்தை எடுத்து வாதாடினால் சில வேளைகளில் அதுவே தண்டனைக்குரிய குற்றம் என்று அரசாங்க சட்டங்களும் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன.

''பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள் என்றதைத் தெரியாமல் இவர் நியாயமொன்றையே துணையென்று கருதிப் போயிருக்கிறார். எப்படியோ முயற்சி செய்து செல்வராசாவை வெளியிலை கொண்டு வந்தால் சரி. அதுவே பெரிய காரியம். அப்படியே நடக்கவும் வேணும்...''

சிவா தேநீர்க் கோப்பைகளை எடுத்துக் கொண்டு போய் உள்ளே வைத்துவிட்டு வந்து துவாலையையும், சோப் பெட்டியையும் முருகேசுவின் கையிலே கொடுத்தாள்.

''நல்ல முடிவொன்று கிடைக்க வேண்டுமென்றுதான் அருள் இவ்வளவு பாடுபடுகிறான். எனக்கும் நம்பிக்கையிருக்குது. அருள் நன்றாக யோசிக்காமல் இந்த முடிவுக்கு வந்திருக்க மாட்டான்... எப்பிடியும் முயற்சித்து அவன், செல்வராசாவை விடுவித்தே தீருவான். நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்காமல் போய் முகத்தைக் கழுவிவிட்டு வாருங்கள்...''

நான் சொல்வதைக் கேட்டுவிட்டு இருவரும் கிணற்றடிப் பக்கமாகச் சென்றனர். ஆஜானு பாகுவான முருகேசு தளர்ந்த நடையுடன் போவதைப் பார்க்கையில் எனது மனம் கலக்கமுற்றது.

சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் வீதியிலே அடிக்கடி ஜீப் வண்டிகள் ஓடிக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. பயங்கரமானதொரு பரபரப்பு, இருட்திரையினைப் போல அவ்விடமெல்லாம் கவிந்து பரவிக் கொண்டிருந்ததை உணர்ந்திருந்தது ஒவ்வொருவரின் மனமும்.

''1971ஆம் ஆண்டிலே நான் பேராதனைக் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த போது சரியாக இதே போலத்தான் சூழ்நிலையிருந்தது. நாளாந்தம் அங்கிருந்த பல மாணவ மாணவிகளை 'சேகுவேரா' என்ற பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி மிகக் கொடூரமாக நையப்புடைத்து அழைத்துச் சென்றதனை நான் என்னுடைய கண்களாலேயே கண்டேன். எவ்வளவு பேர் அநியாயமாக...'' ஜெயகுமார் முருகேசுவைப் பார்த்துவிட்டு கண் ஜாடை செய்தார் சிவாவுக்கு; பின்னர் தானே கூறத் தொடங்கினார்.

''அதுவும் இதுவும் ஒப்பிடத்தக்கதில்லை. பொலிஸ்காரருடைய அட்டூழியங்களைப் பொறுக்க முடியாமலும், சமுதாய விடுதலையினை மேற்கொண்டு அரசியல் மாற்றத்தினை சாத்தியப்படுத்த நினைத்து, சரியான கொள்கையும், ஒரே தலைமையும், வெகு ஜனங்களின் ஒத்துழைப்பில்லாமலும் நடத்தப் பெற்ற ஒரு 'அடவென்சரிஸ'ப் போராட்டம் அது... அதன் தோற்றத்திலேயே தோல்வியுமிருந்தது. ஆனால் இது சூதுவாதற்ற அப்பாவிகளுக்கு பயங்கரவாதிகள் என்ற பட்டம் சூட்டி நடத்தப்படுகின்ற இழிவான, அரக்கத்தனம் பொருந்திய மனித வேட்டை. நீதிக்குப் புறம்பான கொடூர அடக்குமுறை... இதை இப்போது எல்லோருந்தான் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்... ஆனால்...''

ஜெயகுமார் சிறிது நேரம் யோசித்துக் கொண்டிருந்தார்.

''நன்றாக யோசித்துப் பார்க்கிறபோது தமிழராய்ப் பிறந்த ஒரு காரணத்திற்காகவே இப்பிடி வதைபட வேண்டியிருக்குது...''

''நீங்கள் சொல்லுறது முற்றிலுஞ் சரி. ஒருவித காரணமுமில்லாமல் பொலிசாலும், இராணுவத்தாலும் பொது மக்கள்

தாக்கப்படுகிறது சாதாரண விஷயமாய்ப் போச்சுது... எந்த இடத்திலை களவு நடந்தாலும், கள்ளரைப் பிடிக்கிறதுக்குப் பதிலாக அப்பாவித் தமிழருக்குத்தான் அடி... எங்கை கொலை நடந்தாலும், அதை எல்லாத் தமிழருமே சேர்ந்து செய்த மாதிரி எல்லோருக்குமே தொந்தரவு... ஒன்றுமறியாதவர்களிலை மிலேச்சத்தனமான தாக்குதல்... இதே போல சிங்கலப் பிரதேசத்திலை ஏதாவது சம்பவங்கள் நடந்தால் இத்தகைய வழிமுறைகளைப் பொலிஸார் கையாளுகின்றார்களா... இல்லையே?''

சிவாவின் தணிவான குரலிலிருந்த ஆதங்கமும், கவலையும் உண்மையானவை; பெரும்பான்மையோரின் நெஞ்சத் துடிதுடிப்பு இவ்வார்த்தைகள். நகரத்திலே அவள் பயிற்றுவிக் கின்ற கல்லூரியிலேயே பல மாணவர்கள் அநியாயமாகத் தாக்குதல்களுக்குள்ளாகி படிப்பினையும் இழந்து நிர்க்கதியாகி விட்ட சம்பவங்களை அவள் எனக்குச் சோகஞ் சுமந்த குரலிலே அடிக்கடி கூறியிருக்கின்றாள். திறமையிருந்தும் அரசாங்கத்தின் கல்விக் கொள்கையினாலே பல்கலைக் கழகம் சென்று படிக்கின்ற வாய்ப்பினை இழந்த அவளினுடைய பல மாணவர்கள் அவளிடம் வந்து தங்களின் பிரச்சனைகளைக் கூறி, அவளது ஆறுதல் வார்த்தைகளினால் மனந்தேறி வீடு திரும்புவார்கள்.

''1961ஆம் ஆண்டிலே தமிழரசுக் கட்சியின் தலைமையில் தமிழ் மக்கள் செய்த சத்தியாக்கிரகத்தை அடக்கி நசுக்குவதற்காக யாழ்ப்பாணத்திற்கும் ஏனைய பகுதிகளுக்கும் இராணுவம் அனுப்பி வைக்கப்பட்டது. இதுவரை அங்கே நிலை கொண்டிருந்த பொலிஸ் படை மேலும் உறுதியாகப் பலப் படுத்தப்பட்டது. அன்றையிலிருந்து தமிழ்ப் பிரதேசத்திலை - குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலை ஒரு பொலிஸ் ராச்சியம் நிர்வாகத்திற்குச் சமாந்தரமாக இயங்கத் தொடங்கியது. யுத்தத்திலை கைப்பற்றப்பட்ட ஒரு பகுதியிலே நடந்து கொள்வதைப் போல இந்த ஆயுதப் படையினர் இயங்கி வந்திருக்கின்றனர். முப்படைகளிலும் தமிழர்களைச் சேர்த்துக் கொள்வது என்பது வெகுவாகக் குறைக்கப்பட்டதாலை தமிழ்ப் பிரதேசங்களிலை பெருந் தொகையான சிங்களப் பொலிசாரே கடமைக்காக நியமிக்கப் பட்டனர்...''

ஜெயகுமார் சில கணங்கள் மௌனமாகி விட்டுத் தொடர்ந்தார்.

''தமிழ்ப் பிரதேசங்களிலை ஆயுதப்படையினருக்கும், பொதுமக்களுக்கும் இடையிலை இப்படியான முரண்பாடுகள் தோன்றினதற்கு எந்தத் தனி மனிதனும் காரணமில்லை. 1961ஆம் ஆண்டிலிருந்து தமிழ்ப் பேசும் மக்களுக்கெதிரான அரசியற் சூழ்நிலை, தமிழ்ப் பேசும் மக்களை அடக்கி வைத்திருப்பதே தமதுகடமையென இராணுவத்தையும், பொலீசையும் யோசிக்க வைத்தது. இந்த இனவாத உணர்வோடு சமூக பண்பாட்டு காரணங்களும் சேர்ந்து கொண்டன... தமிழ்ப் பேசும் மக்களுடைய பாஷை சிங்கள ஆயுதப்படையினருக்குத் தெரியாமலிருந்தது. தமிழ்ப் பிரதேசங்களிற்கு இடமாற்றலாகி வருகிற பொலிசார், இது தங்களுக்கு தண்டனை இடங்களென - Punishment Transfers என எண்ணினர். இந்த ஆத்திரத்தோடு வந்த இவர்களுக்கு அதனைத் தீர்த்துக் கொள்ளக் கிடைத்த ஒரே வழி - கையிலே வாய்ப்பாக அகப்பட்ட தமிழனை அடித்துத் துன்புறுத்துவதுதான்... இதனை அவர்கள், பெரிய உத்தியோகம் பார்க்கிற தமிழனிலிருந்து சாதாரணமானவன் வரைக்கும் வெகு தாராளமாக கையாண்டனர்.

...இதற்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் கைகளைக் கட்டிக் கொண்டு பாராமுகமாயிருந்தது இவர்களுக்கு மேலும் உற்சாகத்தினை அளித்தது... 1970களிலிருந்து தமிழ்ப் பகுதிகளிலே அரசியல் பலாத்காரம் பரவி வந்தது. பொலிசார் இதற்கெதிராக தாம் நினைத்த நல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். பயங்கரவாதிகள் என அழைக்கப்பட்டு வந்தவர்களைக் கைது செய்து விசாரணயின் முன்னே நிறுத்துவதற்குப் பதிலாக பொலிசாரே பொதுமக்களின் மீது பயங்கரவாதத்தினை மேற்கொண்டு அட்டூழியம் புரிகிறார்கள். தங்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ற விதத்திலே அப்பாவிகளைக் கைது செய்து குரூரமாக வதைக்கின்றார்கள்... செல்வராசாவும் அந்த மாதிரித்தான் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான்... என்ன துரதிருஷ்டம்!''

ஜெயகுமார் சொன்ன விஷயங்களை நான் பத்திரிகைகளிலும், பொதுக் கூட்டங்களிலும் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேனேயாயினும், அவர் யாவற்றையும் ஒன்றாக்கிச் சொன்னபோது தட்டமுடியாத வரலாறாகவே அது எனக்குப் புலப்பட்டது. ஜெயகுமாரைப் பார்த்தேன். அவர் திறந்திருந்த கதவினூடாக, கட்டிலில் அசந்து தூங்குகின்ற முருகேசுவையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தார். எதையுமே பேசாமல்

சித்தப் பிரமையுற்றுப் போன மனிதனைப் போல இயங்குகிற இம்மனிதருக்கு எவ்விதத்திலாயினும் நிவாரணந் தேடிக் கொடுக்க வேண்டுமென்பதிலேயே மிகுந்த அக்கறையோடிருந்தார் ஜெயகுமார். பார்வையை முருகேசுவிடமிருந்து மீட்ட அவர் பெருமூச்சோடு எழுந்தார்.

ஜெயகுமார் எங்களை விட்டுப்போனதின் பிறகு எங்கள் இருவரிடையேயும் வெறுமையொன்று கவிந்ததைப் போல நாங்கள் உணர்ந்தோம். மீண்டும் அருளைப் பற்றிய பேச்சு வந்தது. அப்போதுதான் நினைத்துக் கொண்டவள் போல சிவா சொன்னாள்:

"இன்று, பரபரப்பான சூழ்நிலைக்கு மத்தியில் வகுப்பிற்குள் போன எனக்கு நல்ல கவிதையொன்றைப் படிப்பிக்க வாய்ப்புக் கிட்டிற்று. அதைப் படிப்பித்த போது மாணவர்களுக்கு நல்ல உற்சாகம். காலத்திற்கு மிகவும் பொருத்தமான கவிதை. உங்களுக்குக் கட்டாயம் அதைச் சொல்ல வேணும்..."

மகாகவி பாரதியாரின் பாஞ்சாலி சபதக் கவிதை அது. கவிதையின் பின்னணியினை விளக்கிவிட்டு அந்தப் பாட்டினைக் கூறினாள் சிவா.

'...செல்லு நெறியறியார் செய்கையிங்கு பார்த்திடிலோ
கல்லும் நடுங்கும், விலங்குக்கும் கண்புதைக்கும்
செய்கை அநீதியென்று தேர்ந்தாலும் சாத்திரந்தான்
வைகு நெறியும் வழக்கமும் நீ கேட்பதனால்
ஆங்காவையும் நின் சார்பிலாக வகையுரைத்தேன்
'தீங்கு தடுக்குந்திறமிலேன்' என்றந்த
மேலோன் தலைகவிழ்ந்தான்...'

சிவா, கவிதையினை உணர்ச்சி ததும்பக் கூறிக் கொண்டு போகையிலேயே அதன் கருத்தும் வெகு தெளிவாகவே எனக்குப் புலப்பட்டது. வீட்டு மாச்சாரியனின் கையறு நிலையின் சொற்சித்திரம், இந்தக் கவிதையினை, இந்நேரம் இங்கே அருளும் கேட்டிருப்பானாயின் எவ்வளவு மகிழ்ச்சி யினை அடைந்திருப்பான்! உற்சாகம் பொங்குகின்ற குரலிலே மீண்டும் அந்தக் கவிதையினைச் சொல்லும்படி சிவாவிடம் கேட்டிருப்பான். எனது நினைவுகள் பின்னரும் அருளிலேயே

போய்ப் படிந்தது. 'தீங்கு தடுக்குந்திறமிலேன்' என்ற குரலினோடு அருள் என் கண்ணெதிரே வந்து நிற்பது போலொரு தோற்றம்.

'எப்படியும் நான் செல்வராசாவை மீட்டுக் கொண்டு தான் வருவேன். செல்வராசா எத்தகைய சூதுவாதுமில்லாத தூய்மையும் துடிப்புமிக்க முன்மாதிரியான இளைஞன். பொய்யும், புரட்டும், சுயநலமுமிக்க அதிகாரிகளால் செல்வராசாவுக்கு அழுக்குப் பூசப்பட்டிருக்கின்றது. அவனுக்கு 'பயங்கரவாதி' என்ற பட்டத்தினைச் சூட்டி இல்லாத ஒரு கதையினை உருவாக்கிவிட்ட இவர்களின் முகத்திரையினைக் கிழித்து வீசி, இவர்களின் சுயரூபத்தினை அம்பலப் படுத்தாமல் நான் ஓயப் போவதில்லை... இவர்களெல்லாம் அரசாங்கத்தினுள் இன்னொரு அரசாங்கமாயிருப்பவர்கள்... உண்மை வெற்றி யடையும் என்பதிலே எனக்கு உறுதியான நம்பிக்கையுண்டு. ஆகையினால் நண்பனே, என்னைப் பற்றிப் பயந்து கொண்டிராமல் உற்சாகமாய் இரு.'

அட்டகாசமான சிரிப்பும் அவனது குரலோடு மானசீகத்தில் எனக்குக் கேட்டது.

7

அமைச்சு அலுவலகத்திற்குள் நுழைந்த அருள் அமைச்சரைச் சந்திப்பதற்கு வேண்டிய படிவத்தினை எடுத்து நிரப்பிக் கொண்டிருந்தான். 'என்ன காரணத்திற்காக அமைச்சரைச் சந்திக்க விரும்புகின்றீர்?' என்றது ஒரு கேள்வி.

'யாழ்ப்பாணத்திலே ஆயுதப்படையினர் செய்யும் அட்டூழியங்கள் சம்பந்தமாக' என்று எழுதினால் என்ன என்னவென்று நினைத்தது மனம். வேண்டாமென்ற முடிவு அந்த எண்ணத்தினை மறுநிமிஷமே நீரின் மேல் எழுத்தாக்கிற்று. 'அவசர விஷயமாக' எனக் குறிப்பிட்டான்.

அமைச்சரின் அறை வாசலிற் நிறைய பேர் குழுமி நின்றனர். யோசனைகளும், கவலைகளும் நிறைந்து சுமக்கின்ற களைத்த முகங்கள், நம்பிக்கையான எதிர்பார்ப்புகள். ஒவ்வொருவரும் தனி மரத்துக் குருவியாகத் தமது சிந்தனைக்குள்ளே ஒடுங்கிப் போய் மௌனத் தவத்திலே ஆழ்ந்திருந்தனர்.

அமைச்சர் அறையினுள்ளே வந்துவிட்டாரா இல்லையா என்பதனை அறிந்து கொள்ள முடியாமலிருந்தது. அறைக்கதவு நீண்ட நேரமாகத் திறபடவில்லை. சில வேளைகளில் உள்ளே போயிருப்பவர், அமைச்சருக்கு நெருங்கியவராக இருப்பின் சாவகாசமாக பேசிக் கொண்டிருக்கலாம். உள்ளே அவர் இருக்கின்ற படியினாலேதான் கதவின் பாதங்களில் சிலருடைய கண்கள் பதிந்து போயிருக்கின்றன.

நிரப்பிய படிவத்தினை யாருடைய கையினிலே கொடுப்பதென்று அருள் யோசித்துக் கொண்டிருக்கையில் அமைச்சரின் அறை வாசலிலிருந்த மணி கணகணவென ஒலித்தது.

அதுவரையிலும் எதிரறையினுள்ளே நின்ற அமைச்சரின் பியோன் பரபரப்பாக உள்ளே நுழைந்து அதே வேகத்தினில் வெளியே வந்து, ''அன்ரன் பெரேரா - அன்ரன் பெரேரா' என்று கூப்பிட, கதிரையிலமர்ந்து வாயைத் திறந்தவாறே நிமிர்ந்து சரிந்த வண்ணம் கோழித் தூக்கம் போட்டுக் கொண்டிருந்த அன்ரன் பெரேரா, சட்டைக் கொலரைச் சரியாக்கி முகத்திலே பயபக்தி யான புன்னகையை மாட்டிக் கொண்டு, கோயில் மூலஸ்தானத்தி னுள் நுழைகின்ற பாவனையில் உள்ளே போனார்.

பியோனை நோக்கிப் பலர் படிவங்களோடு சென்றனர், அருளும் உட்பட. அன்ரன் பெரேரா உட்கார்ந்திருந்த கதிரையிலே சாவகாசமாக உட்கார்ந்து கொண்டான் அருள். வியர்வை பிசுபிசுக்கின்ற முகத்தினைக் கைக்குட்டையினால் அழுத்தித் துடைத்துக் கொண்டு குறுந்தாடியை நீவி விட்டான். உஸ்ஸென்ற பெருமூச்சு விட்டபோது வெப்பம் இலேசாகத் தணிந்தாற் போலிருந்தது.

கதிரையின் கைப்பிடியிலே அதிலே வந்திருந்த பலரின் நாமங்கள் பொறிக்கப் பட்டிருந்தன. அருள் தனக்கருகில் இருந்தவரைப் பார்த்தான், நேயமாகச் சிரித்தான்.

சோகமயமான அவரது முகத்தினைப் புன்னகையானது எவ்வித மாற்றமும் அடையச் செய்யவில்லை. எனினும் அவரோடு கதைக்கத் தொடங்கினான். அந்த மனிதர் - சிறிசேனா. அமைச்சரின் தேர்தல் தொகுதியைச் சேர்ந்தவர். சிங்கள இனத்தினைச் சேர்ந்த அரசாங்க ஊழியர். அமைச்சருடைய மைத்துனனோடு வாக்குவாதஞ் செய்த காரணத்தினால் 'தண்ணியில்லாக் காட்டிற்கு' இடமாற்றம் செய்யப்பட்டவர்.

இடமாற்றத்தோடு பழிவாங்கு படலம் நின்றுவிட வில்லை. நியாயத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற முனைப்போடு பொலிசாரும் சிறிசேனாவுக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளனர். இவருக்கு சாட்சியம் சொல்ல யாருமே முன்வர வில்லை. அவர்கள் சிறிசேனாவைத் தனியாகக் கண்டு, தமது இயலாமைக்கான பின்னணியினை மிகவும் பரிதாபகரமாகத் தெரிவித்தனர்.

'நீதிமன்ற விசாரணை போகிற போக்கினைப் பார்த்தால் குறைந்தது மூன்று மாதங்களிற்காவது சிறைக்குச் செல்ல வேண்டி வரும்.'

இதனைக் கூறுகின்ற போதினில் ஊழியரின் குரல் உடைந்து தளும்பிற்று.

''இருபது வருஷ காலமாக நான் அரசாங்க சேவையிலே கடமையாற்றுகின்றேன். ஒரு பிழையுமே விட்டதில்லை. எந்த 'பிளாக் மார்க்'கும் இல்லை. உத்தியோகத்தோடேயே இரவுபகலாக மாய்ந்திருக்கிறேன். இந்தச் சிக்கலும் ஒரு தேவையுமில்லாமல்தான் வந்து சேர்ந்தது. எனது உறவுக்காரப் பெண்ணோடு அமைச்சரின் மைத்துனன் வெறுக்கத்தக்க சேஷ்டைகள் விட்டிருக்கின்றான்.

காரினை அவளுக்கு அருகாகக் கொண்டுபோய், 'இரவுக்கு ஹோட்டலுக்குப் போவோம், வாறியா?' என்றுகூடக் கேட்டிருக்கின்றான். இவளோ தாயில்லாத பெண். என்னிடம் அழுகையும் புலம்பலுமாய் வந்து நடந்ததைச் சொன்னாள். நான் பலரின் முன்னிலையில் வைத்து அவனை எச்சரிக்கை செய்தேன். அவ்வளவுதான். என்னைத் துப்பாக்கியினால் சுட வந்ததாக பொலிசிலை முறைப்பாடு செய்திருக்கிறான். வழக்கிற்கு, ஊரிலுள்ள பெரிய மனிதர்களெல்லாரம் தனக்குச் சாட்சிகளாக அவன் குறிப்பிட்டிருக்கிறான்; அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவனுக்கு கட்டாயமாகச் சாட்சி சொல்லி ஆக வேண்டிய நிர்ப்பந்தத்திலே உள்ளார்கள்...''

அருள் சிறிசேனாவைப் பரிதாபகரமாகப் பார்த்தான்.

''எனக்கு எல்லாமாக ஏழு பிள்ளைகள். சிறிய வீடொன்று தான் ஒரே சொத்து... மனைவிக்கு தொய்வு நோய். எனது கஷ்டங்களையெல்லாம் அமைச்சரிடம் ஒருமுறை சொல்லிப் பார்ப்போமென்று வந்திருக்கிறேன். நான் நேரிலே வந்து கேட்டால் எனக்கு உதவி செய்வதாக அவர் பலரிடமும்,

பலமுறைகள் சொல்லி விட்டிருக்கிறார். எனக்கு என்னுடைய சுயகௌரவமே பெரிதாயிருந்தது. அதனால் அப்போது எனது மனம் இதற்கு உடன்படவில்லை. ஆனால் மனைவி படுகின்ற கஷ்டம் ஒருபுறம், பிள்ளைகளின் அவதியும் கலக்கமும் மறுபுறம். இன்னொரு பக்கத்திலே பணக்கஷ்டமும், பற்றாக் குறைகளும் என்னைப் படாதபாடு படுத்தி எனது உறுதியிலிருந்து என்னைக் கீழிறங்க வைத்துவிட்டது... எனது இந்த அவலமான, அவமானமான தோல்விக்கு நான் வருந்தாத நாளில்லை...''

தன்னுடைய ஆளுமையின் சிதைவினை, தானே தனக்கு இழைத்துக் கொண்டுள்ள குற்றத்தினை, அப்பட்டமாக ஏற்றுக் கொண்டு வருந்திற்று சிறிசேனாவின் குரல்.

''தேர்தல் முடிந்து இரண்டு வருஷங்கள்தான் ஆகியிருக் கிறது. இன்னும் மூன்று நாலு வருஷங்களுக்கு இவர்களுடைய அதிகாரமே நீடித்திருக்கும். இவர்களைப் பகைத்துக் கொண்டால் இந்த ஜன்மத்துக்கு மீட்சியில்லை... இன்றைக்கு என்னுடைய பிரச்சினைகள் தீர வழி தெரியாவிட்டால் தற்கொலை செய்து கொள்வதைவிட எனக்கு வேறு மார்க்கமேயில்லை...''

சிறிசேனா தலையைக் கைகளிலே புதைத்துக் கொண்டார்.

''சீ... என்ன இது மிஸ்டர் சிறிசேனா... நீங்கள் ஒரு குழந்தைப் பிள்ளையைப் போலக் கதைக்கிறீர்கள். மனதைத் தளர விடாமல் தைரியமாக இருக்க வேணும். உங்களுடைய பிரச்சினைகள் சுமூகமாகத் தீர்ந்து விடும். அமைச்சர் தெரிந்தவராயிருக்கிற படியால் விஷயத்தை லேசாக முடிக்க முடியும்... அதுவும் நீங்கள் ஒரு அப்பாவி மனிதன்...''

அருள் சொல்லிக் கொண்டிருக்கும்போது பியோன் பரபரப் பாக ஓடிவந்து கதவினைத் திறந்தான். வெளியே கதிரைகளில் இருந்தவர்கள் அவசர அவசரமாக எழுந்து முண்டியடித்துக் கொண்டனர். வெளியே வந்தவர் அமைச்சர்.

குளிரூட்டப் பெற்ற அறையினுள்ளிருந்து வந்தவர் குளிர்மையாகத் தெரிந்தார். தலையிலிருந்து கால்வரை, நூலிழை கசங்கலில்லாத நிறைவான தோற்றம். யாரையும் பார்க்கவே விரும்பாதவர் போல பார்வையை ஏற்கனவே எதிலேயோ படிய விட்டவர் போலக் காணப்பட்டார். அவரது ஃபைல்களடங்கிய 'பீறிப் கேஸை'த் தூக்கிக் கொண்டு இன்னொருவன் அமைச்ச ரைப் பின் தொடர சனங்கள் வெள்ளமாக அலைபுரண்டு

அவரின் பின்னே ஓடினர். கண்ணெதிரிலேயே அமைச்சர் 'லிப்ட்'டில் ஏறி மறைந்தார்.

அப்போது அருளும், சிறிசேனாவும் மட்டுமே அமைச்சரின் அறை வாசலில் தனித்து நின்றார்கள்; திகைப்போடு அமைச்சரின் பின்னாலே போன பலர் திரும்பி செய்வதறியாதவர்களாய் அங்கே வந்தனர். ரெயிலிலும், பஸ்ஸிலுமாய் தூர இடங்களிலிருந்து பயணம் செய்து வந்தவர்களென்பதைத் தோற்றம் மெய்ப்பித்தது.

'அமைச்சர் அவசர விஷயமாகப் போகிறார். இன்று பின்னேரமும் அலுவலகத்திற்கு வரமாட்டார்...'

'தேர்தல் தொகுதிக்கு வாக்கு வேட்டைக்காக வந்தால் குனிந்து கும்பிடு போட்டு, பிள்ளை குட்டிகளினுடைய சுகதுக்கங்களை விசாரித்து உறவு கொண்டாடுகிற இவர்கள், இங்கு வந்தால் உன்னை யார் எப்போது கண்டார்கள் என்ற மாதிரி அல்லவா நடக்கிறார்கள்... அடுத்த தேர்தலுக்கு வீட்டுக்கு வரட்டும், ஞாபகம் வைத்திருந்து கேட்கிறேன்... வீணாக இவ்வளவு பணம் செலவழித்து நம்பிக்கையோடை கொழும்பிற்கு வந்து... சீ... நான் ஒரு மடையன்... மடையன்...'

பேசிக் கொண்டும், கவலையோடு முனகிக் கொண்டும் குரல்கள் கலைகின்றன.

களைத்த முகம், சோர்ந்த கண்கள், கலங்குகிற வார்த்தைகள் என்பனவற்றின் உருவமான சிறிசேனா அருளை அழாத குறையாகப் பார்த்தார். நைந்து கசங்கிய உடைகளுடன் தளர்ந்து போய் நிற்கிற சிறிசேனாவுக்கு என்ன சொல்வதென்ற சங்கடத்தோடு நின்ற அருள் தன்னைச் சமாளித்தவாறே 'நாளை வந்து பார்ப்போம்' என்று சொன்னான். சிறிசேனா பதிலேதும் சொல்லாமலே அருளிடமிருந்து விடை பெற்றார்.

அருளிற்கு முன், இனி என்ன செய்வதென்ற கேள்வி விஸ்வரூபமெடுத்து நின்றது. அமைச்சரின் அறைக்கு முன்னர் இப்போது அவன் மட்டுமே. சிறிது நேர யோசனைக்குப் பின்னர் 'வேறு யாராவது உயரதிகாரிகளோடு இதைப்பற்றிக் கதைத்துப் பார்த்தால் என்ன?'' என்ற எண்ணம் நெஞ்சினுள் மிதந்தது. செயலாளர்களில் அனேகமான பெயர்களுக்கு எதிரிலே, 'Out' விழுந்திருந்தது. ஒரு உதவிச் செயலாளரின் பெயர்ப் பலகையிலே, 'in' இழுத்திருந்தது.

அருளின் மனம் இலேசாய்க் குளிர்ந்தது. உதவிச் செயலாளரின் வாசலிலே பியோன் இல்லாதது இன்னும் திருப்தியளித்தது. கதவைத் தள்ளியவாறே, "MAY I COME IN" என்றவாறு நுழைந்தான்.

பத்திரிகையினுள்ளே புதைந்திருந்த உதவிச் செயலாளர் தன்னெதிரேயிருந்த கதிரையைச் சுட்டிக் காட்டினார். பின்னர், சில கணங்களிற்கு அவனையே கூர்ந்து நோக்கினார்.

கண்கள் விரிந்து ஆவேசமான சந்தோஷம் பொங்கிட சிறிது உரத்த குரலில், 'ஹாய் அருள்... என்னைத் தெரியவில்லையா...?" என்றார்.

அருள் அந்தக் கரகரத்த குரலினை நினைவினில் தேய்த்துக் கொண்டு அம்முகத்தினை ஊடுருவினான். மனம், எதிரேயுள்ளவரின் முன் வழுக்கையில் ஒரு 'விக்'கினை மாட்டிவிட்டு புன்னகை செய்தது.

"மிகச் சந்தோஷம் சோமா... நான் அருளேதான். உனக்கு எவ்வளவு அழகான சுருள் மயிர்... எல்லாமே கொட்டிப் போய் விட்டது. அதுதான் ஆளை அடையாளமே தெரியவில்லை..."

சோமசுந்தரம் தனது தலைக்கு மேலே சுழல்கின்ற ஃபேனைச் சுட்டிக் காட்டினான்.

"எவ்வளவு காலம் நாங்களிருவரும் சந்தித்து?"

மனதினை இறந்த காலத்திற்குத் தள்ளி கணக்கிட்டான் சோமசுந்தரம்.

"கடைசியாக 1963இல் சந்தித்திருப்போம். அதுவும், பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவின்போது. பதினாறு வருஷங்களிற்குப் பிறகு இப்போது சந்தித்திருக்கிறோம்... பிறகு பத்திரிகைகளிலும், புத்தகங்களிலும் உன்னைப் பற்றி படித்திருக்கிறேன், சர்வதேசப் புகழ் பெற்ற அறிவாளியாக. அதுசரி, இப்போது எங்கே தங்கி நிற்கிறாய்?"

ஹோட்டலின் பெயரைச் சொன்னான் அருள்.

"மடையா, இன்னும் அரை மணி நேரத்தில் ஹோட்டலுக்குப் போய் உன்னுடைய சூட்கேஸை எடுத்துக் கொண்டு நாங்கள் வீட்டிற்குப் போகப் போகின்றோம்... நீ என்ன குடிப்பாய்?"

மணி ஒலித்து ஓயு முன் பியோன் உள்ளே வந்தான். ''சொல்லு... டீயா... கோப்பியா... அல்லது?''

அருள் புன்னகையோடு சொன்னான்: ''தேத்தண்ணீர்.''

அருள் தமிழிலே கூறிய ''தேத்தண்ணீர்'' என்ற சொல்லினை தானும் உச்சரித்தவாறே பியோனிடமிருந்து தேநீரை வாங்கி உறிஞ்சிக் கொண்டு தொலைபேசியை எடுத்தான்.

சோமசுந்தரம், மனைவிக்கு: ''மத்தியானச் சாப்பாட்டிற்கு, அமெரிக்காவிலே நீண்ட காலமிருந்துவிட்டு திரும்பி வந்திருக்கும் எனது நண்பனை அழைத்து வருகிறேன். ஆள் நல்ல சாப்பாட்டு ராமன். சாப்பாடு தடபுடலாயிருக்க வேண்டும்.''

அருளினுடைய அன்றைய திட்டம் - அமைச்சரைச் சந்தித்து செல்வராசாவைப் பற்றிப் பேசுவது, இரண்டாவது வங்கிக்குச் சென்று பணம் மாற்றிக் கொள்வது.

''வீட்டுக்குப் போகும் போது வழியிலே நின்று, பாங்கிலே கொஞ்சம் பணம் மாற்றிக் கொள்ள வேண்டும் சோமா...''

சோமசுந்தரம் கட்டளையிடுகின்ற பாவனையிலே, ''அதெல்லாம் நாளைக்குப் பார்க்கலாம்'' என்றான்.

அருள் தனது வருகைக்கான காரணத்தினை விஸ்தாரமாக சோமசுந்தரத்திற்குக் கூறினான். அருளையே பார்த்தவாறு மிகவும் அனுதாபமாய்க் கேட்டுக் கொண்டிருந்த சோமசுந்தரம், அவன் கூறி முடித்ததும் தொலைபேசியினை எடுத்து தனக்குச் சில நம்பர்களைத் தரும்படி கூறினான்.

''இப்போது நிலைமைகள் மோசமாகிக் கொண்டு வருகின்றன. எந்த நேரத்தில் என்ன நடக்குமோ தெரியவில்லை... இந்த விஷயங்களை டெலிபோனில் கதைக்கிறது கூட ஆபத்தையே உண்டாக்கும்... இப்போதுள்ள அரசியல் நிலைமை உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.''

தொலைபேசி மணி அடித்தது: எடுத்துப் பேசினான். புருவங்கள் நெளிந்தன. இப்படி மூன்று நான்கு தடவைகள், பின்னர் இருக்கையை விட்டெழுந்தான்.

''முதலில் வீட்டுக்குப் போவோம். அங்கிருந்து முயற்சிக் கலாம்.''

காரிலே போய்க் கொண்டிருக்கையில் அருள் தன்னுடைய எதிர்காலத் திட்டங்கள் பற்றிச் சொல்லியவாறிருந்தான். அவனது உற்சாகமே, அவனைப் பற்றிய கவலையினை சோமசுந்தரத்திற்கு ஏற்படுத்தியது. தனது அபிப்பிராயத்தை உடனடியாகக் கூறி அருளினது மனதைப் புண்படுத்த விரும்பவில்லை சோமசுந்தரம்.

மௌனத்திலே சில நிமிஷங்கள் கரைந்த பின்னர் செருமினான் சோமசுந்தரம்.

''அருள், நன்றாக யோசித்த பின்னர்தான் ஒரு முடிவுக்கு வர வேண்டும். பிறந்து வளர்ந்த தாய் மண்ணிலே நீர் கொண்டிருக்கிற வாஞ்சையும், நேசமும் என்னைத் திகைத்துத் தடுமாற வைக்கின்றது. உமது திறமைக்கு நிகரான ஒரு அறிவாளி இந்தத் தேசத்திலே இருக்க மாட்டான் என்ற விஷயத்தை யாருமே மறுக்க முடியாது... அதுதான் எனக்கு கவலையாக, அச்சமாக இப்போது மனதினையே குழப்பிக் கொண்டிருக்கிறது.''

''ஏன்?'' அருளின் குரலில் ஆர்வம் கெம்பிற்று.

''அமெரிக்காவிலே உமக்கு என்ன குறை?''

அட்டகாசமாகத் தன்னை மறந்து சிரித்தான் அருள்.

''அமெரிக்கா... அமெரிக்கா, என்னைப் பொறுத்தவரை எனக்கு அங்கே எந்த விதமான குறையுமே இல்லை; சகல வசதிகளும் திகட்டத்தக்க அளவிலே குவிந்து போயுள்ளன. ஆனால் அங்கேயுள்ள பல முறைகள் எனக்கு எல்லையில்லாத வெறுப்பைத் தருகின்றன... அந்த நாட்டை விட்டு வெளியேறும் படி உந்துகின்றன... ஜனநாயகத்தைப் பற்றி உரக்கப் பேசிக் கொண்டே கறுப்பர்களைக் காலால் தள்ளி கீழே போட்டு நசுக்குகிற அமெரிக்கா... பிறநாடுகளுக்கு பணஉதவி செய்து அவற்றை தன்னோடு கட்டிவைத்துக் கொண்டே தனது நாட்டிலே வேலையில்லாமையையும், விபச்சாரத்தையும், ஏழ்மையையும் வளர்த்து வருகிற அமெரிக்கா... லத்தீன் அமெரிக்கக் கண்டத்திலுள்ள 26 நாடுகளையும் தங்கள் விருப்பம் போலச் சுரண்டிக் கொழுத்து, இன்னும் பல நாடுகளினை தனது வேட்டைக் காடாக்கிக் கொண்டு வருகின்ற அமெரிக்கா... சி.ஐ.ஏ. மூலம் இராணுவ சதிகளையும் கவிழ்ப்புகளையும் கொலைகளையும் செய்து கொண்டே, தனது பிரசார சாதனங்களால் அவற்றையெல்லாம் நியாயப்படுத்துகிற அமெரிக்கா... எத்தனை முகங்களுள்ள அமெரிக்கா...!''

ஏளனமும் ஆத்திரமும் கலந்த அவனது சிரிப்பில் கண்களிலே நீர் துளிர்த்தது.

''என்னுடைய தேவை முடிந்ததும், சாறெடுக்கப்பட்ட கரும்புச் சக்கை போல நான் வீசியெறியப்பட்டு விடுவேன். பிறகு முகமில்லாத மனிதனாக, கூலிக்கு வேலை செய்த பெயரில்லாத ஆராய்ச்சியாளராக நான் மறக்கப்பட்டு விடுவேன். ஆனால், நான் பிறந்த மண்ணிலே இவற்றையெல்லாம் செய்தால்...? யோசித்துப் பார் நண்பனே... நான் எனது மண்ணிலே வேரூன்றிய மனிதன், பெயருள்ள மனிதன், எல்லாவற்றையும்விட எனது பிறந்த மண்ணிலே பணியாற்றுவது எனக்கு எல்லாப் பெருமைகளையும் தரும்...''

இதய ஆழத்திலிருந்து வெளியான அவனது கருத்துக்கள் ஆற்றொழுக்கான ஆங்கிலத்திலே வந்தாலும் அவை நெஞ்சினைப் பிணித்து நெகிழ வைத்தன. சோமசுந்தரம் மனதினுள் நிறைந்த சிந்தனையோடு மௌனமாகக் காரைச் செலுத்திக் கொண்டிருந்தான்...

சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் சோமசுந்தரத்தின் மனைவி ரூபவதி கூறியது அருளை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கிற்று. திகைப்பு நீங்கிடாத முகத்தோடு சோமசுந்தரத்தைப் பார்த்தான் அருள்.

''என்ன சோமா, எனக்கு நீர் சொல்லவேயில்லையே? பிற நாட்டிற்குப் போய் அங்கேயே நீர் நிலைத்துவிட முயற்சி செய்தாய் உமது மனைவி சொல்வது உண்மையா?''

சோமசுந்தரம் தலையசைத்தான்.

அவனது கண்கள் சோமசுந்தரத்திடம் காரணத்தைத் துளாவின.

''அருள், நான் இந்த உத்தியோகத்திலிருந்தே அலுத்துப் போய்விட்டேன். என்னால் இரட்டைவேஷமிட்டு வாழ முடியாது, நண்பனே! நான் எதனைப் பிழையென்று நம்புகின்றேனோ அதனை ஒருபோதும் செய்ய மாட்டேன். அதனால் தான் எத்தனையோ பிரமோஷன்களும், ஸ்கொலர்ஷிப்பும் என்னிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டன. அதைப்பற்றி நான் கவலைப்படா விட்டாலும், எனக்குள்ள உரிமைகள் கிடைக்காமற் போனது எரிச்சலூட்டுகிற விஷயமாகத்தான்

இருக்கிறது. இனவாதம் எல்லா மட்டங்களிலும் என்னைச் சேதப்படுத்தியுள்ளது.''

மேசையிலே, 'புருட் சால்ட்' கிண்ணங்களை வைத்துவிட்டு உட்கார்ந்தாள் ரூபவதி.

''செல்வராசாவின் விஷயம் எப்படி உன்னைத் துடிக்க வைத்திருக்கிறதோ, அதைப் போலவே எத்தனையோ விஷயங்கள் என்னுடைய மனதினை அழுத்தி வதைத்துக் கொண்டேயிருக்கிறது. 1977ஆம் ஆண்டு நடைபெற்ற இனக் கலவரத்திலே எனது அண்ணாருடைய வீடு நிர்மூலமாக்கப் பட்டது. அவர் ஒரு இஞ்சினியர். அவரும் அடித்து நொறுக்கப்பட்டு, திருமணமாகாத ஒரே மகள் ஏழெட்டுப் பேரினால் கற்பழிக்கப்பட்டாள். நகரத்தின் வளர்ச்சிக்கு இரவு பகலாகப் பாடுபட்ட அவர், இப்போதோ அரைப் பைத்தியமாக, நடைப்பிணமாகத் திரிகின்றார்...''

அறையெங்கும் இப்போது மௌனப் புலம்பல்.

தன்னைச் சந்தித்த போதிலே பள்ளிக்கூட மாணவனொருவனின் களிப்போடும் குதூகலத்தோடும் துள்ளி வரவேற்ற அந்த சோமசுந்தரத்தை இப்போது நினைத்துக் கொண்டான் அருள். பல்கலைக் கழகத்திலே படித்துக் கொண்டிருந்தபோது, குறும்புகள் செய்தல்லால் வேறு தொழிலறிந்திராத அவனது முகத்திலும், மனதிலும் இப்போது இந்த நிமிஷந்தன்னிலே எவ்வளவு சோகச்சுமை!

''இத்தகைய நிலைமை ஒரு தடவையோடு முடிந்து விட்டால் பரவாயில்லை. மீண்டும் மீண்டும் இவை தொடர்கின்றன. இப்போதைய பத்திரிகைகளினதும் அரசியல்வாதிகளினது குரலைப் பார்க்கின்ற போது இன்னொரு பயங்கரம் வெகு விரைவில் வந்து விடும் போலிருக்கிறது; இனத்து வேஷத்துக்கு எதிராகப் போரிட முடியாத கோழைத்தனமான அரசியல் கட்சிகள், பாராளுமன்றக் கதிரைகளையே குறியாகக் கொண்டு இயங்கி வருகின்றன... இன ரீதியான பயத்தினை உண்டு பண்ணி, இன உணர்வுகளைத் தூண்டி விடுவதன் மூலம் இலேசான முறையில் வாக்குப் பெறவே அரசியற் கட்சிகள் யோசிக்கின்றன, செயற்படுகின்றன.''

'பயங்கரவாதத்தைப் பயங்கரவாதத்தாலேயே முறியடிப் போம்' என்று கூறுகின்ற பொறுப்பற்றதனம்... தமிழ்ப்

பிரதேசத்தில் நடைபெற்ற பயங்கரவாதங்களுக்கு 'புலிப் படை'யே காரணமென்றும், அதற்குத் தமிழர்கள் முழுப் பேருமே உதவுகிறார்களென்றும், தவறான மனப்பதிவினை அரசியல்வாதிகளும், இனவாதப் பத்திரிகைகளும் திட்டமிட்ட முறையிலே சிங்கள மக்கள் மத்தியிலே ஏற்படுத்தியிருக் கிறார்கள். அப்பாவித் தமிழரைக் கண்டதும் சிங்களத்திலே 'புலி' என்ற கருத்துப்பட

'கொட்டியா' என்று சிங்கள மக்கள் சந்கேதமாகக் குறிப்பிடுவது இங்கே இதற்கு நல்ல உதாரணம். இந்த இனத்துவேஷம் இந்த நாட்டை எங்கே கொண்டு போய் விடப் போகிறதோ?''

நீண்ட நேரமாய் அங்கே நிசப்தம். அருளின் நினைவிலே, முதல் நாள் பஸ்ஸிலே வருகையில் பின்னலிருந்த ஒருவன் 'கொட்டியா' என்று கரகரத்தது பளிச்சென்று தோன்றியது.

''நான் பணம் உழைக்க வேண்டுமென்பதற்காகப் பிற நாட்டுக்குப் போக விரும்பவில்லை... அது சுயநலமோ என்னவோ, நிம்மதியாக பரபரப்பற்ற அமைதியான வாழ்க்கை யினை நாடியே செல்ல விரும்புகிறேன்...''

அவன் சொல்லிக் கொண்டிருக்கையில் தொலைபேசி மணி ஒலித்தது. சில கணங்களில் புருவஞ்சுழிந்து, முகத்தில் கருமை படர்ந்தது.

''யாழ்ப்பாண மாவட்டத்திலே அவசரகால நிலைமை பிரகடனப் பட்டிருக்கிறது. ஏதோ ஒரு அபாயம் உருவாகி விட்டது...''

8

உறக்கமே வராது படுக்கையில் உழன்று கொண்டிருக்கை யில் சிவா சொன்ன கவிதையடிகள் காதுகளில் ஒலித்த வண்ணமிருந்தன. மெல்லிய உறக்கமானது கண்களைத் தழுவிய வேளையில் கனவொன்றும் சிறு துணுக்காய் விரிந்தது.

தருமன் சூதிலே யாவுமிழந்து விட்டான். திரௌபதி மறுக்க மறுக்க அவளைச் சபைக்குக் கொண்டு வருகின்றான் துச்சாதனன். திரௌபதி விம்மியழுது சபையிடம் நீதி கேட்க,

கர்ணன் சிரிக்க, சகுனி இகழ, சபையினரோ? மௌனமாய் வீற்றிருந்தார்கள். அவ்வேளையில் தகுதி யுயர் வீட்டுமன் எழுகின்றான். சிவாவின் குரல் கேட்கிறது... கல்லும் நடுங்கும், விலங்குகளும் கண் புதைக்கும்... தீங்கு தடுக்கும் திறமிலேன்... மெதுவாக அந்தக் காட்சி கரைய அருள் வந்து கொண்டிருக் கிறான். உடலெல்லாம் சவுக்கடிப்பட்ட வரி வரியான காயங்கள். மெல்ல முணுமுணுக்கின்றான். 'தீங்கு தடுக்கும் திறமிலேன்...' கூறியதும் விதிர்விதித்து மயங்கி சாய்கிறாற்போல...

எனது வாய் குளறிற்று. திடுக்கிட்டெழுந்தேன். உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. சிவாவும் என்னைப் போலவே குழம்பியிருக்க வேண்டும். எனது தோள்களை உலுப்பிக் கொண்டே "என்ன... என்ன?" என்றாள் பதட்டமாக.

நான் சொன்னேன். சிவா வெளியே போனவள், அவசர மாகத் திரும்பிவந்து நடுங்குகிற குரலிலே, "இங்கே ஒருக்கால் வந்து பாருங்கோ" என்றாள். ஜன்னலடிக்கு விரைந்தேன்.

வெளியே, வீதி வெளிச்சத்தின் கீழே கண்ட காட்சி என்னை உறைய வைத்தது. எனது தோளில் கை வைத்திருந்த சிவாவின் நடுக்கத்தை எனது உடல் உணர்த்திற்று.

எங்கள் வீட்டு வாசலின் இருபுறத்திலும் ஒரு பெரிய டிரக்கும், ஜீப்பும் நிறுத்தப்பட்டு யூனிபோம் அணியாதவர்கள் துப்பாக்கிகளுடன் சடசடவென இறங்கி, சிலர் வீட்டைச் சுற்றி காவலாய் தயார் நிலையில் நின்றனர்.

வெளியே கதவு பலமாகத் தட்டப்பட்டது.

நான் கதவைத் திறந்தேன்.

சப்பாத்துச் சத்தங்கள் புயலாக அறையினுள்ளே பெருகின.

ஒவ்வொரு அறையாகப் பரிசோதனை நடந்து கொண்டிருக் கையில், எங்கள் அருகே இருவர் நீட்டிய துப்பாக்கிகளோடு நின்றனர்.

ஒருவன் முருகேசுவை குடுமியில் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே வந்தான். அந்த ஆஜானுபாகுவான உருவம் பயந்து சிதைந்து போய் நடுங்கியவாறு நின்றது.

வீரிடுகிற குரலில், "அவர் என் சித்தப்பா" என்றாள் சிவா.

"யார் அருளம்பலம்?"

கேட்டவன் உயரதிகாரி. சிங்களத்தில் அவன் கேட்டதற்கு வெகு அமைதியாகவே சிவா பதில் சொன்னாள்:

''கொழும்புக்குப் போயிருக்கிறார்.''

''எந்த விலாசத்தில் எங்கே தங்கி இருக்கிறான்?''

''தெரியாது...''

''இது யார்?''

''எனது கணவர். ஒரு ஆசிரியர்... பட்டதாரி...''

''ஓ... பள்ளிக்கூடத்துப் பிரின்ஸ்பலா?''

''இல்லை...''

''அருளம்பலம் இங்கு இருப்பதாகத்தான் தெரிகிறது... அவனுடைய அறை எது?''

நான் காட்டி விட்டு அவனுடன் சென்றேன். அறையைத் துளாவியெடுத்தனர். டைப்ரைட்டரிலிருந்த கட்டுரையை உருவி வாசித்த உயரதிகாரியின் முகம் சிவந்து பொருமிற்று. பற்களை நறநறவென்று கடித்துவிட்டுச் சிறிது நேரம் யோசித்தான். பின்னர் தன்னுடைய கையிலிருந்த குறிப்புக் கொப்பியினை எடுத்து வாசித்தவாறே என்னைப் பார்த்தான்.

''அருளம்பலம் புலிப்படையின் அங்கத்தவனா?''

அவன் ஆங்கிலத்தில் சொன்னதைக் கேட்டதும் எனக்கு விழுந்து விழுந்து சிரிக்க வேண்டும் போலிருந்தது; மனம் அப்படித்தான் செய்தது. குலுங்கி குலுங்கிச்சிரித்தது.

''அமெரிக்காவிலிருந்து பதினைந்து வருஷங்களிற்குப் பிறகு தாய் நாட்டிற்கு வந்திருக்கிறான், வந்து நாலு நாட்கள்தான்...''

இதற்குள் வீட்டின் பின்புறம், கிணறு, தென்னை மரங்கள், பழைய பானை சட்டிகள், கோழிக்கூடு, விறகுக் குவியல்கள் ஆகிய இடங்களிலே அருளம்பலத்தைத் தேடி விட்டு வந்து அவன் அங்கே இல்லையென்று சொன்னார்கள் சிப்பாய்கள். உயரதிகாரி மேஜையிலிருந்த புத்தகங்களைத் தட்டினான்.

நீக்ரோ ஒருவன், ஒரு கையிலேயுள்ள சங்கிலியை அறுத்து வீசி, மறு கை முஷ்டியை உயர்த்தி, தசைத்திறள்வோடு ஆக்ரோஷமாய் நின்றான். 'அடிமைச் சங்கிலி அறுப்போம் - நாங்கள் அதிலொரு வாள் செய்வோம்' அடுத்த புத்தகத்தை

தட்டினான். சற்றுப் பின் வாங்கினான். சிவப்பு நிறப் பின்னணியில் - தலையை மறைத்து, ஜொலிக்கின்ற கண்கள் தெரிய இயந்திரத் துப்பாக்கியோடு நிற்கிற ஒருவன். 'TERRORISM: THE ETHICAL IMPLICATIONS'

புத்தகத்தை எனது முகத்திற்கு நேரே அறைகிறாற் போல நீட்டினான்.

''இப்போது புரிகிறதா?''

எனக்கு இப்பொழுதுதான் குழப்பம் தொடங்கியிருக்கிறது.

''செல்வராசாவுக்கும் இவனுக்கும் என்ன தொடர்பு? ஏன் இவன் அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வந்திருக்கிறான்? உண்மையான காரணம் என்ன?''

அருளினது இலட்சியங்களை நான் விரிவாக எடுத்துச் சொன்னேன். சொல்லி முடியுமுன் அவன் விழுந்து விழுந்து சிரித்தான்; சிரிப்போ கோபமாய்ச் சீறிற்று.

''என்னை வெறும் மடையனாக்கவா பார்க்கிறாய்...? சில்வா, இங்கே வா, இந்த அறைக்குள் உள்ள எல்லாவற்றையும் டிரக்கினுள் ஏற்று...''

புத்தகங்கள், டைப்ரைட்டர், சூட்கேஸ், குறிப்புக் கோப்பிகள், ஃபைல்கள், வெளியே வந்து ஒலியிடுகிற குருவியைச் சுமந்த மணிக்கூடு. எழுதப்படாத வெற்றுத் தாள்கள்.

''அருள் இல்லாமல் நீங்கள் இவற்றை எடுத்துப் போவது சரியில்லை...''

நான் மனதினுள்ளே பொங்கிய ஆத்திரத்தினை அடக்கிய வாறு கூறினேன்.

''அதுதானே உன்னையும் அழைத்துக் கொண்டு போகிறோம்...''

திகைப்பு. என்னை உலுப்பிற்று. தொண்டையில் நாக்கு ஒட்டிக் கொண்டு, எனது உடலிலே என்னவோ இழுத்து விண்ணென உடல் தளர்ந்தது. சிவா குறுக்கிட்டாள்.

''அவர் வேணுமென்றால் நாளைக்குக் காலையில் லோயரோடு வருவார்...''

உயரதிகாரியின் முகம் சிவந்தது, கைகளைப் பிசைந்து கொண்டான்.

''ஏன்... இரவுக்கு அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டா படுக்கப் போகிறாய்...?'' என்று தொடங்கி மிகவும் கொச்சையா கவும், கீழ்த்தரமாகவும் பேசிக் கொண்டு போனவன், ''இந்த இடத்திலை உங்கள் மூன்று பேரையும் சுட்டுப் பொசுக்கக் கூட என்னாலே முடியும்'' என்றவாறு இடுப்பில் செருகியிருந்த பிஸ்டலை எடுத்து மேசையில் வைத்தான்.

பிறகு என்னுடைய சேர்ட் கொலரில் பிடித்து உலுப்பி விட்டு பளீரென அறைந்தான்.

''இன்றையிலிருந்து அவசர கால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டிருகிறது, அருளம்பலத்திற்காக உன்னைக் கைது செய்து விசாரிக்கப் போகிறோம். நீ வெளியே வர வேண்டுமென்றால் அருளம்பல்ம எங்களிடம் ஒப்படைக்கப் பட வேண்டும்...''

கட்டளையிடும் குரலிலே சொல்லிக் கொண்டு போனவன் பதறிப்போய் நிற்கின்ற எனது மனைவியைப் பார்த்து, ''நீ நாளைக்கு லோயரைத் தேடி அலைய வேண்டியதில்லை. அருளம்பலத்தைக் கொண்டு வந்து தந்தால் புருஷனைத் திருப்பித் தருவதைப் பற்றி யோசிக்கலாம். அதுவரை தனிப் படுக்கைதான்...'' என்று கூறியவாறு கண் சிமிட்டினான்.

முதன் முறையாக செயலற்றுப் போய், கண்ணீர் வழிய நிற்கின்ற சிவாவைப் பார்த்துக் கொண்டிருக்கையில் ஜீப் உறுமலோடு புறப்பட்டது.

9

உற்சாகத்தை இழந்துபோய் செயற்கையான புன்னகை யோடு தோசை சாப்பிட்டுக் கொண்டிருந்தனர் அருளும், சோமசுந்தரமும். எங்குமே நெய் மணம்.

அருளம்பலத்தைக் கண்டதும் ஒரு வாரத்திற்கு லீவு போட்டுவிட்டு அவளோடு பொழுதைக் கழிக்க வேண்டுமென நினைத்திருந்தான் சோமசுந்தரம். அது இப்போது சாத்திய மில்லை. 69 சட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கிய அவசர காலச் சட்டம் அரசாங்க ஊழியர்களின் லீவுகளை அனுமதிக்க மறுக்கின்றது.

அலுவலகத்திற்குச் செல்லும் வழியில் வங்கிக்குச் செல்ல வேண்டுமென்று ஞாபகப்படுத்தினான் அருள். சோமசுந்தரம் தலையசைத்தான்.

வங்கியில் இறங்கி இருவரும் உள்ளே சென்றனர். டொலர் நோட்டுக்களினை வங்கியில் மாற்றுவதற்கான பத்திரங்களை நிரப்பிவிட்டு தனது பாஸ்போர்ட்டை கவுண்டரிலே காட்டினான் அருள். கவுண்டரிலிருந்தவர் அருளை உற்றுப் பார்த்தார். தலையைச் சொறிந்தார். ஏதோ நினைக்கின்ற முகத்தில் லேசான தெளிவு துளிர்க்க தனக்குள் தானே சிரித்துக் கொண்டார்.

''அந்த ஆசனத்தில் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருங்கள்...''

உட்கார்ந்த அருள், ''எப்படியும் இன்றைக்கு அமைச்சரைச் சந்தித்து செல்வராசாவை விடுவித்துவிட வேண்டும். பாவம் ஒரு அப்பாவி. உற்சாகமான இளைஞன்'' என்று கெஞ்சுகிற குரலில் சோமசுந்தரத்தைப் பார்த்துக் கூறினான்.

பதினைந்து நிமிஷங்கள் கழிந்தன.

வங்கியினுள்ளே சில பொலிஸ் அதிகாரிகள் பிரவேசித்து, மானேஜரின் அறைக்குள் சென்று, பிறகு ஆசனத்திலிருந்த அருளை நோக்கி வந்தனர்.

''நீங்கள்தான் மிஸ்டர் அருளம்பலம்?''

அருள் தலையசைத்தான்.

''உங்களைக் கைது செய்கிறோம். இன்று மாலை, அமெரிக்கா செல்வதற்கு உங்களுக்கு விமான டிக்கட் எடுக்கப்படும்...''

சோமசுந்தரத்தின் மனதிலே பளீரென்று அடிவிழுந்தது. தன்னை அறிமுகப்படுத்திவிட்டு இன்ஸ்பெக்டரிடம் காரணங் கேட்டான். இன்ஸ்பெக்டரும் இந்தச் சம்பவத்திற்காக தான் வருந்துகின்ற முகபாவத்தோடிருந்தார். குரலிலே தயவு தொனித்தது:

''மேலிடத்து உத்தரவு. இவரைக் கைது செய்து உடனடியாக நாடு கடத்த ஏற்பாடு செய்யும்படி நாங்கள் பணிக்கப் பட்டிருக்கிறோம்...''

''நாடு கடத்தலா...?''

கண்கள் விரியக் கேட்டான் அருள். முகத்திலே பரபரப்புத் துடித்தது. இன்ஸ்பெக்டர் அவனிடமிருந்த 'பாஸ்போர்ட்'டை வாங்கி, முன்பக்கத்தினை விரித்து சோமசுந்தரத்திடம் கொடுத்தார்.

பெயர் : செல்லையா அருளம்பலம்

பிறந்த தேதி : 17.10.1941

தேசிய மனம் : அமெரிக்கப் பிரஜை

தொழில் : பேராசிரியர்

''யாழ்ப்பாணத்திலிருந்து இவரைப் பற்றிய தகவல்கள் நிறைய வந்திருக்கின்றன... பயங்கரவாதப் பிரமுகர்களில் இவரும் ஒருவர். உள்ளூர்ப் பயங்கரவாதிகளோடு தொடர் புள்ளவர். கிராமப்புறத்தில் கிளர்ச்சிகள் தொடங்கவும், வெளிநாடுகளில் தனது இயக்கம் பற்றி பிரசாரம் செய்யவும் இவரே பொறுப்பானவர். பாரதூரமான குற்றங்களின் சூத்ரதாரியான இவர், அமெரிக்கப் பிரஜையாக உள்ளதால் இவரை உடனடியாக நாடுகடத்தும்படி பணிக்கப் பட்டுள்ளது.''

அருள் மிகவும் பரிதாபகரமாக சோமசுந்தரத்தைப் பார்த்தான்.

சோமசுந்தரம் தலை குனிந்தபடியே நின்றான்.

அருளின் கண்களிலே, இந்தத் தேசத்தின் ஏழை விவசாயிகள்... பாளம் பாளமாய் வெடித்த வயல்கள்... வரண்டு வற்றிய மந்தைக்கூட்டங்கள்... சிறிசேனா போன்ற வழியறியா நிரபராதிகள்... செல்வராசா... அபாக்யப்பட்ட இளைஞர்கள்... அவனது நண்பனும் மனைவியும்... எல்லாமே தோன்றித் தோன்றி கடைசியிலே அவனையறியாமல் கண்களிலே ஒரு சொட்டுக் கண்ணீர் துளும்பி வெடிக்க இன்ஸ்பெக்டர் துரிதப்படுத்தினார்.

10

அவசர காலச்சட்ட விதிகளை ஒன்பதாவது தடவையாகப் படித்துவிட்டு நியூஸ் எடிட்டர் கதிர்காமநாதன் மீண்டும் அலுத்துக் கொண்டார்.

''பத்திரிகைத் தணிக்கைச் சட்டங்களின் கீழே எந்தச் செய்தியைத்தான் பிரசுரிப்பது? எல்லாமே சட்டத்திற்கு அமையாத செய்திகள்...''

மீண்டும் செய்திகளை எடுத்தார்.

'பண்ணைப் பாலத்தடியில் இரு இளைஞர்களின் சடலங்கள். குரூரமாகச் சிதைக்கப்பட்டவை. 29, 27 வயது, நகங்கள் பிடுங்கப்பட்டு இரத்தம் உறைந்த காயங்களோடு...' - ஒதுக்கி வைத்தார்.

'பல இளைஞர்கள் அடையாளந் தெரியாத சிலரால் அதி காலையில் ஜீப்பிலே கொண்டு செல்லப்பட்டனர். ஆறு பேர் வரை இன்னமும் திரும்பி வரவில்லை. இறந்திருக்கலாமென...'

வாசித்து முடிக்காமலே அடுத்ததை எடுத்தார்.

'ஏழு குழந்தைகளின் தகப்பனாரான சிறிசேனா என்பவர் வாழ்க்கையில் விரக்தியுற்று புகையிரதத்தின் முன்பு பாய்ந்து தற்கொலை. இது பற்றிக் கூறுப்படுவதாவது...'

பிரசுரிக்கலாம். தனியாக எடுத்து வைத்தார்.

'யாழ்ப்பாண நகரிலுள்ள பிரபல கல்லூரி அதிபர் ஒருவர் இனந்தெரியாத சிலரினால் படுமோசமாகத் தாக்கப்பட்டுள்ளார். இவர் தங்கியிருந்த வீடும் பலத்த கல் வீச்சுக்கு உள்ளாகியுள்ளது. தனியான இவர், அயலவருடன் மிகவும் முரட்டுத்தனமாக நடந்து கொண்டமையினாலேயே இந்த அசம்பாவிதங்கள் நிகழ்ந்தன எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.'

''இது பொலிஸ் செய்தி. பயப்படாமல் பிரசுரிக்கலாம்... ராம், இந்த இரண்டு செய்திகளையும் கொண்டு போய் 'கம்போஸ்' செய்...''

(கணையாழி, செப்டம்பர் 82)

சாதிகள் இல்லையடி பாப்பா!

1

அடிவானத்திலே உறைந்து கிடந்தன பஞ்சு மேகங்கள். நீண்ட கருநீல வானத்தின் கீழே அசைவற்ற கடல், விரித்த கரும் பாயாகி வெண் மணற்கரையினை சோம்பலோடு தொட்டு அலைந்தது. காய்ந்து கருகிய இராவணன் மீசைப் புற்களும், கடற் தாளங்காய்களும், சாதாழைகளும், இடையிடையே பளிச்சிடுகிற கணவாய் ஓடுகளும் ஒரே சீருக்கு கடலிற்குச் சமாந்தரமாக நிரை வகுத்து சிறு அரணாகக் குவிந்து கிடந்தன. இதைத் தாண்டிய வெண் மணற்கரையினில் முதுகு கவிழ்ந்து இளைப்பாறிக் கிடக்கின்ற மீன் பிடி வள்ளங்களின் அருகாக கோவணங் கட்டிய சிறுவர்களின் கிளித்தட்டு விளையாட்டு. குருவிக் குரல்களை அமுக்கி வீழ்த்துகிற பிஞ்சு ஓசைகள்.

வெண் மணற்பரப்பின் முடிவிலே சோளகக் காற்றின் முரட்டு உதைப்பினால் வளைந்து தோன்றுகிற பூவரச மரங்களின் கிளைகளில் ஏறி, இலைகளைப் பிய்த்து அதிலே குழல் செய்து 'பீப்பீ' ஊதிக் கொண்டிருக்கிற இன்னொரு சிறுவர் கூட்டம். பூவரச மர எல்லையோடு, கடற்கரையோடு ஒட்டப் பந்தயமிட்டு நீண்டு செல்கிற தார் வீதி. இந்தத் தார் வீதியின் தென்புறத்திலே நிறைந்து தெரிகின்ற குடிமனைகள், அவற்றினிடையே பரவலாக எட்டிப் பார்த்து உயர்ந்து செழுமையாக நிற்கிற தென்னைக் கூட்டங்கள்.

கிழக்குப் புறத்திலே, தார் வீதியின் தொடக்க முகப்பிலே பழைய காலத்துக் கட்டிடம் ஒன்று - நாற்சதுர பங்களா, பிரித்தானியர் காலத்துக் கட்டிடம். அந்தச் சூழலிலே அது ஒரு அந்நியப்பட்ட கட்டிடமாகத் தோன்றினும், அனேகமாக ஊர் மக்களின் பொதுவான தரிப்பிடம் அதுதான். முற்றிலும் கல்லால் ஆன, இருபுற வாசலும், பன்னிரு படிகளும், கல்லாலேயே நாற்புறத்தில் இருக்கைகளும் கொண்ட அந்த வெள்ளையர் களின் கட்டிடம், கடற்கரையின் எதிரே கைகட்டி நிற்கிற இராட்சதப் பயில்வானாகத் தோற்றம் கொடுக்கின்றது.

முற்புற இருக்கையிலே அனேகமாக உடையார் கனக நாயகமே வந்திருப்பது வழக்கம். பங்களாவின் முன்னாலே, கைகட்டிப் பணிந்து குறுகி நிற்கிற சேவகனாய் லாந்தர்க் கம்பம். அதன் அருகேயுள்ள ஓங்கிச் சடைத்த பூவரச மரத்தின் பக்கமாக நிற்கிற சிவப்பு நிற பஸ் வண்டி பிரயாணிகளுக்காய் காத்திருக் கின்றது.

மேற்கிலே சரிந்து விட்ட சூரியன் மெதுவாக பஞ்சு முகிலி னைத் துளாவி நிறப் பொடிகளை விசிறி எறிந்து கொண்டிருக் கிறான். அடிவான விளிம்பின் கீழே, கடற்பரப்பினிலே சூரிய ஒளி வெள்ளிக் காசுகளை அள்ளி இறைத்துப் பரப்பியிருந்தது. அந்த மாலைப் பொழுது, வெற்றிவேலுவுக்கு மிகவும் பிரியமானது. பூவரச மரத்தடியின் கீழே நின்று கண்ணகியம்மன் கூத்திலே வருகின்ற உச்சகட்டப் பாட்டினை அடித் தொண்டையில் பாடிக் கொண்டிருக்கின்றான்.

கோவலன் கொலையுண்டு இறந்து போனமையால் சினமுற்ற கண்ணகி காளியாகி, அரசனின் நெஞ்சைக் கிழித்து, குடலினை மாலையாகி தரித்து ஆவேசத்தோடு பாடுகின்ற நாட்டுக் கூத்து. பாகவதர் கிறாப் அலைந்து ஆட, ஆக்ரோஷ மாகப் பாய்ந்து பாவனை செய்து கொண்டிருக்கிற அவனது கண்கள் சிவந்து, குரலும் உச்சஸ்தாயியை எட்டி மனதை லேசான பயங்கொள்ள வைக்கின்றது. நான்கைந்து சிறுவர்கள் அவனைச் சுற்றி மிகவும் பயபக்தியோடு நிற்கின்றனர்.

ஒன்பது பிரயாணிகளை ஏற்றிக் கொண்ட பஸ் வண்டி திருப்தியோடு புறப்படுவதற்காய் குரல் கொடுக்கின்றது. பூவரச மரத்தடி பஸ் ஸ்டாண்டிலிருந்து கிளம்பிய பஸ் வண்டி புகையை இறைத்தவாறு தடதடத்துக் கொண்டு, வீதிகளிலே அடர்ந்து நின்ற மாடுகளைப் பிரயத்தனத்தோடு ஒதுங்க வைத்து நகரத்தினை நோக்கி விரைகின்றது. எத்திக் கத்தி தொண்டை அடைத்துப் போனாற் போல அடைத்த சத்தத்தில் 'பாம் பாம்' என்று கதறுகிற பஸ்ஸின் 'ஹோர்ண்' இப்போது மாடுகளுக்கு நன்கு பழகிப் போய் விட்டது. அவை மிகவும் சோம்பலோடு பஸ்ஸிற்கு வழி கொடுக்க, டிரைவர் கதிர்காமு மனிதராக அவற்றைப் பாவித்து தூஷணமாகப் பொழிகின்றான்.

அந்தச் சின்னஞ்சிறிய கடலோரக் கிராமத்தின் குறிப்பிடத்தக்க நாகரிகச் சின்னம் இந்த பஸ் வண்டிதான். கிட்டத்தட்ட முன்னூறு குடும்பங்கள் வரை வாழுகின்ற இக்கிராமம் நகரத்திலிருந்து பத்து

மைல் தொலைவினில் இருந்தபோதிலும், மின்சார வெளிச்சம் புகாத, நாளிற்கு இரண்டு வேளைகளே பஸ் வண்டி ஓடுகின்ற நிலைமை இருக்கின்றமைக்கு அந்தக் கிராமத்திலே வாழுகின்ற மக்கள் ஏழைகள், கல்வியறிவற்றவர்கள் என்பதனைத்தவிர வேறு ஏதும் காரணமிருப்பதாகத் தெரியவில்லை. அவர்களுக்கும் இதனைப் பற்றி யாரிடமும் முறையிடத் தோன்றவில்லை. அப்படிச் செய்ய அவர்களுக்கு அக்கறையும் இருக்கவில்லை.

கிராமத்தின் தேவைகளை தேர்தல் காலங்களில் யோசித்துச் சொல்வதற்கும், அவற்றை வேண்டுகோளாகக் கேட்பதற்கும் கிராமத்திலே ஒரு சிலரேயிருந்தனர். அந்தக் கிராம மக்கள் அறிந்த நாளிலிருந்து ஊரின் இரண்டொரு பெரிய மனிதர்களே அவர்களுக்கு எல்லாவற்றுக்கும் வழிகாட்டிகளாய் இருந்தனர். ஒருவருக்கொருவர் உறவினர்களான அவர்கள், அந்தப் பெரிய மனிதர்களையே 'தங்களின் சிந்தனை வெளிப்பாடுகளாகக் கருதியிருந்தனர். என்ன விஷயமாயிருந்தாலும் அவர்களின் உறுதி, 'ஒருவரையொருவர் அனுசரித்துப்போக வேண்டும்.'.

கடலினுள் வாழ்கின்ற மீனுக்கு அந்தக் கடலே எல்லாமாய் ஆனது போல, அந்த மக்களிற்கு அவர்களின் உறவுகளே யாவிற்கும் ஆதாரம். சின்னையாவும், கார்த்திகேசுவும் அக்கிராமத்தவர்களிடையே குறிப்பிடத்தக்க பெரியவர்கள். சின்னையா ஐம்பது வயதான உழைப்பாளி. கறுகறுத்த இரும்பான உடற்கட்டு. நெடிய தோற்றத்திற்கு கம்பீர மெருகூட்டுகின்ற ஆண்மை பொலிகின்ற நடை. கடற்பன்றி ஒன்றினைத் தன்னந்தனியாக நின்று மண்டாவினாலேயே குத்திக் கொண்டு கரையேறி வந்த துணிச்சல்காரன். கடற்பன்றியோடு மூர்க்கமாகப் போராடியபோது ஏற்பட்ட வடு இன்னமும் வலது தோள்புறத்திலே மிதந்து தெரிகின்றது.

அந்தக் கிராமத்தில் முதன்முதலாகக் கல் வீடு கட்டியவர் அவர்தான். இரண்டு மீன் பிடிவள்ளங்கள், தென்னந் தோட்டங்களிற்குச் சொந்தக்காரன். யாருடைய மனதினையும் நோகவிடாது எல்லாருடனும் ஒத்து அணைத்து நடப்பவர். அவருக்கு இரண்டு பிள்ளைகள். மகள் செல்வதி வீட்டிலேயே இருக்கின்றாள். ஒரே மகன் தேவராசன்தான் அவ்வூரிலேயிருந்து படிப்பதற்காய் நகரத்துக்குப் போயிருக்கின்ற முதலாவது ஆள். அவனை எதற்குப் படிக்க வைப்பதென்பது பற்றி சின்னையாவுக்குத் தெரியாத போதிலும், மகன் தான் ஒரு

லோயராக, அப்புக்காத்தாக வருவேன் என்று அடிக்கடி கனவு துளும்புகிற கண்களோடு, உற்சாகம் பொங்கக் கூறுகின்ற போதினில் தன்னுள்ளே மிகவும் பரவசங்கொண்டு தனக்குத் தெரிந்த கடவுளருக்கெல்லாம் தோத்திரம் சொல்வார் சின்னையா.

தேவராசனது சமவயதினரான பேரம்பலம், கனகரெத்தினம், செல்லத்துரை, ராசு ஆகிய இளைஞர்களுக்குத் திருமணமாகி ஒவ்வொருவரும் மூன்று நான்கு பிள்ளைகளோடு வாழ்கின்றனர். அந்த ஊரிலேயே மிகவும் வித்தியாசமாகத் தோற்றப்பட்டுக் கொண்டு வருகின்ற தனது மகனை மிகவும் வாத்சல்யத்தோடு பார்த்து அடிக்கடி மகிழ்ச்சி ததும்ப முணுமுணுப்பார் சின்னையா: 'ஒட்டி மீன்களுக்கிடையே மினுமினுக்கிற முரல் மீனல்லவோ எனது மகன்!'

தேவராசனை அந்தக் கிராமம், ''சிவப்புத்தம்பி'' என்றே செல்லமாக அழைக்கும். உடல் வாகுள்ள, நிமிர்ந்த தோற்றத்துட னான அவனது சமவயதினர் கடற்பன்றிகளைப் போன்றவர்கள். மரக் கோல்களுன்றியும், சவள் வலித்தும், வலை பின்னியும் மரத்துப் போன கைகளையுடைய திக்குவாயனான பேரம்பலம் ஒரு நாள் தற்செயலாக தேவராசனின் உள்ளங்கையைத் தொட்டுப் பார்த்துவிட்டு எல்லையில்லா வியப்போடு, ''பஞ்சு கூட இஇஇப்படியில்லையடா... அவ்வளவு மெதுமை... ய்ய்...'' என்று எல்லோருக்கும் சொல்லிக் கொண்டு திரிந்தான்.

தேவராசனுக்கு படிப்பு முடிந்ததும், அவனுக்கு அந்த ஊரிலேயே பார்த்துத் திருமணம் செய்து கொடுக்க வேண்டு மென்ற எண்ணம் நெஞ்சினுள்ளே எழுகையில் தனது இரத்த உரித்துக்களான ஒவ்வொருவரையும் மனதினில் இழுத்து நிறுத்தி ஆராயாமல் அவர் இருந்ததில்லை. அவ்வூரிலே அவருக்குச் சமதையாகவும், தேவராசனுக்கு ஏற்றவகையிலும் மகளை வைத்திருப்பதில் முதலிடத்தைப் பெறுபவர் கார்த்திகேசு. கார்த்திகேசுவின் ஏகபுத்திரி வல்லவாம்பிகையை மருமகளாகப் பெறுவதற்கு சகல தகுதிகளும் வாய்ந்த ஒரே மனிதர் சின்னையா என்பது ஊரின் ஒரே குரலினான முடிவாகும்.

கார்த்திகேசுவுக்கு ஒரேயொரு வள்ளமே சொத்தாக இருந்த போதிலும், கடற்கரையோரத்து அனேக தென்னந் தோட்டங்கள் அவரது பெயரிலேயே சொந்தங் கொண்டிருந்தன. சொந்தமான வள்ளமும், மலையாளத்திலிருந்து வாங்கி வரப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக, கார்த்திகேசு ஒரு வல்லமையுள்ள

மாந்திரீகனாயிருந்தமையினால் ஊரிலுள்ளோரின் அபிமானத்திற்கு மிகவும் பாத்திரவாளி. அவருக்குத் தெரியாத மாந்திரீகம் எதுவுமேயில்லை. அவருக்குக் கட்டுப்படாத குட்டித் தேவதைகள் எதுவுமிருக்க முடியாது என்பது ஊராரின் அனுபவம்.

ஒரு மீன்பிடிகாரனுக்கு, வலையில் மீன் படுவது குறைத்து விட்டால் போதும், உடனடியாகக் கார்த்திகேசுவிடம்தான் ஓடிப்போவான். கார்த்திகேசு நரைமயிரடர்ந்த தனது நெஞ்சைத் தடவியவாறு அவன் சொல்வதைக் கேட்டுவிட்டு அட்டகாசமாகச் சிரிப்பார்:

''நீ ஒண்டுக்குமே யோசியாதையடா... இது மூனிச்சேட்டை, இந்த கருக்கிருட்டோடை அவரைக் சூழறிக் குழிறி ஓடப் பண்ணுறன்...''

துர்த்தேவதையை அலறி அலறி ஓடப் பண்ணுகின்ற அந்த மந்திர நீரை பயபக்தியோடு நிற்கிறவனிடம் கையளிப்பார் கார்த்திகேசு. தங்கம் போலப் பளபளக்கிற வண்ணம் விளக்கியுள்ள செம்பினுள்ளே அடங்கிய அந்த மந்திர நீரினை வள்ளம் எங்கும் பயபக்தியோடு தெளித்துவிட்டால் எல்லாவிதமான துர்த்தேவதைகளும் வள்ளத்தைவிட்டு உடனடியாகவே அகன்று விடுமென்பது மீனவர்களின் அசையாத நம்பிக்கை.

அது மட்டுமில்லை. கருக்கிரு'ட்டில் போகையில் பற்றிக் கொள்கின்ற வியாதிகளுக்கும் அவர்தான் வைத்தியர். திருநீற்றினை அள்ளி, இடது உள்ளங்கையினில் வலது பெருவிரலால் பரவி, சிறிது நேர முணுமுணுப்பிற்குப் பிறகு, ''சிவம் சிவம்... சுபம் சுபம்'' என்று அடங்கிய குரலிலே கூறியவாறு, எதிரே அமர்ந்துள்ள நோயாளியின் நெற்றியிலும், இரு கைகள் நீளவும் பூசிவிட்டு உச்சியில் ஒரு தட்டுத் தட்டிய பின் ஆவென்றச் சொல்லி, வாயினுள்ளே சிறிது திருநீற்றினைக் கொட்டி அதை மென்று விழுங்கக் கட்டளையிட்டு கைகளை மூன்று தரங்கள் அவர் தட்டி விட்டாரென்றால் அந்தப் 'பார்வை பார்ப்பு' எந்த நோயினையும் உடலிலிருந்து விரட்டி அடித்தே விடுகின்றது.

அது போலவே 'களிப்புக் கழித்தல்', 'கொத்திப் பேயினை விரட்டுதல்' ஆகிய அவரின் சாகஸங்கள் பற்றி அடிக்கடி ஊரெல்லாம் பல கதைகள் உலாவிக் கொண்டிருக்கும்.

நடுத்தர உயரமும், தளர்ந்த உடலமைப்பும், சிறிய உச்சிக் குடுமியுமுடைய அவரின் கருமையாய் அடர்ந்த புருவங்களின்

கீழே தணற்பழங்களாய் உருள்கிற தீட்சண்யமான கண்களை நேருக்கு நேராகப் பார்ப்பது துணிந்தவனாலேயே இயலக்கூடிய ஒரு காரியமல்ல. அந்தக் கண்கள் எந்நேரமும் எதனையோ துருவுவது போல ஜொலிப்புக் கொண்டிருக்கும்.

கார்த்திகேசுவுக்கு, நீண்ட நாட்களாகவே தேவராசனில் ஒரு கண் இருந்து வருகின்றதை, அவரோடு பழகிய அனேகர் மிக நன்றாகவே அறிந்திருந்தார்கள். சின்னையாவின் காதிலும் அது காற்றோடு காற்றாக வந்து கேட்டபோது மனம் புன்னகைக்க அவர் நெஞ்சினுள்ளே முணுமுணுப்பொன்று எழுந்து கலையும்: 'அது அது அந்தந்தக் காலத்திலை நடந்தே தீரும்.'

ஒரே ஒரு விஷயத்தினில் மட்டும் தேவராசனின் போக்கினை ஏற்றுக் கொள்ள முடியவில்லை சின்னையாவால். ஒவ்வொரு முறையும் விடுமுறை காலத்தினிலே கிராமத்திற்கு வந்து திரும்புகிற போதிலெல்லாம் மகனுக்கும், தகப்பனுக்குமிடையே அந்த மனக்கசப்பு வளர்ந்து வரவே செய்தது. சின்னையா என்றுமே தன்னுடைய முதற்சொத்தாக தன்னுடைய வள்ளம், மீன்பிடி வலைகள், மரக்கோல்கள், சவள் ஆகியவற்றையே நேசித்துப் போற்றி வருபவர். மீன்பிடி வலையின் மீது, சாமியன் ஏறி மிதித்து விட்டதற்காக அவனது முதுகிலே நிரந்தரமான வடுவினை அவரது ஈச்சங்கம்பின் விளாரென அடிகள் ஏற்படுத்தியிருக்கின்றன.

வலைகளில் சின்னதாக ஒரு பொத்தல் ஏற்பட்டாலும் கையொடிந்தாற் போல அவர் வேதனைப்படுவார். உடனடியாக வலையைச் சுமந்து வந்து வீட்டின் நாற்சாரத்து ஓர விறாந்தையில், பரப்பி விரித்து பொத்தாவிடில் சின்னையாவுக்கு மன அமைதி வரவே மாட்டாது. இதன் காரணமாக வீட்டு விறாந்தையின் இடது புறத்து சுவர் ஓரமாக வலைகள் அடிக்கடி குவித்து வைக்கப் பட்டிருக்கும். சில வேளைகளில் வீட்டின் முன் பக்கப் பூவரசு வேலியில் சவர்த்தூளில் நன்றாக அவித்துப் பிழியப்பட்ட வலைகள் காய்வதற்காக இழுத்து கட்டப்பட்டிருக்கும். இதனைத் தேவராசன் கண்டு விட்டால் போதும், தாயாரான அன்னம்மாவிடம் சென்று எரிச்சலோடு முணு முணுக்கத் தொடங்கி விடுவான்...

"இப்படி என்னத்துக்காக இந்த வலைகளையும் சவளையும் வீட்டுக்கு முன்னாலை நீங்கள் பரப்பி வைக்கிறீங்கள்? வெளியிடத்திலையிருந்து என்னைத்தேடிவாற பெரிய ஆட்கள்,

இதுகளையெல்லாம் கண்டால் என்னைப் பற்றி என்ன நினைப்பாங்களென்று உங்களுக்கு எப்பிடித் தெரியப் போகுது? இந்தச் சாமான்கள் எல்லாவற்றையும் பின்னாலை கொண்டு போய் மறைவாகச் சாருக்குள்ளை வையுங்க... அல்லாவிட்டால் தனியாகக் கொட்டில் ஒன்றைப் போட்டு அதுக்குள்ளை இதையெல்லாம் கொண்டு போய் நிரப்பி வையுங்க... இப்படிச் செய்தால் இதாலை எல்லோருக்கும் நன்மை வரும்...''

சின்னையாவின் காதுகளிலும் இந்தக் குரல் விழவே செய்யும். அவனது வார்த்தைகள் விளாத்தி மீன் முள்ளினைப் போல அவரின் நெஞ்சினுள்ளே விழுந்து புரளும். அந்த வேகத்தினில் மளம் பொருமி, வார்த்தைகள் துடித்தெழுந்து, கண நேர நிதானிப்பின் பிறகு வெளியே வராமலே அலையாகிக் கரைந்து உருவிழந்து மறைந்து விடும். 'தோளுக்கு மிஞ்சினால் தோழன், அதுவும் பெரிய படிப்புப் படிக்கிறவன்' என்று நினைக்கிற மனது மறுகணமே அச்ச உணர்விலே கால் பதித்துச் சுயத்தினை எய்தும்.

'இந்த உறுதியான வலைகள், இந்தச் சவள், இந்த மரக்கோல்கள் ஆகிய இவைகள்தானே, எனக்குப் பணத்தினை அள்ளித் தருகின்றன. இவைகளுக்கு நான் சொந்தக்காரனாக இருந்தமையால்தானே என்னுடைய மகன் பட்டணத்திற்குப் போய்ப் படித்து ஒரு ஆளாகத் தலையெடுக்கப் போகிறான்? இப்போது இவைகளையெல்லாம் அவமரியாதை செய்கிற மாதிரி கதைக்கிறானே... இவன் ஏன் இப்படி மாறிப் போய் விட்டான்? இந்தக் கடற்கரையிலை பிறந்து, இந்தக் காற்றைச் சுவாசித்த எவனுமே இப்பிடி யோசிப்பதற்கு ஒருபோதுமே துணிய மாட்டான்... கடைசியில் இந்த ஊரிலை தான் பிறந்ததே அவமானம் என்று இந்தத் தேவராசன் சொல்லிவிடுவானோ?'

சின்னையாவின் எண்ணங்களெல்லாம், விரிந்த கடலிலே தரிக்க இடந்தேடிப் பறக்கின்ற கடற்புள்ளினைப் போல எங்கெல்லாமோ தொட்டுக் கொண்டு போய் ஒரு முடிவினுக்கு வராமலே தொங்கிக் கொண்டு நிற்கும். எனினும் இந்தத் தடவை சின்னையா பொருத்தமான ஏற்பாடொன்றினைச் செய்து விட்டார்.

தேவராசன் விடுமுறை காலத்தில் வந்தால் தங்குவதற்கென்று தனக்குச் சொந்தமான தென்னந்தோப்பினில் இரண்டு அறைகளையும், விறாந்தையினையுமுள்ளடக்கிய சிறிய

வீடொன்றினைக் கட்டி முடித்து விட்டார். இனி தேவராசன் வந்தால் வசதியாகத் தங்கிச் செல்லலாம். அவனைத் தேடி வருபவர்கள் சௌரியமாக அவனோடு தங்கி சென்று, அவனைப் பற்றிய நல்ல அபிப்பிராயங்களோடு திரும்பிச் செல்வார்கள்.

2

செல்வதிக்கு இருபதுவயது இந்தக் கார்த்திகை மாதத்தோடு முடிவடைகின்றது. கறுப்பு நிறமான, இலேசாகப் பற்கள் மிதந்த ஆனால் தகப்பனைப் போலவே கட்டுமஸ்தான தோற்றங் கொண்டவள். ஆறாம் வகுப்போடு படிப்பை முடித்துக் கொண்டு வீட்டு வேலைகளைக் கவனிக்கின்ற செல்வதியின் நடையுடை பாவனைகளை மாற்றுவதற்காக அவன் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அளவிலடங்காதன. ஆனால் அவள் எதையுமே கவனிக்க மாட்டாள். தொள தொளவென்ற சட்டையும், பாவாடையுமணிந்து - அதையும் தூக்கிக் கட்டிக் கொண்டு அவள் நடமாடுவதைக் காண அவனுக்கு ஆத்திரம் பற்றி எரியும்...

'சீ, இங்கை வந்தால் ஒரே சங்கடமாயிருக்குது. நாகரிகமே தெரியாத சனங்கள். வந்தால் பழகிறதுக்கு ஒரு மனிஷருமே இல்லாத ஊர். இந்த ஊரை விட்டு ஒரேயடியாய் எங்காவது போனால் நிம்மதியாயிருந்திடலாம். எல்லாத்துக்கும் என்னுடைய படிப்பு முடியட்டும். பிறகு எனக்குச் சமதையானவர்களோடை ரவுணிலேயே போயிருந்திடலாம். நாலு பரம்பரைக்குத் தேவையான காசைத்தானே என்னுடைய ஐயா இங்கை உழைத்து வைத்துள்ளார்...'

''அண்ணை, தேத்தண்ணீர் குடியுங்கோ...''

யோசனை கலைந்து நிமிர்ந்தான் தேவராசன். எதிரே மூக்குப் பேணி நிறையத் தேநீரோடு, தொள தொளத்த உடையினுள்ளே ஆண்பிள்ளையின் கம்பீரத்தோடு நின்றாள் செல்வதி.

மூக்குப் பேணியை வாங்கி லேசாக முகர்ந்தான் தேவராசன்.

''மீன் வெடுக்கு அடிக்குது. எனக்கு வேண்டாம், கொண்டு போ...''

செல்வதியின் முகம் கணப் பொழுதிலே இருளுற்றது. இதைப் போல அவனது பல குத்துதல் கதைகளை அவள் கேட்டு விட்டாள். அந்த மூக்குப் பேணியினை மண்ணும் புளியும் போட்டு பளபளவென்று விளக்கிச் சுத்தமாகக் கழுவிய பின்புதான் ருசியான தேநீரை மிகக் கவனமாக அதற்குள் ஊற்றிக் கொண்டு வந்தாள் செல்வதி. அவளுக்கு மனதினுள் திடீரென்று கோபம், மூர்க்கத்தனமானதொரு நுரை சிதறவெடிக்கிற அலையாகப் பொங்கி எழுந்தது...

''அண்ணை, நானுந்தான் கவனிச்சுக் கொண்டு வாறன். நீ எங்களோடேயே பிறவாத வேற்று மனிஷன் மாதிரி நடக்கப் பார்க்கிறாய்? ஐயா, இந்தக் கடலடிச்சுக் காசு சம்பாரிக்கிறபடியாலைதான் நீ படிக்கிற நிலைமைக்கு வர முடிஞ்சுது. இப்ப என்னென்றால் ஏறின ஏணியையே உதைக்கிறது போலை நடக்கிறாய். இது சரியில்லை...''

கதிரையைப் பின்னால் தள்ளியவாறு துள்ளியெழுந்தான் தேவராசன்.

''நீயா எனக்குப் புத்தி சொல்ல வாறாய்? நான் எத்தினை பேரோடை படிச்சிருக்கிறன், ...எத்தினை பெரிய விஷயங்களையெல்லாம் அறிஞ்சு வைச்சிருக்கிறனென்று உனக்கெல்லாம் எப்பிடி விளங்கப் போகுது? நீ கருவாடு காயவைக்கிறதுக்கு மட்டுமே பழகிப் போனனி... இதைத்தானே கதைப்பாய்...''

தன்னுடைய கூர்மை வாய்ந்த ஏளனத்தினால் செல்வதி ஆத்திரமடைவாள் என நினைத்திருந்தான் தேவராசன். அவளோ, மாறாகக் குலுங்கிச் சிரித்தாள்.

''அப்ப நீ ஒரு பெரிய சாதிக்காரனென்டா சொல்ல வாறாய்? ஐயா மட்டும் உன்னைப் படிப்பிக்காமலிருந்தால் நீ இப்ப மீன் வலைதான் பின்னிக் கொண்டிருப்பாய். நானும் உன்னைப் பற்றி என்னவோ பெரிசா நினைச்சிருந்திட்டன்...''

அவள் மூக்குப் பேணிக்குள்ளிருந்த தேனீரை வெளியே ஏற்றி ஊற்றிவிட்டு அலட்சியமாக உள்ளே போய் விட்டாள்.

வெறும் உயிராக, பெறுமதியற்றதொரு நபராக அவனாலே கணிக்கப்பட்ட அவள் தன்னை அவமானப் படுத்தியதனை நினைத்து மனதினுள் குமைந்தான் தேவராசன்.

3

இம்முறை கிராமத்திற்குத் திரும்பிய தேவராசன் அற்புத மொன்றினை நிகழ்த்தி விட்டான். பெரிய அழகான மோட்டார் காரினில் அவன் வந்ததனை பூவரச மரத்தடியிலும், பங்களாவடி யிலும் நின்று பார்த்து வாய் பிளந்திருந்தனர் ஊர் மக்களிலே பலர். தென்னந் தோட்டத்து வீட்டிற்கு முன்னே நின்ற காரிலிருந்து இறங்கிய தேவராசனோடு இன்னும் இரண்டு பேர் - மிகவும் ஆடம்பரமாக உடையணிந்தவர்கள் வந்திருந்தனர்.

இப்போதுதான் கடற்கரையிலே விளையாடத் தொடங்கின கோவணங் கட்டிய சிறுவர்கள் 'ஊய்' என்று கூவிக் கொண்டு காரின் பின்னே ஓடிப்போய் தொலைவிலே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். வளர்ந்த சிலர், அவர்களோடு 'தஸ்புஸ்' என்று தேவராசன் பேசுவதனைப் பார்த்துவிட்டு, அவனோடு கதைக்க முயன்றபோது அவன் அவர்களையே காணாதவன் போல உள்ளே போய்விட்டான்.

அவனது போக்கினையிட்டு அவர்கள் அதிருப்தியுறாமல் பெருமையோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். தங்களிடையே பிறந்து, தங்களால் தூக்கி வளர்க்கப்பட்ட 'சிவப்புத்தம்பி' இப்போது கீர்த்தியோடு வந்திருப்பதனை எண்ணி அவர்களின் மனம் பூரிப்புக் கொண்டது.

இந்த விஷயத்தைப் பற்றி கடற்கரை, மீன்சந்தை, பங்களா, வீடுகள் யாவற்றிலும் ஒரே பரபரப்பும், வியப்புங்கலந்த பெருமிதங்களும் வெளியாகின. வந்திருக்கின்ற இரண்டு பேரும் பட்டணத்திலேயே பெரிய ஆட்கள், பதினைந்து இருபது வீடு; கார் வைத்திருப்பவர்கள் என்ற கதைகள் அலைகளாய் எங்கும் உருண்டன. இப்போது அவர்கள் வந்திருக்கின்ற இந்தக் காரும், தண்ணீர்க் கப்பலில் இருந்து ஒரு கிழமைக்கு முன்னர்தான் இங்கு கொண்டு வரப்பட்டதென்றும், இதுபோன்றதொரு கார், இந்நகரத்திலே மட்டுமல்ல, இலங்கை முழுவதிலுமே யாரிடமும் கிடையாதென்று பூவரச மரத்தின் கீழே நின்று உரத்த குரலிலே பிரசங்கம் செய்து கொண்டிருந்தான் வெற்றிவேலு.

அங்கிருந்து இடைக்கிடையே பட்டணம் போய் வருகின்ற வெற்றிவேலு பொய்யே கூறமாட்டான் என ஊரிலே நிலவிய

உறுதியான அபிப்பிராயம், அவளைச் சுற்றிலும் நிறையவே ஆட்களைக் குழுமி நிற்கச் செய்திருந்தது. இப்போதுதான் வெற்றிவேலு இரண்டு போத்தல் தென்னங் கள்ளைக் குடித்துவிட்டு வந்திருந்ததினால் அபிநயமும் ஆவேசமுமாக விளக்கங்கள் வெளியாகிக் கொண்டிருந்தன.

ஊரிலே நடக்கின்ற எல்லாக் கூத்துக்களிலும் பங்கு கொள்ளுகின்ற வெற்றிவேலு, குட்டையான தோற்றமுடையவனாக இருந்தாலும், நாற்பத்தெட்டு வயதிலும் நரைதிரையறியாத குரல் வளம் வாய்க்கப் பெற்றவன், இதனால் ஊரின் பாசத்திற் குரியவன். அவனது விஸ்தாரமான கதையிலே மெய் மறந்து கரைந்து, சிலிர்த்து, மகிழாதவரில்லை. எல்லாருடைய கண்களும், யோசனையும் அகல விழித்து வியப்பினால் புளகாங்கித மடையும் படியாக பல ஆச்சரியமான விஷயங்களை இப்போது உரத்த குரலிலே நாடக பாங்கில் சொல்லிக் கொண்டிருந்தான் வெற்றிவேலு.

வல்லவாம்பிகையின் காதுகளில் இந்தக் கதைகள் விழுந்தபோது அவளின் நெஞ்சம் எல்லையில்லாப் பெருமிதங் கொண்டது. கோழிக் குஞ்சுகளை கரப்பினுள்ளே அடைத்த வளாய் படலைப் பக்கமாகக் கண்வைத்துக் காத்திருந்தாள் அவள். மாலை மங்கிக் கொண்டிருக்கையிலேதான் அங்கு வருவான் வெற்றிவேலு.

ஊர்க் கதைகளையெல்லாம் சேர்த்துத் திரட்டிக் கொண்டு அவன் வந்து சொல்கிறதை கார்த்திகேசு மிகவும் அக்கறையுடன் கேட்டிருந்துவிட்டு, "இந்தாடா வெற்றி அண்ணைக்கு நல்ல காசு கிடைக்கும். மருமகனைப் பற்றிய கதைகளைக் கேட்கிறதென்றால் ஐயாவுக்கு நல்ல சந்தோஷமாயிருக்கும். இந்த ஊரிலை தேவராசா மச்சானை விட வேற ஆளுக்கு இப்படியான சிறப்பும் பெருமையும் இருக்க முடியும்?"

"அம்பா" என்றொலித்த மாட்டின் அழைப்பினில், நினைவுகளிலிருந்து விடுபட்ட வல்லவாம்பிகை தன்னுள்ளேயே சிரித்தவளாய், "வெள்ளச்சி, வா.. வா கட்டையடிக்கு வா..." என்று கூப்பிட்டவாறு வெள்ளை பசுவின் காதைப் பிடித்து இழுத்துக் கொண்டு மாட்டுக் கட்டையடிக்குச் சென்றான்.

தேவராசன் சொன்ன விஷயங்களினைக் கேட்டு உடல் கூசிப்போய் நின்றார் சின்னையா.

''ஐயா, நல்லாக் குளிச்சிட்டு இந்த சேர்ட்டைப் போட்டுக் கொண்டு என்னோடை வாருங்க... என்னோடை வந்திருக் கிறவை உங்களோடை நிறையக் கதைக்க வேணுமென்று விருப்பப்படுகினை...''

சின்னையா மகனைப் பார்த்தார். அழகிய சேர்ட்டும், நீண்ட காற் சட்டையும் அணிந்த, சுருள் முடியுள்ள சிவப்பு நிறமான தேவராசனை அந்த ஊருக்கே புதியவனைப் போல ஒரு கணம் நோக்கினார் அவர். அந்த ஊரிலேயுள்ள மெலிந்த இளைஞன்; ஒரே படிப்பாளி அவன்தான். இன்று முழுதுமட்டுமல்ல, இனி வருகின்ற அநேக நாட்களிற்கு ஊர் அவனைப் பற்றித்தான் கதைத்துக் கொண்டிருக்கும்...

'அவனில் மாற்றங்கள் வரலாம்; அவனது படிப்பிற்காக அவை வரலாம். ஆனால் ஒரு நாளுமில்லாத மாதிரி நான் ஏன் மாறவேணும்? இத்தனை வருஷகாலமுமாய் தோளிலை சால்வை போட்டிருப்பனே தவிர இந்தச் சட்டை போட்டதில்லையே...'

''தம்பீ, ஊரிலை இல்லாத இந்தப் பழக்கத்தை ஏன் என்னைக் கைக்கொள்ளச் சொல்லுகிறாய்? எங்கடை பரம்பரை யிலை என்னுடைய வயதிலை இப்படியாக ஒருத்தருமே சட்டை போட்டதில்லை... என்ன கதைக்க வேண்டியிருந்தாலும் எனக்காக நீயே அவையளோடை கதைச்சுக்கொள். என்னை என்னத்துக்கு?''

அன்னம்மா இடையினிலே குறுக்கிட்டாள். மகனுடைய பக்கம் நிற்காவிடில் அங்கே தேவையில்லாத சச்சரவு முளைக்கும் என்பதனை அவள் அனுபவத்தினிலே நன்றாக அறிந்து வைத்திருக்கின்றாள்.

''மகன் சொல்லுறதையும் கொஞ்சம் கேட்டு நடவுங் கோவன். வந்திருக்கிறவை பெரிய ஆட்களாம். உங்களோடை கதைக்க வேணுமென்று விருப்பப்படுகிறாங்களாம். அதுவும் அவங்கள் தம்பிக்கு நல்ல உதவியான ஆட்கள். நீங்கள் கூப்பிட்டும் போகாவிடில் அவங்கள் தம்பியை நாளைக்கு மரியாதை பண்ணுவாங்களோ... கொஞ்சம் யோசித்துப் பாருங்க...''

படித்த ஆட்களோடு கதைப்பதனை நினைத்தாலே சின்னை யாவுக்கு உடல் நடுக்கம். அதுவும் வந்திருக்கிறவர்களுடைய

உடுப்பு, தாம்தூமென்ற நடை, பேசுகின்ற பாஷை ஆகிய வற்றினை அவதானித்திருந்த அவருக்கு, அவர்களின் முன்னே போகிறதை நினைக்கவே உடல் ஆடுகிறது.

''ஐயா, சுறுக்காய் வெளிக்கிடுங்கோ... அவையள் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பினை எத்தனையோ வேலைகளையெல்லாம் விட்டிட்டு என்னோடு அவையள் இங்கை மினக்கெட்டு வந்திருக்கினை...''

கையிலேயுள்ள மணிக்கூட்டைப் பார்த்தவாறு, தன்னை அவசரப்படுத்திக் கொண்டிருந்த தேவராசனின் துரத்தலால் கிணற்றடிப் பக்கமாக நடந்தார் சின்னையா.

தகப்பன் குளிப்பதற்காக கிடாரத்தில் தண்ணீர் நிறைத்துக் கொண்டிருந்த செல்வதி, தகப்பனின் முகக் குறிப்பினப் பார்த்தவாறே முணுமுணுத்தாள்:

''இந்த முறை ஐயாவைச் சேர்ட்டுப் போடச் சொல்லி வற்புறுத்துகிறார். அடுத்த முறை வந்து ஐயாவினுடைய கொண்டையை வெட்டித் தன்னைப் போல 'குறோப்பு' வைக்கச் சொல்லுவார் போலையிருக்குது. அவங்கள் பட்டணத்திலைலிருந்து வந்தாப்போலை அவங்களுக்காக ஏன் எங்களினுடைய வழக்கங்களைக் கைவிட வேணும்? அண்ண னுடைய போக்கு எனக்குக் கொஞ்சமும் விளங்கேல்லை...''

4

வீதியின் ஓரத்தே நிரை நிரையாகச் சிதறி நின்ற மாடுகளை, பிரயத்தனத்தோடு விலக்கியவாறு தடதட ஒலியோடு நகரத்தை நோக்கிக் கொண்டிருந்தது பஸ் வண்டி. கோவணச் சிறுவர்களும், பங்களாவில் தாயம் விளையாடிக் கொண்டிருப்பவர்களும் கடற்கரைப் பக்க சின்னையாவின் புதுவீட்டையே அடிக்கடி பார்த்தவாறிருந்தனர். அந்த வீட்டிற்குள் நுழைகின்ற போது சின்னையாவுக்கு குப்பென்று வியர்த்தது. கையினால் வழிந் தெறிந்தார். தொண்டைக்குள் அடிக்கடி எச்சில் அடைத்தது.

சாரம் மட்டுமே அணிந்து நாற்காலியில் நீட்டி நிமிர்ந்திருந்த இருவருக்கும், தகப்பனை தேவராசன் அறிமுகப் படுத்திவிட்டு ஆங்கிலத்தில் ஏதோ சொன்னான்.

அவர்கள், சின்னையாவைக் கண்களினால் அளந்து கொண்டு உள்ளே போய், நிமிஷங் கழிந்திடுமுன் நிறநிறக் கோடுகளுள்ள சேர்ட்டை அணிந்தவாறு மீண்டும் வந்து அமர்ந்தனர் பழைய இடத்திலேயே. சின்னையாவுக்கு எல்லாமே கண்ணைக் கட்டிக் கடலினுள் விட்ட திகைப்பு.

ஏறு நெற்றியுள்ள, சிவப்பு நிறமான பருத்த மனிதர் மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கையிலே வைத்துக் கொண்டு அடைத்த குரலிலே பேச்சினைத் தொடங்கினார்.

''மிஸ்டர் சின்னையா, உங்களைப் பற்றி நிறையக் கேள்விப் பட்டதுக்குப் பிறகுதான் உங்களைச் சந்திக்க வந்திருக்கிறம்... ரவுணிலை பலரும் உங்களைப் பற்றி நிறைய எங்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள்...''

சின்னையாவுக்கு திக்கென்றது. இதுவரையிலும் அவர் இந்தக் கிராமத்தினை விட்டு வேறெங்குமே போனதில்லை. அடுத்த கிராமத்திலுள்ள உடையார், மணியக்கார பகுதியோடு இடையிடையே பழகியிருக்கிறார். அவ்வளவுதான். ஆனால் இவரோ வேறெதையோ சொல்லிக் கொண்டு போகின்றார். அவர் பேசுகின்ற பாவனையையும், நிதானத்தையும் அவதானிக்கையில் பொய் பேசுகிறவராக சின்னையாவுக்குத் தோன்றவில்லை. அதுவும் பட்டணத்திலுள்ள இந்தப் பெரிய பணக்காரர்கள் தன்னிடம் பொய் சொல்ல வேண்டிய அவசியமில்லையென்ற முடிவினுக்கு வந்தார் சின்னையா.

''நான் ஒரு அப்புக்காத்து. என்ரை பெயர் சிவலிங்கம். இதோ பாரும், உமக்கு முன்னாலை இருக்கிற இவரும் ஒரு அப்புக் காத்து. பெயர் கனகராசா. உம்முடைய மகனையும் எங்களைப் போல பிரபலமான அப்புக் காத்தாக ஆக்க வேணுமென்று எங்களுக்கு நிறைய ஆசையிருக்குது. உம்மடை மகனுக்கு நல்ல மூளையிருக்குது. உம்மட்டை நிறைய காசிருக்குது. பிறகென்ன தேவை?''

சின்னையாவின் மன அரங்கினில் அபிநயத்தோடு குரலிடுகின்ற வெற்றிவேலு:

''உங்களுக்குத் தெரியுமோ அண்ணை... தம்பி தேவத்தோடை வந்திருக்கிறவை லேசான ஆட்களில்லை. அவங்களிட்டை எத்தனை வீடுகள், காருகள் இருக்குதென்று உங்களுக்குத் தெரியுமா? ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாவுக்கு

மேலை சம்பாதிக்கிற மனுஷர் இவங்கள்... சும்மா அப்பிடி இப்படியென்று சாதாரணமாக நினைச்சுக் கொள்ளாதையுங்கோ...''

மற்றவர் செருமினார்; கறுப்புக் கண்ணாடியணிந்த கம்பீரமான கனகராசா.

''உங்களைப் போலை செல்வமுள்ள ஆட்கள் இப்பிடி ஒதுங்கியிருக்கப்படாது மிஸ்டர் சின்னையா. இவர், மிஸ்டர் சிவலிங்கத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? இலங்கையிலை உள்ள எல்லாருக்குமே தெரியும். பெரிய லோயராயிருந்தும், லட்சக் கணக்கிலை வருமானமிருந்தும் சனங்களுக்கு நன்மை செய்ய வேணுமென்றதுக்காக அதெல்லாவற்றையும் உதறிவிட்டு முனிசிபல் எலக்ஷனிலை நின்று இப்ப மேயராக இருக்கிறவர்...''

அடேயப்பா, இவர்தான் அந்த மேயரோ? என்ன பெரிய மனிசனப்பா!

மனத்தினுள்ளே ஆச்சரியம் துள்ளிற்று சின்னையாவுக்கு. தன்னையறியாமலேயே எழுந்து நிற்க முனைகையில், தேவராசன் அவரது முதுகைச் சுரண்ட அவர் சுதாரித்தவாறே உட்கார்ந்து விட்டார்.

தங்களுடைய கிராமத்திற்கு மின்சாரம் வர வேண்டுமென்றால் மேயர்தான் மனம் வைக்க வேண்டுமென்று உடையார் இரண்டு முறை கூறியிருக்கின்றார். ஆனால் மேயரைச் சந்திப்பது மிக மிகக் கஷ்டமான காரியமென்பது உடையாரின் அங்கலாய்ப்பு. இப்போது அதே மேயர் சின்னையாவின் வீடு தேடி வந்து அவரோடு பேசிக் கொண்டிருக்கிறார். அளவு மீறிய சந்தோஷம் அவரது மனதினுள்ளே. 'வெற்றிவேலுவிடம் உடனடியாக இதைப் போய்ச் சொல்ல வேண்டும்.'

''என்ன ஒரேடியாய்த் திகைச்சுப் போயிட்டீங்கள். நீங்கள் ஏன் திகைத்துப் போயிருக்கிறியளென்று எனக்கு நல்லாவே விளங்குது... என்னை நீங்கள் முந்தியொரு நாளும் கண்டிருக்க மாட்டீங்கள். ஆனால் கேள்விப் பட்டிருப்பியவள். வழி தெரியாமல் தவிக்கிற மனுஷருக்கெல்லாம் நாங்கள்தான் வழி காட்ட வேணும் - மேயர் என்ற முறையிலை எனக்கு ஒரு விஷயம் நல்லாகத் தெரியும். உங்களினுடைய வட்டாரத்திலை

பல கிராமங்களிருக்குது. அந்தக் கிராமங்களெல்லாவற்றிலுமே உங்கடை கிராமந்தான் ஒரு முன்னேற்றமும் இல்லாமல் இருக்குது... இதற்குக் காரணம் என்ன? நல்லாகயோசித்துப் பாருங்க. இதுவரை காலமும் உங்களுக்கு மெம்பராயிருக்கிறவர் இந்தக் கிராமத்தின் கஷ்டங்களைப் பற்றி எனக்கு ஒரு சொல்லுக்கூடச் சொன்னதில்லை...''

மேயர் சிறிது நேரம் மௌனமாயிருந்து விட்டுத் தொடர்ந்தார்.

''அவர் ஏன் உங்களினிடைய கிராமத்தைப் பற்றி அக்கறைப் படப் போகின்றார்? அவருக்கு தன்னுடைய சாதியைப் பற்றித்தான் அக்கறையே தவிர வேறே யாரைப் பற்றியும் கவலையில்லை. இந்தக் கிராமத்துக்கு நேரே வந்து நிலைமைகளைப் பார்த்த பிறகுதான் எனக்கு உண்மையான நிலவரம் என்னவென்றே தெரியத் தொடங்கியிருக்குது.''

சின்னையா அவரையறியாமலே மேயரின் மீது ஈடுபாடு கொண்டார். அவர் எதனைக் கேட்டாலும் செய்து கொடுக்க மனம் முடிவு கொண்டது. இனி இவ்விடத்திற்கு மின்சாரம் வருவது சாத்தியமே என மனதினுள் மகிழ்வுற்றார். மேயர் சிவலிங்கமும் ஏறு நெற்றியில் துளிர்த்த வியர்வையினை லேஞ்சியினால் ஏற்றித் துடைத்தவாறே கனகராசாவை அர்த்த புஷ்டியோடு பார்க்க, அதற்காகவே எதிர்பார்த்தவர் போல கனகராசா தொடங்கினார்;

''கிட்டடியிலை முனிசிபல் கவுன்சிலுக்கு எலக்ஷன் வரப் போகுது. இப்ப நாட்டிலையுள்ள நெருக்கடி நிலைமை உங்களுக்குத் தெரியுந்தானே... நேர்மையானவர்களும், தமிழபி மானம் உள்ளவர்களுந்தான் இந்த முறை எலெக்ஷனிலை வெற்றி பெற வேணும். எங்களின்ரை ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும் இந்த எலெக்ஷனிலைதான் நாங்கள் காட்ட வேணும். துரோகிகளை அடியோடை தூக்கி எறிய வேணும். அப் படித்தான் எங்களின் தமிழினத்துக்கு விடிவு காலம் வரும்...''

குரலிலே ஆக்ரோஷமும் வேகமும் கெம்பிற்று. சின்னையா வுக்கு அவரின் வார்த்தைகள் நெஞ்சிலே ஆவேசத்தை மூட்டின. கண்ணுக்குத் தெரியாத அந்த எதிரிகளை - துரோகிகளை நொறுக்கி எறிய வேண்டுமென்ற உத்வேகம் அவரை அறியாமலே அவரது உடலெங்கும் கிளர்ந்துபரவியது. மேயர் சிவலிங்கம் அமைதியாக இருந்தார். கனகராசாவின்

நாவன்மையினை வியந்தவாறு மௌனமாயிருந்தான் தேவராசன்.

''ஆனதாலைதான் மிஸ்தர் சின்னையா உங்களைத்தேடி நாங்கள் வந்திருக்கிறோம். நல்லாக யோசித்துதான் நாங்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறம். ஏன்சுற்றி வளைக்க வேணும்? மிஸ்டர் சின்னையா, எப்பிடியும் இந்த வட்டாரத்திலை எங்களின்ரை கட்சி சார்பிலை நீங்கள் எலெக்ஷன் கேக்க வேணும். உங்களின் சம்மதத்தைக் கேட்கத்தான் நாங்கள் வந்திருக்கிறம். எங்களின்ரை வேண்டுகோளை தமிழின நன்மை கருதி நீங்கள் ஏற்றுக் கொள்ள வேணும்.''

சோளக காலத்துக் கடல் அலைகள் கெம்பி உயரே எழுந்து மடாரென்று தனது உச்சந்தலையினில் விழுந்தாற் போல அதிர்ச்சியடைந்து மிரட்சி தெறிக்கிற முகத்தினோடு துள்ளி யெழுந்தார் சின்னையா. அந்தக் கணந்தனிலே, அவரின் வட்டார மெம்பர் கண்ணெதிரே வந்தார் - பெரிய பணக்காரனும், மணியக்காரர் சுப்பிரமணியத்தின் மகனுமான சண்முகநாதன் - அந்த மனிதனுக்கு எதிராகவா எலெக்ஷனில் போட்டிக்கு நிற்பது?

'கயல், ஒட்டி மீன்களை வலைகளாலும், பறிக்கூடுகளாலும் பிடித்து விடலாம். ஆனால் சுறா மீன்களையும், கடற்பன்றியை யும் இவை சிறை கொள்ள முடியுமோ?'

மனதினுள் சிரித்தபடி கதவு வழியாக வெளியே தெரிகின்ற படகுக் காரினை வெறித்தபடி இருந்தார் சின்னையா.

பிறகு தன்னுள்ளே எடுத்த முடிவோடு, ''இதெல்லாம் நடக்கக் கூடிய காரியமென்று நீங்கள்நினைக்கிறியளோ?'' எனக் கேட்ட அவரது குரலினை, கனகராசா வெட்டி நிறுத்தினார்.

''மிஸ்டர் சின்னையா, நீங்கள் இப்ப என்னத்தை நினைத்து இதைச் சொன்னீங்களென்று எனக்குத் தெரியும். இப்ப இந்த வார்ட்டிலையுள்ள மெம்பர் பெரிய பணக்காரன், நல்ல சாதிமான் என்று நினைத்துத்தானே நீங்கள் பின் வாங்கிறீர்கள். இப்ப எங்களையே எடுத்துப் பாருங்க, நாங்கள் நல்ல பணக்காரர். சுண்டியெடுத்த சாதிமான்கள். உங்களின்ரை மகனிடம் இதை நீங்கள் கேட்டறியலாம், எங்களின்ரை சாதிக்காரர், வேறை சாதியிலை பெண் எடுக்கிறதில்லை. வேறே சாதியின்ரை பந்திக்குப் போறதில்லை. அதிக தூரம் ஏன் போக வேணும்? உங்களின்ரை வீட்டிலை நாங்கள் செம்பு எடுத்தது என்று

அறிந்தாலே, எங்களின்ரை சொந்தக்காரர், எங்களைச் சபையிலே சேர்க்க மாட்டாங்கள். சில வேளையிலை சாதியிலை கூடச் சேர்க்க மாட்டாங்கள்...''

சிறிது நிறுத்திவிட்டு அவர் மீண்டும் தொடர்ந்தார்:

''ஆனால் நாங்கள் சார்ந்திருக்கிற கட்சி, இதெல்லாவற்றை யுமே அடியோடை எதிர்க்குது, எங்களின்ரை கட்சிக் கட்டுப் பாட்டுக்காக நாங்கள் எத்தினையோ விஷயங்களைத் தியாகம் செய்திருக்கிறம். மனிதர் எல்லாரும் ஒரே சாதி. எல்லாரிலை ஓடுறதும் ஒரே ரத்தம் - சிவப்பு ரத்தம்! இந்த ஒருமுறை மட்டும் எங்களினுடைய கட்சி ஆட்சியைப் பிடித்துவிட்டால் இந்தக் கொள்கையைத்தான் நாங்கள் நடைமுறைப் படுத்துவம். உங்களின்ரை வட்டாரத்திலை நீங்கள் வெற்றி அடையுறதைப் பற்றிக் கொஞ்சமும் யோசிக்க வேண்டியதில்லை. அதற்குரிய எல்லா வழிவகையுமே எனக்குத் தெரியும்... நாங்கள் எல்லா வற்றையுமே வெகு தெளிவாகக் கணக்குப்போட்டு வைத்திருக் கிறம். எங்களின்ரை கணக்கு ஒரு நாளுமே பிழைக்கிறதில்லை. இந்த ஃபைலை இங்கை கொஞ்சம் தாருங்க...''

மேயர் சிவலிங்கம் கொடுத்த கனத்த ஃபைலை விரித்து, ஒற்றைகளைத் தட்டிக் கொண்டுபோய் ஒரு தாளிலே தரித்தார் கனகராசார்.

''இந்த வட்டாரத்திலை எல்லாமாக மூவாயிரத்து நானூறு வாக்குகள்தான் இருக்குது. அதிலை உங்களின்ரை சாதி ஆட் களுக்கு ஆயிரத்திப் பதினெட்டு வாக்குகள் பதிவாகியுள்ளது. மிச்ச வாக்குகள் ஐந்து சாதி ஆட்களிட்டை பிரிஞ்ச போயிருக்குது. குளத்தடியிலை உள்ள எண்ணூறு வாக்குகளும் நிச்சயமாக எங்களுக்குத்தான் வரும். அவையள் ஒரு போதும் அந்த நாலு சாதிக்காரரோடும் சேரமாட்டினை... அப்பிடி அவர்கள் சேராமலிருக்கிறதை நிரந்தரமாக்க, அவையளுக்காக நான் கோர்ட்டிலை ஒரு வழக்கும் பேசிக் கொண்டிருக்கிறேன்... அடுத்த சாதியிலையுள்ள குமரி ஒருத்தியை, குளத்தடிப் பக்கப் பொடியன் ஒருத்தன் களவாகத் தூக்கி வந்திட்டான். அதனாலை ஒரு கத்திக்குத்தே நடந்து போச்சு. நான்தான் இந்த வழக்கைப் பேசுகிறேன். ஆனதாலை நான் சொல்கிற எதையுமே அவர்கள் மீறிப் போகமாட்டாங்கள்... எங்களுக்கு எப்பிடிப் பார்த்தாலும் இப்பவே அரைவாசிக்கு மேலை வாக்குகள் விழுமென்ற நம்பிக்கை இருக்குது... இது ஆதாரபூர்வமான நம்பிக்கை...''

அவரின் கண்கள் மீண்டும் ஃபைலைத் துளாவின.

''அதோடை இன்னொரு விஷயமும் இருக்குது. அதைக் கிளறி விடுகிறதிலைதான் எங்களின்ரை வெற்றி வாய்ப்பு உறுதிப்பட இடமிருக்குது. இப்ப இந்த வட்டார மெம்பர் சேர்ந்திருக்கிற கட்சி, சிங்களப் பிரதேசத்திலும் அங்கத்தவரைக் கொண்ட கட்சி. தலைவரும் ஒரு சிங்களவன். சிங்களப் பிரதேசத்திலை தேர்தலுக்கு நிற்கிற கட்சி. நாங்கள் தமிழ் மொழிக்குத் தனியான ஆட்சியை கேட்கிற தீர்மானத்தை இந்த முறை கட்சிப் பிரகடனமாக, முன் வைத்திருக்கிறம்... அதோடை, தமிழ்ப் பிரதேசத்திலை சிங்களப் பகுதியிலை போட்டி போடுகிற கட்சிக்கு என்ன வேலை என்ன என்ற கோஷத்தை முன் வைத்து விட்டால் போதும். அந்தப் பிரசாரத்தாலேயே மிஞ்சியுள்ள வாக்குகளிலை அரைவாசிக்கு மேலாக நாங்கள் எங்களின்ரை பக்கத்திற்கு எடுத்துப்போடலாம்...''

மேயர் சிவலிங்கத்தின் மனதினில் அளவு மீறிய வியப்பு குமிழியிட்டு பெருகியது.

'மனிஷன் கோர்ட்டிலை கற்பழிப்பு வழக்குகளையெல்லாம் 'பொய்ன்ற் பொயின்'றாக பிய்த்து வீசித் தள்ளுபடி செய்வது போல, இந்த வட்டாரத்து விஷயங்களையெல்லாம் எவ்வளவு 'டீப்'பாக 'ஸ்டடி' பண்ணி வைத்திருக்கிறான்... என்ன அற்புதமான கொம்பியூட்டர் மூளை! நிச்சயமாக இந்நாளின்ரை பக்க பலமும், வாய் சாதுரியமும் இருக்குமென்றால், அடுத்த முறைக்கு மட்டுமல்ல, நிரந்தரமாகவே நான் மேயராக இருக்கலாம்!'

மூச்செறிந்தவராக சின்னையாவை நோக்கினார் கனகராசா. அவரது மனம் மறுபுறத்திலே நினைத்துக் கொண்டது. 'படிப்பறிவில்லாத இந்தப் பட்டிக் காட்டானுக்கு நான் சொல்லுகிற எதுதான் விளங்கப் போகுது? என்றாலும் என்ன செய்ய... சிவலிங்கத்தை மேயராக்க வேணுமென்றால் இந்தாளை எப்பிடியும் மெம்பராக்கியே தீர வேணும். தலைகீழாக நின்றாயினும் இதைச் சாதித்தால்தான் என்னுடைய எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்ற முடியும்!'

ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருந்தசின்னையாவின் மனதினுள் கனகராசாவின் ஒவ்வொரு வார்த்தையும் மெதுமெதுவாக நங்கூரம் பாய்ச்சிற்று. அந்தக் கிராமத்தவர் பங்கு கொண்ட கடந்த காலத் தேர்தல்கள் நினைவிலே தோன்றின...

வழக்கமாக, எலெக்ஷனுக்கு ஒரு மாதம் முன்னதாக உடையார் ராசரெத்தினமும் சிறாப்பர் குருநாதனும் ஒற்றைக் குதிரை பூட்டிய வில் வண்டியில் பங்களா வடிக்கு வருவார்கள். அவர்கள் வருவதற்கு முதல் நாளே பங்களாவைக் கழுவிச் சுத்தம் செய்திருப்பான் வெற்றிவேலு.

அவர்கள் வந்திறங்கினதும் முதலிலே வெற்றிவேலுவிடம் உடனடியாக ஓடிப் போய் சின்னையாவையும், கார்த்திகேசுவை யும் அழைத்து வரும்படி சொல்லுவார்கள். மயிர் சிலும்புகிற 'பாகவதர் குறோப்'பைக் கையினால் அழுத்தியபடியே ''ஓம் ஐயா'' என்றவனாக விரைந்திடுவான் வெற்றிவேலு. வழியில் யாரையும் கவனிக்காமல் வெற்றிவேலு ஓடினால் இதுதான் என்பது யாவருக்கும் தெரியும்.

உடையார் ராசரெத்தினம் நன்றாகச் சிவந்த பருத்த மனிதர். அடர்ந்த தலைமயிர். ஹிட்லர் மீசை. ஐம்பது வயதென்பதை மறுக்கிற கட்டுக் குலையாத உடல். அவர் சொல்லுகிற சொற்கள் கட்டளையாகத்தான் வருமே தவிர என்றுமே வேண்டுகோளாக இருந்ததில்லை. எல்லா வட்டாரங்களிலும் நல்ல செல்வாக்குப் பெற்றிருந்த அவர், தங்களை அழைப்பதனை ஒரு பாக்கியமாகக் கருதி அவசர அவசரமாக சின்னையாவும் கார்த்திகேசுவும் பங்களாவடிக்கு வருவார்கள்.

''சின்னையா, கார்த்திகேசு... உங்கள் இரண்டு பேரையும் நல்ல முகூர்த்ததிலைதான் நாங்கள் சந்திக்க விரும்புகிறம். எங்களின் சொந்தக்காரன் ஒருவன்தான் இம்முறை எலெக்ஷன் கேட்கிறான். நல்ல படிப்பாளி. நேர்மையான குடும்பத்திலே பிறந்தவன். அவனுக்குத் தான் நீங்கள் எல்லோரும் வாக்களிக்க வேணும். நீங்கள் இரண்டு பேரும் சொல்லிறதை உங்களின்ரை ஆட்கள் தட்டாமல் செய்வினை என்பது எங்களுக்குத் தெரியும். என்றாலும் உங்களுக்கு இதைச் சொல்லி வைக்க வேண்டியது எங்களுடைய கடமை. உங்களின்ரை வாக்குகள் முழுவதும் கிடைத்தால் போதும். வெற்றியைப் பற்றிக் கொஞ்சமும் யோசிக்கத் தேவையில்லை!''

உடையார் ராசரெத்தினம் நிறுத்த, வழுக்கைத் தலையரான சிறாப்பர் குருநாதன் கூறத் தொடங்கினார்:

''மற்ற எல்லா அலுவல்களும் வழமை போலவே நடக்கும். முன்னூறு குடும்பத்துக்கும் சீலை, காசு, சாராயம் யாவற்றையும் அனுப்பி வைப்போம்... அதுகளிலை ஏதாவது குறையிருந்தால்

ஐயாவிட்டை இப்பவே சொல்லிவிட வேணும். உங்களுக்கு என்ன வேணுமென்றாலும் செய்து தாறதுக்கு உடையார் ஐயா எப்பவுமே ஆயத்தமாயிருக்கிறார்...''

உடையார் ராசரெத்தினத்தின் கண்கள் கார்த்திகேசுவையும், சின்னையாவையும் ஆராய்கிறாற்போல சுழலும். குருத்தெலும்புகளையே தொடுகிறாற்போல அப்பார்வையினை அவர்களிருவரும் உணர்வார்கள்.

''என்ன நாங்கள் சொல்லுகிறது எல்லாம் சரிதானே?''

உடையாரின் உதட்டற்குரல் ஓய்வதற்கு முன், இருவரின் தலைகளும் சம்மதத்தைக் கூறி விசுவாசம் தெரிவித்துவிடும். அவ்வளவுதான், தேர்தலுக்கு முதல் நாள் வீடு வீடாக விநியோகம் நடைபெறும். முதல்நாள் மாலையிலே குடித்த சாராய மயக்கம் தீர்வதற்கு முதல் வாக்குச் சாவடிக்குச் சென்று விடுவார்கள் ஆண்கள். புதிய சேலையை உடுத்துக் கொண்ட பெண்கள், தாங்கள் வாக்களிக்க வேண்டிய சின்னத்தின் நினைவோடு சென்று திரும்புவார்கள். இவ்விதமாகவே சிந்தாமல் சிதறாமல் வாக்குச் சீட்டுகள் பெட்டிக்குள் குவிந்து ஜனநாயக முடிவுகளினை மக்களுக்குப் பறைசாற்றும்.

பிறகு தேர்தல் வெற்றிகள் இறைச்சி, கள், சாராய விருந்து களோடு கோலாகலமாகக் கொண்டாடப்படும். அவ்வளவோடு தேர்தல் பற்றிய எண்ணங்களும், பேச்சுக்களும் முடிவெய்தி, மறு தேர்தலின் போதுதான் அவைகள் பற்றிய அடுத்த பேச்சுக்களோ செயற்பாடுகளோ மக்களிடையே முளைவிடத் தொடங்கும்...!

''என்ன மிஸ்டர் சின்னையா, நல்லாக யோசிக்கிறீங்கள்... நீங்கள் ஒன்றுக்குமே யோசிக்கத் தேவையில்லை. இந்த எலக்ஷனிலை நின்று நீங்கள் வெற்றி பெறுங்க. உங்களி னுடைய மகனை அப்புக்காத்தாக்கியே வைப்பம். மகன் அப்புக்காத்தாக வெளியானதுக்குப் பிறகு உங்களின்ரை இடம் அவருக்குக் கிடைக்கும். அந்தத் தருணத்திலை தேவராசனை நிச்சயமாக மேயர் பதவியிலை ஏற்றியே வைப்பம்... நல்லாக யோசித்துப் பாருங்க. உங்கடை சாதியிலையிருந்து முதலாவது மெம்பர் நீங்க! முதல் மேயர் உங்களின்ரை மகன்! இப்படியொரு 'சான்ஸ்' உலகத்திலே வேறை எங்கேயும், எந்தக் குடும்பத்திற்கும் ஏற்பட்டதில்லை... ஷா... என்ன அருமையான சந்தர்ப்பம்!''

மேயர் சிவலிங்கம் புன்முறுவலோடு கனகராசாவைப் பார்க்க, அவர் மெல்லக் கண் சிமிட்டிக் கொண்டார்!

சின்னையா தாங்க முடியாத அதிர்வினோடு தேவராசனை நிமிர்ந்து பார்த்தார். மேயர் சிவலிங்கத்திற்கு அருகே பய பக்தியோடு நிற்கின்ற தேவராசன் இன்னுஞ் சில வருஷங்களிலே மேயராக... இந்தக் குமுறுகின்ற கடல், இந்த வெள்ளம், இந்த வலைகள், இந்தச் சவள்களின் நடுவே பிறந்த தேவராசன் எவ்வளவு பெரிய பதவியிலே... மேயராக!

அவருடைய உணர்வுகள் தளதளத்தன. நாக்குத் தடுமாறிப் புரண்டது. காதிற்குள் மீண்டும் மீண்டும் அந்த வார்த்தைகள் கேட்டுக் கொண்டிருந்தன...

''நல்லா யோசித்துப் பாருங்க. உங்கடை சாதியிலையிருந்து முதல் மெம்பர் நீங்க! முதல் மேயர் உங்களின்ரை மகன்! முதல் மெம்பர் நீங்க...! முதல் மேயர் உங்களின்ரை மகன்...''

படகுக் காரிலே மீண்டும் சின்னையாவின் கண்கள். இது போல ஒரு காரினை தனது மகனும் நிச்சயமாக உரிமை கொள்வான் என அவர் நினைத்துக் கொண்டிருந்தபோது தேவராசன் அவர்களைப் பார்த்துச் சொன்னான்:

''ஐயா, எலக்ஷனிலை உங்களின்ரை கட்சி சார்பிலை கட்டாயம் போட்டிக்கு நிற்பார்!''

5

கூனற் பிறை வானிலே மெல்லிய ஒளியினை உமிழ்ந்து கொண்டிருந்தது. அசைவே தெரியாக் கடலில் சில வள்ளங்கள் ஒன்றையொன்று உரசிக் கொண்டு கட்டுக் கல்லினை மையமிட்டு வட்டமாடின. பூவரச மரங்கள் மணற்திடலிலே விளையாடுஞ் சிறுவர்களாய்த் தோற்றமிட்டன. பங்களாவடியின் முன்னுள்ள லாந்தர்க் கம்பவிளக்கு, தனக்குக் கீழே கிடக்கின்ற சோம்பல் நிறைந்த கட்டாக் காலிமாட்டின் தலையாட்டலைப் போல இடையிடை மினுமினுத்தது. அந்த வெளிச்சத்துக்கு கோணலாக திசையிலே பிரகாசமான பெற்றோமாக்ஸ் விளக்கு, வெளிச்சத்தை அள்ளிச் சீறிக் கொண்டிருந்தது.

விளக்கின் அருகே உட்கார்ந்திருந்த கடற்கரைக் கல்வீட்டுச் சொந்தக்காரன் தேவராசனின் முகத்திலே சிந்தனை

அப்பியிருந்தது. உள்ளறையிலிருந்து கனகராசா லேசாக இருமினார். மெல்லிய காற்றினால், பெற்றோமாக்ஸ் விளக்கின் வெப்பத்தினைத் தணிக்க முடியவில்லையாதலால் தேவராசனின் முகத்தில் வேர்வை துளிர்த்துப் பரவியிருந்தது.

வீட்டின் வாசற் புறத்தில் சின்னையாவும், வெற்றிவேலுவும், அவர்களைக் கண்ட தேவராசன் எழுந்து வெளியே போய் அவர் களோடு உள்ளே நடந்தான். பெற்றோமாக்ஸ் புஸ்புஸ்ஸென்று பெருமூச்சிடுவதைப் பார்த்தபடியே வெற்றிவேலு கதவோரமாய் நின்றான்.

தோளிலே கிடந்த துவாய்த் துண்டினால் முகத்தையும் வாயையும் ஒற்றிக் கொண்டே, நெஞ்சிலிருந்து வந்த ஏவறை யையும் வாய்க்குள்ளே அமுக்கியவாறு தென்னங்கள்ளின் மணம் அடிக்காமல் அவதானமாய் நின்று கொண்டிருந்த அவனைப் பார்த்தபடி தேவராசன் அமைதியாகக் குலைத்தான்:

"என்ன? அவசரமாய் வந்தீங்கள், பேசாமலே நிக்கறீங்கள்?"

சின்னையா வெற்றிவேலுவைப் பார்த்தார். வெற்றிவேலு, புதிய சுவரிலே படிந்திருந்த பூச்சி வீங்கி வயிறு அசைய முடியாத பல்லியைப் பார்க்கின்ற பாவனையில் நின்றான். முடிவை வெளிப்படுத்துகின்ற முகபாவனையோடு கதையைத் தொடங்கினார் சின்னையா.

"தம்பி தேவம், பிரதானமான விஷயமொன்று கதைக்கத் தான் நானும் வெற்றியும் வந்திருக்கிறம். எங்கை அப்புக்காத்தர் ஐயாவைக் காணேல்ல. நித்திரையாய்ப் போய் விட்டாரோ?"

வெற்றிவேலு இடையிட்டு, "இல்லையண்ணை, அப்புக் காத்தர் ஐயா அலுப்பிலை படுத்திருக்கிறார் போலை. நீங்க தம்பியிட்டை விஷயத்தைச் சொல்லுங்க. இது உள்வீட்டு விஷயந்தானே" என்று கூறியவளாய் தேவராசனை ஏறிட்டு விட்டு உள்ளறைக் கதவடிக்கு கண்களைத்திருப்பினான்.

கிளாஸிற்குள் நுரை சீறுகிற பிரியனை அப்போது தான் வாயினில் வைத்த கனகராசா, பீறிட்ட சினத்தோடு விறுக்கென்று பருகிவிட்டு கட்டிலின் கீழே போத்தலையும், கிளாசினையும் மறைத்து வைத்தார். வெளியிலே வந்தார்.

"இல்லைத் தம்பி, இந்த விஷயத்திலே நாங்கள் ஊர் வழமையைக் கைவிடாமல் நடக்க வேணும். எப்பவும் எலக்ஷன் வந்தால் இந்த ஊரிலை என்ன நடக்கிறதென்று உனக்குத்

தெரியாதோ? உடையாரும், சிறாப்பரும் முதலிலை என்னையும் கார்த்திகேசுயும் கூப்பிட்டுக் கதைக்கிறதுதான் வழக்கம். அதை நாங்க கைவிடக் கூடாது. அதுவும் போகக் கார்த்திகேசுவினுடைய மனமும் எனக்குத் தெரியும். ஒன்றுக்குள்ளை ஒன்றாகப் போகிற நாங்கள் அப்புக்காத்து ஐயா முகதாவிலை கார்த்திகேசுவையும் வைச்சுக் கதைச்சிட வேணும். இப்ப வளர் பிறை நாள். இதோடை அந்தக் கருமத்தை அம்மாளாச்சியை நேர்ந்து கொண்டு தொடங்கினால் சரி...''

பல்லி உரத்தச் சொல்லியது. வெற்றிவேலு நிமிர்ந்து பார்த்து ஒற்றை கையை மடக்கி தலையில் குட்டியவாறு, ''அதெல்லாம் விக்கினமில்லாமலே நடக்கும். உச்சியிலை பல்லி சொன்னால் அச்சமில்லை'' என்றான் குரலிலே களி துலங்க.

தேவராசன் மௌனமாகி, பெற்றோமாக்சிற்குக் காற்றடிக்கத் தொடங்கினான். இலேசான கடலோசையினை கீழமுக்கியவாறு நாய் ஒன்று அடிக்குரலிலோ ஊளையிட்டுக் கொண்டிருந்தது.

''தம்பீ, உம்முடைய ஐயாவைப் போலவே கார்த்திகேசு அண்ணைக்கும் ஊரிலை சரிசமனான மரியாதை இருக்குது. அந்தாளையும் நாங்க நேரிலை போய்க் காணவேணும். முதலிலை பிள்ளையாருக்கும், அம்மாளாச்சிக்கும் மோதக பூசை செய்த பிறகுதான் ஊருக்குள்ளை வீடு வீடாகப் போகிற வேலையை நாங்க செய்யத் துவங்க வேணும்.''

தேவராசன் பொறுமையை இழந்தான்; வார்த்தைகளிலே சினம்.

''ஏன் அவையளெல்லாரையும் இந்த வீட்டுக்கு கூப்பிட்டால் வரமாட்டினையோ? ஒருக்கால் போய் கூப்பிட்டுப் பார்க்கிறது தானே...''

வெற்றிவேலு தலையைச் சொறிந்து கொண்டான்.

''அதெல்லாம் முறையில்லை தம்பி; எல்லாரும் மதிக்கிற மனுஷன் கார்த்திகேசர். அதுவுமில்லாமல் நீரும் அந்தாளின்ரை வீட்டுப்பிள்ளையாகப் போகப் போகிற ஆள்...'' என்று அர்த்த புஷ்டியோடு வார்த்தைகளினை அழுத்திக் கூறிய வெற்றிவேலு, ''அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்றது போலை எல்லாரையும் சேர்த்துப் பிடிச்சால்தான் எங்களின்ரை காரியம் ஒப்பேறும்...'' என்று கூறி முடித்தான்.

காலையில் வெற்றிவேலு சொன்ன கதையினால் மனம் குழம்பிப் போயிருந்தான் தேவராசன். இப்போது மேலும் ஏறிற்று ஆத்திரம். தேவராசன் வெற்றிவேலுவுக்கு பதில் சொல்ல வாயெடுக்கையில், செருமிக் கொண்டு அங்கே வந்தார் கனகராசா.

ஒன்றுமே அறியாதவர் போல, வெற்றிவேலுவைப் பார்த்தவாறு, ''என்ன, தகப்பனும் மகனும் கடுமையாக யோசிக்கினை... நான் இங்கை இருக்கிறபோது உங்களுக்கு யோசனை வரத் தேவை இல்லையே...'' என்று நெற்றியைச் சுருக்கிக் கொண்டார் கனகராசா.

வெற்றிவேலு முழு விஷயத்தையும் கூறினான்.

கனகராசா அட்டகாசமாக சிரித்தார்.

''இதுக்கெல்லாம் ஏன் இவ்வளவு யோசனை? நாளைக்கு என்ன நாள்? - புதன்கிழமை; நல்ல நாள். நாளைக்குக் காலையிலை கார்த்திகேசு வீட்டுக்குப் போவம். ஊர் வழக்கமொன்று இருந்தால் அதைக் கட்டாயம் கௌரவிச்சுத் தான் ஆக வேணும். மிஸ்டர் சின்னையா, நீங்க ஒன்றுக்குமே மூளையைப் போட்டுக் குழப்பாதையுங்க... எல்லாத்துக்கும் நான் இருக்கிறேன்...''

சின்னையாவின் முகம் பிரகாசத்தோடு மலர்ந்தது. புளகாங்கிதம் துள்ளிக் கொண்டிருந்தது வெற்றிவேலுவின் புன்னகையில். அவன் கண்களிலே மெலிதான காட்சி விரிந்தது...

'கிருஷ்ணன் தூது' நாட்டுக் கூத்திலே வெற்றிவேலுதான் 'கிருஷ்ணன்'. அடிக்கடி, ''கஷ்டங்கள் எங்கெங்கு தோணுதிடோ அங்கு தோன்றிடுவான் இந்தக் கிருஷ்ணனுமே - தோன்றிடுவான் இந்தக் கிருஷ்ணனுமே...'' என்று பாட்டாலே அவன் சொல்லிக் கொண்டிருப்பான்.

யோசனையை உதறிவிட்டுக் கனகராசாவை உணர்ச்சி பொங்க நோக்கினான் வெற்றிவேலு.

''ஐயா, கிருஷ்ண பரமாத்மாவைப் போலை எங்களுக்கு நீங்கள் வந்து கிடைச்சிருக்கறீங்கள், கடைசி வரை துணை நின்று நீங்கதான் எங்களுக்கு வெற்றியைத் தேடித்தர வேணும்...''

கனகராசா வெற்றிவேலுவை ஆழமாகப் பார்த்தார்.

''நீ சொன்னது சரியான சொல்லுத்தான். என்னுடைய வாக்கை நான் கட்டாயம் நிறைவேற்றியே தீருவேன். நீங்களெல்லாம் நான் சொல்லுறபடியே நடக்க வேணும்...''

சின்னையா நிறைந்த திருப்தியோடு, ''இனி விபரமாகக் கதைக்க என்னதானிருக்குது? எல்லாத்துக்கும் நாங்க காலையிலை வாறம்...'' என்றவாறே போவதற்காக எழுந்தார்.

மங்கிக் கொண்டிருந்த பெற்றோமாக்சைக் கீழே இறக்கிக் காற்றடித்துக் கொண்டிருந்த தேவராசனை உற்றுப் பார்த்துவிட்டு மனதினுள்ளே சிரித்துக் கொண்டார் கனகராசா.

''குட்டி ஆடு கொழுத்தாலும் வழுவழுப்புத் தீராது என்றது பொய்யில்லைத் தேவராசா. உனக்கு இன்னும் உலக அனுபவம் வரேல்லை. நாய் வேஷம் போட்டால் குலைச்சுத் தானே தீர வேணும். எலக்ஷனுக்கு என்று இறங்கி விட்டால் எதையுமே பார்க்கக் கூடாது. எங்களுக்குத்தேவை அதிகாரம், அதை எடுக்கிறதுக்காக, எடுக்கிற வரைக்கும் எவனுக்கும் பணிஞ்சுதான் நடக்க வேணும்... என்னைப்பார். ஏன் இங்கை வந்து அடைஞ்சு போயிருக்கிறான்? இன்றைக்குச் செவ்வாய் கிழமை. வழமையிலை நானும் என்ரை வைப்பும் இன்றைக்கு இந்நேரம் சாயிபாபா பஜனையிலை இருப்பம். ஆனால் நானோ இங்கையிருக்கிறன்...

தேவராசன் நன்றி ததும்ப அவரைப் பார்த்தேன்.

''இல்லை ஸேர், எனக்கும் ஊர் வழக்கப்படி போகத்தான் விருப்பம். ஆனால் இதிலை என்னரை எதிர்கால வாழ்க்கையும் தங்கியிருக்குது. இதுதான் யோசினையாய் மூளையைக் குழப்புது. இதே சாட்டோடை வைத்து கார்த்திகேசரின்ரை மகளை எனக்குக் கல்யாணம் செய்து வைத்து விடுவார்கள். காலையிலை வெற்றிவேலு சொன்னதிலையிருந்து இது எனக்கு விளங்கிச்சுது. எனக்கு இப்ப எல்லாம் ஒரே குழப்பமாயிருக்கிறது... நான் ஒரு சிக்கலுக்குள்ளை முறையாக அகப்பட்டிட்டான்...''

ஈனஸ்வரமாக ஒலித்த தேவராசனின் குரலை வருடிச் சென்றன கனகராசாவின் நிதானமான வார்த்தைகள்:

''தேவராசன், உன்னுடைய கஷ்டங்கள் எல்லாமே எனக்கு விளங்குது, குப்பையிலை குண்டுமணி போலை நீ இங்கை படுகின்ற கஷ்டங்களை என்னாலை உணர முடியுது. நீ

ஒன்றுக்குமே யோசித்துக் குழம்பாதை. எலக்ஷன் முடியட்டும். ஒரேயடியாய் நீ ரவுணிலேயே குடியேறி விடலாம். அதுக்கிடையிலை ஆக வேண்டிய காரியங்கள் நிறையக் கிடக்குது. கலியாணக் கதை ஏதாவது வந்தால் நீ அதுக்குச் சம்மதிச்சு விடு...''

தேவராசன் திடுக்கிட்டு அவரைக் கேள்வி துலங்குகிற முகத்தோடு பார்த்தான்:

''என்ன ஸேர், சொல்லுறீங்கள்? விருப்பமில்லாத விஷயத்துக்கு என்னாலை எப்படிச் சம்மதிக்க முடியும்?''

மெல்லப் புன்னகைத்தார் கனகராசா.

''எனக்கு அது நல்லாகத் தெரியும் தேவராசன். ஆனால் இப்ப உள்ள நிலைவரத்திலை நீ கலியாணத்துக்கு மறுத்தால், கார்த்திகேசு பகுதி எங்களுக்கு எலக்ஷனிலை தோற்றுப் போய் விடுவம். எலக்ஷன் முடியுற வரைக்கும் என்னத்துக்கும் விட்டுக் கொடுத்துத்தான் ஆக வேணும்... உனக்குப் புராணங்கள், இதிகாஸங்கள் தெரியாதா? மகாபாரதத்திலை தருமன் கூடப் பொய் சொல்லியிருக்கிறான்... கருமம் கை கூட வேணு மென்றால் பொய் சொல்றதுகூட ஒரு தவறில்லை. கனதூரம் ஏன் போக வேணும்...? எங்கடை தொழிலையே எடுத்துக் கொள். எத்தனை அயோக்கியன்களையெல்லாம் யோக்கிய சிகாமணிகள் என்று கோர்ட்டிலை நாங்க ஆணித்தரமாக நிரூபித்திருக்கிறம். எத்தினை யோக்கியன்களையெல்லாம் ஒரு சிறிய சட்டப்பிரச்சினையை வைத்து மகா அயோக்கியன்களாக்கி சிறைக்கே அனுப்பி வைக்கிறம். இந்தத் திறமையை எல்லாருமே பாராட்டுகிறதில்லையா? ஒரு பொய்யை மெய்யாக்கிறதுக்காக எங்களை யாருமே இகழுறதில்லை. அதுவும் நீ ஒரு அப்புக்காத்தாகப்போகிறனி. ஒரு பொய் சொல்லப் பயப்பிட்டால் எப்பிடி அந்தத் தொழிலிலை வெற்றியடைந்து நீ முன்னேற முடியும்?''

6

கிழக்கு வானிலே விடிவெள்ளி காலித்துவிட்டது. ஒரு ஆட்டினிடையே தலையை நீட்டி நுழையும் இன்னொரு செம்மறியாட்டினைப் போல ஒரு முகிலினுள்ளே இன்னொரு முகில் நுழைந்து வெளியேறியது. மாட்டிலே பால் கறந்து

முடித்த செல்வதி, குசினிக்குள் சென்று எரிந்து ஜுவாலை விட்டுக் கொண்டிருந்த அடுப்பிலே பானையை வைத்து அதனுள்ளே பாலை ஊற்றினாள்.

கிணற்றடியில் குளித்துவிட்டு வந்த சின்னையா, திருநீற்றுக் குடுவையைத் துளாவி திருநீறை அள்ளி நெற்றியிலே பூசிக் கொண்டார். இன்று நல்ல 'முழிவியளம்'. கண் விழித்ததும் செல்வதியிலேதான். அவளிலே கண் விழித்து வெளியே போனால் அது வெற்றியேதான் முடிவடையும். மகிழ்வோடு தேவாரமொன்றை முணுமுணுத்தார் சின்னையா.

பாற்பானையைப் பார்த்துக் கொண்டே சிந்தனையிலாழ்த்தி யிருந்தாள் செல்வதி. இந்த இருபது வருஷ காலமும் அவளை வளர்க்கிற இவ்வீட்டிலேதான் அவள் பழகி, பயின்று, விளையாடி வளர்ந்து நிற்கிறாள். அவளும் தேவராசனும் குழந்தைப் பருவத்திலே அந்நியோந்நியமான உடன் பிறப்புகள். ஆனால் கால வளர்ச்சியோடு பிளவுகளே விசாலமடைகின்றன அவர்களிடம். அவனோர் அகம்பாவியாகி தங்களையெல்லாம் விட்டுவிலகி வருவது போல அவர்களுக்கு உணர்வு தட்டும்.

அவ்வேளையிலே கவலை கனத்த நெஞ்சம், இனி அவன் கிராமத்திற்கு வருகின்றபோது பிழை விட்டாலும் மன்னித்து அன்போடு நடந்து கொள்ள வேண்டும் என்ற முடிவினுக்கு வரும். மறுமுறை அவன் கிராமத்திற்கு வருவான். அதே அலட்சிய வார்த்தைகளோடு; அதே மனதைக் குத்துகிற வக்கிரமான நடவடிக்கைகளோடு; அதே உதாசீனங்களோடு; தான் இந்தக் கிராமத்திலே பிறந்ததே அவமானம் என்கின்ற போலிக் கவலையோடு.

செல்வதிக்கு அவனது போக்கு எல்லை மீறிய வேதனை. அந்த வேதனையின் கர்ப்பத்திலேயே அளவு மீறிய வெறுப்பும் குடிகொண்டு அவனுக்கு முகத்திலே அடிக்கின்ற நடவடிக்கை களை மேற்கொள்வாள் அவள். இப்போதெல்லாம் அவனைப் பற்றி நினைக்கையில் வல்லவாம்பிகையும், கார்த்திகேசுவும் உடன் வருகிறார்கள். வல்லவாம்பிகைக்கு அவனைவிட இரு வயதுகளே குறைவு. பொது நிறமான அவள் அதிகமாகப் பேச மாட்டாள்.

''பாவம், வல்லவாம்பிகை, அண்ணன் தன்னைக் கலியாணம் முடிப்பாரென்று கனவு காணுது. இந்த ஊராக்களெல் லாம் காட்டுச் சாதிகள் என்று அண்ணன் சொல்லிக் கொண்டிருக்கிறார். கார்த்திகேசர் எந்தளவு பெரிய மனுஷன்!

அந்த மனிஷனையே இவராலை மதிக்க முடியேல்லை. அதுக்கிடையிலை இந்த 'எலக்ஷ'னும் வந்திருக்குது. ஐயா இந்தத் தொல்லையளுக்கையெல்லாம் தலையைக் குடுத்திட்டு என்ன ஆய்க்கினைப் படப் போறாரோ தெரியேல்லை...''

பால் 'இஸ்' ஸிட்டுப் போங்க அவள் நினைவு மீண்டாள்.

காலடியிலே கிடந்த துருவலையே ஓரமாக வைத்து விட்டு, பாற்பானையை இறக்கித் திருகணையிலே வைத்தாள். அவ்வேளை குசினியுள் வந்தார் சின்னையா.

''இன்றைக்கு நல்ல விஷயத்துக்கு வெளிக்கிடுறம். பிள்ளையிலைதான் முழிச்சிருக்கிறன். எலக்ஷனன் விஷயமாக கார்த்திகேசரோடை கதைக்கிறதுக்காக போறம்...''

ஆர்வத்தோடு வினவினாள் செல்வதி: ''அண்ணனும் உங்களோடை வாறாரோ?''

அடுப்பு விறகை வெளியே தள்ளியபடி அவள்கேட்ட கேள்வியின் உள்ளர்த்தத்தினைப் புரிந்து கொண்டவராகப் பதில் சொன்னார் சின்னையா:

''அதைப்பற்றி தம்பி ஒன்றுஞ் சொல்லவில்லை. ஆனால் தம்பியையுங் கூட்டிக் கொண்டு போறதுதான் மரியாதை யென்று நினைக்கிறேன்...''

''ஒம் ஐயா, அதோடை முடியுமென்றால் வல்லவாம்பிகையி னுடைய விஷயத்தைப் பற்றியும் ஒரு முடிவெடுத்துக் கொண்டு வாருங்க... காலந்தாழ்த்திக் கொண்டு போனால் வீண் கரைச்சல்களும் வரும். இதைப்பற்றி அவையளோடை கதைக்க முதல் அண்ணனோடும் ஒருக்கால் கதைச்சிடுங்கோ...''

சின்னையாவின் முகத்தில் மெலிதான புன்னகை. வலது தோளிலுள்ள கடற்பன்றி வாலினால் அடித்து வந்த வடுவினைத் தடவியபடியே, ''அவனிட்டை என்ன பிள்ளை இதைப்பற்றிக் கேட்கிறது? அவனுக்கு இந்த ஊரிலை எல்லாவிதத்திலும் தோதான ஒரு பெட்டை வல்லவாம்பிகைதானே! அது தீர்மானமான விஷயம்...'' என்று கூறியவரின் மனதிலே வல்லவாம்பிகை வந்தாள்.

அவள் குடும்பத்தை நன்றாய் நடத்தக்கூடிய அடக்கமான பெட்டை. கார்த்திகேசுவின் சொத்து முழுவதும் அவளிற்குத் தானே! பிறகு என்ன வேண்டும்?

செல்வதிக்கு தகப்பனின் பதில் திருப்தியைத் தராத போதிலும் மௌனமாகவே நின்றாள்.

7

வல்லவாம்பிகைக்கு தலைகால் தெரியாத மகிழ்ச்சிப் பூரிப்பு. வெளியிலே கார்த்திகேசு மிக மகிழ்வோடு சின்னையா, அப்புக்காத்து கனகராசா, வெற்றிவேலு ஆகியோரோடு கதைத்துக் கொண்டிருக்கிறார். தேவராசன் மட்டும் முற்றத்திலே பூக்களாய் சிலிர்த்திருக்கிற நந்தியா வர்த்தம் செடிகளில் கண் பதித்திருப்பதனை இரகசியமாய்ப் பார்த்தபடியே நின்றாள் வல்லவாம்பிகை. சுருண்ட தலைமயிர். அரும்பு மீசை. காற் சட்டை அணிந்திருந்த அவன் இன்னுங் கொஞ்சம் பருமனாக இருந்தால் நல்ல வடிவாயிருப்பானென எண்ணுகிறது மனம்.

'அத்தான் பாவம் வீட்டிலை இருந்தால் நல்லாகச் சாப்பிட்டு மொத்தமாக வந்திடுவார். இது பட்டணத்திலை இவர் என்னத் தைச் சாப்பிடுவாரோ?' என்று தனக்குள்ளே முணுமுணுத்து வெட்கமுற்றாள் வல்லவாம்பிகை.

''உங்கடை சம்மதந்தான் தனக்குப் பிரதானமாகத் தேவை என்று மிஸ்டர் சின்னையா ஒற்றைக் காலிலை நிற்கிறார். இதிலை நான் கதைக்கிறதுக்கு என்ன இருக்குது? நீங்க ரெண்டு பேரும் ஒரு சாதிக்காரர். வேற்றுமையில்லாமல் ஒத்து நின்றால்தான் எலக்ஷனிலை வெற்றி பெற முடியும். அதோடை உங்களுக்குள்ளை கொடுக்கல் வாங்கல் வைச்சுக் கொள்ள வேண்டிய தேவையும் இருக்குது...''

வெற்றிவேலுவின் மனநிறைவு முகத்தின் புன்னகையிலே பொலிந்தது.

'இந்நாள் எவ்வளவு கெட்டிக்காரன்! தேவராசுவின்ரை கலியாணத்தை மனதிலை வைச்சுத்தான் இந்தக் கதையைச் சொல்லுது. அந்தாளின்ரை வாக்கைப் பார்த்தால் அடுத்து வாற நல்ல நாளிலேயே தேவராசு வல்லவாம்பிகையின்ரை கலியாணத்தையே முடிச்சிடலாம் போலை இருக்குது. இதை வல்லவாம்பிகை அறிஞ்சால் நல்ல சந்தோஷப்படும்...'

''அப்புக்காத்து ஐயா, நீங்களும் அவரும் சேர்ந்தொரு முடிவுக்கு வந்தால் அதுக்கு நான் மாறாகவோ நிற்கப் போகிறன்?

அவர் எங்களின்ரை மெம்பராக வாறதென்றால் எங்களெல் லாருக்கும் பெருமைதானே! நீங்க எப்பிடியான முடிவுக்கு வந்தாலும் நான் அதோடை ஒத்து நிற்பன்...''

கார்த்திகேசு சொல்லி முடிக்க சின்னையா மிகுந்த திருப்தி யோடு கனகராசாவைப் பார்த்தார்.

வெற்றிவேலு தேவராசனைப் பார்த்து, ''அத்தோடை தேவராசுவின்ரை விஷயத்தையும் பற்றி ஒரு முடிவுக்கு வந்திடலாமே... நல்ல நாள் இன்றைக்கு'' என்றான்.

தேவராசன் எரிச்சல் பொங்க கார்த்திகேசுவின் பக்கமாகத் திரும்பினான். கார்த்திகேசுவின் நரைத்து அடர்ந்த புருவங்களின் கீழேயுள்ள தீட்சண்யான கண்கள் தன்னையே பார்த்திருப்ப தனை அவன் அப்போதுதான் கண்டான்.

இப்போது அவரின் சதைப் பற்றான முகத்தில் அபூர்வமான சிரிப்பு மலர்கின்றது.

''ஓம். வெற்றி சொல்லுறதும் ஞாயந்தான். எனக்கு உள்ளது ஒரு பிள்ளைதான். அதினுடைய கலியாணத்தை முடிச்சு விட்டால் எனக்கு வேறை சோலி இல்லை. ஊரும் ஒன்றுபட்டு நிற்கும்...''

வீட்டினுள் நுழைந்த சேவல், அரிசியைக் கொத்தித் தின்பதையும் கவனியாமல், வெளியே கேட்கும் கதையினில் காதுவைத்துக் கொண்டிருந்தாள் வல்லவாம்பிகை மனதினுள்ளே குதிக்கின்ற மகிழ்வினோடு.

''இனியென்ன எங்களுக்குள்ளை வித்தியாசம்? இந்த ஊர் முழுவதுமே தெரிஞ்ச கதைதானே இது! தேவராசாவுக்கு வல்லவாம்பிகைதான் என்றது எப்பவோ நிச்சயமான விஷயம். அவை எப்பிடிச் சொல்வினையோ அப்படியே நாள் வைச்சிடலாம்.''

- கார்த்திகேசுவைப் பார்த்தார் சின்னையா.

''அப்புக்காத்தர் ஐயாவையும் கலியாணத்திற்கு வந்திட வேணும்'' என்று சந்தோஷம் குரலிலே நிறைந்திடச் சொன்னான் வெற்றிவேலு.

''பின்னையென்ன? இந்த எலக்ஷன் முடிஞ்சப் பிறகு வேறையென்ன எனக்கு வேலை? அதுவும் மெம்பர் வீட்டுக் கலியாணம் என்றால் சின்ன அலுவலோ? எல்லாத்தையும் விட

தேவராசுவின்ரை அலுவலிலை நான் கட்டாயம் முன்னுக்கு நிற்பன். என்ன தேவராசா ஒன்றுமே பேசாமலிருக்கிறாய்?''

தேவராசன் வாடிய முகத்தினோடு கனகராசாவைப் பார்த்தான். 'நீங்களும் சேர்ந்தா எனக்கு இப்படியொரு தண்டனையை விதிக்கிறீர்கள்?' என்று அவரிடம் கேட்டது அவனது பார்வை.

அம்முகபாவத்தினை உணர்ந்தவராக, ''தேவராசா, நான் ராத்திரிச் சொன்னதை நீ ஞாபகத்திலை வைச்சிருந்தால் சரி. அதுக்கு மேலை நான் சொல்லுறதுக்கு ஒன்றுமே இல்லை...'' அடங்கிய குரலிலே கனகராசா சொன்னதும் தாமதமின்றி அமைதியாகக் கூறினான் தேவராசன்:

''உங்களின்ரை முடிவை மீறி நான் நடக்க மாட்டன். ஆனால் எதுக்கும் முதலிலை என்ரை படிப்பு முடிஞ்சு நான் அப்புக்காத்தாக வேணும்...''

கார்த்திகேசு தேவராசாவை ஆழ்ந்த விசுவாசத்தோடு நோக்கினார். 'படிச்ச பொடியன் எவ்வளவு அடக்கமாகக் கதைக்கிறான். இந்த அடக்கத்துக்காக மட்டும் இவனை எனக்கு மருமகனாக்கிக் கொள்ளலாம். சின்னையருக்கிற பணத்துக்கும் மரியாதைக்கும் சரியானதொரு வாரிசைத்தான் கடவுள் கொடுத்திருக்கிறான். என்னுடைய மகளும் புண்ணியஞ் செய்தவள். என்ன அருமையானவன் அவளுக்குக் கிடைத்திருக்கிறான்.'

8

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் வெகு கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. சின்னையாவுக்கு ஆரம்பத்திலே மேடைப் பேச்சுக்கள் ஒன்றுமே புரியவில்லை. தேவராசனின் அனல் கக்குகின்ற ஆவேசப் பிரசங்கங்கள் தன்னையே தட்டி எழுப்புவதாக அவர் உணர்வு கொண்டார். எதிர்தரப்பு அபேட்சகரை 'மாற்றானின் அடிவருடி', 'இனத்துரோகி' ஒன்று ஏகோபித்த குரலிலே எல்லோரும் பேசினார்கள்.

அரசியல் வானத்திலிருந்து துரோகிகளை முற்றாகவே துடைத்தெறிகின்ற தர்மயுத்தம் இதுவென்று பேசப்பட்ட

பொழுது வானதிரும் கரகோஷங்கள். ஆனால் மாற்றார்கள் யாரென்பது ஊரவர்களுக்கே தெரியவில்லை. இவர்கள் அவர்களைக் கண்டதுமில்லை; கேள்விப்பட்டதுமில்லை. எனினும் இந்தத் தேர்தல் பிரசாரத்தின் பயனாக அக்கிராம மக்களின் மனந்தனிலே, முகமே தெரியாத அந்த மாற்றார்கள் குறித்து விரோதமான உணர்வின் விதைகள் விழுந்து முளைத்து சடைத்து மரமாகி வளர்ந்து விட்டன.

''இந்த அயோக்கிய நாய்களை ஒன்றிலுமே சேர்க்கக் கூடாது. அழிக்கச் சந்தர்ப்பம் வாய்த்தால் பாவ புண்ணியம் பார்க்காமல் அதைச் செய்து முடிக்க வேண்டியது எங்கள் இனத்தின் கடன்!''

வெற்றிவேலு, கூத்துப்பாட்டு மெட்டுகளில், பாட்டுக்கள் இயற்றி ஒவ்வொரு கூட்டத்திலும் அதனைப் பாடி கூட்டங்களிற்கு சனத் திரளினை அதிகரித்தான்.

ஊரிலுள்ள சின்னப் பையன்கள் எல்லோரும், ''சின்னையா வுக்கு ஜே!'', ''எங்கள் ஐயா - சின்னையா...!'' ''அனுப்பி வைப் போம் கவுன்சிலுக்கு'' என்ற கோஷங்களை அதிர்த்தி ஒவ்வொரு வீதியாலும் தினசரி ஊர்வலம் போய்க் கொண்டிருந்தார்கள்.

பங்களாவடியெங்கும் சின்னையாவின் தேர்தல் சின்னமான விளக்கு, புள்ளடியுடன் வெள்ளை மையினால் வரையப்பட் டிருந்தது. பூவரச மரங்களிலெல்லாம் விளக்குக் கொடி. ஒவ்வொரு வீதி முகப்பிலும் இரவிலே மண்ணெண்ணெய் லாந்தர் விளக்குகளின் ஒளியுமிழ்வு. எதிர்த்தரப்பு அபேட்ச கருக்கு அக்கிராமத்தினுள் வாக்காளரைச் சந்திக்க வருவதே கஷ்டமாகப் போயிற்று.

மீன் பிடிகாரர் எங்கள் வீட்டு வாசற்படிப் பக்கம் வர வேண் டிய அவசியமில்லையென்று அடுத்த கிராமத்துச் சாதிமான்கள் சொல்லி அனுப்பியது மட்டுமில்லாமல், சின்னையா தங்களின் கிராமத்திற்கு வந்தபோது, 'கேட்'டை இழுத்துச் சங்கிலியால் பூட்டிக் கொண்டனர். அந்தச் சம்பவம், சின்னையாவின் மனந்தனிலே மிகுந்த கொதிப்பினை ஏற்படுத்தி விட்டது.

'எலக்ஷன்' முடிஞ்சதுக்குப் பிறகு இவங்களுக்கு நான் நல்ல பாடமொன்று படிப்பிக்காமல் விடுகிறதில்லை. இப்பிடி எனக்குச் செய்த இந்தச் சாதிமான்களின்ரை பக்கத்துக்கு ஒரு திருத்த வேலையும் செய்யுறதில்லை. மின்சார விளக்குகளைக்கூட புதிசாய்போடுறதில்லை... எலக்ஷன் முடியட்டும்!'

இம்முறையைப் போல என்றுமே உடையார் ராசரெத்தினத் திற்கு ஆத்திரம் வந்ததில்லை. தனக்கு முன்னால் கைக்கட்டி, வாய் புதைத்து நின்ற ஒருவன், எந்தவிதமான படிப்புமில்லாத மீன் பிடிகாரன் - தன்னுடைய சொந்தக்காரனுக்கு எதிராகத் தேர்தலுக்கு நிற்கப் போகிறான் என்பதனை அறிந்த நாளிலிருந்து அவருக்கு உறக்கமே வரவில்லை. ஏற்கனவே அவருக்கு இரத்தக் கொதிப்பு. இந்த யோசனைகளும் வரவே அவர் நிலை கொள்ளாமல் தவித்தார்.

''எனக்கு முன்னாலை தோளிலை சால்வை போடாமல், பய பக்தியோடை இடுப்பிலே கட்டினவங்கள்; எனக்கு முன்னாலை வெற்றிலை போடாமல் மரியாதை செய்தவங்கள்; கடலிலை மீன் பிடிக்கிறதைத் தவிர வேறை எந்த விஷயத்தையும் அறியாதவங்கள் இப்ப என்ரை சாதிக்காரனோடை எலக்ஷன் கேட்க வந்திருக்கிறாங்கள். கலி முற்றிப் போச்சுது என்றது பொய்யில்லை. உலகத்திலை எல்லாமே தலைகீழாய் போச்சுது - அந்த வெள்ளைக்காரன் வந்து இந்த நாட்டையே குட்டிச் சுவராக்கிப் போட்டுப் போயிட்டான். எல்லாருக்கும் அவன் வாக்குரிமை கொடுத்தாலைதானே இந்தஎளிய சாதிகளெல்லாம் 'கவுன்ஸில்' படி ஏறுகிறதுக்கு வழி பிறந்திருக்குது. இந்த முறையினை அடியோடை மாற்றி பணமும், சொத்தும், படிப்பும் உள்ளவனுக்குத்தான் வாக்குரிமை என்று சட்டம் வந்தால்தான் இந்த நாடு உருப்பட முடியும்!'' என்று பரபரத்துக் கொண்டிருக்கிற அவரை, எக்கவுண்டனான தங்கவேலர் ஆறுதல் கொள்ளச் செய்தார்.

முற்றாகத் தலை நரைத்த, இடுங்கிய கண்களுள்ள, தொப்பை யான தங்கவேலர், ''இதுக்கெல்லாம் நீங்க யோசித்து ஆத்திரப் பட்டு ஒன்றுமே நடக்கப் போறதில்லை. நான் இங்கிலிஷ் காரரின்ரை சரித்திரத்தைப் படித்தனான். இப்பிடியானதொரு நெருக்கடி வாறபோது அதை சமாளிக்கிறதுக்கு அவன் நல்லதொரு வழி வச்சிருக்கிறான்... டிவைட் அன்ட் ரூல்... பிரித்து ஆளுகின்ற தந்திரம்... அந்த வழியைத்தான் இங்கை நாங்க கையாள வேணும். இதை நல்லாகவே யோசித்துத்தான் நான் சொல்லுறன் - எங்களின்ரை சாதியும் கௌரவமும் கீழ்நிலைக்குப் போறதை நான் பார்த்துக் கொண்டிருக்க மாட்டன்'' என்று கூறியதும், மிகுந்த நம்பிக்கையோடு அவரது கைகளினைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டார் ராச ரெத்தினம். நாத் தளுதளுத்து கண்கள் பனித்தன அவருக்கு.

''இலங்கையிலை யுத்த களத்திலை இலட்சுமணனும், வீரர்களும் மயங்கிப் போய்க் கிடக்கிறார்கள். இராமன் செய்வதறியாது புலம்புகிறான். இராவணனோ வெற்றி விழாக் கொண்டாட ஏற்பாடுகள் செய்கிறான். எல்லாருமே கலங்கிப் போயிருக்கிற அந்த நேரத்திலை யாருக்குமே உவமை சொல்ல முடியாத அனுமன் மருந்து மலையை வேரோடு பிடுங்கிக் கொண்டு போர்க்களம் வருகிறான். சஞ்சீவி மலையின் காற்றுப் பட்ட உடனேயே இலட்சுமணனோடு எல்லோரும் மயக்கந் தீர்ந்து எழுகிறார்கள். அது போலைத்தான் எங்களுக்கு நீங்களும். இந்த அவலமான நேரத்திலை எங்களின்ரை சாதிக்கே நிவாரணம் தேடித்தர வந்திருக்கிறீர்கள்... நாங்க முற்பிறப்பிலை செய்த புண்ணியத்திலைதான் இந்த உயர் சாதியிலை வந்து பிறந்திறக்கிறம்... அந்தப் புண்ணியம் அவமாகிப் போகாது; போகவும் விடக் கூடாது...''

ராசரெத்தினத்தின் இதயத்திலிருந்து வந்த சொற்கள் அளித்த மகிழ்ச்சியினால் மனம் பூரிப்புற்றவராகத் தன் தொப்பையைத் தடவிக் கொண்டார் தங்கவேலர்.

''ஒன்று ரெண்டு சாதிகளுள்ள ஊரிலைதான் எலக்ஷன் கேட்டு வெல்றது கஷ்டம். ஐந்தாறு சாதிகள் உள்ள வட்டாரத்திலை எலக்ஷன் வெல்லுறது லேசு. கொஞ்சம் மூளையைப் பாவிக்க வேணும். காசையும் தாராளமாக செலவழிக்க வேணும். எங்கடை ஊரிலை ஐஞ்சாறு சாதியிருக்குது. சின்னையாவின்ரை பகுதி ஆட்கள்தான் இந்த வட்டாரத்திலை அதிகம். அதைப் பற்றி ஒன்றுமில்லை. மிச்சமுள்ள எல்லாச் சாதிக்காரரையும் சின்னையா பகுதியோடை சேரவிடாமல் பிரிச்சு எங்களின்ரை தலைமைக்கு கீழே கொண்டு வரவேணும். அதுக்குப் பிறகு சின்னையா பகுதிக்குள்ளை பிரிவினையை ஏற்படுத்தி அதிலை ஒரு பகுதி வாக்குகளை நாங்க எங்களின்ரை பக்கமாக எடுத்துப் போட வேணும்...''

அவசரமாக வினவினார் உடையார்: ''அதுக்கு என்ன வழியிருக்குது?''

இடுங்கிய கண்களை மேலும் இடுக்கியவராக ஆழ்ந்து யோசித்த முடிவினைக் கூறுபவர் போலத் தொடங்கினார் தங்கவேலர்:

''ஒவ்வொரு சாதியிலும் உள்ள செல்வாக்கான ஆளை நாங்க முதலிலை எங்கடை பக்கத்துக்கு எடுத்திட வேணும்.

அவங்களை எங்களோடை வைச்சிருக்கிறதுக்கு ஏதாவது சலுகையைச் செய்து எங்களோடை கடமைப்படச் செய்ய வேணும். அதுக்குப் பிறகு அவங்களின்ரை சாதிப் பெருமையை அவங்களுக்கு மனதிலை உறைக்கச் செய்ய வேணும். இப்பிடியான பெருமைகளெல்லாம் உள்ள நீங்கள் சின்னையாவுக்குப் பின்னாலை போகப் போறீங்களோ, எங்களுக்குப் பின்னாலை வரப் போறீங்களோ என்று கேட்டால் போதும். மிச்ச முடிவுக்கு அவங்கள் வந்திடுவாங்கள். இன்னுமொரு விஷயமும் இருக்கு. 'எலெக்ஷன்' முடிகிறவரைக்கு நாங்க விரும்பினாலென்ன, விரும்பாவிட்டாலென்ன அவங்களை யெல்லாம் எங்களுக்கு சமமாகத் தான் நடத்த வேணும். அவங்களுடைய கல்யாண வீடு, செத்த வீடுகளுக்கெல்லாம் போய் முகத்தைக் காட்டி வர வேணும். அப்பதான் எங்களிலை அவங்களுக்கு நல்ல நம்பிக்கை வரும்...''

சிறிது நேரம் மௌனமாயிருந்தது விட்டு அவர் தொடர்ந்தார்:

''ஒரு சாதியென்றால்ப் போலை ஒரே கருத்தோடை எல்லோரும் ஒரு போதுமே இருக்க முடியாது. இருக்கிறவன், இல்லாதவன், சொந்தத்துக்குள்ளேயே வேறுபாடுகள் உள்ளவன் என்று பல வேற்றுமைகளிருக்கும். அந்த வேற்றுமைகளை நாங்கள் அறிஞ்சு அதை நல்லாகப் பெரிதாக்கி வளர்த்து விட்டமென்றால் பிறகு அவர்களின்ரை ஆதரவை வெகு இலகுவாய்ப் பெற்று விடலாம்... உங்களினுடைய புராண இதிகாசங்களிலேயே இதுக்கு நல்ல உதாரணமிருக்குது... விபிஷணனும் கர்ணனும் அப்பிடியானவங்கள்தானே...! நான் சொல்லுறது சரிதானே?''

ராசரெத்தினம், ''மெத்தச் சரி... நீங்கள் சொன்னது சரியான உதாரணம்'' என்று அவரது கூற்றினை முழு மனதாக ஆமோதித்தார்.

செல்வதிக்கு வீட்டுக்கு வருகின்றவர்களுக்கு தேநீர் ஊற்றிக் கைகள் களைத்துவிட்டன. வெற்றிவேலு அவளின் நிலைமைக்கு இரங்கி, தன்னுடைய மகள் பொன்னுவையும், மகள் கனகம்மாவையும் அங்கு அனுப்பிய பிறகுதான் செல்வதிக்கு ஓரளவு ஆறுதல் ஏற்பட்டது. பேரம்பலமும், சிவஞானமும் தேவராசனின் சாப்பாட்டு அலுவல்களுக்குத் துணையாகக் கல்வீட்டிலேயே நிரந்தரமாகத் தங்கி விட்டனர். வெற்றிவேலு காகமாய்ப் பறந்து திரிந்தான். சின்னையாவின் பேச்சு வன்மை ஒருமாத காலத்திற்குள் எல்லோரையும்

ஆச்சரியப்படுத்தும் விதத்தில் வளர்ச்சியடைந்து விட்டது. ஒவ்வொரு கூட்டத்திலும் இவ்விஷயத்தினைக் கூறுவார் சின்னையா.

''மகா ஜனங்களே, ஒரேயொரு காரியத்தை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எதிர்க் கட்சிக்காரர் மறை முகமாகவே ஒரு விஷயத்தைச் சொல்லிக் கொண்டு திரிகிறதாக நான் அறிகிறேன். நாங்கள் ஓடம் ஓட்டுகிறோமாம். மீன் பிடிக்கிறோமாம். அவர்கள் சொல்லுகிற விஷயம் உண்மைதான். இதனைஇட்டு நாங்கள் மிகவும் பெருமையடைகின்றோம் என்பதனை இந்த மேடையிலே பகிரங்கமாகவும், மிகுந்த சந்தோஷத்துடனும் நான் அறியப் படுத்துகின்றேன். (சபையி லிருந்து பலத்த கரகோஷம்) நாங்கள் ஓடம் விடுகிறவர்கள்தான். ஆனால் எங்களின் பரம்பரை யாருடையது? குகன் உடையது. குகன் என்பவன் யார்? இராமரே புகழ்ந்து போற்றியவன்தான் குகன். 'குகனோடு ஐவர் ஆனோம்' என்றான் இராமன். ஆகவே நாங்களொன்றும் குறைவான சாதியில்லை என்றதை எதிர்த் தரப்பு அபேட்சகர் இனியென்றாலும் அறிந்து கொள்ளட்டும்... ஆகவே மாற்றார்களை, துரோகிகளை முறியடித்து நீதியையும் நியாயத்தையும் வெற்றி பெற வையுங்கள்''

தேர்தலுக்கு நான்கு தினங்களிருக்கின்ற போது திடுக்கிடும் செய்தியொன்று சின்னையாவின் காதுகளிற்கு எட்டியது.

சின்னையாவின் மைத்துனர் முறையான செல்லத்துரையை எதிர் அபேட்சகர் காசு கொடுத்து வாங்கி விட்டார். அனேகமான நேரம் ராசரெத்தினம் வீட்டிலே அவர் குசுகுசுப் பேச்சு நடத்தி வைக்கிறார். வீட்டின் முன் புறத்திலே எதிர்க் கட்சிக்காரரின் கட்சிக் கொடியை உயரே பறக்க விட்டிருக்கின்றார். செல்லத் துரை தனது தம்பியாரான கிருஷ்ணனுக்கு செல்வதியைத் திருமணம் செய்வதற்கு முருகேசரை அனுப்பிக் கொண்டிருந் தான். கிருஷ்ணன் பேர் பெற்ற குடிகாரன். ஒருவிதமான தொழிலுக்கும் போகாமல், தகப்பனின் திரண்ட சொத்துக்களை விற்றுச் சுட்டுச் செலவழித்துக் கொண்டிருப்பவன். அடாவடிக் காரன் என்ற பெயரினைச் சுவீகரித்துக் கொண்டதையிட்டுப் பெருமையடைபவன்.

அந்தத் திருமணப் பேச்சினை முருகேசு தொடக்கியதுமே, ''டே முருகேசு, ஒவ்வொரு விஷயத்துக்கும் தகுதியும் தராதரமும் வேணுமடா! நாய்க்கேனடா போர்த் தேங்காய்...? என்னுடைய

வீட்டுப் படியிலை ஏறுகிறதுக்கு இவன் கிருஷ்ணனுக்கு என்னடா தகுதியிருக்குது? அந்தப் பேதைப் பயலுக்கு என்ரை பொக்கிஷம் போலை பெண்ணைக் கலியாணம் முடிக்க ஆசையும் வந்திட்டுதோடா? ஓடடா தூமைப் பயலே...'' என்று ஆத்திரத்தோடு பொரிந்து தள்ளினார் சின்னையா.

அடி வாங்காத குறையாக முருகேசு நழுவி விட்டார். அந்த அடியினை மறக்காது இன்று பழி வாங்கக் கங்கணங் கட்டி நிற்கிறான் செல்லத்துரை. தினமும் கள்ளுக் குடிக்கிற கிருஷ்ணன், சாராயப் போத்தலோடு இரவு பகலாக சின்னையாவைத் திட்டித் தீர்க்க தொடங்கி விட்டான். ஆழக் கடலிலே மூழ்கிப் போய் பற்றுவதற்கோர் துரும்பு கூடக் கிடையாத மனோபாவத்தினால் சின்னையாவின் முகமே மாறிப் பேயறைந்து குன்றிப் போய்விட்டார்.

விஷயத்தைக் கேள்விப்பட்டு ஆடிப்போய் விட்டான் தேவராசனும். சில நிமிஷங்கள் தனியாக இருந்து யோசித்து விட்டு, அவசர அவசரமாகப் பட்டணத்திற்குப் புறப்பட்டுப் போய் கனகராசாவோடு மீண்டும் வீட்டிற்குத் திரும்பி வந்தான் காரிலே தேவராசன். கனகராசா மிகவும் உற்சாகத்தோடு சின்னையாவை அழைப்பித்தார்.

சின்னையாவின் வாடிய முகத்தைப் பார்த்தவாறே, ''மிஸ்டர் சின்னையா, நீர் ஒன்றுக்குமே யோசித்துக் கவலைப்பட வேணாம். மகன் எனக்கு எல்லாமே சொல்லியிருக்கிறான். எலக்ஷன் முடிகிற வரைக்கும் நான் உம்மோடையே இங்கே நிற்கிறேன்... இந்த எலக்ஷனிலே இப்ப ஒரு புது ஆள் தலையிட்டிருக்கிறான். எக்கவுண்டன் தங்கவேலு என்று கேள்விப்பட்டிருப்பீர். ஆள் சரியான நரியன். இதிலை அவனுக்குத்தான் மறக்க முடியாத நல்லதொரு பாடம் படிப்பிக்கப் போறேன்... அதை இதை நினைச்சு தவறாகக் கணக்குப் போடாதையுங்கோ. ஆக வேண்டிய காரியங்களைச் சுறுசுறுப்பாகக் கவனியுங்க. சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும். ஒருத்தரையும் தவறவிட்டிடாமல் எலக்ஷன் முடிகிற வரைக்கும் அணைச்சு அன்பாக நடவுங்க. வழமையாகச் செய்யிறது போலை இந்த முறையும் சனங்களுக்கு கொடுக்கிற எல்லாவற்றையும் கொடுங்க. சனங்கள் பழகியிருக்கிற பழக்கங் களிலை இருந்து அவையளை மாற்றப் போனால்தான் எங்களுக்குத் தலையிடிகள் வரும். நான் இருக்கிற இடத்திலை

ஒருபோதும் தோல்விகளே வாறதில்லை. கொஞ்ச நாள்தானே இன்னும் இருக்குது; பொறுத்திருந்து பாருங்க'' என்று உற்சாகம் பொங்கக் கூறினார் கனகராசா.

மீண்டும் புத்துணர்ச்சியால் உற்சாகமானார் சின்னையா. அண்ணாவி சின்னத்தம்பியிடம் கடைசிக் கூட்டத்திலே பேசுவதற்காகப் பொருத்தமான புராணக் கதைகளினைக் கேட்டறிந்து கொண்டார். தேர்தல் தொடங்கும் வரையிலும் அங்குள்ள இரண்டு கள்ளுக் கொட்டில்களும் திறந்திருக்க வேண்டுமென்றும், வருகிற எல்லோருக்கும் இலவசமாகவே கள்ளுக் குடிப்பதற்குக் கொடுக்கப்படுமென்றும் சின்னையாவின் சார்பில் அறிவிக்கப் பட்டிருந்தது.

வெற்றிவேலுவின் கண்கள் உறக்கம் மறந்துபல நாட்களாகி விட்டன. பரந்த கடலிலே அலைந்து திரிகின்ற கடற்காகம் போல தன்னுடைய சிலுப்பாத் தலையினைப் படியப்படிய வாரியபடியே, விநியோக வேலைகளில் வெகு மும்முரமாக ஈடுபட்டிருந்தான் வெற்றிவேலு.

9

தேர்தலுக்கு இன்னமும் இரண்டு நாட்களேயிருக்கின்ற எண்ணிக்கை இடைவெளியினை அறிவித்துப் பொழுது புலர்ந்த சில நிமிஷங்களிலே அந்தக் கிராமத்திலே பெரும் பரபரப்புத் துள்ளி எழுந்தது.

அந்தக் கிராமம் அதிகாலை நான்கு மணிக்கே விழித்து எழுந்துவிடும். மீன் பறிகளையும், சவள்களையும், தண்ணீர் பானையையும், வலைகளையும், பறிக் கூடுகளையும், மரக்கோல்களையும் எடுத்துக் கொண்டு, விடிவெள்ளி காலித்து, கிழக்கு வெளிக்க முன்னரே வள்ளத்திலே மீன் பிடிக்கப் புறப்பட்டு விடுவார்கள் அக்கிராமத்து மீன் பிடியாட்கள். கடலிலே போய் மீன் பிடித்துக் கொண்ட அவர்கள் கடற் கரைக்குத் திரும்பிட பகல் பத்து மணியாகிவிடும். பிறகுதான் கிராமத்தின் இயக்கம் பரிபூரணமடையத் தொடங்கிடும்...

இப்போது கிராமத்தின் சிறுவர்களும், மீன்பிடிக்கப் போகாதவர்களுந்தான் பரபரப்பிற்குட்பட்டு நிற்கின்றார்கள்.

வீதிகள், சுமைதாங்கிச் சுவர்கள், பங்களாவடி ஆகிய இடங்களிலெல்லாம் வெள்ளை, மஞ்சள் நிறத்தினில் கொட்டை

கொட்டையாக புதிதாக எழுதப்பட்ட எழுத்துக்கள் மின்னின. வெள்ளைத்தாள்களில் நிறங்களினால் எழுதப்பட்ட சுவரொட்டிகளில் படங்களும் கீறப்பட்டிருந்தன. அவற்றைப் பார்க்கிக்றவர்களினது முகம் கோபத்தினாலே அதைத்து விகாரமடைந்தது. அந்தச் சுலோகங்களை வாசித்தும், கேட்டவாறுமிருந்தவர்கள் ஆவேசமும், ஆத்திரமும் பொங்கிடத் தூஷணமாகச் சத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

''எங்களின்ரை சாதிப்பேரை இழுத்து அவமானப்படுத்தி, எங்களின்ரை ஊருக்குள்ளை வந்து தைரியமாக நோட்டீஸ் எழுதி ஒட்டியிருக்கிறாங்கள். சுவர், ரோட்டெல்லாம் என்ன மாதிரி எழுதியிருக்கிறாங்கள்... பார்த்தியா? ஐயோ, இதைப் போய்ப் பார்க்கப் பார்க்க... அப்புக்காத்து ஐயா வீட்டை உடனே சொல்லவேணும்...''

வெற்றிவேலு ஆத்திரத்தில் தடுமாறியவாறு, அங்கிருந்து கடற்கரை வீட்டினை நோக்கி விரைந்தோடினான்.

''மீன் பிடிக்கிறவனுக்கு முனிசிபல் கவுன்ஸில் கதிரை ஒரு கேடா? என்று எழுதிவிட்டுப் பக்கத்திலை மீன்பிடி வள்ளம் கீறியிருக்கிறதைப் பார்த்தியா?''

''இதைப்பார்... இதிலை பார்த்துப் போடு புள்ளடி மீன் பறிக்கூட்டுக்கு நேரே... என்று எழுதியிருக்குது. சீ, என்ன மாதிரியெல்லாம் எங்களின்ரை சாதியை இந்த நாய்ப் பயல்கள் கேவலப் படுத்தியிருக்கிறாங்கள் பார்... இதுக்குச் சரியான பாடம் படிப்பிக்கா விட்டால் எங்களின்ரை பெண்சாதிமார்கூட எங்களை மரியாதை செய்ய மாட்டாளவையடா... இப்பிடி அவமரியாதைப் படுகிறதைவிட மீசையை வழிச்சு எறிஞ்சிடலாமாடா...''

இன்னொரு போஸ்டரை இளைஞனான கந்தவனம் சினந் துடிதுடிக்க கிழித்து வீசினான், வாய்க்கு வந்த தூஷணங்களில் அடுத்த அபேட்சகரின் சாதியையும், அவரது தாயோடு படுத்த புருஷன்மார் என்று பலரது பேரினையும் குழறிய குரலிலே கூறித் தள்ளினான்.

''வாக்குகள் போட வேண்டாம் - வலை வீசப் போங்கள்

சின்னையாவே போ... போ... சின்னக் கடலுக்குப் போ போ...''

போஸ்டரை வாசித்துக் கூறிவிட்டு, தும்புதும்பாக அதைக் கிழித்து வீசிய சிவசம்பு கூரான கல் ஒன்றினைத் தூக்கிக் கொண்டு

விசுவன் பின் தொடர செல்லத்துரையின் வீட்டை நோக்கி விரைந்தான்.

'சாதிப் பற்றுக் கொஞ்சமும் இல்லாமல் மற்றவன்ரை காலை நக்குகிற எங்களின்ரை நாய்களுக்கு முதலிலை நல்ல பாடம் படிப்பிக்க வேணும்... பிறகுதான் அடுத்தது.'

அன்று மாலையிலே மாபெரும் கூட்டமொன்று நடை பெற்றது. கடற்கரையின் வெண் மணல் காலடிகளினால் சிதைந்து போயிருந்தது. குழந்தை குஞ்சிலிருந்து தடியூன்ற முடியாத கிழவர்கள் வரை கடற்கரைக் கூட்டத்திற்கு வந்திருந்தனர். பெண்கள், கடற்கரை மணலிலே பாயை விரித்து பிள்ளைகள் சகிதம். மெர்க்குரி விளக்குகள் மேடையின் எல்லா பக்கங்களிலும் ஒளியிமிழ்ந்தன. தேர்தல் சின்னக் கொடிகளால் கடற்கரை முழுதும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மேடையினிலே நடுநாயகமாக அமர்ந்திருந்த சின்னையா வுக்கு முதன்முதலில் மிகப் பெரியதொரு மாலையினைச் சூடி, கார்த்திகேசு வணக்கந் தெரிவித்த போதிலே கரகோஷம் கடற்கரையினையே அதிர வைத்தது. அதனோடு 'ஜே' கோஷங்கள் இணைந்து கிடுகிடுத்தது. கூட்டத்தில் அருகருகாக உட்கார்ந்திருந்த வல்லவாம்பிகையும், செல்வதியும் அப்போது ஒருவரையொருவர் பார்த்து அர்த்த புஷ்டியுடன் சிரித்துக் கொண்டனர். கூட்டத்திலேயிருந்த பெண்களுடைய கண்கள், அந்த இரு யுவதிகளிலுமே தரித்து மொய்த்திருந்தன.

கூட்டத்தின் இறுதிப் பேச்சாளரான சின்னையா பேச எழுந்த போது, மௌனத்தின் சூழலினை உடைத்து வீசிக் கொண்டு, ''ஸ்ரீமான் சின்னையாவுக்கு...'' என்று ஒரு கட்டைக்குரல் ஒலியெழுப்ப அதைத் தொடர்ந்து சின்னதும் பெரிதுமாய் ''ஜே!'' என்ற குரல்கள் கோஷமிட்டுக் கரைந்தன.

சின்னையா, கூட்டத்தினர் எல்லோரையும் பார்த்து, தலைக்கு மேலாகக் கைகளை உயர்த்தி வணக்கம் தெரிவிக்க, மாலைகள். பேசத் தொடங்க, மாலை. கழுத்துநிறைந்து முகத்தை மறைத்த மாலைகளை அவர் கழற்ற, அதை வாங்கி மேசையிலே அடுக்கினான் வெற்றிவேலு. மேடையெங்கும் பூமணங் கமழ்ந்தது. கையினால் இனி மாலை வேண்டாம் என்று சைகை காட்டியபடி பேசத் தொடங்கினார் சின்னையா. சோளகக் காற்றின் வேகத்தோடு வார்த்தைகள் சினத்துடன் சீறி உயர்ந்தன. இடையிலே உணர்ச்சி வசப்படுகையில் குரல் தளதளப்படைய சபையோரின் விழிகளில் கண்ணீர் மெல்லத் துளிர்த்தது.

''சொல்லுங்க... நல்லாக உங்களின்ரை இருதயத்திலை கை வைச்சுச் சொல்லுங்க. இன்றைக்கு எங்களின்ரை ஊருக்குள்ளை பிற சாதிக்காரன் வந்து எழுதியிருக்கிறது உங்களுக்கு ரோஷத் தைத் தரவில்லையா? இந்த மாதிரியானதொரு காரியம் இதுவரை காலமும் இந்த ஊரினுடைய சரித்திரத்திலேயே நடந்ததில்லை. மீன் பிடிக்கிறவனுக்கு 'முனிசிப்பில் கவுன்சிலி'லை என்ன வேலை என்று கேட்டு எழுதியிருக்கிறாங்கள்... இது எவ்வள விலை எங்களின்ரை மானத்தைக் கெடுக்கிற வேலை என்று ஒரு முறை யோசிச்சுப் பாருங்க... அரசாங்கம் இந்த வட்டாரத்தைப் பிரித்தபோது ஒரே ஒரு காரணத்தை வைத்துத்தான் பிரிச்சுது. எங்களின்ரை சாதியில் உள்ள ஒருவர் இந்த வட்டாரப் பிரதிநிதி ஆக வேணுமென்றுதான் இந்த வட்டாரம் பிரிக்கப்பட்டிருக் கிறது. இதுவரை காலமும் நாங்க எங்களுக்குத் தரப்பட்ட உரிமையை மாற்றாருக்கு தாரை வார்த்திருந்திட்டம்...''

''இனி அப்பிடி இருக்க மாட்டோம்!'' என்ற குரல் அவரது பேச்சினை இடைமறித்து எழுந்து ஓசை கரைத்தது.

அவர் தொடர்கிறார்...

''சந்தோஷம். எங்கிள்னரை ஊருக்குள்ளை வந்து ரகசியமாக எழுதிக் கேவலப் படுத்தினவங்களை குறைசொல்லி என்ன பிரயோசனம்? நாங்கள் எங்களின்ரை சாதி அபிமானத்தோடை இருந்தமென்றால் எங்களை யாருமே அசைக்க முடியாது... இப்பவும் சொல்லுங்கோ, நீங்க எல்லோரும் ஒத்து ஒரு குரலிலை நிற்காவிட்டால் நான் இந்த எலக்ஷனிலை இருந்தே விலகிக் கொண்டு போய் விடுகிறேன்...''

கடற்கரையிலே எழுந்த குரல்கள் ஆரவாரித்தன:

''நாங்க எல்லாருமே உங்களை ஆதரிக்கிறம்... சாதி அபிமானத்தை கடைப் பிடியாதவங்கள் யாரையும் இந்த ஊரிலை இருக்கவே விடமாட்டம். மாற்றாரையும் இனத் துரோகிகளையும், சாதியபிமானம் இல்லாத நாய்களை ஒழித்துக் கட்டுவம்... இது சத்தியம்.''

10

வெற்றிக் கோஷங்கள் காதைப் பிளந்தன.

இரண்டாயிரத்தி எண்ணூற்றிப் பதினேழு வாக்குகள் சின்னையாவுக்குக் கிடைத்திருந்தன. வாக்குகள் எண்ணி தேர்தல்

முடிவுகள் வெளியாகு முன்னரே எதிர்த்தரப்பு அபேட்சகர் அங்கிருந்து ரகசியமாக நழுவிப் போய்விட்டார். சின்னையா வெற்றிப் பூரிப்பிலே திளைத்து, எதுவுமே பேச முடியாமல் திக்கித்து அசையாத சிலையாக கழுத்திலே சூடப்படுகின்ற மாலைகளைக் கழற்றாமலே நின்றார்.

வெற்றி ஆரவாரத்தோடு கிராமத்துக்குத் திரும்பிய சின்னையாவின் ஆதரவாளர்கள், சில நாளைக்கு முன்னதாக தங்கள் ஊரிலே ஒட்டப்பட்ட போஸ்டர்களை நினைவிலே கொண்டு சில வீடுகளிற்குக் கல்மாரி பொழிய, வீட்டிலுள்ளவர்கள் வெளியே வந்து சண்டையிட்டு அதனால் பதினாறு பேர் படுகாயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டனர்.

உடலிலேயிருந்து அதிக இரத்தம் வெளியேறிய காரணத்தினால் ஒருவர் ஆஸ்பத்திரியிலே மரணமானார். இறந்தவரின் மகன், ஒரு வார காலத்தினுள்ளே இந்த மரணத்திற்குப் பழி வாங்குவதாக தகப்பனின் பிணத்தின் முன்னே ஆவேசமாக சபதஞ் செய்து கொண்டான்.

கடற்கரையோரக் கல் வீட்டிலே ஐந்து கிடாய் ஆடுகள் வெட்டி கறி சமைக்கப் பெற்று விருந்து போடப்பட்டது. அதிகாலை ஐந்து மணிக்குத்தான் விருந்து முடிவுற்றது. மேயர் சிவலிங்கமும் அமோக வாக்குகளால் வெற்றி பெற்று விட்டார். நிச்சயமாக அடுத்த மேயர் அவர்தான் என்று அளவில்லா மகிழ்வோடு கூறினார் கனகராசா.

எல்லோரிடமும் விடைபெற்றுக் காரிலே ஏறிக் கொண்ட கனகராசா ஏதோ யோசனையில் மீண்டும் இறங்கி, காரின் டிக்கியினைத் திறந்தார்.

நகரத்திலிருந்து அவர் தேவராசனோடு வந்தபோது வாங்கி வந்த போஸ்டர் தாள்களில் சிலவும், அரை குறையான மஞ்சள், வெள்ளை நிற மை டின்களும் டிக்கியிலே பத்திரமாகக் கிடந்தன. தனக்குப் பின்னே புன்முறுவலோடு நின்ற தேவராசனைப் பார்த்தபடியே அவர் மெல்ல முணுமுணுத்தார்:

"இவை இனியும் சிலவேளை தேவைப்படக் கூடும்..."

(தாமரை, 1979)

இருள் கொண்ட அறைகள்

1

அவ்வீட்டின் வாசற்கதவு அரைகுறையாய் மூடிக் கிடந்தது. என்றுமே திறந்திருக்கின்றவை - அதன் ஜன்னல்கள். இப் போதும் அப்படித்தான். இலேசாக வீசிய காற்று கதவினை அலைத்த போதிலும் கதவினை மூடிவிட உள்ளேயிருந்து யாரும் வரவில்லை.

எதிர் வீட்டிலிருந்த தண்டாயுதபாணிக்கு அந்தக் கதவுகளை யும், கதவுகளிலிருந்து கீழிறங்குகின்ற பன்னிரெண்டு படிகளை யும் பார்க்கின்றபொழுது நெஞ்சினுள்ளே கொதிப்பு மூண்டெரியும்; ஆயிரம் சாபங்களையும் திட்டுக்களையும் முன்னறையில் வசிப்பவள் மீது கொட்டித் தீர்ப்பான். அந்த முன்னறையினைப் பார்த்தபடி அமைந்திருந்த இவனின் வீட்டிற்கும், இரட்டை ஜன்னலைப் பார்த்தபடிதான் முகப்புமிருந்தது. எதிரெதிரேதான் இருவரது ஜன்னலும்.

இவன், அவள் முன்னறைக்கு குடியிருக்க வருமுன்னர் ஜன்னலருகேதான் தனது மேசையை வைத்திருந்தான். மேசைக்கு நேரெதிரே நறுமணங் கமழ்கிற, சடைத்துச் சிலிர்த்த வேப்பமரமும், நந்தியாவர்த்தம் செடிகளும், அவனது வீட்டினையும், எதிர் வீட்டையும் பிரித்தோடுகின்ற சிறிய தார் வீதியின் மருங்கினில் ஒரு நிழல் மரமும் இல்லை. இரு வீட்டிற்கும் உயரங்குறைந்த தகரங்களே வேலி மறைப்பாகி நின்றன.

மெல்லிய தென்றல், பூ வாசனையை அள்ளிச் சுமந்து அறையினுள் நிறைகையில் தண்டாயுதபாணி பரமானந்த சுகமடைவான். ஆனால் அவள் அந்த வீட்டிற்கு குடியிருக்க வந்து ஒரு வாரங்கழியுமுன்னர், அவளது களிப்புக் குரலும், டாக்ஸியின் ஓசையும் முன்னறைப் பக்கமாய் நிறைந்து வழியத் தொடங்கியதன் பிறகு, அவன் அவளை வாயாரத் திட்டியவாறு ஜன்னலோரமாயிருந்த மேசையினை கிழக்குப் பக்கமாக

நகர்த்தினான். அந்தப் பரவசமான தென்றல், வாசனை கமழ்கின்ற பூமணம் யாவுமே தன்னால் இழக்கப்பட்டதாயினும், இச்சம்பவத்தினால் தான் ஒழுக்க சீலனாக உயர்ந்து விட்டதாய் இறுமாப்புற்றான். கெட்டுப் போனவளை, உடலை விற்கின்ற சமூகத் துரோகியை ரசிக்காது மனதினை அடக்கிய ஆண்மை யாளன் என்று தன்னைத்தானே முதுகினில் தட்டி புளகாங்கிதமடைந்தான் தண்டாயுதபாணி.

அவன் அவ்வீட்டினைத் தனது இருபத்தெட்டாவது வயதினில் தனது தகப்பனின் ஒத்தாசையோடு சொந்தமாக வாங்கிக் கொண்டான். முன் விறாந்தை, ஓபிஸ் ரூம், நடு அறை, படுக்கையறை, சமையலறை எனப் பிரிக்கப்பட்டிருந்த அந்த சிறிய வீட்டினை வாங்கி பன்னிரெண்டு வருஷங்களாகி விட்டபோதும் இப்போதும் புதிதாய் விளங்கிற்று அவ்வீடு. தண்டாயுதபாணி தனது எழுத்துலகப் புனை பெயருக்கு தொடர்பாக அவ்வீட்டிற்கு 'அழகு இல்லம்' எனப் பெயர் சூட்டியிருந்தான்.

முற்றத்தின் இருமருங்கும் வாசனை வீசுகிற பூச்செடிகள். முற்றத்திலே தினமும் கோலமிட வேண்டுமென்ற அவனது விருப்பத்தின்படி அழகிய கோலமிட்டிருப்பாள் பாலாம்பிகை - அவனது மனைவி. நாள் முழுதும் எழுத்தாளனென்ற சிந்தனையோடு வாழுகின்ற தனது கணவனிற்காக, அவன் சொல்லுகின்ற எதனையுமே செய்து கொள்வதற்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டு விட்டாள் பாலாம்பிகை. இப்படியாக நாலு வருஷங்கள்.

கொடியினைப் போல மெலிந்த மினுமினுக்கின்ற கறுப்பு நிறமான பாலாம்பிகை, கவலைகளைச் சுமந்த கண்களினோடு தனிமையிலிருந்து அடிக்கடி ஆழ்ந்து யோசிப்பாள். நான்கு வருடத்தின் தாம்பத்தியத்தினுள் பெற்றெடுத்த மூன்று குழந்தை களும் நினைவோடும், எதிர்காலம் பற்றிய சிக்கல்களோடும் இணைந்துவந்துஅவளின் யோசனைகளைத் தயங்க வைக்கும். அடிக்கடி சுகவீனமுறும் அவளது குழந்தைகள், அவளது மடியிலேதான் ஆறுதல் கொள்ளும். அந்தக் குழந்தைகளுக்கும் மருந்து வாங்கச் செல்வது, அவற்றிற்கான எல்லாக் கவனிப்பு களையும் நெஞ்சு தளதளக்க தளும்புகிற கண்ணீரோடு செய்வது அவள்தான். அவன், தனக்கு உதவி செய்ய வேண்டுமென்று அவள் ஒரு நாளும் எதிர்பார்க்க வில்லை.

ஆனால் ஒரு நாளாயினும், ''பாலா, நீ களைத்துப் போய் விட்டாய். நெஞ்சத்திற்குப் போய் ஓய்வாக இரு...'' என்று தனது கணவன் வெகு ஆதரவோடு தனது தோளினில் கைவைத்துச் சொன்னாலே இவளின் களைப்பெல்லாம் மாயமாகப் பறந்து போயிருக்கும் என எண்ணுவாள் பாலாம்பிகை.

ஆயினும் ஒரு நாளாவது அவனிடமிருந்து அப்படியொரு கனிவான குரலினை அவள் கேட்டதில்லை குழந்தைகள் நோஞ்சானாயிருப்பது அவளின் நெஞ்சினையே அரிக்கின்ற துயரம். போஷாக்கின்மையே குழந்தைகளுக்கு நோய் வருவதற்குரிய அடிப்படைக் காரணமென்பதை அவள் அறிந்து அதற்காகப் பெருமூச்சு விட்டாள். நெட்டுயிர்த்து வருகின்ற ஏக்கத்தினிடையே அவளின் தம்பி ராசையாவின் குரலும் மனதினுள்ளே அடிக்கடி ஒலிக்கும்.

அவர்கள் இருவரும் சிறுவயதிலே நன்றாகவே புத்தகம் வாசிப்பாள்; வாசித்த சிஷயங்களைப் பற்றி நிறையவே தர்க்கிப்பார்கள். அவர்களின் தாய் மாமனான முத்தையா அவர்களுக்குப் பல விஷயங்களிலே தெளிவான சிந்தனை யினை ஏற்படுத்தியிருந்தார். நாடோடியாய்த் திரிகின்ற அவர், கண்களிலே ஒளி துலங்கிட எந்தக் கடினமான விஷயத்தினை யும், லேசாக விளங்க வைப்பார். ராசையா, தான் படித்த விஷயங்களை அவளுக்குக் கூறிவிட்டு சில வேளைகளிலே முத்தாய்ப்பாகக் கூறுவான்:

''அக்கா, நீ இப்போது அநேக நியாயங்களைப் பற்றிக் கூறுவாய்... ஆனால் திருமணமானதும் - பிள்ளைகளைப் பெறுவது, வளர்ப்பது பற்றிய கவலைகளிலேயே ஆழ்ந்து போய் விடுவாய். எங்களின் அமைப்பு ஒரு பெண்ணை எதற்கு நிர்ப்பந்திக்கிறதோ அதற்கு ஆளாவாய். வீட்டு அடிமையாகி புகை மிதக்கின்ற சமையலறையினுள் உன் வாழ்வின் பெரும் பகுதியினைக் கழிக்கின்ற துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப் படுவாய். உலகத்தைப் பற்றியோ, அடுத்த வீட்டைப் பற்றியோ கூட யோசியாமல், உன் கருத்தை உனது கணவனின் போக்குகளிற்கு இரையாக்கி அபலையாகச் செத்து விடுவாய்...''

உடனே கோபம் வந்துவிடும் பாலாம்பிகைக்கு. ஒரு போதுமே தான் அப்படியாகி விடமாட்டேனென்று ராசையா வோடு சண்டை போடுவாள். முன்பு போல அவனோடு இப்போதுபேச சந்தர்ப்பங்கள் அவளுக்கு வாய்ப்பதில்லை.

சாதாரணமாகப் பேசுகிற போதே சுத்தத் தமிழிலே வெகு எளிமையாகக் கதைக்கிற அவளைக் கேட்டுக் கொண்டிருப்பதே அவளுக்கு ஒரு இனிய அனுபவம். இப்பொழுதோ அவளுக்கு பிள்ளைகளே சாட்டாய், பிள்ளைகளே உலகமாகி விட்டன.

அவன் அபூர்வமாக அங்கு வந்து அவளோடு கதைக்கையில் குரல் இடையிடையே கரகரத்துத் தளும்புகிற போது, அவன் தன்னைப் பற்றி நினைத்தே அவ்விதமாக மனதினுள் வெதும்பு கிறான் என்பதை உணர்ந்து பெருமூச்செறிவாள் பாலாம்பிகை.

2

தண்டாயுதபாணி நகரிலுள்ள தனியார் வியாபார நிறுவன மொன்றில் கணக்காளன். எங்குமே ஓராண்டு காலத்திற்கு மேலே கடமையாற்றியதில்லை. தகராறு தான்.

''என்னைப் புரிந்து கொள்ள யாருக்குமே சக்தியில்லை. அற்ப காசிற்காக நான் யாருக்குமே அடிமையாயிருக்க மாட்டன். என்னுடைய எழுத்துக்களைப் படித்து மயங்கிப் போயிருக்கிற மக்கள் ஒவ்வொரு எழுத்துக்கும் நூறு ரூபா தந்து கௌரவிக்கிற காலம் வரும். பொன் மலைக்குள்ளே நான் கிடந்து புரள்கிற காலத்தை என்னுடைய மனக் கண்களிலே காண்கிறேன்...''

தன்னை மறந்த நிலையிலே கதாநாயகனுக்குரிய முக பாவத்தில் புத்தகத் தமிழை ஒப்புவிப்பது போல அவன் கூறிக் கொண்டு போகையில் பாலாம்பிகை மிகப் பரிதாபத்தோடு அவனைப் பார்த்திருப்பாள். தன்னுடைய அத்தான சொகுசுக்காரருக்கு இலக்கியத்தின் மூலம் சேவகம் செய்து கிளுகிளுப்பினை மூட்டுவதற்காக எழுதிக் கொண்டிருக்கிறர் என ராசையா அடிக்கடி ஏளனக் குரலிலே கூறியிருக்கின்றான். இப்படியான சந்தர்ப்பங்களிலே அதனை நிரூபணமாகத் தான் காண்கிறதை உணர்வாள் அவள்.

வீட்டிலே ஏற்படுகின்ற பற்றாக்குறைகளைச் சொல்லாமலே சமாளித்து விடவேண்டுமென்று அவள் ஆரம்பத்திலே திட சங்கற்பம் பூண்டிருந்தாலும், சில வேளைகளிலே அவளின் பொறுமை தகர்ந்து எல்லை மீறிய ஆத்திரம் பொங்கிச் சீறும்; உலகத்தினோடு ஒட்டாத அசட்டுத் தனமான வாழ்க்கையினை அவன் வாழ்கின்றான் என்று மனஞ்சலித்து, ஆத்திரமடங்கி

மனதினை வேறு சிந்தனைக்குள் அவள் திருப்பி அமைதியுறுவாள்.

முன்வீடு, கொழும்பு நகரிலே உத்தியோகம் பார்க்கிற தனவந்தரினுடையது. வாடகைக்கு விட்டிருக்கிறார். சத்திரம் போன்ற அவ்வீட்டிலே மூன்று குடும்பங்கள் குடியிருக்கின்றன. முன்புறத்தினில் வெறுமையாகக் கிடந்த அறை அண்மையிலே தான் அப்பெண்ணிற்கு வாடகைக்கு விடப்பட்டது.

அந்த வீட்டின் பெயர் 'அன்னம்மா வாசம்.' மூன்று குடும்பங்களிலுள்ள பன்னிரண்டு குழந்தைகளோடும், பாலாம்பிகையின் குழந்தைகள் சேர்ந்து குதித்துக் களித்துக் கும்மாளியிடும். அந்த வீட்டிலும், இந்த வீட்டிலுமாய் 'ஒளித்து விளையாடல்' நடைபெறும். குழந்தைகளின் களிப்புக் குரல் இசை லயமற்ற கீதமாய்க் கேட்கும். அவர்களின் களிப்பினையோ, கூச்சல்களையோ இரு வீடுகளும் கேட்டு அலுக்காது தங்களின் நித்திய அலுவல்களில் மூழ்கியிருக்கும்.

அவள் 'அன்னம்மா வாச'த்தின் முன் அறையினில் குடியிருக்கவென வந்தாள். அவ்வளவுதான்; எல்லாம் போயிற்று. மகிழ்ச்சி, ஆரவாரக் குரல்கள் எல்லாமே அடங்கிப் போய், இரு வீடுகளின் உள் எல்லைகளிலேயும் தனித் தனியாக அவை உற்சாகமின்றி விளையாடின.

முன்பெல்லாம் 'அழகு இல்லத்'திலிருந்து குழந்தைகள் பொறுக்கியெடுத்துச் சென்ற நந்தியாவர்த்தம் பூக்கள் 'அன்னம்மா வாசத்'தின் நீண்ட படிகளில் சிதறிக் கசங்கி இதழ்களாய் உதிர்ந்திருக்கும். இப்போது அதன் தடமே இல்லை. பிஞ்சுகளின் ஏக்கப் பார்வைகள் ஒன்றையொன்று சந்திக்க அவாவுற்றுத் தோல்வி கண்டன.

அவள் அந்த முன்னறையினுள் குடியிருக்க வந்து ஒரு வாரங் கழியுமுன்னர் தண்டாயுதபாணி முகத்தைக் கோணலாக்கிக் கொண்டு பாலாம்பிகையைக் கூப்பிட்டான்:

'முன் வீட்டிலையுள்ள முன் அறையிலை ஒரு நடத்தை கெட்டவள் குடி வந்திருக்கிறாள். அவளோடை கதை காரியம் வைத்துக்கொள்ளக் கூடாது. குழந்தைகளை முன் வீட்டிற்குப் போகவிடாமல் நடு அறைக்குள்ளேயே இருந்து விளையாடச் சொல்லு...''

பாலாம்பிகையின் மனம் அலுத்துக் கொண்டது.

'முன் வீட்டில் யார் வந்து குடியிருந்தால்தான் எங்களுக்கு என்ன? இதுவரை அங்கு போய் விளையாடி வந்த இக்குழந்தைகளை என்ன சொல்லித் தடுப்பது? கள்ளங்கபடின்றிப் பழகிய குழந்தைகளின் அன்பினைக் கொடூரமான கட்டளைகளிட்டுப் பிரிப்பது தவறென்பது இவருக்குத் தெரியாதா?'

''என்ன நான் சொன்னது காதிலை விழுந்ததா?''

பாலாம்பிகை யோசனை கலைந்து தலையசைத்தாள். அன்றுதான் தண்டாயுதபாணியின் மேசையும் ஜன்னலடியிலிருந்து நகர்த்தப்பட்டது.

'பெண்களினுடைய உணர்வுகளையெல்லாம் இவரைப் போன்றவர்கள் ஒரு புறத்திலே மானபங்கம் செய்து கொண்டிருக்கிறார்கள். என்னையே ஒரு உதாரணமாகச் சொல்லலாமே... நான் என்ன சொன்னாலும் அதனை இவர் கவனிக்காமல், காலால் உதைத்தாற்போல அவமதித்து விடுகிறார். அவர் என்ன சொன்னாலும் வாயை மூடிக் கொண்டு நான் கேட்க வேண்டுமாம். எனக்குச் சுய கௌரவம் இருப்பதனை மறுத்து நடப்பவர்தான் மறுபுறத்திலே விபச்சாரத்திற்கு எதிராகப் போராடுவதாகச் சொல்லுகிறார். என்ன பாசாங்குத் தனம் இது?'

பாலாம்பிகையின் மன ஆழத்தில் முன் அறையினில் வசிப்பவளைப் பற்றி அறிய வேணுமென்ற ஆவல் வெகு ஆவேசமாகத் தலை தூக்கிற்று. அவள் அங்கே குடியிருக்க வந்ததை அறிந்த போதும் அவளை இதுவரையிலும் காணாதிருந்தாள் பாலாம்பிகை.

3

தன் அறைக்குள் உள்ள ஆளுயர நிலைக் கண்ணாடியின் முன்னாக நின்று, தன்னுடைய உருவத்தைப் பார்த்து நெற்றியின் முன்னர் கவிந்து விழும் தலை மயிரினைப் பரவசமாக நோக்கி விட்டு கதவைத் திறந்து கொண்டு வெளியே நடந்தான் தண்டாயுதபாணி. அவன் போனதும் கதவினை இறுக்கித் தாளிட்டுக் கொண்டு கடைசிக் குழந்தையான ராணிக்குத் தலை வாரி, முகம் அலம்பிப் படுக்கையறைக்குள் அவளை விட்டு, அவளிற்கு அருகாக அங்கங்கள் உடைந்த விளையாட்டுப் பொம்மைகளைப் பரப்பி வைத்தாள். இன்னொரு குழந்தை

யான கிரிஜா, அக்கா ஜோதியின் பாடப் புத்தகங்களை பக்கம் பக்கமாகக் கிழித்து தலை கீழாக 'அம்மா' படித்துக் கொண்டிருந்தாள்.

தண்டாயுதபாணியின் அறையினுள் சென்றாள் பாலாம்பிகை. அவ்வீட்டின் அறைகளிலே அழகானதும் சுத்தமானதும் அதுதான். ஜன்னல் திரைகள் துளிர்ப்பச்சை நிறத்திலே கண்ணுக்கு குளுமையளித்தன. மறுகணமே நெஞ்சினுள் எரிச்சல். பழைய நினைவுகள்..... ஒரு மாலை நேரத்தின் போது, அழகிய பூக்கள் நிறைந்த துளிர்ப்பச்சை நிறத் துணியினை அவளிடம் கொடுத்தான் தண்டாயுதபாணி. பாலாம்பிகை துணியைப் பார்த்தாள். நன்றாயிருந்தது.

''கிரிஜாவுக்கும், ராணிக்கும் கவுண் தைக்கப் போதும் இதே மாதிரி இன்னொரு யார்துணி எடுத்தால் ஜோதிக்கும் ஒரு கவுண் தைச்சிடலாம். எங்கையாவது வெளியாலை போறதென்றால் பிள்ளைகளுக்கு நல்ல கவுண் இல்லை'' என்று திருப்தியோடு சொன்னவளை அலட்சியமாகப் பார்த்தான் தண்டாயுதபாணி:

'' இந்தத் துணியை நான் வாங்கினது பிள்ளைகளுக்கு கவுண் தைக்கிறதுக்காக இல்லை. வெறும் ஜன்னலைப் பார்த்துக் கொண்டிருந்து ஒன்றுமே எழுத 'மூட்' வருகிறதில்லை. அதனாலை ஜன்னலுக்கு இந்தத் துணியைத் திரையாகத் தைத்துப் போட்டால் நல்லதென்று வாங்கி வந்திருக்கிறன்... இதிலை நல்லதொரு திரை தைச்சுத் தா...''

பாலாம்பிகையின் முகத்தைப் போலவே, மனமும் ஏமாற்றத்தினால் சுருங்கிப் போய் விட்டது... அந்த ஜன்னல் திரையினை இப்பொழுது நீக்கிவெளியே பார்க்கின்றாள் பாலாம்பிகை. எதிர் வீட்டின் முன் அறை தெளிவாகத் தெரிகின்றது. ஜன்னலுக்கு நீலவர்ணத்திரை. அது இருபுறங் களுக்கும் சுருக்கி விடப்பட்டிருந்தது. பார்த்துக் கொண்டு நிற்கையில் ஜன்னலடியிலே தோற்றமானாள் அவள். முழுகி உலர்த்தி தோளோடு அடர்ந்து வழிகின்ற தலைமயிரை முன்புறம் இழுத்து சீப்பினால் சிக்குத் தட்டிக் கொண்டிருந்தாள்.

பளிச்சென்று துடைத்தாற் போன்ற வட்டமுகத்தினில் இயல்பான கரும்புருவங்கள், வாளிப்பான கைகளும் தோளும், பாவாடையினைக் குறுக்காகக் கட்டியிருந்தாள். உதடுகள் அசைந்து கொண்டிருந்தன. பாடுகின்றாள் போலும்.அந்த நிலையிலே அவளைப் பார்க்கிற போது பத்து வருஷங்களிற்கு

முன்னால் சாந்தி வீட்டிலே பார்த்து வியந்த இரவிவர்மாவின் ஓவியம் பளீரிட்டது நெஞ்சினிலே. அதே உடல்வாகு. கோவில் சாமரை போன்ற படர்ந்த கூந்தல். அந்த ஓவியப் பெண்ணினதை விட சிறிது கூரான மூக்கு.

கெட்டுப் போன, தன்னுடைய கணவன் அருவருக்கின்ற நடத்தை பிறழ்ந்தவளைப் பற்றி பாலாம்பிகையின் மனந்தனிலே வேறு சித்திரமிருந்தது. மோக வெறியும், காம விகாரமும், குலுக்கும் மினுக்கும் நிறைந்த அந்த வடிவத்தினை இவளிலே பொருத்திப் பார்க்க முடியவில்லை பாலாம்பிகையால். 'அந்தத் தேவடியாள்' அழகாக, தூய முகத்தோடு காணப்படுவதும் அவளது ஒரு வேஷமோ என ஐயுற்ற அவள், தன்னுடைய கணவன் மிகவும் சீற்றமுற்று, துவேஷித்து, காறித் துப்புமளவிற்கு அவள் நிலை தாழ்ந்து போயிருப்பாள் என்றதை மட்டும் ஒப்பவில்லை.

சிறிது நேரத்தின்பின், அவள் ஆடைகளை அணிந்தவாறு, ஈர உடைகளை ஜன்னலை ஒட்டியிருந்த கம்பிக் கொடியில் உலர்த்தி விரித்தாள்.

தெருவினைப் பார்த்தபடியேதான், ஓரமெல்லாம் ரஸம் மங்கி வெளிறியிருந்த முகம் பார்க்கிற கண்ணாடியினை அவள் மாட்டியிருந்தாள். கண்களிற்கு மை தீட்டியபடியே தன் முகத்தினை கண்ணாடியிலே உற்றுப் பார்த்தவள், எதிர் வீட்டு ஜன்னலடியில் தன்னை அவதானித்துக் கொண்டிருந்த பாலாம்பிகையைக் கண்டு கொண்டாள். பின்னாலே திரும்பி பாலாம்பிகையைப் பார்த்து உடனேயே நேசபாவத்துடன் புன்னகை செய்தாள்.

பாலம்பிகைக்கும் புன்னகை புரியத் தோன்றிற்று; ஆனால் கணவனது குரல் அடித்தொண்டையில் காதோடு உறுமியது. மனம் நிதானமான முடிவிற்கு வராமல் அன்று போல என்றுமே குழம்பியதில்லை. ஜன்னலின் எதிரேயுள்ள காற்று உலுப்பிய வேப்பங் கொம்பினைப் பார்ப்பவள்போல நிமிர்ந்து பார்த்துவிட்டு ஜன்னலடியிலிருந்து நகர்ந்து மேஜைப் பக்கமாக வந்தாள். அவளுடைய இயல்புக்கு மாறான அப்போதைய செயல் அவளுக்கே புரியாமலிருந்தது.

இரண்டு மணி. வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்தது. பிள்ளைகளுக்கு சாப்பாட்டைக் கொடுத்து விட்டுப் புடவைத் தலைப்பால் விசிறிக் கொண்டிருந்தாள் பாலாம்பிகை. உடலும்

மனமும் களைத்துச் சோர்ந்து போயிருந்தன. அதிகாலை நாலரை மணிக்கு எழுந்தால் மத்தியானம் ஒன்றரை வரை அவள் சுழல்கின்ற பம்பரம். முன்னர் இவையெல்லாம் சாதாரண விஷயங்கள். இந்த நான்காண்டு காலத்தினுள் நிலைமை தலை கீழாகி விட்டது. ஜோதி பிறந்தபோது பிரசவ காலத்திற்கு முன்னும் பின்னுமான ஒரு மாத காலத்திற்கு பாலாம்பிகையின் தாய் மனோன்மணி அவளோடேயே உதவிக்கு நின்றாள்.

அவளுடையதும் குழந்தையினதும் உடுப்புகளை அலம்பிக் கொடுத்தாள்; மகளைக் குளிப்பாட்டி விட்டாள்; சமையல் வேலை செய்தாள். குழந்தையைப் பெறுவதும், அதனைப் பார்ப்பதும் உன்னுடைய வேலை என்பதைப் போல தண்டாயுதபாணி நடந்து கொண்ட போது அவனைப் பற்றிய அருவருப்பு மேலும் அவளுடைய் மனதினிலே, இறுகி வேர் பதிந்து விட்டது. தாயும் இதை ஜாடையாகச் சொன்னாள். அடுத்த பிரசவங்களிற்கு தாயும் அவளோடு துணையிருக்க வில்லை.

தன்னுடைய அறைக்குள்ளேயிருந்து தனது அலுவலங் களைக் கவனித்தவாறு, தன்னுடைய தேவைகளை யேல்லாம் இயலாத உடல் நிலையோடு அவள் நிறைவேற்றி வைத்த போது எவ்விதமான கூச்சமுமின்றி அவற்றை ஏற்றுக் கொண்டான் தண்டாயுதபாணி. அவள் அடிக்கடி தனது உதவியற்ற நிலையினை எண்ணி கண்ணீர் வடித்திருக்கின்றாள். உண்மை யாக எண்ணிப் பார்த்தால் அவள்தான் அந்த வீட்டின் வேலைக்காரி. பிள்ளைகளைக் கவனிக்கின்ற ஆயா. உடுப்புத் தோய்த்து வீடு பெருக்குகின்ற ஏவலாள். கடைசியில், தன்னுடைய உடற் சோர்வினையோ, மன நிலையையோ பற்றி அக்கறைப்படாது தன்னை மருவ வருகின்ற கணவனுக்குப் பிரியமான நேரங்களிலே இன்பமளிக்கின்ற போகத்துக்கு உரிய பெண்.

பாலாம்பிகை, தன்னைப் பற்றி எண்ணிக் கொண்டு போய், பொதுவாக எல்லாப் பெண்களையும் ஒப்பீடு செய்து யோசிக்கின்ற நாட்களே அதிகம். இவ்வேளையில் அவன் மாணவியாயிருந்தபோது நிகழ்ந்த சம்பவமொன்று நெஞ்சினை வந்து நனைத்துச் செல்லும்...

கல்லூரியிலிருந்து அன்றைக்கு பெருந்தொகையான மாணவிகள், விண்வெளி வலம் வந்த வெலன்டினா தெரஸ் கோவாவின் விஜயத்தைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தனர்.

கம்பீரமும், அழகுமிக்க தெரஸ்கோவாவைக் கண்ட மாணவிகள் மிகப் பரவசமெய்தினர். 'என்ன பெருமையான பெண் இவள்! ஆண்களோடு பெண்களும் எல்லா விதங்களிலும் சரி நிகர் சமானமானர்களே என்பதை வானவெளியில் பயணம் செய்ததின் மூலம் நிரூபித்த வீரமங்கை' என்ற வியப்பே, கல்லூரி முழுவதும் பரவி நின்றது.

ஆனால் சமய பாட ஆசிரியை பாமா மட்டும் அந்த உற்சாகத்திலே பங்கு கொள்ளாமல், ''மேற்கு நாடுகளுக்குத்தான் இதெல்லாம் பொருந்தும். கிழக்கு நாட்டுப் பெண்ணோ நாற்குணங்களை நாற்படையாகக் கொண்டவள். அவள் இருக்க வேண்டிய இடம் வீடு. மென்மையும், பணிவும் அடங்கிப் போதலுமே அவளிற்குரிய லட்சியங்கள்'' என்று அடித்துக் கூறி விட்டாள்.

அவளது வார்த்தைகள் மாணவிகளை ஏமாற்றி மனம் அலுக்க வைத்துவிட்டன. விஞ்ஞான ஆசிரியை திரிபுர சுந்தரி யிடம் சென்றபோது, மறுநாளைய மாணவர் மன்றக் கூட்டத் திலேதான் இதுபற்றி விரிவாகக் கூறுவதாகச் சொன்னாள். மனதைப் பிணிக்கின்ற கூட்டம் அது.

மனித குல வரலாற்றில் பெண் வகித்து வந்திருக்கின்ற இடத்தைக் கூறிக் கொண்டு போன ஆசிரியை இறுதி முத்தாய்ப் பாக, ''சமத்துவத்தைப் பற்றி வாயினால் பேசுவது அல்லது சட்டங்களினை இயற்றுவதினால் மட்டும் சமத்துவம் வந்து விடப் போவதில்லை. ஆனால் பெண்கள் தங்களது திறமை களை வளர்த்துக்கொள்ள முழுச் சந்தர்ப்பமும் அளிக்கப்பட வேண்டும். அப்போது தான் உண்மையான சமத்துவம் மலர முடியும். குடும்பத்தைப் பார்க்கவும், குழந்தைகளைப் பராமரிக்கவும் பொறுப்பாக உள்ளதால் பெண்கள் வீட்டோடு பிணைக்கப் பட்டுள்ளனர். அதனால் அவர்கள் ஆண்களோடு போட்டியிடவோ, திறமைகளை வளர்த்துக் கொள்ளவோ மறுக்கப் படுகிறார்கள். தனது குழந்தைகளையும், குடும்பத்தை யும் பராமரிக்க அரசு பரிபூரண உதவி அளித்ததின் பின்னரே சம உரிமைகளைப் பெண்கள் அனுபவிக்க முடியும். இதைச் சோஷலிஸ அரசாங்கம் பெண்களுக்கு தாராளமாகவே வழங்கு கிறது... இதன் அடையாளமே வெலன்டினா தெரஸ்கோவா...'' என்று அவள் கூறி முடித்த போது மண்டபமெங்கும் இளமையின் உற்சாகம் ஆனந்தமாகவே அலைபுரண்டது.

திரிபுரசுந்தரியை மாணவிகள் மொய்த்துக் கொண்ட போது அதே உற்சாகத்தோடு அவள், ''இன்றைக்கு நான் சொன்ன எல்லாவற்றையும் நினைவிலே வைத்திருந்து நீங்கள் நடப்பீர்களாயின் அதுவே எனது வார்த்தைகளுக்குப் பெரும் பரிசாக அமையும்...'' என்றாள்.

அந்தச் சம்பவம் நிகழ்ந்து எத்தனையோ ஆண்டுகள் கழிந்து விட்டன. அதனை மறக்க முடியாமல் எத்தனை நெருடல்கள் வாழ்க்கையில் வந்து போகின்றன! உண்மையான அன்பும் பாசமும் தழுவிய உறவுகள் அமைகின்ற வாழ்க்கை முறையிலே பண விவகாரம் ஒரு குறுக்கீடாகவே அமைய முடியாது; பெண் தனக்குரிய இடத்தை அடைவதன் மூலமே இந்த உலகம் உன்னதமான வாழ்வினை எய்த முடியும் என்ற திரிபுரசுந்தரியின் குரலினை மனதினுள் கேட்டவாறே கண்ணயர்ந்து போனாள் பாலாம்பிகை.

வெளியே மெலிதான காற்று, மரக்கிளைகளிடையே புகுந்து இலைகளை உரசி விளையாடிக் கொண்டிருந்தது.

5

தண்டாயுதபாணியின் மேஜையடிக்கு வந்த பாலாம்பிகை, மேசையிலே ஒரு கற்றை எழுதிய கடதாசிகள், புத்தகமொன்றி னால் பாரமழுத்தி வைத்திருக்கப் பட்டதனைக் கண்டாள். புத்தகத்தை எடுத்துவிட்டு கடுதாசிக்கட்டைப் பார்த்தாள். முகப்புத் தாளில் 'காதற் சிட்டுகள்' என்று தலையங்க மிட்டிருந்தது. தண்டாயுதபாணியின் ஏழாவது நாவல் அது.

அவனுடைய எழுத்துக்களை விழுந்து விழுந்து வாசிக்கின்ற ஏராளமான இளம் விசிறிகள் எழுதுகின்ற கடிதங்களை அவள் படித்திருக்கின்றாள். இளமையின் மோகாவேசத்திலும், ஆதாரமற்ற கனவுகளிலும் மிதக்கின்ற யௌவனத்தின் வெறியுற்ற புலம்பல்களாய் அவை அவளுக்கு ஒலித்தன. தண்டாயுதபாணி தன்னுடைய புனை பெயரினை வெகு கவர்ச்சிகரமாக 'அழகன்' என்று மாற்றியிருக்கின்றான்.

தனக்கு வருகின்ற கடிதங்களையெல்லாம் தனது இலக்கிய சேவைக்கு வழங்கப்பட்ட மதிப்பார்ந்த அங்கீகாரமெனக் கூறி

அவற்றை காத்தற்கு அரிய பொக்கிஷங்களாக அவன் பக்குவப் படுத்தி வைத்திருக்கிறான். வருவோர்க்கெல்லாம் வாசித்துக் காட்டியிருக்கின்றான். அவை பற்றிய தனது அபிப்பிராயங்களை இவள் பட்டும் படாமலும் சொல்லுகின்ற போதிலே தன்னுடைய முகச் சுழிப்பினால் அவற்றைக் காலினால் தூக்கியெறிகிற மனோபாவத்தை அவன் காண்பிப்பான்; இல்லையெனில் எழுந்து போய்'விடுவான். அந்த ஒதுக்கியெறிகின்ற உதாசீனங்கள் என்றென்றும் அவளது நெஞ்சினைச் சுட்டு ஆறாத வடுக்களாகி விட்டன.

இளமையிலே நெஞ்சினுள் விழுந்த கருத்துக்கள், ஒரு ஆண் மகனுக்குரிய சுதந்திரத்தோடு வளர்ந்திட்ட இயல்புகள் யாவுங் கலந்து தாம்பத்யத்தின் அடங்கிப் போதலுக்கு அவளைத் தயாராக்கி வைக்கவில்லை. பழைய வாழ்வின் நினைவுகளை எண்ணி நிமிர்தலும், குடும்ப மென்ற பாசத்தை எண்ணிக் கனிவதுமாகச் சக்கரச் சுழற்சியாகப் போயிற்று அவளது வாழ்வு. இப்படி நான்கு வருஷங்கள்.

தனது கணவனது எழுத்துக்களை தன்னால் ஏன் மனமார வாசிக்க முடிவதில்லை என்று அவள் விசாரம் செய்திருக் கின்றாள். அவளின் குடும்பத்தில் அவளும் ராசையாவும்தான் பிள்ளைகள். சுமாரான விவசாயக் குடும்பம். ராசையா எஸ்.எல்.ஸி.வரையே படித்திருந்தாலும் மிகத் திறமைசாலி. மாமன் முத்தையா நண்பனைப் போல பல விஷயங்களை அவர்களுக்கு தெரியப்படுத்துவார். அரசியல், வரலாற்றைப் புத்தகங்களை வாசிக்கக் கொடுப்பார். எல்லோருமாக அதனைப் பற்றி இறுதியிலே கருத்துப் பரிமாறிக் கொள்வார்கள்.

பாலாம்பிகை படிக்கின்ற காலத்திலே 'ஆண் மாரி', அல்லிராணி' என்று பட்டஞ் சூட்டி அழைக்கப்பட்டவள். எந்தப் பயமுறுத்தல்களுக்கோ, கேலிகளுக்கோ அவள் பயப் பட்டதில்லை. பதிலடி கொடுத்துவிடுவாள். இந்த இயல்புகளே, கணவனின் ஆதாரங்களற்ற கூற்றையும், போலித்தனங்களை யும் நிராகரிக்க உந்து சக்திகளாயின. ராசையா எஸ்.எஸ்.ஸி. படித்து ஓராண்டு கழிந்ததின் பின்னர் படித்த விவசாயிகள் திட்டத்திற்குச் சென்று விட்டான். அங்கே போய்ச் சில மாதங் களில் அவனது சிந்தனைப் பெரும்பாய்ச்சல் ஏற்பட்டிருந்த தனை பாலாம்பிகை அவதானித்துக் கொண்டாள்.

அவளுக்குத் திருமணம் நடைபெற்றபோது இருபது வயது. ராசையா அவளைவிட இரு வயதுகள் இளையவள்.

குறுகுறுவென்று பார்வையும், நிதானமான கதைகளும் சேர்ந்து முதிர்ந்த இளைஞனின் தோற்றத்தை அவனுக்குக் கொடுத்திருந்தன. தன்னைவிட இளையவள் போலத் தோற்றமளிக்கின்ற தமக்கையிடம் அவன் அடிக்கடி வந்து போவது வழக்கம். தகப்பனும், தாயும் ஒருவரையொருவர் ஆண்டொன்றினுள்ளே இறந்து விட்ட பிறகு அவனுக்கு ஒரே தங்கிடமாக அவளது வீடே அமைந்தது.

அதையும் சில காலத்திற்குள் மாற்றியமைத்து, பின்னர் நிரந்தரமாகப் படித்த வாலிபர் திட்டத்திலேயே தங்கி விட்டான். தன்னால், பாலாம்பிகையின் வீட்டிற்குள் சச்சரவுகள் உருவாவதை அவன் விரும்பவில்லை. இரண்டு மூன்று நாட்களின் மேல் அக்கா வீட்டிலே அவன் தங்கிவிட்டால், தண்டாயுதபாணியின் முகந்தனில் எள்ளுங்கொள்ளும் வெடிக்கத் தொடங்கிவிடும். பழைய நாட்களின் நினைவிலே அவர்கள் இருவரும் நிறையப் பேசிக் கொள்வார்கள். அவர்களின் சம்பாஷணை தண்டாயுத பாணிக்கு எரிச்சலினை மூட்டும்.

தனிமையில் இருக்கின்ற வேளைகளில் ஆத்திரங் கொப்பளிக்கின்ற குரலிலே, ''உன்னுடைய தம்பி, உனக்கென்ன அரசியல் வகுப்பா நடத்துகிறான்? இப்படி அவனோடை நேரத்தைப் பாழாக்காமல் பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் அள்ளி ஊற்று. உன்னுடைய போக்கு என்னாலை சகிக்க முடியாம லிருக்குது. இனி இப்படி நடவாதை'' என்று வற்புறுத்தலோடு கூறுவான்.

அவனது வார்த்தைகளைக் கேட்கின்றபோது பாலாம்பிகைக்கு அளவு கடந்த எரிச்சலுண்டாகும். எவ்வளவு கொச்சைத் தனமான, அரியாமை நிறைந்த குற்றச்சாட்டினை அவன் தங்களின்மீது சுமத்துகிறான் என எண்ணிடும் வேளையில் வயிற்றைக் குமட்டுகிற அருவருப்பு ஏற்பட்டு, மனம் பழைய நிகழ்ச்சிகளிலே கால்தரித்து நின்று சஞ்சலமடையும்...

பாலாம்பிகைக்கு திருமணமான நாளின்போது ராசையா, நாணத் திரை நீங்கிடாத அக்காவைப் பார்த்து வேடிக்கையான குரலிலே, ''அக்கா, இவ்வளவு காலமும் நீ நல்லாகவே படித்தாய். யோசித்தாய். என்னோடு தர்க்கங்களுமிட்டாய். இனி என்னென்ன மாதிரி மாறிப் போய் விடுவாயோ...? பிள்ளைகள் பெறுகிறது, இவற்றை வளர்க்கிறது... பிறகு கலியாணம் செய்து வைக்கிறது என்ற யோசனையிலேயே உன்னுடைய வாழ்க்கை கழித்திடப் போகிறது...'' என்று கூறினான்.

உடனேயே அவள் பதிலளித்தாள்: ''ஒரு நாளும் நான் அப்படி இருக்க மாட்டான்...''

''பெண் அடிமைத்தனம் இன்னமும் அழிந்துபோய் விட வில்லை. அது இந்த முதலாளித்துவ அமைப்பு இருக்குமட்டும் வாழும். நீ இளவயதிலையிருந்து கற்றுச் சேமித்து வைத்திருக்கிற கருத்துக்கள் உன்னுடைய கணவனுக்கு உடன்பாடில்லாமல் குடும்பத்திலை சச்சரவுகள் ஏற்படும், குடும்பத்திலை யாரோ ஒருவர் விட்டுக் கொடுக்க வேண்டிவரும்; அது நிச்சயம் பெண் ணாய்த்தானிருக்கும். பெண் சொல்வது எவ்வளவு நியாய மாயிருந்தாலும், இந்த அமைப்பு ஏற்படுத்தி வைத்திருக்கிற சட்டதிட்டங்கள் அதை ஏற்றுக் கொள்ள மறுத்துவிடும்...

''பெண்ணுக்குச் சுயசிந்தனை, அரசியல் தொடர்பு, கருத்துச் சொல்லும் சுதந்திரம் ஆகியன இருக்கக் கூடாது என்ற அயோக்கியத்தனமான அடக்கியொடுக்கும் குரூரமான மனப்போக்குள்ள சமுதாயத்திலை உன்னுடைய நல்ல சிந்தனைகளையெல்லாம் நீ கைவிட்டு விடுவாய் என்று நான் நினைக்கிறதில்லை. அது தவறுமில்லை. நீ உன்னுடைய கருத்துக்கள் சரியென்று வாதாடினால் நீ வாழ்வை இழக்கிறதைத் தவிர வேறை வழியில்லை, இளமை முதலாக மனதினுள் வளர்த்து வந்த கருத்தா, அல்லது முதுவைவரையுள்ள குடும் பமா...? அந்தச் சிக்கலிலே நீ எதனை ஏற்றுக் கொள்ளுவாய்...? ஒரு காலம் விரைவிலேயே வரும். பெண்டி மைத்தனமில்லாத இக்காலத்திலே உன்னுடைய குழந்தைகள் நிச்சயமான உன்னுடைய இளமைக் கனவுகள் போலவே வளர்ந்து முன்னேற்றமடையும்...''

6

எத்தனையோ அதிகாலைகளில் துயிலெழுந்து சூனியத் தைத் துளாவிப் பார்த்தபடி பெருமூச்செறிந்திருக்கிறான் பாலாம் பிகை. தன் வாழ்விலே எவ்வளவோ விஷயங்களெல்லாம் வீணாக இழந்து போனதினை எண்ணி அவளது மனம் விசாரப் படும் போதெல்லாம் தன் குழந்தைகளை வாத்ஸல்யத்தோடு அணைத்து விளையாடி அதிலோர் அமைதி காண அவள் முயன்றிருக்கின்றாள். அவைதான் அவளிற்கு ஒரே புகலிடம்; அமைதி தருகின்ற இனிதான நிழல்.

கொடி போல மெலிந்த பாலாம்பிகையின் அழகிய முகமும், உணர்ச்சிமயமான கண்களும் முன்பு போலன்றி இப்போது துக்கமும், விசனமுங் கலந்திருந்தன. ராசையா அவளை இப்போது காணுகின்ற போதெல்லாம் அவளுடைய வாட்டத்தினைக் கவனித்து, தன்னுள்தானே கவலையும் இரக்கமும் கொண்டிருக்கிறான். இந்த விளைவுகளையெல்லாம் அவன் முன்னரே ஊகித்திருந்த போதிலும், நடைமுறையில் அதனை அனுபவிக்கின்ற போதினில் மனந்தனிலே பெருந்துயர் கவியும்.

ஒவ்வொரு நாளும் மணல் முற்றத்திலே விழுகின்ற தனிக்கற்கள் காலப் போக்கிலே கற்குவியல் ஆகிடுதல் போலே, கணவனோடு முரண்படும் நிகழ்ச்சிகளெல்லாம் காலப்போக்கிலே மனதினைக் காயப்படுத்தி ஆறாத புண்களெனவே நெருடுகின்றன. திருமணமாகு முன் அவளது நெஞ்சிலே குழந்தைகளைப் பற்றி இனிய சித்திரங்கள் வரையுண்டிருந்தன... 'குழந்தைகள் நமது வருங்கால சம்பத்து. உலகத்திலே ஒரு புதிய மாளிகைக்கான அத்திவாரம் இடப்பட்டுள்ளது; அதை நமது குழந்தைகள் கட்டி முடிப்பார்கள். அவர்களின் உலகம் இன்பமயமானதாயிருக்கும்...'

ஆனால் திருமணமாகிக் குழந்தைகள் பெற்ற பின்னர், வாழ்வின் அவலங்களிடையே இவைகளெல்லாம் வெறுங் கற்பனைகளோ என அவன் மனம் நைந்தாள். மூன்று குழந்தைகளையும் அவள் நினைத்தது போல வளர்க்க முடியாத பற்றாக்குறை அவளைப் பிய்த்துத் தின்றது. 'மூன்று குழந்தைகளுக்கு நீர் தகப்பனா? நம்ப முடியவில்லையே!' என்று பிறர் ஆச்சரியப்படுவதை மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்திகளாகக் கூறி பெருமிதமுற்றவாறிருந்தான் தண்டாயுதபாணி.

ஓய்வான நேரங்களிலே, பாலாம்பிகை தனது சினேகிதிகள் பலரை மனமேடையில் நிறுத்தி அவர்களின் வாழ்வினைப் பற்றி விசாரம் செய்திருக்கிறாள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆசை; இலட்சியம்; கனவுகள்; எதிர்பார்ப்புகள் இருந்தன. எல்லாம் திருமணமாகும்வரைதான். ஒவ்வொருத்தியும் இப்போது வெங்காயத்தைக் குறியீடு செய்து நிற்கிறாள். உரிக்க உரிக்க என்னதான் வெங்காயத்திலே எஞ்சி நிற்கின்றது.

ஒரு பெண்ணிற்கு இந்தச் சமுதாயத்திலே கொடுக்கப் பட்டுள்ள இடம். இப்பொழுதுதான் அவளுக்கு நிதரிசனமாகப் புரிகின்றது. பொருளாதார ரீதியாக அவள் சிறை வைக்கப் பட்டிருக்கின்றாள். ஆண்டாண்டு காலங்களாக பல உரிமைகள்

பறிக்கப் பெற்று அடங்கி வாழ்தலே பதிவிரதா தர்மம் என உபதேசிக்கப் பெற்று வெறும் பிள்ளைப் பூச்சியாக வாழ அவள் பணிக்கப் பட்டிருக்கின்றாள்! எவ்வளவு வேஷங்கள் கட்டி வாழ்கின்றது பெண்குலம்! எத்தனை பொய் முகங்கள் அவள் மீது திணித்து மூடப்பட்டுள்ளன... கணவனுக்கு அடங்கி, குனிந்த தலையோடு பணிவாக வாழ்பவள் போல உருவந் தரித்துக் கொண்டு மனப் புழுக்கத்துடன் தன்னைத்தானே சிதைத்துக் கொண்டு வாழ்கின்றாள் பெண்.

உடல் ரீதியாகவும், மனந் தொடர்பாகவும் அவள் திருப்தியடையாவிடினும் அதனைக் காட்டிக் கொள்ளாமல், சந்தோஷமாக வாழ்பவள் போன்று தன்னை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவனது பாதர விந்தங்களில் தன்னுடைய சேவையினை அர்ப்பணித்திடல் வேண்டும், இதுதான் அவளுக்கு விதிக்கப்பட்ட தர்மமாம். நல்ல கௌரவமான பெயர் - பதிவிரதா தர்மம்! - மனதினுள்ளே நுரைத்துப் பொங்கிய எல்லை மீறிய கசப்பினோடு சிரித்துக் கொண்டாள் பாலாம்பிகை.

தனக்குத் திருமணம் முடிந்த பின்னர் வந்த மூன்றாம் நாள்தான் இன்னும், இன்னுமொரு மூரட்டுத் தனமான பசுமை வாய்ந்த நினைவாகத் தரித்து நின்கின்றது அவள் நெஞ்சினிலே -

திருமணமாகி மூன்றாம் நாளன்று அதிகாலையிலே எழுந்து அவள் குளித்துக் கொண்டிருந்தாள். இயல்பாகவே மிகவும்நாண மான சுபாவங்கொண்ட அவள், புதிய சூழ்நிலையில் மிகவும் கூச்சமடைந்திருந்தாள். தண்டாயுதபாணி கிணற்றடிப் பக்கம் வந்ததும், வெட்கங்கலந்த பதட்டத்தினோடு ஓடிச் சென்று தனது ஆடைகளை உடுத்துக் கொள்ள எத்தணித்தாள். தண்டாயுத பாணிக்கு முகம் சிவந்தது. குரலின் அழுத்தத்தில் ஆத்திரம்.

"ஏன் வெட்கப்பட வேணும்? நீ குளிக்கிறதை நான் பார்த்து ரசிக்க வேணும்... நீ சுத்த கர்நாடகமாக இருக்க நான் விடப் போறதில்லை" என்றவாறு அவளின் கையைப் பிடித்து, அவள் அரைகுறையாக அணிந்திருந்த உடையைக் களைய ஆரம்பித்தான்.

அவனது இரும்புப் பிடியினுள்ளே திணறிய அவளுக்கு நெஞ்சையும், கண்களையும் பிழிந்து கொண்டு அழுகை பொருமிப் பீறிட்டது. அவனோ விடுகின்ற பாடாயில்லை. அவளின் நெஞ்சினில் அன்றே கசப்புணர்ச்சி விதையூன்றி

விட்டது. தன் உணர்ச்சிகளுக்கு, பெண்மையின் மென் இயல்பு களுக்கு மதிப்புக் கொடுக்காது தன்மேல் மிருகமொன்றெனக் கடித்துக் கொதறிய இவனோடு வாழ்நாள் முழுவதும் இணைந்து வாழ வேண்டுமே...

நான்கு வருடத் தாம்பத்திய நாடகம்; வெறும் நடப்பாகத்தான் அது கழிந்து போய் விட்டதா?

7

தண்டாயுதபாணியின் நண்பர்களான இருவரே அவனது வீட்டிற்கு வந்து போவார்கள். குள்ள வடிவமுடைய, அடர்ந்த தலைமயிரும், பிறரை கௌவி எடுத்திட முனைகிற கண்களும், எந்நேரமும் செயற்கைப் புன்னகை தரித்த முகமும் உடையவனான சபாரெத்தினம் ஒருவன். மற்றவன் தேவதாஸ் - புத்தகப் பிரசுரிப்பாளன். மிகக் குள்ளமான அவன் உரத்துப் பேசி அவன் கேட்டதில்லை. அவனுடைய ஒழுக்கம் மெச்சத் தக்கதென்று ஒருநாள் சபாரெத்தினத்திற்கு தண்டாயுதபாணி கூறியபோது அவன் நமுட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தான்.

சபாரெத்தினத்தைக் கண்டால் பாலாம்பிகைக்கு அறவே பிடிக்காது. விஷப் புழுவொன்றினை அருவருப்பது போல அவனை அவள் வெறுத்தாள். கண்களைச் சிமிட்டி அவன் புன்னகைக்கிற போதிலே முகத்தைக் கடூரமாக்கிக் கொண்டு, அவன் முகத்திலே மானசீகமாகக் காறித் துப்பிச் சென்றாள். அவன்மீது தண்டாயுதபாணி மிகவும் மதிப்பு வைத்திருந்தான். அடிக்கடி புதிய புத்தகங்களைக் கொண்டு வந்து இவனுக்கு வாசித்துக் காட்டி, அவைகளைப் பற்றி விவாதங்களினைப் புரிவான் சபாரெத்தினம். எல்லாம் காதல், செக்ஸ், கட்டற்ற வாழ்வு பற்றிய விவகாரங்கள்தான். அவன் அடிக்கடி கூறுவது தண்டாயுதபாணியின் மனதில் ஆணியெனப் பதிந்திருக்கின்றது.

''பெண்களிலை அழகில்லாதவள் என்றோ, அனுபவிக்க முடியாதவள் என்றோ யாருமில்லை. நாங்கள்தான் அதை உணர முடியாமல் இருக்கிறோம். இந்த விஷயங்களைப் பரவச் செய்து, பெண்ணானவள் எதற்குப் படைக்கப் பட்டாளோ, அதன் நோக்கத்தை அவள் அடையத்தக்கதாய் உன்னுடைய பேனாவால் நீ பெரும் புரட்சி செய்ய வேண்டும்...''

இன்றைக்கு வந்தபோது, ஒரு பெரிய கட்டுப் புத்தகங் களுடன் வந்தான் சபாரெத்தினம். தற்செயலாக அடுத்த அறைக் குள் நின்ற பாலாம்பிகைக்கு அவர்கள் இலேசாகப்பேசிக் கொள்வது கேட்டது. அந்த இரகசியக் குரல்கள் அளித்த சந்தேக உணர்வினால், தன்னறியாமலே அவள் நின்று கவனித்தாள்.

''இந்தப் பார்சலுக்குள்ளை ஹெரல்ட் றொபின்சனுடைய மூன்று புத்தகங்களும், ஆறு 'பிளேபாய்' மெகசீன்சும் இருக் குது. உன்னுடைய பெண்சாதியினுடைய கண்படாத இடத்தில் வைத்து வாசித்துவிட்டு திருப்பித் தந்திடு. இந்தப் புத்தகத்திலை உள்ள விஷயங்கள் உன்னுடைய பதில் நாவல்களுக்கு நல்ல கருத்துக்களையும், கருவையும் தேடித் தரும். கவனம்... புத்தகங்கள் யாருடைய கண்ணிலும் படக்கூடாது...''

வெகு ஆர்வத்தோடு அப்புத்தகங்களைப் பிரித்துப் பார்த்துக் கொண்டே பதில் கூறினான் தண்டாயுதபாணி.

''என்னுடைய மனைவி எக்காரணங்களையிட்டும் என்னுடைய அலுவல்களில் குறுக்கிட மாட்டாள். அத்தோடு அவளுக்கு இந்த விஷயங்களிலை அக்கறையுமில்லை... நான் அதை விரும்பமாட்டேன் என்பதையும் அவள் அறிவாள்...''

பாலாம்பிகைக்கு அவர்கள் இருவரின் முகத்திலும் காறித் துப்ப வேண்டும் போல மனம் அருவருப்புற்றது; சினம் பகீரிட்டது.

''என்னைப் பாரும், அழகன். நான்தான் வாழ்க்கையை அனுபவிக்கத் தெரிந்தவன். குடும்பமோ, குட்டியோ எனக்கு ஒன்றுமில்லை. சுதந்திரமான மனிதன். இந்தப் புத்தகங்களை நீர் வாசித்தீரென்றால் செக்ஸ் வாழ்க்கையின் புதிய பரிமாணங்களையெல்லாம் அறிந்து கொள்ள முடியும்... உலகம் செக்ஸை என்னென்ன விதமாக, புதுப்புது முறைகளில் அனுபவிக்கிறதென்பதை இதிலிருந்து அறிய முடியும். இந்த முறைகளை உம்முடைய நாவல்களில் நீர் இடம் பெற வைக்க வேணும். புரட்சிகரமான காதல், செக்ஸ் உறவுமுறைகளை யெல்லாம் தமிழர்கள் உணராமல் இருக்கிறார்கள். செக்ஸ் என்பதும் ஒரு விதத்தில் யோகம்தான். இந்த ஒழுக்க வரம்புகள், சமூகக் கட்டுப்பாடுகள் எல்லாம் அனுபவிக்கத் தெரியாத ஆண்மையற்றவர்களின் தற்காப்பு ஏற்பாடுகள் என்றுதான் நான் நினைக்கிறேன். அதைப்பிறர் அறியச் சொல்லவும் வேண்டும்...''

வெகு தீர்க்கமாகக் கூறிக் கொண்டு போன சபாரெத்தினம் சிறிது இடைநிறுத்தி விட்டு, ஒரு புத்தகத்தினை எடுத்துப் பக்கங்களை விரித்தான். அதிலுள்ள படங்களை ஒவ்வொன்றாகக் காட்டி விளக்கங்கள் கொடுத்தான். அந்த மோசமான படங்களினைப் பார்த்தத் திகைப்பிலிருந்து மீளாதவனாக, குரல் தளதளக்கக் கேட்டான் தண்டாயுதபாணி.

''சம்பவே முடியவில்லை. எத்தனை விதமான அனுபவிப்புகள், அவையெல்லாம் இங்கு சாத்தியமானவையா? இதையெல்லாம் சட்டம் இங்கே அனுமதிக்குமா? திகைப்பாயிருக்குது...''

கடகடவென்று உரத்த குரலிலே சிரித்தான் சபாரெத்தினம். பின்னர் அடங்கிய குரலிலே கூறினான்.

''சட்டம் என்றால் என்னவென்று இன்னமும்தான் எழுத்தாளரான உமக்குத் தெரியவில்லையே... வசதியுள்ளவர்களுக்குப் பாதுகாப்புச் செய்வதற்குத்தான் சட்டம் செயற்பட முடியும்... அப்பிடி அவர்களுக்கு எதிராகச் செயற்படுகிற சட்டத்திற்கு எவ்வித பலமும் இருக்க முடியாது... நீர் இவைகளையெல்லாம் பெரிய புதினமாகப் பார்க்கிறீர்... நான் இதையெல்லாம் அனுபவமாகப் பெற்றிருக்கிறேன்... காசை வீசியெறிந்தால் எல்லாமே காலடியில் வந்து சேருமென்றது கொஞ்சமும் பொய்யில்லை. மண் தின்னுவதை மனிதன் தின்றால் அதிலென்ன தவறு...''

பிறகு அங்கே சிறிது நேரம் மௌனம் நிலவியது. மேலும் அந்த அறையிலே நிற்க விரும்பாமல் பாலாம்பிகை அங்கிருந்து சமையலறையை நோக்கி நடந்தாள். அதன் பின் இரண்டொரு மணித் தியாலங்கள் வரை அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். பாலாம்பிகை மனஞ் சிடுசிடுக்க, சமையல் அறையிலிருந்த வேலைகளினைச் செய்து முடித்தபிறகு குழந்தைகளினை அணைத்தபடி படுத்து நித்திரையானாள்.

இரண்டு தினங்கள் வரை தண்டாயுதபாணி விடிய விடிய இருந்து புத்தகங்கள் வாசிப்பதும், எழுதுவதுமாயிருந்தான். குழந்தைகள் தற்செயலாக அறைக்குள் எட்டிப் பார்த்தாலும் உரத்த குரலிலே திட்டித் தீர்த்தான்.

''என்னுடைய வேலைகளைக் குழப்பாமல் போங்கள். அடீ, இந்தப் பிசாசுகளை இழுத்துக் கொண்டு உள்ளே போ... நீ என்ன செய்கிறாய்?''

பாலாம்பிகை கனக்கின்ற இதயத்தோடு பிள்ளைகளை உள்ளே கூட்டிக் கொண்டு போனதும், மீண்டும் நான எழுதிய காகிதத்தை வாசித்துவிட்டு, பிறகு தனக்குள்ளேயே முணு முணுத்துக் கொண்டான்.

'இந்தப் புத்தகத்தை நான் எழுதி முடித்து அச்சில் வெளி வந்ததின் பிறகு என்னுடைய பெயர் எல்லாருடைய வாயிலும் நிச்சயமாக அடிபடப் போகின்றது. என் முழுத் திறமையையும் பிரயோகித்து, இந்தப் புரட்சிகரமான நாவலை எழுதி முடித்திருக்கிறேன். இந்தப் புத்தகத்தை அரசாங்கம் தடை செய்து பறிமுதலாக்கினால் இன்னமும் எனக்குப் பெயர் வரும்; விளம்பரமும் அதிகரிக்கும்...'

மத்தியானம் தண்டாயுதபாணி சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, சபாரெத்தினம் பரபரப்போடு அங்கே வந்தான். அவனைப் புன்னகையோடு எதிர்கொண்ட தண்டாயுதபாணி, தான் எழுதிய புதிய நாவலைப் பற்றிப் பெருமையோடு குறிப்பிட்டான். அவ்விடத்தில் நிற்கவே அருவருப்புற்றவளாய் விறுக்கென்று உள்ளே போய்விட்டாள் பாலாம்பிகை.

''அப்படியா? நான் உம்மிடமிருந்து இப்படியானதொரு நாவலைத்தான் எதிர்பார்த்திருக்கிறன். சரி, முதலில் நாவலைத் தாரும். வாசித்துப் பார்ப்பம்'' என்று உற்சாகத்தோடு கூறினார் சபாரெத்தினம்.

''எப்பிடியிருந்தாலும் உம்முடைய உற்சாகம் இல்லாவிட்டால் இப்படியொரு ரஸமான நாவலை நான் எழுதியே இருக்க மாட்டேன். சபா, நீர் தந்த புத்தகத்திலையுள்ள பல கருத்துக்களை இந்தப் புத்தகத்திலை வெகு அருமையாகச் சேர்ந்திருக்கிறேன்... வாசித்தீரென்றால் இதை உண்மையென்று ஒப்புக் கொள்வீர் 'உடல் சிலிர்க்கும்'படி எழுதியிருக்கிறேன்...''

நாவலை வாசித்துக் கொண்டிருந்த சபாரெத்தினத்தின் முகத்திலே ஏற்பட்ட மாறுதல்களை மகிழ்ச்சியோடு பார்த்து இரசித்துக் கொண்டிருந்தான் தண்டாயுதபாணி. சபாரெத்தினத் தின் முகமாற்றத்தின் பின்னணியில் தான் எழுதிய சிருங்கார ரஸம் இயங்குகிறதென்ற நினைப்பிலிருந்த அவனைச் சபாரெத்தினம் நாத் தழுதழுக்கச் சொன்ன வார்த்தைகள் மேலும் உற்சாகப் படுத்தின.

''அழகன், தமிழிலை இப்போது உன்னுடைய வடிவத்தில் ஹெரல்ட் ரொபின்ஸ் வந்து பிறந்திருக்கிறான். வாத்ஸ்யாயன

ரும், கொக்கோக முனிவரும் ரிஷிகள் என்று சொல்லுகிறார்கள். அந்த ரிஷிகள் உடலுறவு இன்பங்களைப் பற்றி, தவமிருந்து ஆராய்ந்து எழுதியவற்றை இரகசியமாகவே இன்றும் நாங்கள் படித்து வருகிறோம். இன்று அவற்றிலே பல காலத்திற்கு ஒவ்வாதவைகளாகி விட்டன. நீர் எழுதிய புத்தகத்தினாலை தமிழ்ப் பெண்களுக்குத்தான் அதிக பயன். எங்களுடைய பெண்களை நினைத்தால் தனக்கு மிகவும் பரிதாபம்.''

சொல்லிக் கொண்டு போனவன் குரலைத் தாழ்த்தினான். பின்னர் அவன் கூறிய விஷயங்கள் தண்டாயுதபாணியைத் திக்கித்துப் போகச் செய்தன. உடலில் நடுக்கம், அர்த்தமற்ற நடுக்கம் மெதுவாக ஊர்ந்து பரவுவதாய் உணர்ந்தான்.

''எழுதுபவன், அனுபவத்தினைக் கொண்டிருந்தால் தான் தத்ரூபமாக எழுத முடியும். சமுதாயத்திலே எழுத்தாளன் தனிப்பிறவி. அவனுக்குப் பல சுதந்திரங்கள் இருக்க வேண்டும். இல்லாவிட்டாலும் அவன் அதை ஆக்கிக் கொள்ள வேண்டும். மேற்கு நாட்டிலை எல்லாம் எழுத்தாளன் என்றால், அவனுக்கு எல்லாவிதமான சுதந்திரங்களுமே உண்டு. பெண்களைப் பற்றி எழுதுபவனுக்குப் பெண்கள் பற்றிய அனுபவங்கள் நிறையவே இருக்க வேண்டும்... அழகன், இதை நினைவிலை வைத்திரும். இவ்விஷயத்திலை நான் உமக்கு எல்லா உதவிகளையும் செய்வேன்...''

சபாரெத்தினத்தின் குரல் மீண்டும் மீண்டும் தண்டாயுத பாணியினது காதுகளிலே ஒலித்துக் கொண்டிருக்கிறது.

8

என்றும் திறந்திருக்கும் முன்வீட்டு ஜன்னல் இப்போதும் திறந்திருக்கின்றது. நீல வண்ணத் திரைச்சீலை மாறி இப்போது மஞ்சட் பூக்கள் நிறைந்த திரை. அந்தப் பெரிய வீட்டின் வாசற் கதவு அரைகுறையாய் மூடிக் கிடந்தது. லேசான காற்று, கதவினை மெதுவாக அலைத்த போதும் அதனை மூடிவிட உள்ளேயிருந்து யாருமே வரவில்லை.

அந்த ஜன்னலையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள் பாலாம்பிகை. அந்த அறையில் வாழ்கிறவளை சுற்றிப் பரந்தது சிந்தனை. தன்னையறியாமலே, அவளின் மீது எல்லை

மீறியதோர் பிடிப்பு ஏற்பட்டதனை எண்ணி வியந்தாள் பாலாம்பிகை. அவளைப் பார்க்க வேண்டும், நிறையப் பேச வேண்டும் போலிருந்தது. இவளுக்குப் பெற்றோர் இருப் பார்கள்; கூடப் பிறந்தவர்களிருப்பார்கள்; மண முடிக்க வேண்டும்... பிள்ளை பெற்றுக் கொஞ்சி விளையாட வேண்டும் என்ற ஆசைகள் நெஞ்சு நிறையவே இருக்கும்... பிறகு ஏன் இவள் உலகம் பழிக்க இப்படித் திரிகின்றாள்? மின்னல் போல சபாரெத்தினம் தனது கணவனோடு கதைத்த அந்த நாளும் ஹெரால்ட் ரொபின்சும், பிளேபாய் புத்தகத்தின் நிர்வாணப் பெண்களும் நினைவில் மிதந்து...

''முதலாளித்துவத்தின் சீரழிவிலே தோன்றும் தவிர்க்க முடியாத அம்சம் விபச்சாரம். இவ்வமைப்பில் பெண்ணானவள் போகப் பொருளாக, விற்பனைப் பண்டமாகத்தான் மதிக்கப் படுகின்றாள். முதலாளி எதையுமே விற்பனைப் பொருளாகத் தான் கணக்கெடுப்பான். மனிதனை இறைச்சியடித்து விற்க முடியுமென்றால் அதைக் கூட வெகு ஆர்வத்தோடு இவர்கள் செய்து முடிப்பார்கள். இந்த அமைப்பு இல்லாதொழியும் வரை இந்த நிலைமைதான் தொடர்கதையாக நீளும்...''

இராசையாவின் குரல், நேற்றே சொன்னது போல.

அவளின் மனம் தன்வசமிழந்து தளும்பினாற்போல வேதனையுடன் முணுமுணுத்தது.

'இந்த முறையானது இல்லாதொழிகின்ற வரையும் பெண் குலம் வேஷமிட்டு, தனது உணர்ச்சிகளைக் கொன்று புதைத்துத் தான் வாழ வேண்டுமா? இதே கட்டுப்பாட்டு நுகத்தடியினை தன் கழுத்திலே பிணைத்து செக்குமாடாக உழல வேண்டுமா?'

வெளியேயிருந்து கேட்ட கலகலப்புக் குரல்களில் சுயநினை வுற்றாள் பாலாம்பிகை, நிமிர்ந்து பார்த்தாள். எதிர்வீட்டு வாசலில் நின்ற டாக்ஸியிலிருந்து இறங்கிய தளுதளுப்பான பெண்ணை, உள் அறையிலிருந்து வந்த பெண் மகிழ்வோடு வரவேற்றாள். புதிதாக வந்தவளுக்கு நாற்பது வயது மதிக்கலாம். அலங்காரங் களினால் இருபது வயதைப் பிரதிபலித்தாள். ''பாப்'' தலை. பளீரிடுகிற ஜிப்ஸி. பூனைக் கண்கள். தொப்புள் வரை காட்டி நிற்கிற நைலெக்ஸ். அதே வர்ணத்தில், கையற்ற தாழ்வாகக் கழுத்து வெட்டிய பிளவ்ஸ். மார்புக் குவட்டினில் செருகிய கைலேஞ்சி. வேண்டுமென்றே கைவீச்சும், பின்பாகத்தைப் பார்க்க அழைக்கின்ற செயற்கை நடையும் இயற்கையான

பழக்கமாகி விட்டது போலும், வயிற்றைக் குமட்டியது பாலாம்பிகைக்கு.

இப்போது எதிர்வீட்டுக்காரியின் மீது கோபம் சீறிக் கொண்டு வந்தது. எதிர் வீட்டுக்காரி, இந்தத் தரம் கெட்டவளுடன் ஏன்தான் சினேகிதம் வைத்துக் கொண்டாளோ என யோசித்து பாலாம்பிகை பிறகு தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள்.

'அந்த எதிர்வீட்டுக்காரியும், நாற்பது வயதுத்தளுக்குக் காரியும் ஒரே தொழிலினைத் தானே செய்து பிழைத்துக் கொள்கின்றார்கள். இருவரும் வாடிக்கைப் பிடிப்பதிலும், அலைந்து அதனைத் தேடுவதிலும், சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொள்வதிலும், வாழ்வின் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதிலும் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக இருப்பார்கள். சில வேளை, வாழ்விலே மிகவும் அல்லற்பட்டுக் கொண்டிருந்த இவள்தான் இந்தத் தொழிலிற்குள் இவளையும் புகுத்தியும் இருக்கலாம்...'

எதிர்வீட்டு ஜன்னல் இப்போது திறந்து கொண்டது. அவர்கள் இருவரும் தெரிந்தார்கள். நாற்பது வயதுக்காரி ஆயாசத்துடன் கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். முகத்திலே பொருமியிருந்த சோர்வோடு கவலையும் நிராசையும் கவிந்திருந்தன. சில நிமிஷங்களிற்கு முன்பிருந்த முகத்தோடு, இப்போதுள்ள முகத்தினைப் பொருத்திப் பார்க்க முடியவில்லை. வயலிலே களைபிடுங்கிக் களைத்து, வரப்போரமாக இளைப் பாறுகிற குடியானவப் பெண்ணாகத் தெரிந்தாள். அவள், அந்தரங்கமாக மறைத்து வைத்திருப்பது இந்த முகத்தையாகத் தான் இருக்க வேண்டும், அவள் வெளியுலகிற்கு அணிந்து செல்வதெல்லாம் பொய் முகம். பாலாம்பிகையின் மனதினுள்ளே பல எண்ணங்கள் குமிழியிட்டுப் பெருகின...

இப்போது அவர்கள் இருவரும் கட்டிலிலேயே சாப்பாட்டுப் பார்சலை விரித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். உள்ளே கிரிஜாவின் மழலைக் குரல் பாடிக் கொண்டிருந்தது. கொத்திக் கொள்வதும், கரைவதுமாயிருந்த இரு காகங்கள் ஜன்னலால் வீசப்பட்ட பார்சலைக் கண்டதும் வீச்சாகப் பறந்து, விழுந்த இடத்தில் இறங்கின. கறுப்பன் நாய் சிலிர்த்து, உறுமிக் கொண்டு எச்சில் பார்சலை வாயினால் கௌவி இழுத்துக் கொண்டு ஓடிற்று.

ஜன்னலுக்கு எதிரே நின்ற வேப்பமரம், காற்றுக்குச் சிலிர்த்துப் பூக்கள் சொரிந்தது. நந்தியாவர்த்தம் பூக்கள், வெள்ளைப் பட்டாய் செடியினை மூடிப் பூத்திருந்தன. சிறிது நேரங் கழித்து எதிர்வீட்டின் அறையிலிருந்து கீழே இறங்குகிற பன்னிரெண்டு நீண்ட படிகளையும் தாண்டி அவர்களிருவரும் கலகலப்பாக பேசிக் கொண்டு வருவதனைப் பாலாம்பிகை கண்ணுற்றாள்.

பாலாம்பிகை எட்டிப்பார்க்கும் முன்னர், வீட்டுப்படியடியில் நிறுத்தப்பட்டிருந்த டாக்ஸியில் அவர்களிருவரும் ஏறிவிட்டார்கள். டாக்ஸி புறப்படுவதனைப் பின்புறமாகப் பார்த்து நின்ற இருவர் அர்த்த புஷ்டியோடு ஒருவரை ஒருவர் பார்த்து நமுட்டுச் சிரிப்பை உதிர்த்தனர்.

இப்போது, வேப்பமரக் கிளைகளிலே அணிற் பிள்ளைகளின் கும்மாளம். இதை மீறி, நடு அறையில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் கிறீச்சிட்டு கதவினைத் தட்டிய சத்தம் ஒலித்தது. பாலாம்பிகை கதவைத் திறந்து நடு அறைக்குள்ளே போனாள். முன் வீட்டுக் குழந்தைகள் வெளியே நின்று கதவைத் தட்டுவதுபோல இவளின் குழந்தைகள் உள்ளேயிருந்து. கதவைத் திறக்க முயற்சித்துக் கொண்டிருந்தன. நெஞ்சிலும், விழிகளிலும் ஈரங் கசிந்தது பாலாம்பிகைக்கு அக்குழந்தைகளைப் பிரித்து வைக்கின்ற இரும்புச் சுவரென அக்கதவுகள் அவளிற்குத் தோற்றங் கொடுத்தன.

பாலாம்பிகை யோசித்து விட்டுக் கூறினாள்.

"சுறுக்காகப் போய் விளையாடி விட்டு, அப்பா வீட்டுக்கு வாரதுக்கு முந்தி திரும்பி வந்திடுங்கோ..."

கதவைத் திறந்து பிள்ளைகளை வெளியே போக விட்ட போது, அவைகளின் முகங்களிலே துலங்கிய புன்னகை அவளைப் பரவசங் கொள்ள வைத்தது. அவை அணிற் பிள்ளைகளாய் படிகளிலே தத்தி நடந்தன. சந்தோஷமெல்லாம் குழந்தைகளின் வடிவிலே அவ்விடத்திலே அருவியெனத் தோன்றிப் பிரவகித்து பாய்ந்தோடின.

9

தண்டாயுதபாணியின் அறையைக் கூட்டித் துப்புரவாக்கிக் கொண்டிருந்தாள் பாலாம்பிகை. அவ்வறையின் அமைப்பு தண்டாயுதபாணியின் கதாநாயகர்களின் வாழ்வோடு பிணைந்தது. மேசையின் முதுகை மேசை விரிப்பு அழகு படுத்திற்று. மூலையிலே சாம்பிராணிக்குச்சி செருகுவதற்கான சிறு குமிழினைக் கையில் ஏந்தி நின்றாள் நிர்வாண மங்கை. மேசையிலே அகலமான ஃபைலுக்குள் வெட்டி அடுக்கி வைக்கப்பட்டுள்ள வெள்ளைத்தாள்கள். இடது பக்க ஸ்டூலில் பூச்சாடி. வண்ணக் காகிதங்களால் உறையிட்டு மேசை மேலே அடுக்கியுள்ள சில புத்தகங்கள், அறைச் சுவர்களிலே தொங்குகின்ற இயற்கைக் காட்சி ஓவியங்கள். சுவரோரமாக புத்தகங்கள் பிதுங்குகின்ற அலமாரி, பக்கத்தில் ஈஸிசியர். மேற்குப் புறமாய் ரோஸ் வண்ணப் படுக்கை விரிப்பும், பூப்போட்ட தலையணையுமாய் கட்டில். இன்னும் சிறிது தள்ளி அவனது உயரத்தில் நிலைக் கண்ணாடி. அந்தக் கண்ணாடியில் தனது உருவந் தோன்றினால் அதைப் பார்க்காமலே விலகிவிடுவாள் பாலாம்பிகை. அதற்குக் காரணமான சம்பவம், அவள் மனதினைத் தைத்து நெருடாத நாளில்லை. இன்றும் அப்படித்தான்.

இவனைப் பேட்டி காண வந்த பத்திரிகை நிருபரான கனக சுந்தரம், 'அழகன்' என்ற புனை பெயருக்கேற்ப எல்லா விஷயங்களிலும் அழகைப் போற்றுகின்ற அழகுக் கலைஞன், எப்படி அவனது நாயக, நாயகியர் மெல்லியல்பும், புனிதமும் உடையவர்களாக உலவி வருகின்றார்களோ, அது போலவே 'அழக'னும் நிஜ வாழ்க்கையிலே காணப்படுகின்றான் என பத்திரிகையிலே எழுதியதன் பிறகு அந்த நிலைக் கண்ணாடி யினை வாங்கிக் கொண்டான். மகளுக்கு ஒரு தள்ளுவண்டி வாங்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டிருந்த பாலாம்பிகைக்கு நிலைக் கண்ணாடியைக் கண்டதும் ஆத்திரம் பற்றியெரிந்தது.

அன்று முழுவதும் அவனோடு அவள் எதுவுமே பேச வில்லை. நெஞ்சினுள் வார்த்தைகள் கனன்று கொண்டிருந்தன. சிறு உரசல் ஏற்பட்டாலே பெருங் குமுறல் வெடிப்பதற்கான சூழ்நிலை தயாராயிருந்தது. எல்லா ஆத்திரங்களையும்

இறுதியிலே அழுது தீர்த்தாள் அவள். அவனோ, எதனையுமே கவனிக்காமல், எத்தகைய பாதிப்புக்கும், ஆட்படாதவனாக, தன்னுடைய உருவத்தினை கண்ணாடியில் பார்த்த வாறிருந்தான்.

தன்னுடைய நாற்பது வயதுக் கோலத்தினை மாற்றுவதற் காகப் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றான் தண்டாயுதபாணி. நெடிய தோற்றத்திற்கொலர் - வைத்த நீண்ட நாஷனல் அவனது தனி அடையாளம். என்றுமே மடிப்புக் கலையாத வெள்ளை வேட்டி. இருபது வயது இளைஞனைப் போலத் தலைவாரி முன் நெற்றியிலே ஒரு கற்றை மயிரினை அலட்சியமாகப் புரள விட்டிருப்பான். தனது விசிறிகளுக்கு மதிப்பார்ந்த இலட்சியமாக விளங்குவதற்காக தனது வேலையையே உதறி யெறிய எண்ணிய அவன் என்ன காரணத்தினாலோ கடைசியில் அந்த எண்ணத்தினை மாற்றிக் கொண்டான்.

பாலாம்பிகை அறையை நான்கு கூட்டி ஒழுங்கு படுத்தி விட்டு வெளியே வந்தாள். இந்த அறைக்குள்ளே கால் வைக்கின்ற போதெல்லாம், அவளின் நெஞ்சப் பரப்பினிலே இறந்த காலச் சம்பவங்கள் அழுத்திக் கால் வைத்து நடந்து மறைகின்றதும், திரும்புவதுமாயிருக்கின்றதை அவளால் எவ்விதப்பட்டும் தடுக்க முடியவில்லை.

அவர்களின் படுக்கை அறைக்குள் ஆடைகள் அங்குமிங்கு மாகச் சிதறுண்டு கிடந்தன. கிழிபட்ட பாய்கள் சுவரோரமாக. அழுக்குச் சேர்ந்த தலையணைகள். இளைய குழந்தை வெறு நிலத்திலே சிறிநீர் கழித்து, அவ்விடத்திலேயே பூனைக்குட்டி போலச் சுருண்டு கிடந்தது. தாயின் கண்கள் பனித்தன.

சமையல் முடிந்து, நடு அறையிலே பாயை விரித்துச் சிறிது ஓய்வு கொள்ள விரும்பிய பாலாம்பிகை, ஏதோ நினைவில், தண்டாயுதபாணியின் மேசையிலிருந்த 'இன்பமே வா' என்ற புத்தகத்தை எடுத்து விரித்தாள். கம்மென்ற வாசம் கமழ்ந்தது. முதல் பக்கத்திலே உருண்டை உருண்டையான எழுத்திலே பேனாவினால் எழுதப்பட்டிருந்த அந்த வரிகள் பாலாம்பிகையை உலுப்பி நிமிர்த்தின.

10

"என் இதயங் கலந்த அழகனுக்கு பத்மாவின் அன்புப் பரிசு..."

அருவருப்புக் குமட்டிற்று பாலாம்பிகைக்கு. அந்த ஒவ்வொரு எழுத்தும் சேற்றுப் புழுவாக நெளிகிறாற் போல அவள் உணர்வு கொண்டாள். வெறுப்புமிழப் பக்கங்களைப் புரட்டினாள். ஒரு பக்கத்தின் பந்திக்கு அருகில் நீளவாக்கினில் சிவப்புக் கோடு கீறப்பட்டிருந்தது. படித்தாள்.

'அன்பரே, நீங்கள் எப்படிப் பட்டவராயினும் உங்களை எனது இதய பீடத்தினில் அமர்த்திவிட்டேன். நீங்கள் இதயங் கனிந்து எழுதிய ஆசை மடல்கள் எனக்கு ஜீவகீதங்களாகக் கேட்கின்றன. உங்களுக்காக எனது சகல சௌபாக்கியங் களையும் துறந்து உங்களோடு ஓடி வருவதற்குத் தயாராக இருக்கிறேன்.'

அச்சிட்ட எழுத்துக்களின் அருகே பத்மா எனக் கையெழுத் திட்டிருந்தது.

பாலாம்பிகையின் உடல் நடுங்கிற்று. ஆத்திரமும், அருவருப்பும், துக்கமும் எரிமலையாய்ச் சீறிக் கொந்தளித்தன. புத்தகத்தைக் கொண்டு போய் மேசையிலே வைத்தாள். அந்த அறையே அழுக்குகளின் குகையாக அவளுக்குத் தோன்றியது. தண்டாயுதபாணியை கணவன் என்ற ஸ்தானத்தில் ஏற்றுவதற்காக தனது கருத்துக்களையும், நம்பிக்கைகளையும் பலி பீடத்தில் ஒப்புவித்தாள் அவள். குடும்பம் என்ற சுமைக்காக அவள் எத்தனையோ ஆசைகளைத் தியாகமாகத் தத்தம் செய்தாள். அவள் தனது தாம்பத்திய வாழ்வினது சம்பவங்களை நினைவு கூர்ந்தாள்...

அவளை, அவன் ஒரு அடிமைப் போலவே நடத்தி யுள்ளான். நிரந்தரமாக விலை கொடுத்துத் தனக்கென வாங்கிய விபசாரியைப் போலவே அவளை, அவன் மதித்து வருகின்றான். ஆழ்ந்து பார்த்தால் இதுதான் உண்மையான அவளது வாழ்க்கை. எவ்வளவு அற்புதமாக தூய்மையினைப் பற்றியும், புனிதம், பண்பாடு பற்றியும் இவன் விஸ்தாரமாக

எழுதுகின்றான்! சமுதாய நீதி, மனித மேன்மை என எத்தனை சவடால்களை அடித்துக் கொள்ளுகின்றான்.

அவளது மனத்தினை அழுத்திய துயரங்கள் மெல்ல மெல்லக் கரைந்து இறுதியில் ஆத்திர உணர்வே மேலோங்கிற்று. ஒரு கூரையின் கீழே இரு துருவங்களாக அவனோடு வாழ்ந்த அவளுக்கு இப்போது அழத் தோன்றவில்லை. தான் அப்படி அழுவது தன்னைத்தானே பரிகாசம் பண்ணுவதற்கு சமமானது என அவள் முடிவு கொண்டாள்.

'வரட்டும் அவர். இதையெல்லாம் நேருக்கு நேர் நின்று கேட்காமல் விட்டுத்தான் இந்த அளவுக்கு விஷயமே முற்றியிருக்குது. இன்றைக்கு இரண்டில் ஒரு முடிவைக் கண்டே ஆக வேண்டும்...'

வெளிக் கதவினை யாரோ தட்டுகின்ற ஓசை தண்டாயுத பாணியாகத்தான் இருக்க வேண்டுமென்று நினைத்து கதவைத் திறந்தாள். கதவடியில் நான்கு யுவதிகள். இருபது வயதிற்குட் பட்ட நவநாகரிக வடிவங்கள். 'உங்களுக்கு என்ன வேண்டும்?' என்ற பாவனையில் பாலாம்பிகையின் புருவங்கள் ஏறி இறங்கின. முகத்தில் படர்ந்த விருப்பமின்மை மௌனமாய் நின்றது.

''இதுதானே எழுத்தாளர் அழகனுடைய வீடு?''

குரல்கள் கிறீச்சிட கண்கள் அறைகளைத் துளாவின. பாலாம்பிகை தலையசைத்தவாறு உள்ளே போக அவர்கள் பின்தொடர்ந்தனர். கதிரையிலே உட்காருவதற்கு முன்னால் வார்த்தைகள் கலகலப்போடு ஓசையிட்டன.

''எங்களினுடைய கொலிஜ் இலக்கிய மன்றத்திலை ஒரு கூட்டம் வைக்கப் போறம். அதற்கு அழகனைத்தான் சிறப்பு விருந்தினராக அழைக்க வேணும் என்று முடிவு எடுத்திருக்கிறம். அதுதான் நேருக்கு நேராக வந்து அழகனிடம் சம்மதங் கேட்க வந்திருக்கிறம். இன்றைக்கு இந்தப் புரோக்கிறாமாலை கொலிஜ் கட்...''

தமிழ் உச்சரிப்பினை ஏதோ போல முறித்து மடக்கிக் கீச்சிட்ட குரலில் சொல்லிக் கொண்டிருந்த சிவப்பு நிறமான பெரிய கண்களுள்ள அவள் சொல்லி முடிக்கும் முன்னர், மெல்லிய உருவமும், நீலக் கண்களுமுடைய மற்ற யுவதி முந்திக் கொண்டு கூறினாள்.

''பத்மா, எப்படியும் இன்றைக்கு எழுத்தாளர் அழகனைச் சம்மதிக்க வைத்துவிடு, உன்னாலைதான் அது முடியும்...''

பாலாம்பிகை அந்தப் பத்மாவைப் பார்த்தாள். பதினெட்டு வயதுமாகாத, திருமணமான ஒருவனோடு ஓடிப்போய் விட மனங்கொண்ட அந்த பத்மாவா இவள்? அவளின் பெரிய கண்கள் படபடக்கின்றன. இப்படியானவர்களை, இத்தகைய மனோநிலை உள்ளவர்களைத்தானே அழகனின் எழுத்துக்களும், வியாபாரப் பத்திரிகைகளும் தோற்றுவித்து வைத்திருக்கின்றன... இப்படியான... வாழ்வின் அர்த்தமறியாதவளைத் தான் அழகனின் எழுத்துக்கள் கவர்ந்தன?

வாசலிலே கலகலப்பு. வாசற் கதவைத் திறந்தவாறு ஒரு கையிலே வாழைக்குலையும், மறு கையில் சூட்கேசும், புன்னகை பொலிந்த முகமுமாய் நின்றான் ராசையா. பாலாம்பிகைக்கு பரவசம் விம்மிற்று அவனைக் கண்டவுடனே.

''தம்பி ராசுவே... வா... வா... என்ன சொல்லாமல் திடீரென வந்திட்டாய்...'' என்று வாஞ்சை ததும்ப அவனை எதிர் கொண்டாள் பாலாம்பிகை. அவனது வருகை ஆறுதலான நிழலாகி விட்டது அவளுக்கு.

வந்திருக்கிறவர்களுக்கு ஏதாவது கொடுக்க வேண்டுமென்ற நினைப்பு அந்த வெறுப்பினிடையேயும் அவளது மனதிலே தலை தூக்கிற்று. சமையலறைக்குள் போய்க் கொண்டிருந்த வளை ராசையா பின் தொடர்ந்தான்.

''அக்கா... பிள்ளைகள் எல்லாம் எங்கே?''

பாலாம்பிகை சிறிது உறுதியான குரலிலே, ''பிள்ளைகள் முன் வீட்டிலை நின்று விளையாடுதுகள். அதுகளை இந்த வீட்டுக்குள்ளை நெடுகிலும் அடைச்சு வைச்சிருக்க முடியுமோ?'' என்று பதில் சொன்னாள்.

''உன்னைக் கண்ட கல் அந்தப் பிள்ளைகள் உடனேயே ஓடி வாறதுக்கு நீயென்ன அடிக்கடி இங்கே வந்தா போகிறாய்...? யாராவது ஒருத்தரோடை ஆறுதலாகக் கதைக்கிறதென்றாலும் முடியாது...''

அக்காவின் குரலிலே வழிந்த தாபமும், கோபமும் கொண்ட அர்த்தங்களினை ராசையா நன்கு அறிவான். அடிக்கடி தன்னுள்ளேயே சிந்தித்து கவலை விளைந்த நெஞ்சோடு

அவளைப்பற்றி அவன் பெருமூச்செறிவதுண்டு. வளரிளம் பருவத்திலே, 'பெண் ஒரு விற்பனைப் பண்டமல்ல' என்று அர்த்த புஷ்டியோடு சொல்லி வந்த அவளின் வாழ்வு, இன்று எப்படி ஆகிப் போயிற்று என எண்ணி அவன் கொள்கின்ற கவலைகள், அவன் நெஞ்சினுள்ளேயே பூப்பதும், கருகுவதும், மீண்டும் மலர்வதுமாயுள்ளன.

''கேட்க மறந்திட்டன் அக்கா, இது யார் புது முகங்கள்...?''

கதையின் போக்கைத் திசை திருப்பினான் ராசையா. பாலாம்பிகை நெஞ்சைப் பிய்க்கின்ற கசப்போடு பதில் சொன்னாள்:

''பார்க்க உனக்குத் தெரியவில்லையோ... அத்தானுடைய விசிறிகள்!''

''அப்படித்தான் நானும் நினைத்தேன்...''

கபடின்றிச் சிரித்தவாறு ராசையா தொடர்ந்தான்:

''அத்தானுடைய எழுத்துக்கள் இப்படியான சோம்பேறிக் கூட்டத்தைத்தான் உண்டாக்குமென்று எனக்குத் தெரியும்... என்ன செய்ய? நாங்கள் விட்ட பிழைதான் உனக்கு இப்படியொரு அவலமான வாழ்க்கையைத் தந்திருக்குது...''

குரல் தளதளத்தது அவனுக்கு. பாலாம்பிகைக்கு மனந்தனிலே கனக்கிற துயரங்களை அவனிடம் கொட்டித் தீர்க்க வேண்டும் போலிருந்தது. அடுப்பைப் பற்ற வைத்துக் கொண்டே ராசையாவுக்கு முழு விபரங்களையும் சொல்லி முடித்தாள். சிறிது நேரம் அமைதி நிலவியது. கேத்தலுள் சூடேறி, சுடுநீர் ஆவி முடியை உலுப்பியும், வாயாலும் உஷ்ண மூச்செறிந்து கொண்டிருந்தது. சீலைத் துண்டின் உதவியோடு கேத்தலைக் கீழே இறக்கினாள். நிலவிய மௌனத்தை வீசி எறிந்தவாறு ராசையா கூறினான்:

''அக்கா, எதற்கும் அவசரப்படாதை. நிதானமாகவும், ஆறுதலாகவும் அத்தானிடம் எல்லாவற்றையும் கேள்...''

பாலாம்பிகை தேநீரை, யுவதிகளுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கையில் தண்டாயுதபாணி அறையைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். அவனைக் கண்ட உடனே பத்மா உற்சாகம் பொங்கிட, ''எழுத்தாளர் வந்திட்டார்... வந்திட்டார்...'' என்று பரவசமாகிக் கூறினாள்.

தேநீர் பரிமாறி விட்டு உள்ளே போன பாலாம்பிகையைத் தொடர்ந்து சென்ற தண்டாயுதபாணி பற்கள் நறுநறுக்க அழுத்தமான குரலில் -

''உன்னுடைய முஞ்சியைக் கழுவிக் கொண்டு துப்பரவாக நின்றால் என்ன? நீ இப்படி அழுக்குக் கோலத்திலை நின்றால் மற்றவை என்னைப் பற்றி எவ்வளவு கேவலமாக யோசிப்பினை என்று உனக்குத் தெரியாதா...? அது போகட்டும், இந்த வெய்யில் நேரத்திலை தேத்தண்ணீரா கொடுக்கிறது. ஏன் எலுமிச்சம் பழம் அல்லது தோடம் பழம் இல்லையோ?'' என்று சினங் கொந்தளிக்கக் கூறி முடித்தான்.

அவனது வார்த்தைகளும் முகபாவமும் பாலாம்பிகைக்கு அருவருப்பை மூட்டின. கேவலமான சேற்றுப் புழுவைப் போல அவனைப் பார்த்தாள். தனது அறைக்குள்ளே சென்று தலையை வாரி, முகத்தைத் துடைத்துக் கொண்டு அந்த யுவதிகளிலிருந்த பக்கமாகச் சென்றான் அவன். தன்னுடைய எரிகின்ற பார்வையினைச் சந்திக்காமலே சென்ற அவனிடமிருந்து பார்வையைத் திருப்பிக் கொண்டு ராசையா இருந்த இடத்திற்குப் போனாள் பாலாம்பிகை. அவளின் நெஞ்சம் உறங்குகின்ற எரிமலையாக இருந்ததனை அவளையன்றி வேறெவருமே அறிந்திருக்கவில்லை.

ரசிகைகளோடு கருத்துப் பரிவர்த்தனையில் ஈடுபட்டிருந்தான் தண்டாயுதபாணி. இடையிடையே சிரிப்பொலிகள் பொங்கி அலையலையாகக் கரைந்தன. கடைசியாக எழுத்தாளரின் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டு அங்கிருந்து சென்றார்கள் யுவதிகள். தண்டாயுதபாணிக்கு பரம சந்தோஷம். அவனுடைய எழுத்துக்கும் வலிமையான அங்கீகாரம் கிடைத்தமையை எண்ணி மனம் புளகாங்கிதமடைந்தான். எழுத்தாளனுடைய வாழ்க்கையினை விவரிக்கின்ற நாவல்களை மனதிலே எடுத்து அவை கூறும் செய்திகளைப் பக்கம் தட்டினான்...

எழுத்தாளன் கற்பனா சக்தியிலே மிதக்கின்ற தனிப் பிறவி, கட்டற்றவன். அவனுக்கு ஒரு மனைவியா, இரு மனைவியரா எப்படியுமிருக்கலாம். அவனுடைய அந்தரங்கத்திலே சொந்தங் கொண்டாடும் பத்மாவின் அந்த அழகிய கண்கள்; உற்சாகமான புன்னகை; துணிந்த பேச்சுக்கள்... பத்மா... பத்மா!

பத்மா முன்பு சொன்னதை மனதிலே பதிந்திருந்த அவன், தன்னுடைய கடைசியாக வெளியான நாவலிலே வார்த்தைக்கு

வார்த்தை அவற்றை இடம் பெறச் செய்திருந்தான்... 'அன்பரே, நீங்கள் எப்படிப் பட்டவராயினும், உங்களை எனது இதயபீடத்தினில் அமர்த்தி விட்டேன். நீங்கள் இதயங்கனிந்து எனக்கு எழுதிய ஆசை மடல்கள் எனக்கு ஜீவகீதங்களாகக் கேட்கின்றன. உங்களுக்காக எனது சகல சௌபாக்கியங்களை யுந் துறந்து உங்களோடு ஓடிவருவதற்குத் தயாராக உள்ளேன் நான்...'

இன்ப நினைவுகளிலே தோய்ந்தவாறே தன்னுடைய அறை ஜன்னலடிக்குச் சென்றவன், நேரெதிரேயுள்ள ஜன்னல் வழியாகத் தெரிந்த காட்சியினைக் கண்டதும் முகம் அதைத்து அப்படியே சிலையாகி நின்றான். பற்களை நரும்பினான். கைகளைப் பிசைந்தவாறு, ''பாலாம்பிகை... எடீயே பாலாம்பிகை...'' என்று அடிக்குரலிலே கத்தினான்.

11

தண்டாயுதபாணி ஜன்னல் வழியாகக் காட்டிய காட்சியைக் கண்ணுற்றதும் பாலாம்பிகையின் மனம் சிறிது துணுக்குற்றதாயி னும் கணப் பொழுதிலே அவள்தன் பழைய நிலைக்கு வந்துவிட்டாள். தனது கோபத்துக்கும், உறுமுதலுக்கும் அவள் பதைபதைத்து நடுங்கிச் செயலிழந்து போய் நிற்பாளென எதிர்பார்த்திருந்த தண்டாயுதபாணிக்கு அவளுடைய இறுக்கம் நிறைந்த மௌனம் ஆக்ரோஷத்தை மூட்டியது. தன்னைத் திட்டமிட்டே அவள் அவமானம் செய்கின்றாள் என்ற முடிவோடு எட்டிப்பாய்ந்து அவளின் தலைமயிரைப் பற்றி இழுத்து, முதுகைத் தாழ்த்திக் குத்திவிட்டு அதே வேகத்தில் காலால் எட்டி உதைத்தான். பாலாம்பிகை தறிகெட்டுச் சுழன்று வேதனையை நெஞ்சினுள் அமுக்கிக் கொண்டு ஒருக்களித்து வீழ்ந்தாள். மேலுதட்டிலே இரத்தம் பீறிட்டது.

''முன் வீட்டுத் தேவடியாள் வீட்டுக்கு என்னுடைய பிள்ளை களை ஏன் அனுப்பினாய்? அங்கை பார். அந்தத் தேவடியாள் என்னுடைய குழந்தைகளை தன்னுடைய மடியிலை இருத்தி சொக்லெட் கொடுத்துக் கொண்டிருக்கிறாள். என்னுடைய கௌரவத்தையும் மரியாதையையும் குலைக்கத்தானே நீ இந்த வேலையைச் செய்திருக்கிறாய்... ஆங்...''

இடுப்பு வலியினைச் சமாளித்துக் கொண்டே எழுந்தாள் பாலாம்பிகை. அவனுடைய சொற்களோ, செயலோ அவளுடைய இதயத்தினை அணுவளவும் தீண்டவில்லை என்பதனைப் பரபரப்படையாத அவளின் முகம் பிரதிபலித்தது. சிறிய புழுவினைப் பார்ப்பது போல அவனை ஏறிட்டாள்.

''என்னடி, நான் கேட்கிறேன்... நீ பேசாமலே நிற்கிறாய்? நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல உனக்குத் தெரியாதோ?''

பைத்தியக்காரனைப் போல நிற்கின்ற அவனைப் பார்த்து ஏளனங் கலக்க மெதுவாகப்புன்னகை செய்தாள் பாலாம்பிகை. நடந்த சம்பவங்களைக் கதவோரமாக நிற்று பார்த்த ராசையா தனது உணர்ச்சிகளை மிகவும் சிரமப்படுத்தி கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயன்று கொண்டிருந்தான்.

''வாயைத் திறந்து பதிலைச் சொல்லு... அல்லா விட்டால் உன்னுடைய குடலை உருவி எடுப்பன்... எளிய நாயே...''

அவனது சீற்றங் கொந்தளிக்கிற ஆத்திரத்தினையே கவனத்திற் கொள்ளாதவள் போல மிகவும் நிதானமாகப் பதில் சொன்னாள் பாலாம்பிகை:

''உனக்கும் பதில் சொல்ல வேணுமோ? நீ ஒரு மனுஷப் பிறப்பாயிருந்தால் பதில் சொல்லலாம். ஆனால் நீ ஒரு மிருகம்... மிகக் கேவலமான மிருகம்...''

ராசையா ஸ்தம்பித்துப் போனான். தண்டாயுதபாணியின் மனதிலே யாரோ சம்மட்டியால் ஓங்கி அறைந்தாற்போல உணர்ந்தான். மௌனமும் திகைப்பும் சில கணங்களிற்கு அங்கே நடுங்கிக் கொண்டு நின்றன.

''திருப்பி அடிக்க முடியாத எனக்கு ஈவிரக்கமில்லாமல் கைநீட்டி அடித்த உனக்கு கௌரவமும், மரியாதையுமா தேவையாய் இருக்குது? சீ, நானும் இவ்வளவு காலமும் உன்னை மதித்து வாழ்ந்திருக்கிறேனே...''

விசுக்கென்று அவ்விடத்திலிருந்து போய்விட்டாள் பாலாம்பிகை. முகத்தினிலே காறித் துப்பினாற்போல நெஞ்சினில் விழுந்த வார்த்தைகளின் தாக்கத்தை தாங்க முடியாத மன நிலையோடு, தன் எதிரே இருந்த கதிரையைத் தூக்கி சுவரோடு

மளார் மளாரென மோதியுடைத்தான் தண்டாயுதபாணி. தன் எதிரேயுள்ள ஒவ்வொரு பொருளையும் அடித்து நொறுக்கிட வேண்டுமென்ற வெறி மனதினுள்ளே கட்டற்றுப் புரண்டு கொண்டிருந்தது.

தான் மிகவும் கொடூரமான முறையிலே அவமரியாதைக்குட் பட்டு தோற்கடிக்கப் பட்டதாக அவனது மனம் உணர்ந்தது. அவனுடைய கைவண்ணத்திலே உருவான கதாநாயகிகள் குனிந்த தலை நிமிராதவர்கள்; நாணமும் பணிவுமே அணி யெனக் கொண்டவர்கள்; கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்ற நெறி நின்று ஆண்கள் காலால் இட்டத்தைத் தலையினால் ஏற்றுச் செயல் பட்டவர்கள்; வீட்டின் எல்லைக் கோட்டினுள்ளே அணையா விளக்காக எரிந்தவர்கள்.

'இவள் - பாலாம்பிகை இன்று எப்படி என்னை மிகவும் கேவலமாக, கீழ்த்தரமாக அவமதித்து சடப்பொருள் ஒன்றினை மிக அலட்சியமாகத் தூக்கி எறிந்து விட்டுச் செல்வது போலப் போகின்றாள் - இவள் என்னுடைய வீட்டில் வாழ்கின்றவள். நான் வாங்கிக் கொடுக்கின்ற ஆடை அணிகளை உடுத்துக் கொள்கின்றவள். எனது உணவினைத் தின்கின்றவள். எனக்குப் பிள்ளைகளைப் பெற்றுக் கொடுக்கின்றவள. என்னோடு வாழ்நாள் முழுவதுமே இணைந்து வாழ்வதற்குச் சம்மதங்கூறி மணவினையென்ற சடங்கினால் என்னோடு பிணைக்கப் பட்டவள் - இன்று இந்த நிமிஷங்களிலே இவள் எனக்குச் செய்த அவமரியாதையின் பிறகு இவளும், நானும் சேர்ந்து வாழ இடமேயில்லை. இவள் இங்கிருந்து போக வேண்டும். கணவனால் வீட்டை விட்டு அடித்து விரட்டப்பெற்ற அகங்காரி என்று இவளை ஊரெல்லாம் தூற்றி அவமதித்து, அந்த அவமானத்தினாலேயே மனமும், உடலும் கூனிக் கூறுகி இவள் செத்துப் போக வேண்டும். கீழ்ப்படிவில்லாமல் வாழ்கின்ற பெண்களிற்கு எத்தகைய முடிவு கிடைக்கும் என்பதற்கு இவள் ஒப்பற்ற உதாரணமாகிட வேண்டும். இவர்களைப் போல அடங்காப் பிடாரிகளுக்கு, பெண் குலத்தின் அவமானச் சின்னங்களுக்கு இதுவே கடைசி முடிவாக இருக்க வேண்டும்...''

12

"நான் பேசாமல் வாயை வாயை மூடிக் கொண்டு இருந்து தான் எனக்கு இப்படியான நிலைமை இன்றைக்கு வந்திருக்குது. எனக்குச் சாப்பாடும், ஒரு புடவையும், இருக்கிறதுக்கு இடமும் தந்து ஆதரித்ததுக்காக நான் என்றென்றும் உனக்கு கடமையுள்ளவளாக இருக்க வேண்டுமென்று இப்போது நியாயம் சொல்கிறாய்... நல்ல வடிவாக யோசித்துப் பார்த்தால் தெரியும். இந்த வீட்டிலைநான் ஒரு சமையல்காரியாய், ஆயாவாக வேலை செய்கிறன். வீடு கூட்டித் துப்புரவாக்கிற வேலைகளுக்கெல்லாம் நீ சம்பளமா தந்திருக்கிறாய்? நீ எனக்குச் செய்ததைப் பற்றி பிரசங்கம் செய்கிறாயே தவிர நான் உனக்குச் செய்ததுகளைப் பற்றி ஏன் சொல்ல மறுக்கிறாய்?"

மினுமினுக்கின்ற கறுப்புநிற, ஜெலிக்கின்ற கண்களை யுடைய மெலிந்த பாலாம்பிகை யாராலுமே வெற்றி கொள்ள முடியாதவளைப் போலப் பேசிக் கொண்டிருந்தாள்...

"விபச்சாரத்தைப் பற்றியெல்லாம் நீ பெரிதாகக் கதைக் கிறாய். பெண் புனிதமானவள், பூப்போன்றவள் என்றெல்லாம் கூறி, ஒழுக்கத்தின் உயர்வைப் பற்றிப் பக்கம் பக்கமாய் எழுதுகிறாய்... ஆனால் இவ்வளவு காலமும் நீ எழுதி எழுதியே விபசாரம் செய்திருக்கிறாய். வாசிக்கிறவர்களைக் காமவெறிக்குள் தள்ளக்கூடிய எல்லாக் கற்பனைகளையும் எழுதியிருக்கிறாய்... என்னை விலை கொடுத்து வாங்கி உனக்கு மட்டுமே படுக்கை விரிக்கிற விபச்சாரியாக நடத்தி வந்திருக்கிறாய்..."

சிறிது நிறுத்திவிட்டு முகத்தை முன்றானையால் துடைத்துக் கொண்டாள் பாலாம்பிகை.

"இதெல்லாம் இன்றைக்கு யோசித்து நான் சொல்கிற விஷயங்கள் இல்லை. எத்தனை நாளைக்கு நான் பொறுத் திருப்பது? என்னுடைய மனநிலை, விருப்பு வெறுப்பு பற்றி அக்கறைப் படாமல் உன்னுடைய சுக துக்கங்களிலேயே கவனமாயிருந்திருக்கிறாய்... இந்த வயதிலை உலகம் அறியாத ஒரு குமரியை காதலியாக்க நீ முயற்சிகள் செய்திருக்கிறாய். நான் இன்னொரு ஆணை நினைத்தால் விபச்சாரி. நீ அதைச் செய்தால் 'மண் தின்னுவதை மனிதன் தின்றால் என்ன' என்ற

நியாயப்படுத்தல். நீ அருவருக்கிற முன்வீட்டு விபசாரி வயிற்றுக்காக விபசாரம் செய்கிறவள்... அவள் தற்செயலாக இந்தத் தொழிலுக்கு வந்தவள்... நீ... நீயோ...''

பாலாம்பிகை மீண்டும் உள்ளே போனாள். அதே வேளை எதிர் வீட்டுக்காரி குழந்தைகளோடு கதவடியில் நின்றாள்; முகத்தில் திகிலும் பரபரப்பும். தண்டாயுதபாணிக்கு ஆத்திரம் தாளவில்லை. பழைய சூட்கேசோடு வெளியே வந்த பாலாம்பிகை, வாசலில் நின்றவளைக் கண்டதும் புன்னகை செய்தாள். எதிர் வீட்டுக்காரியின் முகம், அவளது புன்னகையை வாங்கிக் கொண்டது.

''குழந்தைகளைக் கொண்டு வந்து விட்டிட்டன், கிரிஜா நாளைக்கும் வாங்கம்மா...''

அவள் போய் விட்டாள்.

சூட்கேசை இறுக்கி மூடியவாறு அதனை வெளியே தூக்கி வைத்தாள் பாலாம்பிகை.

''என்னோடு நான் எந்தப் பொருட்களை இந்த வீட்டிற்கு வருகிறபோது கொண்டு வந்தேனோ அவைகளை மட்டுந்தான் எடுத்துக் கொண்டு போகிறேன். என்னோடை குழந்தைகளை யும் கூட்டிக் கொண்டு போகிறேன்... உன்னோடை உன்னு டைய உலகத்திலே எங்களாலை வாழ முடியாது... தம்பி, சூட்கேசைத் தூக்கிக் கொள்... நான் பிள்ளைகளைத் தூக்கிறன்...''

ராசையா எதுவுமே பேசாமல், சூட்கேசைத் தூக்கிக் கொண்டு பாலாம்பிகையின் பின்னே நடக்க ஆரம்பித்தான்.

(மக்கள் குரல், 1976)

கண்ணில் தெரியுதொரு தோற்றம்

1

வீட்டிலேயிருந்து அனுராதபுரம் புகையிரத நிலையத்திற்குப் புறப்பட்டபோது நந்தாவதியின் மனந்தனிலே இனந்தெரியாத துயரமும், சஞ்சலமும் நிறைந்து கனத்தது. இன்று முழுவதும் அவன் தைரியமாயிருக்கத் திடங் கொண்டிருந்தாளாயினும் இப்போது புகையிரத நிலையத்திலே பெற்றோரோடும், தம்பியோடும் நிற்கின்ற போதினில் அந்த உறுதியெல்லாம் கரைந்து போய் மீண்டும் சஞ்சலங்களிலே மூழ்கிப் போயிற்று அவளினுடைய மனம். அரசாங்க சேவையிலே சேர்ந்து மூன்றாண்டுகளாகிடு முன்னர் தனக்கு அவசரமாகப் பிறப்பிக்கப் பட்ட இந்த இடமாற்றத்தையிட்டு அவள் எவ்விதமான பரபரப்போ கவலையோ கொள்ளவில்லை; ஆனால் போகப் போகின்ற புது இடத்தைப் பற்றிய எண்ணந்தான் அவளின் மனந்தனிலே சுமையாக அழுத்திக் கொண்டிருக்கின்றது. அதுவும் இப்போதைய சூழ்நிலைகளை அவள் பத்திரிகை களாலும், வாய்வழிச் செய்திகளாலும் அறிகின்ற போது மனம் துணுக்குறவே செய்கின்றது.

ஆயினும் எவ்வளவு முயன்றாலும் இந்த இடமாற்றத்தி லிருந்து அவள் தப்பித்துக் கொள்ள முடியாது; அப்படித் தப்பித்துக் கொள்ளவே முடியாது. அப்படித் தப்பிக்க உள்ள ஒரே வழி வேலையையே ராஜினாமா செய்து விடுவதுதான். ஆனால் அதனை மயிரிழை அளவிலே கூட எண்ணிப் பார்க்க முடியாதுள்ளது. அவளே இன்று அவளின் குடும்பத்திற்கு நிழலாய், நம்பிக்கை வடிவாகத் துலங்குகிறாளாகையினால் அந்த எண்ணம் தோன்றிய உடனேயே நெஞ்சினில் எரிந்து கருகிப் போய்விட்டது. மூளையெல்லாம் அவளிற்குத் தகித்து அவள் கலங்கி நின்றபோது அவளுடைய தம்பி காமினி மட்டுந்தான்

அவளுக்கு ஆதாரப்பூர்வமான உற்சாகத்தினை அளித்துக் கொண்டிருக்கின்றான்...

"அக்கா, எதுக்காக நீங்கள் இப்படியெல்லாம், மனங் குழம்பி யோசிக்கிறீங்கள்? எல்லா இடமும் மனிதர் வாழ்கின்ற இடந்தானே... எப்படியிருந்தாலும் மனிதரின் உணர்வுகள் அடிப்படையில் ஒன்றுதானே! பிறகு ஏன் வீணாகப் பயப்படுகிறீங்கள்!"

ஓரளவுக்கு யோசித்துப் பார்க்கின்றபோது, காமினி சொல்வதிலே உண்மையிருக்கின்ற போதிலும் - அவள் கேள்விப்பட்ட கதைகளும், கண்ட காட்சிகளும் அவள் மனதினை அலைக்கழிக்கவே செய்கின்றன. அவள் வீட்டின் எதிரேயுள்ள சேறு நிரம்பிய சிறிய குளத்திலே நடப்பட்டிருந்த கம்புகளில் சுருவிகள் சென்று உட்கார்ந்ததும் அங்குமிங்குமாய் அவை ஆடுவதனைப் போல மனமும் ஒரு நிலைப்பாட்டிற்கு வராமல் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

எப்படி முயன்றும் தனது மகளின் இடமாற்றத்தினை நிறுத்தி விடுவதற்கே அவளது தந்தைவிஜயபாலா முயற்சிகளினை மேற்கொண்ட போதிலும், அது வெற்றியளிக்காது போய் விடவே வேறு வழியின்றி நந்தாவதியை அவர் அனுராத புரத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க முடிவு கொண்டார். விஜயபாலாவின் நெருங்கிய நண்பரான பியதாஸா யாழ்ப்பாணத்திலே பாண்பேக்கரி ஒன்றிற்குச் சொந்தக்காரராயிருந்தது விஜயபாலாவின் மனதினிலே மின்னலெனப் பளிச்சிட்டது.

பியதாஸாவைத் தேடிப் போய்க் கொண்டிருக்கையில் ஆலமர வளைவடியில் சொல்லி வைத்தாற் போல அவரே பஸ் வண்டியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தார். மிகுந்த மகிழ்ச்சியினால் விஜயபாலா மறந்து போய் ஆர்வம் தொனிக்கிற கண்களோடு அவரை எதிர்கொண்டார். வார்த்தைகள் பரபரக்க விஜயபாலா பியதாஸாவின் கைகளை வாஞ்சையோடு பற்றியவராகத் தளதளத்தார்:

"நல்ல நேரத்திலை உங்களைச் சந்தித்திருக்கிறேன்... என்னுடைய மகளுக்கு அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு உடனடியான இடமாற்றம் கிடைத்திருக்கிறது. தமிழர் மட்டுமே வாழ்கிற இடத்திற்கு எப்படி மகளை உத்தியோகம் பார்க்க அனுப்புகிறது என்றதிலை மனம் சஞ்சலப்பட்டுக்

கொண்டேயிருக்குது... அதுவும் இந்த இனக்கலவரங்கள் நடந்து முடிந்த பிறகு எந்த நேரம் என்னென்ன நடக்குமோ என்று ஒரே பயமாயிருக்குது...''

பியதாஸா, விஜயபாலாவைப் பார்த்து இலேசாகப் புன்னகை செய்துவிட்டு உறுதியான குரலிலே கூறினார்:

''என்ன விஜே... இது நீங்கள் கதைக்கிற கதை? இவ்வளவு அனுபவமும் வயதும் வந்த பிறகும் நீங்கள் இப்படிக் கதைக் கலாமோ? யாழ்ப்பாணத்திற்கு மகளை அனுப்பி வைக்க நீங்கள் ஏன் பயப்பிட வேணும்? தமிழரும் மனிதர்கள்தானே... நீங்கள் நினைக்கிற மாதிரி அங்கை ஒன்றுமேயில்லை. பயப்படாமல் மகளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வையுங்கள். மகள் யாழ்ப்பாணத்திலை தங்கியிருக்கிறதுக்கான எல்லா ஏற்பாடுகளையும் நான் செய்து தருகிறன்...''

விஜயபாலாவின் சுருக்கம் கீறிய முகத்தினிலே லேசான நம்பிக்கை துளிர்விட்டது. பியதாஸா எதையுமே அளந்து மிகவும் நிதானமாகப் பேசுகின்ற மனிதன் என்பது ஊர்ப் பிரசித்தமாதலால் அவரது சொற்கள் மரியாதைக்குரியவையா யிருந்தன.

''இல்லை... இல்லை... நீங்கள் யாழ்ப்பாணத்திலேயே அதிக காலமாக இருக்கிறீர்கள். இதெல்லாம் உங்களுக்குக் கட்டாயம் தெரிந்திருக்கும்தான். ஆனால் இந்த இனக்கலவரம் நடந்து முடிந்ததுக்குப் பிறகு எதைப் பற்றி யோசித்தாலும்மனம் பயப்பிட்டுக் கொண்டேயிருக்கிறது... பிறகும் ஏதாவது கலகம் வந்தால்...? எனக்கு உள்ளதெல்லாம் ஒரே ஒரு மகள்தானே...''

அச்சத்தோடும் சந்தேகத்தோடும் இழுவுண்ட விஜய பாலாவின் சொற்களை. பியதாஸாவின் சொற்கள் தடுத்து நிறுத்தின. கண்ணுக்கு இதமாகவும், மனதுக்கு நம்பிக்கையளிப்ப தாயும் தோன்றுகின்ற பியதாஸாவை விஜயபாலா சில கணங்களிற்கு ஆழ்ந்து நோக்கினார். பியதாஸாவின் குரல் சத்தியமாய் ஒலித்துக் கொண்டிருந்தது...

''விஜே, கிட்டத்தட்ட இருபது வருஷங்களாக நான் யாழ்ப்பாணத்தையே எனது சொந்த ஊராகக் கருதி வாழ்ந்து வருகிறன். என்னுடைய நெருங்கின நண்பர்களெல்லாம் தமிழர்கள்தான். இனக் கலவர காலத்திலே, யாழ்ப்பாணத்திலே வாழ்ந்த சிங்கள மக்களில் பெரும்பாலானவருக்கு பாதுகாப்புக்

கொடுத்ததெல்லாம் தமிழர்தான். இதனை நான் நேருக்கு நேராகவே கண்டிருக்கிறேன். அதே நேரத்திலை சிங்களப் பகுதிகளிலை தமிழ் மக்களினுடைய உரிமைகளையும், உயிரையும் அநேக சிங்கள மக்களே பாதுகாத்ததனை நான் நன்றாகவே அறிவேன்... அரசியல் லாபத்திற்காகவும், பொருளாதார காரணங்களிற்காகவும் தூண்டி விடப்படுகின்ற நாசகாரர்கள், அப்பாவி மக்களின் உயிரையும் சொத்துக்களையும் சூறையாடுகின்றதுதான் இப்போது நடந்து வருகின்ற அவமானகரமான விஷயங்கள்...''

சிறிது இடை நிறுத்திவிட்டு அடங்கிய குரலிலே பியதாஸா தொடர்ந்தார்:

''என்னுடைய அனுபவங்களிலை இருந்து நான் கண்டறிந்த விஷயம் இதுதான். சிங்களவனும் மனிதன்தான். தமிழனும் மனிதன்தான். மனிதனிலை நல்லவனும் இருக்கிறான்; கெட்டவனும் இருக்கிறான். இந்தக் கெட்ட மனிதர்களை வெகு இலகுவான பிரசாரங்களாலும், அதிருப்திகளாலும், கோஷங்களாலும் தூண்டி விட்டே இங்கு வாழ்கிற மனித குலத்திற்கு நிரந்தரமான கறையினை கீழ்த்தரமான அரசியல்வாதிகள் காலத்திற்குக் காலம் ஏற்படுத்திக் கொண்டு வருகின்றார்கள். இது இப்போது இங்கே தொடர் சங்கடமாகித்தான் மக்களின் நிம்மதி குலைந்து போயிருக்கிறது...''

நெடிய உருவமும், விவசாயிக்கேயுரிய கட்டுடலுங் கொண்ட விஜயபாலா மிகவும் மரியாதையோடு இப்போது பியதாஸாவை நோக்கினார். நாணயமும் நிதானமும் நிறையப் பெற்ற சாதாரண சிங்கள மனிதராகவே பியதாஸாவை அளவிட்டு மதித்து அவரோடு சம்பாஷணையைத் தொடங்கிய விஜயபாலாவுக்கு பியதாஸாவின் காரண காரியங்களை முன் நிறுத்திக் கூறிய ஆழ்ந்த தர்க்க ரீதியான வார்த்தைகள் மிகவும் ஆறுதல் கொடுப்பனவாயின.

கடந்த இனக்கலவர காலத்திலே அனுராதபுரத்திலே நடந்த சம்பவங்கள் அவரின் மனக் கண்களிலே மீண்டும் உருவெளித் தோற்றமிட்டு மறைந்தன.

ஒன்றுமறியாத அப்பாவித் தமிழ்மக்கள், நேற்றுவரை சிங்கள மக்களோடு ஒரு தாய் பிள்ளைகளாக உறவு கொண்டாடி கொடுக்கல் வாங்கல் செய்து வந்தவர்கள் திடீரென காட்டுத் தீயென வீசிய இனத் துவேஷத்தினால் எப்படியெல்லாம்

சிதைத்துச் சின்னா பின்னமாக்கப் பட்டார்கள்! ஒரே விதமான பொது நோக்கங்களோடு ஒருவரை ஒருவர் மதித்து வாழ்ந்தவர் களிடையே துவேஷமென்பது எவ்வித தயக்கமுமின்றிப் புகுந்து அவர்களை ஒருவர் மேலொருவர் சந்தேகங் கொள்ளச் செய்து விட்டது...

வதந்திகளெல்லாம் உண்மையின் ஆடைகளையும் அதன் முகத்தினையும் அணிந்து கொண்டு என்ன தைரியமாய் உலவி வந்து அப்பாவி மக்களோடு தோழமை பூண்டு அவர்களை நிலைமாறி இயங்க வைத்துக் கொண்டிருந்தன... பறைத் தமிழனை அடித்துக் கொல், சுட்டுத் தள்ளு, கொள்ளையடித்து விரட்டு என்ற வெறித்தனம் கலந்த சொற்கள் தீ நாக்குகளினைப் போலவே எங்குமே சுற்றிச்சுற்றி எழுந்து தீவிரமான வேகத்தோடு பரவிக் கொண்டிருந்தன... கொள்ளைகள், கொலைகள்; தீவைப்பு; கற்பழிப்பு... என்ன கோரமான, மானிட குணத்தையே உயிரோடு கொன்று விட்ட நிகழ்ச்சிகள்.

இந்த நிகழ்ச்சிகளிலே பங்கு கொண்டு வெறியாட்டுப் புரிந்தோரின் முகங்கள்... அந்த ஊர் மக்களினாலே வெறுத்து, ஒதுக்கி, அஞ்சப்பட்டு விலக்குதல்களுக்காளாயிருந்த சமூக விரோதிகள்தான் அந்த இழிச்செயலினை அங்கே முன்னின்று நடத்தினார்கள். அதை யாவருமே அறிந்திருந்த போதிலும், அவர்களின் செயலினுக்கு எதிராக குரல் கொடுக்கின்ற தைரியம் மிகவும் சிலருக்கேயிருந்தது. தமிழருக்கு ஆதரவாக யார் நின்றாலும் அவர்களையும் தமிழர்களைப் போலவே கொல்லு வோம் என்ற பிரகடனம் நியாயத்திற்காக சிந்திக்கிற மக்களின் வாயையும், கைகளையும் இறுக்கிக் கட்டி வைத்துவிட்ட போதிலும், சிலர் தமிழரின் உயிரையும் சொத்துக்களையும் பாதுகாத்து மறைவிடத்தினுள்ளே ஒளித்து வைத்திருக்கவும் தவறவில்லை.

விஜயபாலா பார்வையினை சிறிது தூரத்திற்குச் செலுத்தி னார். அதோ, பச்சைப் பசேலென்று தெரிகிற அந்தச் சிறிய தென்னந்தோட்டம் தமிழரான கந்தசாமிக்குச் சொந்தமானது. அந்தக் காணியிலேதான் கந்தசாமியின் எல்லாக் குழந்தைகளுமே பிறந்தார்கள். அவர்களின் எல்லா நன்மை தீமைகளுமே அந்த மண்ணிலேதான் நடைபெற்றிருக்கின்றன. அதுமட்டு மல்ல, கந்தசாமியின் தகப்பனும் அங்கேதான் வாழ்க்கை யினைத் தொடங்கியவர். இவ்விதம் பரம்பரை பரம்பரையாகவே

அவர்கள் அனுராதபுரத்திலேதான் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள்.

அவர்களுக்கு தமிழ்ப் பிரதேசத்து அரசியல் பற்றி எதுவிதமான அக்கறையுமிருக்கவில்லை. அவர்களது தாய் வீடாக அனுராதபுரத்தினையே நம்பி நேசித்திருந்தனர். ஆனால் இந்த இனக்கலவரத்தின் போது அவர்களது வீடும் தீக்கிரையாக்கப்பட்டு அடித்து விரட்டப்பட்டனர். மதவாச்சாயாவின் பயங்கரக் காடையனான களுமாத்தையா அந்தத் தென்னந் தோட்டத்திலே ஒரு குடிசையைக் கட்டி தனது கையாட்கள் இருவரை அங்கே காவலுக்கென நியமித்திருக்கிறான். கந்தசாமி குடும்பத்திற்கு நடந்த இந்த அட்டூழியத்திற்காக அயலிலே வாழ்கின்ற சிங்களக் குடும்பங்கள் மிகவும் மன வேதனையுற்றன.

''கந்தசாமி குடும்பத்துக்காக யாராவது கதைத்தால் அவர்களுடைய குடலை உருவி மாலையாகப் போட்டுக் கொள்வேன்...'' என்று களுமாத்தையா எச்சரிக்கை செய்திருந்த போதிலும், இராணுவத்திலிருந்து, சென்ற ஆண்டே ஓய்வு பெற்ற நாணயக்காரா, காடையர்களை எதிர்க்கவும் துணிவு கொண்டு கந்தசாமியின் குடும்பத்தினருக்கு தனது வீட்டிலேயே அடைக்கலம் கொடுத்து, இரவிலே காடையர்களின் கல் வீச்சுக்கும் ஆளாகியிருந்தார்.

''இந்தச் சம்பவத்தினால் எங்களினுடைய மக்களது நாகரிகம் மகாகேவலமான வீழ்ச்சியை அடைந்திருக்கின்றது. ஆனால் இவையெல்லாம் நெடுங் காலத்திற்கு நீடிக்கப் போகின்ற விஷயங்களே அல்ல... விஜே, நீங்கள் ஒன்றுக்குமே யோசிக்க வேண்டாம். நந்தாவதியை யாழ்ப்பாணத்திற்கு கூட்டிக் கொண்டு வாருங்கள். மிகுதி உதவிகளை நானே உங்களுக்குச் செய்து தருகிறேன்...''

சிவப்பு நிறமான, கருகருவென்று சுருள் மயிருள்ள புன்னகையும் அறிவும் முகத்தினிலே துலங்குகின்ற பியதாஸாவை நமஸ்கரித்து விடை பெற்றவாறு அங்கிருந்து வீட்டுக்கு நடந்தார் விஜயபாலா.

தகப்பனார் கூறியவற்றினை மிகவும் அவதானமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள் நந்தாவதி. அவளோடு உத்தியோகம் பார்க்கின்றவர்களுக்கு ஒரு ஆதர்ஸமாகவே திகழ்கின்றவள் நந்தாவதி. விவசாயக் குடும்பத்து யுவதி ஒருத்தியின் அச்சான

தோற்றம் அவளுக்கு. நெடிய உடல் வாகான யுவதி. புன்னகை செய்கையில் பளிச்சென்று துலங்குகின்ற பற்கள் வெள்ளலரிப் பூக்களினை நினைவூட்டும். சிங்கள மரபு ஓவியங்களிலே காணப்படுகின்ற பெண்களை அவளோடு தயக்கமேதுமின்றி ஒப்பிட முடியும்.

வளவளவென்று கதைக்காவிடினும், அவளோடு சில நிமிஷங்களே கதைத்துவிட்டால், அபரிமிதமான பிரியம் ஏற்பட்டுவிடும் அவள் மீது. தன்னுடைய கருத்தினை யாருக்குமே விட்டுக் கொடுத்து விடமாட்டாள் நந்தாவதி. எந்த இடர்களுக்கோ, அச்சுறுத்தல்களுக்கோ அஞ்சிடாமல் ஒரு வேலை நிறுத்தத்தினை வெற்றிகரமாக நடத்தி, அதனாலேயே இந்த உடனடியான இடமாற்றத்திற்குள்ளாகியுள்ள நந்தாவதியின் மனந்தனிலே தகப்பன் சொன்ன வார்த்தைகள் ஏற்கனவே பதிந்திருந்த போதிலும், அவளையறியாமலேயே திருட்டுத்தனமாக அவளின் நெஞ்சினில் அச்சம் வந்து தொற்றிக் கொண்டு விடுகின்றது.

இனக்கலவரத்தினை அவள் நேரே கண்டுமிருக்கிறாள். அச்சந் தருகின்ற பல தகவல்களைக் கேள்வியுற்று மனஞ்சுருங்கியு மிருக்கிறாள். அனுராதபுரத்திலேயே அவள் பல தமிழ்க் குடும்பங்களினைத் தெரிந்து வைத்திருந்தாள்.

பானை சட்டி வனைவதனை இரு தலைமுறை காலமாக இங்கு செய்து வருகின்ற முருகையாவின் குடும்பம்... பரசங்கடவலை போன்ற கிராமப் புறங்களிற்குப் போய் எள்ளு வாங்கி வந்து நகரத்திலே விற்பனை செய்கிற, பெரிய தோடுகள் அணிந்து காது இழுவுண்டு தொங்குகிற சுப்பம்மா. தமிழையும் சிங்களத்தையும் ஒரே மாதிரியான உச்சரிப்போடு கண் சிமிட்டிச் சிமிட்டிப் பேசுகிற வெற்றிலைக்கார ராமக்கா. 'பெரேரா அரிசி ஆலை'யிலே வேலை செய்துஜீவனம் நடத்துகின்ற பூனைக் கண்கள் கொண்ட அழகான சுசீலா. அலுவலகத்திற்கு முன்னே சுத்தமான சிங்கள உச்சரிப்பில் பரபரப்பான செய்திகளினைக் கூறியவாறே பத்திரிகைகள் விற்கின்ற சுறுசுறுப்பான விஜயன். சிங்களத்திலேயே கிளி ஜோதிடம் கூறிக் கொண்டு, விகாரையடியிலேயே வாழ்வினைக் கழிக்கின்ற பெரியசாமி...

இப்படி அங்குள்ளோரின் அன்றாட வாழ்விலே இணைக்கப் பட்டுள்ள பலரை அவளே நன்கு தெரிந்து பேசி, சிரித்து அறிந்து வைத்திருக்கின்றாள். இப்போதோ அந்த நிகழ்ச்சியெல்லாம்...

அறுவடை முடிந்த வயல்தனிலே காண முடியாத கிளிக் கூட்டங்கள் போல அவர்களெல்ரோரது நிலைமையும் ஆக்கப் பட்டு விட்டது. அந்தச் சம்பவங்களை நினைக்கையிலேதான் நந்தாவதியின் மனம் பயங் கொள்கின்றது. இந்தச் செயல்களுக்கெல்லாம் திடீர் விளைவு தமிழர் வாழுகின்ற ஊர்களிலே திடீரென்று உருவாகினால் அதிலே தானும் பொசுங்கிப் போய்விட வேண்டுமேயென அவள் எண்ணிய போதினிலே யாழ்ப்பாணத்திலிருந்து அவளது தொழிற் சங்கத்தினைச் சேர்ந்த கணேஷ் எழுதியிருந்த கடித வரிகள் நினைவுக்கு வருகின்றன...

'நீங்கள் இங்கே வருகின்ற திகதியினை அறிவித்தால் நாங்கள் உங்களை யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலே வந்து சந்திப்போம். எந்தப் பிரச்சினை பற்றியும் நீங்கள் யோசிக்க வேண்டியதில்லை. கிட்டத்தட்ட நூறு மைல்களே அனுராதபுரத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடைத்தூரமாக இருக்கின்ற போதிலும் அத்தகைய இடைவெளி எங்களின் மக்களின் மனதிலே தற்போது இல்லை...'

அச்சாறையும், கொண்னாடப் பணிகாரங்களையும் தலைக்குளிகளையும் அவளுடைய தாயார் குசுமாவதி நான்கு நாட்களாகத் தயாரித்தாள்.

ஒருமாத காலத்திற்குத் தேவையான பழுதுபடாத உணவுப் பண்டங்களை குசுமாவதி பெரிய பன்னோலைப் பெட்டிக்குள் வைத்தவாறே, ''அவர்களுடைய சாப்பாட்டு வகைகள் உனக்கு ஒத்துக் கொள்ளுமோ தெரியாது. இப்போதைக்கு இதைக் கொண்டு போ மகளே... பிறகு ரயில் பார்சலிலே அனுப்பி வைக்கிறோம்...'' என்று கவலை தோய்ந்த குரலிலே கூறியபோது விஜயபாலா சிரித்துக் கொண்டே சொன்னார்.

'குசுமா, இதென்ன கதைகள்? நந்தாவைத்தான் மிகவும் பயப்படுத்துகிறாய்... நூறு மைலுக்குள்ளை இப்படியெல்லாம் சாப்பாட்டு வகைகள் வித்தியாசப்படப் போகுதோ? எப்பிடித் தானிருந்தாலும் தமிழருக்கும் சிங்களவருக்கும் வாயும் வயிறும் ஒன்றுதான். அதைப் பற்றியெல்லாம் வீணாக மனங்குழப்பிக் கொள்ளத் தேவையே இல்லை. இதற்கு மேலாக ஒன்றையும் பார்சல் கட்ட வேணாம். பிறகு பொருள்களை ரயிலிலை ஏற்றி இருக்கிறது மிகவும் கஷ்டமாயிருக்கும். ஏதாவது தேவை யென்றால் இனி யாழ்ப்பாணத்திலை பியதாஸா மூலம் வாங்கிக் கொள்ளலாம்...''

2

வானப் பரப்பிலே செம்மையும் மஞ்சளும் வெளிறி அழிந்து நீலநிறம் மெதுவாய் வெளித்துக் கொண்டு வந்தது. வடிவான வெளிதனில் தங்கப் பூச்சோடு சூரியன் தலையை நீட்டுகின்ற பரவச நேரம். அதிகாலையின் இந்த அலங்காரங்கள் மனதினுள்ளே உற்சாகத்தை நிறைத்தன. இலேசான ஊதற் காற்று உடலினை வருடிச் சென்றது.

சின்னச் சின்ன வயற் பரப்புகள். மெல்லிருட்டினில் அணி வகுத்து நிற்கிற விருட்சங்கள். அவற்றின் அருகே கைகளைப் பற்றி நிற்கிற குழந்தைகளாய் சிறிய பரட்டை மரங்கள். புகையிரத ஒலியால் வெருண்டு சிறகடிக்கின்ற பறவைக் கூட்டம். திடீரெனத் தோன்றி மின்சார விளக்கு வெளிச்சத்தினாலும், உப்பு மணத்தாலும்தன்னைக் காட்டி பார்வைக்குள் நிறைகின்ற ரசாயணத் தொழிற்சாலை. தென்னோலை மூடிய உப்புப் பாத்திகளும், மேடைகளும், பனைகள், தென்னைகள், மணிகள் குலுங்க கழுத்தசைத்து அசைந்தசைந்து செல்கின்ற பட்டி மாடுகள்.

வேலிகளின் பின்னாலேயிருந்து எட்டியெட்டிப் பார்க்கிறாற் போலத் தோற்றமளிக்கின்ற வீடுகள். எரிந்து களைத்து அணைவதற்காக அழுது வடிகின்ற மின்சார விளக்குகள். கடக்... கடக்... கடக் என ஒலியெழுப்பி காதுப் பறைகளை அதிர்த்து இருப்புப் பாலத்தினுள் நுழைந்து மூச்சு முட்டிய திணறலோடு வெளியேறுகின்ற புகையிரதவீச்சு, வாசல்களில் நின்று புகையிரதத்திற்கு கையசைத்துக் காட்டுகின்ற கழுவாத முகங்கள், புகையிரதக் கடவையின் திறப்பினை எதிர்நோக்கி வீதிகளிலே ஒழுங்கிட்டு நிற்கிற வாகனங்கள். பெட்டி படுக்கைகளை, புகையிரதப் பெட்டிகளின் வாசலுக்கு நகர்த்தி இப்போதே இறங்குவதற்காக முண்டியடித்து முணுமுணுத்துக் கொள்ளுகின்ற மனித அவசரங்கள்...

புகையிரதம் யாழ்ப்பாண நிலையத்தில் உஸ்ஸிட்டு நின்றது. நந்தாவதியும் விஜயபாலாவும் புகையிரத மேடையிலே இறங்கியபோது, 'ஐ போவான்' என்று சிங்களத்தில் வணக்கம் சொல்லிக் கொண்டே மலர்ந்த பிரகாசமான முகத்தோடு பியதாஸா அவர்களை எதிர்கொண்டார்.

''பிரயாணமெல்லாம் கஷ்டமில்லாமல் இருந்திருக்குமென நம்புகிறேன்'' என்று கூறியவர், ''இவர்தான் கணேஷ். மற்றவர் சரணபாலா, நந்தாவதியின் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள். அது நந்தாவதியின் தகப்பனார் விஜயபாலா...'' என்று பரஸ்பரம் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து வைத்தார்.

தொள தொளக்கின்ற நாஷனல்; தரையோடு புரள்கின்ற வேட்டி; உயர்ந்த தோற்றம்; அறிவுச் சுடரிடுகிற கண்கள்; ஏறு நெற்றி; புன்னகையோடு எதிரே நின்ற கணேஷிற்கும், சிவந்த, குள்ளமான, கலைந்த தலைமயிரோடு நின்ற சரணபாலாவிற்கும் தந்தையும் மகளும் வணக்கம் சொன்னபோது, அவ்விடம் ஒரு போர்ட்டர் வந்து, அவர்களின் உடைகளால் அவர்களை அறிந்து ''பெட்டிகளைத் தூக்கட்டுமா?'' என்று சிங்களத்தில் கேட்டபொழுது நந்தாவதியின் மனதினுள் ஏதோ கீறினாற் போல உணர்ந்து அந்தப் போர்ட்டரைப் பார்த்தாள்.

சற்று இளைத்துப் போய் நிற்கிற அவன் - நந்தாவதி கேட்டாள்:

''விஜயன் எங்களைத் தெரியவில்லையா?''

அவளின் பரபரப்பை விஜயன் உடனே கண்டு கொண்டு புன்னகை செய்தான். வாடியிருந்த முகத்தில் புன்னகை மலர்ச்சியினைத் தூவி விட்டது.

''அக்கா, உங்களைத் தெரியாமலா...? சரி இப்ப நான் உங்களுக்கு என்ன செய்ய வேணும்?'' - விஜயனின் குரலில் உரிமையுணர்வு நிறைந்திருந்தது.

நான் வீட்டுக்குப் போகின்ற போது இங்கேயிருந்து இந்த மல்லிகைச் செடியில் ஒரு தடி வெட்டிக் கொண்டு போய் எங்களினுடைய வீட்டு முற்றத்திலே நட வேண்டும். எனக்கு வெள்ளலரிப் பூவைப் போல இந்த மல்லிகை வாசனையும் மிக விருப்பமானது. எவ்வளவு இனிமையான மனதினைக் கவர்கின்ற வாசனை...''

செழித்து பூக்கள் சொரிந்து பந்தலில் படர்ந்திருக்கின்ற மல்லிகையின் ஓரமாக நின்று சொல்லிக் கொண்டிருந்த நந்தாவதியைப் பார்த்து மெல்லப் புன்னகை செய்தாள் சந்திரவதனி.

''வீட்டை விட்டு வந்த மூன்று மாத காலங்கள் ஆக முதல் திரும்பவும் வீட்டுக்குப் போகின்ற யோசனை வந்து விட்டதா நந்தாவதிக்கு?''

நந்தாவதியின் பெரிய கண்கள் ஆச்சரியப்பட்டன. எதிரே தெரிகின்ற தென்னை மரங்களை நோக்கிற்று பார்வை. எவ்வளவு நெருக்கமாகி விட்டன இக்காட்சிகளெல்லாம். மனதிலே ஆர்வ மும் அன்பும் ஏற்படுகின்றபோது எல்லா அந்நியத்தனங்களும் விலகிப் போய் விடுகின்றன போலும் என மனதினுள்ளே நினைத்துக் கொண்டாள் நந்தாவதி.

''மூன்று மாதங்கள்... நேற்றுந்தான் இந்த வீட்டிற்கே வந்தது போல இருக்கின்றது. சந்திரா, இப்போதெல்லாம் நான் வீட்டுக்குச் செல்ல வேண்டுமென்பதைப் பற்றி அவதியாக யோசிப்பதில்லை. நான் அவசரப்படுவது எனது வீட்டிற்குப் போய் யாழ்ப்பாணத்தைப் பற்றி, இங்கு வாழ்கின்ற மக்களின் நல்லெண்ணம் பற்றி நிறையவே சொல்ல வேண்டுமென்பது தான்... வேறொன்றுமில்லை...''

மல்லிகைக் கொடிக்கருகே இப்போதுதான் நடப்பட்ட வாடாமல்லிகைச் செடிக்கு சிறிய பாத்தி ஒன்றினைக் கட்டிக் கொண்டிருந்த சந்திரவதனி மண்ணைக் கைகளால் தட்டிவிட்டு எழுந்தாள்.

''நந்தா, நான் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு பட்டப் படிப்பு பயில்வதற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டபொழுது சந்தோஷம் ஒரு புறமும், பயம் மறுபுறமுமாய் அலைக்கழிக் கின்ற மனோநிலைமையிலேதான் இருந்தேன்... நீர் இங்கு வருவதற்குப் பயந்ததனை விட நான் பேராதனைக்குச் செல்வதற்கு அதிகமாகவே பயந்திருந்தேன். அப்பா எனக்கு எவ்வளவோ தைரியம் சொன்னார். தன்னுடைய சிங்கள நண்பர்களைப் பற்றி, அவர்களினுடைய பெருந்தன்மைகளைப் பற்றியெல்லாம் விஸ்தாரமாக எடுத்துக் கூறினார். ஆனால் என்னால் அந்த நேரத்தில் முடிவொன்றிற்கு வரவே இயலவில்லை. பல்கலைக் கழகத்திற்குப் போய் சங்கமித்தா மண்டபத்தில் தங்கிக் கொள்ள வசதி கிடைத்த போதிலும், எனக்கு 'ரூம் மேற்'றாக ஒரு தமிழ் மாணவியே வரவேண்டு மென்று கடவுளைப் பிரார்த்திக் கொண்டேயிருந்தேன். நான் எண்ணியபடியே அன்னலட்சுமிதான் எனக்கு அறைத் தோழியாய் வந்தாள்... அவள் நல்லவள்தான். ஆனாலும் சில மாதங்களிற்குள்ளேயே' எனது மிகவும் குறுகிய எண்ணம் எவ்வளவு தவறானதும் வெட்கத்துக்குரியதும் என்பதனை நான் விளங்கிக் கொண்டேன். உண்மையாகவே சொல்லப் போனால் எங்களுக்கிடையே பொய்யான, விஷத்தன்மை வாய்ந்த

திரையொன்று விரித்து விடப்பட்டிருக்கிறதென்று தான் நான் நினைக்கின்றேன்...''

நந்தாவதிக்கு சந்திரவதனியின் சொற்கள் தனது இதய வெளிப்பாடாகவே கேட்டன. ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளாமலும், பழக முடியாமலும், பழகவே ஆர்வங் கொள்ளாமலும் இருந்து கொண்டே ஒருவரை ஒருவர் வெறுத் திருக்கின்ற துவேஷங் கொண்டிருக்கின்ற சூழ்நிலையினை இப்போது வெகு தெளிவாகவே உணர்ந்து கொண்டாள் நந்தாவதி.

''அனுராதபுரத்திலே இனக்கலவர காலத்திலே எவ்வளவு கதைகளெல்லாம் உலாவிச் சன்னதமாடின... தமிழர்கள் சிங்களவர்களை வெட்டித் துண்டுகளாக்கி பெட்டிக்குள் வைத்து சிங்களப் பிரதேசத்திற்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்... இதை யாரும் காணாமலே இது உண்மையான சம்பவமே என உறுதியாகக் கூறி எத்தனைத் தமிழர்களை எல்லாம் வெட்டிச் சரித்து வீடுகளைக் கொளுத்தி...

''சந்திரா... நீர் சொல்வது முற்றிலுமே உண்மைதான்!''

வந்த மூன்று மாத காலத்தினுள்ளேதான் அங்குள்ளவர்க ளோடு பழகி நட்புறவு கொண்டு பயின்று பெற்ற அனுபவங் களும், தெளிவான கண்ணோட்டமும் எவ்வளவு பெறுமதியான பயனும் அர்த்தமும் பொதிந்தவை என்பதை எண்ணுகையில் பெருமிதம் பொங்கிற்று நந்தாவதிக்கு. இப்பெருமிதங்களினி டையே அவளின் மனதிலே அடிக்கடி காமினி தோன்றிக் கொண்டிருப்பான்.

'எல்லா இடங்களிலும் மனிதர்கள்தான் வாழ்கிறார்கள், எல்லாவிதமான பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்து அவர்கள் போராடியவாறே சரித்திரத்தை உருவாக்கிக் கொண்டிருப் பார்கள்' என்று அடிக்கடி அவன் சொல்லிக் கொண்டிருப்பாள். பதினெட்டு வயதான காமினிக்கு நிறைய நண்பர்கள். நிறையப் புத்தகங்கள் வாசிப்பதும், தர்க்கிப்பதும் காமினிக்குப் பிரியமானவை. இந்தச் செய்கைகள் விஜயபாலாவிற்கும் கவலையை அளித்திருந்தன.

''மகளும் எதற்கும் வளைந்து கொடுக்காத சண்டைக்காரி யாக இருக்கின்றாள். மகனும் ஒரு போக்கானவனாக இருக்கின்றான். இதுதான் ஒரே பயமாயிருக்கிறது. மீண்டும் ஒரு குழப்பத்திற்குள் இவர்கள் சிக்குப் பட்டு விடுவார்களோ?''

என்று தாய் குசுமாவதி பெருமூச்செறிகையில் நந்தாவதி மிகவும் உறுதியான குரலிலே தாயைப் பார்த்துக் கூறுவாள்:

''அம்மா, நீங்கள் எங்களைப் பற்றி எதற்குமே பயப்படத் தேவையில்லை... உங்களுடைய பிள்ளைகள் என்றைக்குமே நல்ல வழியில்தான் போவார்கள்... இதுநிச்சயமான உண்மை...''

இந்த மல்லிகை மரத்தின் கீழே நின்று மூன்று மாத கால அனுபவங்களினை அசைபோட்டுக் கொள்வது எவ்வளவு பரவசமாக இருக்கின்றது. அந்த வருகையின் தொடக்க நினைவினை நந்தாவதி என்றுமே மறந்திட மாட்டாள்...

புகையிரத நிலையத்திலேயிருந்து காரிலே வந்து நேராகக் குமாரசாமியின் வீட்டிலேயே இறங்கினார்கள் பியதாஸாவும், விஜயபாலாவும், நந்தாவதியும். குமாரசாமி அரசாங்க எழுதுவினைஞர் பதவியிலிருந்து இரண்டு வருஷங்களின் முன்னர்தான் ஓய்வு பெற்றாரென்பதை அவரை அறியாதவர்கள் நம்பமாட்டார்கள். இப்போதுள்ள அவரது தோற்றத்தினைக் கொண்டு ஐம்பது வயதுதான் மதிப்பிட முடியும் அவருக்கு. கடுகடுப்பையறியாத புன்னகை பூத்த முகம். தடித்த கண்ணாடிக்குள் தெரிகின்ற சோர்வறியாத கண்கள்.

கஷ்டப் பட்டிருக்கின்ற எவருக்குமே உதவி செய்கிற மனிதாபிமானி என்ற வகையிலேயே பியதாஸாவின் விருப்பத் திற்குரிய நண்பரானவர் குமாரசாமி. தென்னிலங்கையிலே சிங்கள மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதிகளில் நீண்ட காலமாகக் கடமை புரிந்த காரணத்தினால், சிங்கள மொழியை வெகு சரளமாகவே பேசுகின்ற ஆற்றல் பெற்ற குமாரசாமி தன் பிள்ளைகளுக்கும் அம்மொழியினை நன்றாக எழுதவும் பேசவும் பயிற்றுவித்திருந்தார்.

மல்லிகை மணங் கமழ்கின்ற பொலிந்து படர்ந்த பந்தரின் கீழே, வரவேற்கின்ற இதயப்பூர்வமான புன்னகை கொண்ட முகங்களினை எதிர்கொண்ட போதினிலே விஜயபாலாவுக்கும், நந்தாவதிக்கும் நெஞ்சிலே உறுதியான தைரியம் பூமடலென அவிழ்ந்து மலர்ந்தது. குமாரசாமியின் மனைவி மகேஸ்வரிதான் முதலிலே அவர்களை நமஸ்கரித்து வரவேற்றாள். குள்ளமான, மாநிறமுள்ள மகேஸ்வரி முதற் பார்வையிலேயே பழகுவதற்கு இனிமையானவளெனத் தோன்றினாள். வார்த்தைகளற்ற புன்னகையிலேயே நிறையச் சொற்களினைப் பேசி அவர்களை உள்ளே கூட்டிச் சென்றது அவளினது முகம்.

குமாரசாமியின் மூத்த மகள் சந்திரவதனிக்குத் தாயின் முகத் தோற்றம். இருபத்தெட்டு வயதின் முதிர்ச்சியோடு வீட்டுக்குள் ளேயே அடைந்து கிடக்கின்ற பெருமூச்சும், எதிர்பார்ப்புகள் விளைத்த ஏமாற்றங்களும் முகத்தினில் ஒட்டியிருந்தன. பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலைத்துறைப் பட்டதாரி. அவளிற்கு அருகாக இரட்டைப் பின்னலோடு சகுந்தலா நின்றாள். அக்குடும்பத்திலேயே இளமையவளான அவளுக்கு பதினேழு வயது. முகத்தினிலே கனித்திருக்கின்ற குறும்பு. துறுதுறுவென்று அலைகின்ற பூனைக் கண்களால் நந்தாவதியையே பார்த்துக் கொண்டிருந்தாள். மெலிந்த உருவம். நகரத்திலேயுள்ள கல்லூரியில், கல்விப் பொதுத் தராதர வகுப்பு உயர்தரப் பிரிவிலே படித்துக் கொண்டிருக்கிறாள்.

சந்திரவதனி நந்தாவதியை வீட்டின் உள்ளே அழைத்துச் சென்று அவளுக்கு உரியதான அறைக்குள் பெட்டி, சூட்கேசுகளை வைத்துவிட்டு ஜன்னல் கதவுகளைத் திறந்து விட்டாள். வெளியே இப்போது முற்றாகவே வெளிச்சம் பெய்து கொண்டிருந்தது. இளவெய்யிலில் ஜன்னல் வழியாகச் செழித்த வாழை மரங்களின் பசிய இலைகள் வெகு ரம்மியமாயிருந்தன. புஷ்டியான வாழையொன்று நாலைந்து குட்டிகள் புடைசூழக் குலையினைச் சுமந்து லேசாகச் சரிந்து நின்றது. இதற்குச் சிறிது தள்ளி பிஞ்சுகாய்களுமாய் கரும்பச்சை இலைகளோடு தோடை மரம். இவற்றின் பின்னணியிலே இன்னமும் உறக்கம் விழித்தெழுந்திடாத துலாக்கிணறு. கிணற்றடியோரமாக இரண்டு வெள்ளை வெளேரென்ற ஆட்டுக் குட்டிகள் தங்களின் நீண்ட காதுகளினை முழங்காலோடு தேய்த்து விளையாடிக் கொண்டு நின்றன...

சில வேளைகளிலே அனுராதபுரத்திலும் அவளின் அறை ஜன்னல் வழியாக இப்படியான காட்சிகளை அவள் கண்டிருக்கிறாளே, பொடி மெனிக்காவின் கறுப்பு ஆட்டிற்கு இப்படித்தானே மூன்று குட்டிகள். அவை அவளது ஜன்னல் வழியாக விளையாடிக் கொண்டிருப்பது இது போலத்தானே தோன்றுவதுண்டு...

புதிய காட்சியிலே லயித்துப் போய் நின்ற நந்தாவதியை சகுந்தலாவின் செருமல் சுயநினைவுக்குக் கொண்டு வந்தது. சகுந்தலா செம்புத் தண்ணீரை நந்தாவதியின் கையிலே கொடுக்க, சந்திரவதனி வாயைக் கொப்பளித்து விட்டு வந்து தேநீர் அருந்தும்படி கூறினாள்.

மறுநாள் காலையிலே அரசாங்க செயலகத்திற்கு விஜய பாலாவையும், நந்தாவதியையும் அழைத்துச் சென்றார் குமாரசாமி. அங்கே கணேசும், சரணபாலாவும், தங்கராஜா என்ற பிரதமலிகிதரிடம் அவர்களை அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்தனர். அந்தப் பிரிவிலேதான் அவள் வேலை செய்ய வேண்டும்.

''சிங்களவரை தமிழ்ப் பிரதேசத்திற்கும், தமிழரை சிங்களப் பிரதேசத்திற்கும் வேலை செய்ய அனுப்புகிற போது, அதை தண்டனைக்குரிய இடமாற்றமென்று குறிப்பிட்டுச் செய்வது தான் மனவேதனை அளிக்கின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளாக சகோதரர்களாக வாழ்ந்து வந்த மக்கள், ஒருவருக்கு இன்னொருவர் அந்நியப் பட்டவர்கள் என்ற உணர்வை ஏற்படுத்துவது அருவருக்கத்தக்க செயலல்லவா?''

தங்கராஜாவின் அறிவுப் பூர்வமான வார்த்தைகளால் உடனேயே கவரப்பட்ட விஜயபாலா அவரிடம் தனது மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்த போது, ''உங்களின் மகளும் எங்களிலே ஒரு சகோதரி ஆனபடியால் நீங்கள் ஒன்றுக்குமே யோசிக்கத் தேவையில்லை'' என்று பதில் சொன்னார் தங்கராஜா. நந்தாவதி அவ்வார்த்தைகளால் முற்றாகவே நெகிழ்ந்து போனாள்.

கால நிலையிலே அனுராதபுரத்திற்கும், யாழ்ப்பாணத்திற்கும், அவ்வளவு பெரிய வித்தியாசமிருக்கவில்லை. இரண்டு பிரதேசத்து மக்களும் சுறுசுறுப்பாகவே உழைத்து வருகின்றார்கள். தாங்களும், தங்கள் சந்ததியும் சந்தோஷத்தோடு வாழ்வதற்கான விருப்போடு ஓயாது முயன்று கொண்டிருக்கிறார்கள். மனித நேசத்தோடு வாழ்வினைச் செழிப்பாக்க அவர்கள் செய்கின்ற பிரயத்தனங்களிலே எவ்வித வேறுபாடுமில்லை. ஆனால் அவர்களிடையே காணப்படுகின்ற இன மத வேறுபாடுகளையே அவர்களுக்கிடையேயான பிரிவினை வேலிகளாக்க பலர் முயலுகின்றார்கள்.

அவைகள் கூட மனிதாபிமான உணர்வுகளின் முன்னே இற்று விழுந்து போய் விடுகிற வேலிகளே. அவலத்திலும் ஆவேசத்திலும், பசியினிலும், களைப்பினிலும், களிப்பினிலும், துயரத்திலும் இந்த இரு பகுதி மக்களினதும் இதயங்களும் ஒரேவிதமான கருத்தைத்தானே எதிரொலி செய்கின்றன; ஒரே அர்த்தம் படத்தானே குரலிட்டு உணர்வுகளை வெளிப்படுத்து கின்றன...

இந்த வீட்டிலே அச்சாறு என்றால் எல்லோருக்கும் மிகப் பிரியம். சிங்கள ஊர்களில் வேலை செய்த காலத்தில் குமாரசாமிக்கு அச்சாறில் மிகுந்த விருப்பமிருந்தது. அச்சாறை எப்படித் தயாரிப்பதென்பதை சகுந்தலாவுக்கும் சந்திராவுக்கும் விஸ்தாரமாகக் கூறிய நந்தாவதி அன்று மாலையே மிளகாய், வெங்காயம், கறட்கிழங்கு, மாங்காய் ஆகியவற்றை வாங்கி வந்து அச்சாறு தயாரித்தும் விட்டாள்.

பேச்சின் நடுவே சகுந்தலா சொன்னாள்: ''அரிதாரப் பணி காரத்திற்கு மேல் ஒரு சின்னக் கொண்டையினை வைத்து விட்டால் அதுவே கொண்டைப் பணிகாரமாகிவிடும். இரண்டும் ஒரே ருசிதான். வடிவத்திலேதான் கொஞ்சம் வித்தியாசம்...''

குமாரசாமி புன்னகையோடு தன்னுள்ளே நினைத்துக் கொண்டார். 'ஒருவரை ஒருவர் நெருங்கிப் பழகி உணரத் தலைப்படுகையில், வித்தியாசங்களும், பிரிவினைகளும் படிப்படியாக அகன்று போய் விடுகின்றன என்பது ஏற்கத்தக்கதே...'

3

நாளுக்கு நாள் வெய்யிலுக்கு கரைந்துருகி வடிவமிழந்து போகின்ற பனிக்கட்டி போல நந்தாவதியின் மனந்தனிலே கனத்திருந்த பல ஐயுறவுகளும் அச்சமும் அர்த்தமேயற்றுப் போய்விட்டன. நந்தாவதியிடம் சிங்கள மொழியைப் பயிலவும், சிங்களப் பாட்டுகளை அவள் பாடிக் கேட்கவுமென அவளோடு பழகிய பல யுவதிகள் அவளின் பிரிய சினேகிதிகளாயினர். அரசாங்க, கூட்டுத் தபானத் துறைகளைச் சேர்ந்த எழுதுவினை ஞர்கள் பொது வேலை நிறுத்தம் ஒன்றினை மேற்கொண்ட பொழுது சிங்கள மொழியிலே போஸ்டர்கள் எழுதவும், சிங்கள கோஷங்களை உருவாக்கவும் நந்தாவதியே பொறுப்பாக நியமிக்கப் பட்டாள். இதிலே அவளுக்கு நிறைந்த திருப்தியும், சந்தோஷமும்.

அந்த அரசாங்க ஊழியர்களுக்கான தொழிற் சங்கத்திலே, ஏனைய தொழிற் சங்கங்களிலே பணியாற்றுகிற ஊழியர்களை யும் அங்கத்தவராகச் சேர்ந்துக் கொள்வதற்கு அவள் ஓயாது பாடுபட்டாள். சில வேளைகளிலே அவளுக்கு யாழ்ப்பாணத் திற்கும், அனுராத புரத்திற்குமிடையேயுள்ள இடவேறுபாடுகள்

கூட மறந்து விடுவதுண்டு. அங்கேயும் அவளுக்குப் பலர் நல்ல சினேதமாகி விட்டனர். கடைத் தெருவிலே விஜயன் அடிக்கடி அவளிடம் வந்து பத்திரிகைகள் விற்றுச் செல்வான். தன்னுடைய கஷ்டங்களையும் சந்தோஷங்களையும் ஆர்வத்தோடு கூறுவான்.

சாப்பிட்டு முடிந்து ஆறுதலாயிருந்தபோது நந்தாவதியை சகுந்தலா பார்த்துக் கேட்டாள்:

''நந்தா அக்கா, நான் கேட்கிறேனே என்று குறையாக நினைக்காதீர்கள்... இன்றைக்கு இந்தப் பிரச்சினையைப் பற்றி எங்களுடைய பள்ளிக் கூடத்திலே நாங்கள் பேசிக் கொண்டோம்... சிங்கள மாணவ மாணவிகளிலேயும், பட்டதாரிகளிலேயும் யாருமே படித்து முடித்த பின்னர் வேலையில்லாமல் இருக்கவில்லையாம்... ஆனால் தமிழ் மக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் வேண்டுமென்றே உருவாக்கப் பட்டுள்ளதாயும் கதைக்கிறார்களே. இதைப் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்...?''

நந்தாவதியின் முகத்திலே புன்னகை பூத்தது. அவள் பதில் கூறத் தொடங்க, சந்திரவதனி இடையிலே குறுக்கிட்டாள். சமாளிக்க முனைகின்ற ஆர்வம் தொனித்தது குரலிலே:

''இது சும்மா வெறும் இனவாதக் கதை. முற்றிலும் உண்மையானதில்லை இந்தக் கதை. அதைப் பற்றி எங்களுக்கென்ன? வேறை விஷயங்களைப் பற்றிக் கதைக்கலாந்தானே...''

சந்திரவதனி கூறிக் கொண்டே சகுந்தலாவைப் பார்த்தாள்.

''சகுந்தலா எப்போதுமே இப்படித்தான்... எதையுமே போட்டுடைத்துத்தான் கதைப்பாள்...''

'நந்தாவதி இப்படிச் சகுந்தலா கேட்டால் என்னென்ன நினைப்பாளோ' என்ற சந்திரவதனியின் குரலின் குறிப்பினையும், சமாளிக்கின்ற முகபாவத்தையும் முற்றிலும் புரிந்து கொள்ளாதவளே போல தொடர்ந்தும் கேட்டாள் சகுந்தலா:

''சந்திரா அக்கா... நீங்க கொஞ்சம் பேசாமல் இருங்கோ. நான் இந்தப் பிரச்சினைக்கு சரியான பதிலை, சரியான ஆளிடமிருந்து தான் கேட்டு அறிய வேணும்'' என்று கூறிக் கொண்டே போனவள், அதே வேகத்திலேயே நந்தாவதியிடம் தமிழிலேயே கேட்டாள்:

''அக்கா... நீங்க சொல்லுங்கோ...''

நந்தாவதி, இதே அர்த்தம் பொதிந்ததான கேள்வியினை இப்போதுதான் முதன் முதலாக எதிர்கொண்டாள் இல்லை. இதே கேள்வியினை வெவ்வேறு ரூபங்களிலேயும் வெவ்வேறு குரல்களிலேயும் அவளோடு அவளின் அலுவலகத்திலே பணியாற்றுகின்ற நெருங்கிய பல சிநேகிதிகள் கேட்டபோது, நந்தாவதி மிகவும் ஆச்சரியம் கொண்டிருக்கின்றாள். ஆதாரம் எதுவுமே இருந்திட முடியாத எத்தனை கட்டுக் கதைகளினை, இந்த இரு இன மக்களுமே நம்பி அவற்றை உண்மையென மனங்கொண்டு அந்த உணர்வுகளின் பெறுபேறாக தங்களிற்கு இடையே விஷவட்டங்களை அமைத்து பிளவுண்டு இருக்கின் றார்கள் என எண்ணி அவள் மனம் நொந்திருக்கின்றாள்.

இந்தப் புற நிர்ப்பந்தங்கள் ஆனவை சாதாரண மனிதர்களை யும், அறிவார்ந்த தலைமுறைகளையும் காலத்திற்குக் காலம் தவறான வழிக்கும், பிழையான முடிவிற்கும் அல்லவா இட்டுச் செல்கின்றன என எண்ணிய அவள் இதற்குப் பொறுப்பான வர்களை நினைத்து ஆத்திரமும் வெறுப்பும் கொண்டாள்.

''சகுந்தலா, நீர் கேட்ட கேள்வி நிச்சயமாகக் கேட்கப்பட வேண்டியதுதான். இப்படியானதொரு எண்ணம் தமிழ் மக்களிடையே நிலவுகிறதும் அவர்கள் சிங்கள மக்களை வெறுக்கிறதுக்குள்ள அடிப்படைக் காரணங்களிலை ஒன்றாக இருக்கலாம். ஆனால் இது ஒரு மிகவும் பொய்யான, ஆதாரம் ஏதுமற்ற, வெறும் மாயத் தோற்றமே ஆகும். தமிழ் மக்களைப் போல சிங்கள மக்களுக்கும் பற்பல பிரச்சினைகள் இருக் கின்றன... வேலை இல்லாப் பிரச்சினை... திருமணப் பிரச்சினை... கல்விப் பிரச்சினை ஆகிய எல்லாமே தமிழ் மக்களிடையே உள்ளது போலவே சிங்கள மக்கள் மத்தியிலும் உள்ளன. விகிதாசார அளவிலே, சில வேளைகளில் வேறுபாடு கள் இருக்கலாம். ஆனால் பிரச்சினைகள், பிரச்சினைகளாகவே தீர்க்கப்படாமலே உள்ளன. இதை நல்ல வடிவாக விளங்கிக் கொள்ள வேண்டுமாயிருந்தால் 1971ஆம் ஆண்டு இந்த நாட்டிலே நிகழ்ந்த கிளர்ச்சியை ஒருமுறை ஞாபகப் படுத்திப் பாருங்கள். அப்போது உண்மைகள் விளங்கும்...''

சிறிது நேரத்திற்கு மௌனமாக இருந்தாள் நந்தாவதி. இறந்த கால நிகழ்ச்சிகளிலே அவளது நினைவுகள் கால்தரித்து உலவி வருவதனை அவளது முகமும், மௌனமும் அர்த்தப்படுத்தின.

கணப்பொழுதினுள்ளே முகத்தினில் கவலையின் திரை விரிந்து கவிழ்ந்தது. லேசாக நந்தாவதியின் கண்கள் கலங்கின. தன்னை மறந்து அவள் கூறிக் கொண்டு போனாள்...

''எனக்கு மிகத் தெளிவாகவே தெரியும்... நானே அதனை நேருக்கு நேராக அறிந்திருந்தேன். ஓரளவுக்குப் பங்கும் கொண்டிருந்தேன். என்னுடைய பல சகாக்கள் அந்த இயக்கத்திலே சேர்ந்திருந்தார்கள். அதற்காகத் தங்களை அர்ப்பணித்திருந்தார்கள்... அது ஒரு உன்னதமான அனுபவம். அந்த இயக்கம் ஏன் தோன்றியது? ஆயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் தங்களின் உயிரையும் ஒரு பொருட்டாக மதியாமல் எதற்காக இந்தப் போராட்டத்திலே பங்கு கொண்டார்கள்...? அதைப் பற்றிபல பல கருத்து வேறுபாடுகள் இருக்கலாம்... ஆனால் அதன் அடிப்படை நோக்கத்தினை யாராவது குறை கூறமுடியுமா...?''

சந்திரவதனி, நந்தாவதியை இப்போது புதிய வடிவிலே கண்டாள். அந்த 1971ஆம் ஆண்டு அவளிற்கு நன்றாகவே மனந்தனிலே பதிந்திருக்கின்றது...

சந்திரவதனி அப்போது பேராதனைப் பல்கலைக் கழகத்திலே இரண்டாவது ஆண்டு மாணவியாகப் பயின்று கொண்டிருந் தாள். ஒரு தீப்பொறி பெருநெருப்பாய் மூங்கிற் காட்டிலே பரவி எரிந்ததைப் போலக் கனன்று இலங்கை முழுவதையும் அதிர்வுக்குள்ளாக்கியதை அவள் நேருக்கு நேராகவே அறிந்திருந்தாள்.

பரபரப்பான சூழ்நிலையின் மௌனமும், பயமும் கலந்த நிழல்தனுக்குள்ளே பல்கலைக் கழக விடுதி அறைகள் ஆயுதப் படையினரால் தீவிரமாகச் சோதனை போடப்பட்டதையும் தாங்கள் அங்கிருந்து அவசர அவசரமாக வெளியேற்றப் பட்டதையும் ஒரு கெட்ட கனவின் நினைவாக அவள் மனம் இன்னமும் ஞாபகம் கொண்டிருக்கிறது. நீலநிறமான கோல உடையை அணிந்து, அரசியல் சித்தாந்தத்தினால் தங்களைக் கவசமிட்டவராய் ஆயுதங்களை ஏந்தி, இலங்கை முழுவதிலும் போராடி புதிய ஆட்சியினை உருவாக்கபெனப் புறப்பட்ட 'மக்கள் விடுதலை முன்னணியை'ப் பற்றி அந்த அவசரச் சூழ்நிலைக்குள்ளும் இரகசியமாகப் பேசப்பட்டதனை சந்திரவதனி அப்போதுதான் அறிந்து கொண்டாள்.

அவளோடு ஒன்றாகப் பயின்ற சுராங்கனி, ஜானகி, அனுலா, பிரேமா ஆகியோரும் அவ்வியக்கத்தில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்டனர் என்று அன்றே அவள் அறிந்திருந்தாள்.

புகையிரத நிலையத்திலே யாழ்ப்பாணம் செல்வதற்காக அடைந்துக் கொண்டு நின்ற சில தமிழ் மாணவர்கள், ''நல்ல காலம் எங்களின்ரை தமிழ் ஆட்கள் இதொன்றிலையும் பங்கு கொள்ளவில்லை. நாங்கள் தப்பித்துக் கொண்டோம்...'' என்று முணுமுணுத்துக் கொண்டதை அவள் கேட்டுக் கொண்டே அவர்களுடைய குரூரமான மனப்போக்கினை எண்ணி வெறுப்புற்றிருக்கின்றாள்.

மறுமுறை பல்கலைக் கழகத்திற்குப் போனபோது அச்சங்கவிந்த வார்த்தைகளும், துயரஞ் சுமந்த முகங்களும், எதனையோ இழந்து தவிக்கின்ற இளமையின் வேதனைகளும் அங்கே நிறைந்திருந்ததனை அவள் உணர்ந்து கொண்டாள். அந்த அனர்த்தங்களை இட்டு அவள் கவலை கொண்டாளே தவிர, அந்தச் சம்பவங்களையிட்டுப் பின்னர் ஆழ்ந்து யோசிக்கவில்லை...

''மனிதருக்குரிய அடிப்படை வசதிகளையும், நிம்மதியான வாழ்க்கையையும் பெற்றுத் தருவதனை இலட்சியமாகக் கொண்டே இந்த இயக்கம் தோன்றியது. பலவிதமான தளைகளாலும் கட்டப்பட்டுக் கிடக்கிற மனிதரை அவற்றிலிருந்து விடுதலை செய்வதனையே தங்கள் லட்சியமாகக் கொண்டிருந்தனர்... பிரச்சினைகளும், கஷ்டங்களும் சிங்க மக்களிடையே இருந்திராவிட்டால் இப்படியொரு மாபெருங் கிளர்ச்சி இந்த நாட்டிலே தோன்றியிருக்க முடியுமா என்பதை ஒருமுறை யோசித்துப் பாருங்கள்...''

நந்தாவதியின் குரலினிலே தர்ம நியாயங்களைக் கேட்டுப் போராடுகின்ற ஆவேசம் மேலோங்கியிருந்தது.

''என்னோடு சிறுவயதிலையிருந்து ஒன்றாகப் படித்துப் பழகிய சிநேகிதி ஒருத்தி இருந்தாள். அவளினுடைய பெயர் இந்திராணி பெரேரா. மிகவும் உற்சாகமும் சுறுசுறுப்புமுள்ள பெண். படிப்பில், விளையாட்டுகளில், நாடகத்தில் பொதுத் தொண்டுகள் ஆகிய எல்லாவற்றிலுமே அவள்தான் முன்னணியில் நின்றாள். ஜி.சி.ஈ. பரீசையில் சித்தி எய்தியதின் பிறகு, அவளிற்குத் தொடர்ந்து படிப்பதற்கு வசதிகள் எதுவுமே இருக்கவில்லை. அவளிற்கு இளையவர்களாக ஆறு சகோதரிகள்

இருந்தார்கள். தகப்பன் பெரேரா ஒரு குத்தகை விவசாயி. மேலே தொடர்ந்து படிக்க வசதியில்லை. ஏதாவது தொழில் பார்க்கவும் மார்க்கமில்லை. வீட்டிலோ மீளாத வறுமையும் நோயுமே நிலவிற்று. அவள் மிகக் கவலையுடன் யோசித்துக் கொண்டிருப்பதனை நான் கண்டிருக்கின்றேன்...

சில காலமாக எனக்கும் அவளிற்கும் தொடர்பு விட்டுப் போயிருந்தது. கடைசியாக ஒரு நாள் அறிந்தேன்... அவள் கொல்லப்பட்டு விட்டாள். அவளைப் பற்றி நான் விசாரித்தபோது பல உண்மைகளினை அறிந்து கொண்டேன். தன்னை இந்த இளைஞர் இயக்கத்தோடு பிணைத்துக் கொண்ட அவள் தனது உயிரைத் துச்சமாக மதித்து துப்பாக்கி ஏந்தியும் போராடி இருக்கிறாள். அப்படியான சந்தர்ப்ப மொன்றிலைதான் அவன் உயிரையும் இழந்தாள். இன்றைக்கும் எங்களுடைய ஊரில் இந்திராணியின் நாமம் நினைவு கூரப்படுகின்றது. கஷ்டப்படுகிற மக்கள் விடுதலையை அடைவதற்காக என்னை அர்ப்பணித்துள்ளேன் என்று இந்திராணி அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பாளாம்... சிங்க மக்களுக்கிடையே, சிங்க இளைஞர் கள் மத்தியிலே சந்தோஷமும், நிறைவான வாழ்க்கையும் இருந்திருக்கும் என்றால் இப்படியான நோக்கத்தோடு ஒரு இயக்கந் தோன்றியிருக்க முடியுமா? அதிலே ஆயிரமாயிரம் இளைஞர்கள் இறந்திருக்க முடியுமா?''

சந்திரவதனியும் சகுந்தலாவும் மௌனமாயிருந்தனர். சகுந்தலா வின் மனதினிலே இதுபோன்ற பிரச்சினைகள் தோன்றுகின்ற போது, அவளுடைய தமையனான ராமநாதன் இருந்தால் அவனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுவான், அவன் ஏதாவது புத்தகங் கொடுத்தால் மிகுந்த ஆர்வத்தினோடு வாசிப்பாள்.

இவையெல்லாவற்றையும் விட அவளது கல்லூரி மாணவர் பேரவையிலே முக்கிய பங்கினை வகிக்கின்றாள். பல மாணவ ஹர்த்தால் இயக்கங்களிலே பங்கு கொண்ட அவள், வேண்டு மென்றே தமிழ் மாணவர்களை இலங்கை அரசாங்கங்கள் வஞ்சித்து வருவதாக உறுதியாக நம்பியிருந்தாள்.

''யாழ்ப்பாணத்திற்கு எனக்கு இடமாற்றம் வந்ததனை அறிந்தவுடன் எனக்கு பயம் ஏற்பட்டு விட்டது. யாழ்ப்பாணத்து மக்களைப் பற்றி, சிங்கள மக்களிடையே பாரதூரமான கதைகள் கட்டிவிடப் பட்டிருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் சிங்கள மக்கள் நிம்மதியாக உலவ முடியாதென்று அரசியல்வாதிகள்

பகிங்கரமாக பிரசார மேடைகளில் கூறி வந்திருக்கிறார்கள். சிங்களவர், யாழ்ப்பாணத்திலே தங்களுக்குச் சொந்தமான வீடுகளையோ காணிகளையோ வாங்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனத் தெற்கிலேயுள்ள சிங்கள மக்களுக்கு கூறப்பட்டிருக்கின்றது. ஒருவரோடு ஒருவர் பழகாமலே, ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளாமலே, ஒருவருக்கொருவர் தப்பபிப்பிராயங்களைத் தங்களிடையே வளர்த்துக் கொண்டு அயோக்கியத்தனமான அரசியல்வாதிகளின் வழி நடத்துதலுக் குட்பட்டு எங்கள் மக்கள் ஒருவரோடு ஒருவர் உடலினாலும், மனதினாலும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை முற்றாகவே இல்லாது ஒழிகின்ற வரைக்கும் இந்தத் தேசத்திலே நிம்மதியான நிலைமை உருவாக முடியாது என்பதனை இப்போது நான் முற்றாகவே நம்புகிறேன்...''

நந்தாவதி கூறிக் கொண்டிருப்பதனை வெகு அவதானமாகக் கேட்டவாறிருந்த சகுந்தலாவின் காதுகளிலே, அவள் சென்று பங்கு கொண்ட கூட்டமொன்றிலே அரசியல்வாதியொருவர் முழங்கிய முழக்கம் விட்டு விட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது.

''சிங்கள ஏகாதிபத்தியவாதிகள், தமிழர்களின் முதுகின்மேலே ஏறி நின்று, தங்களின் இன மக்களுக்கு நல்வாழ்வு ஏற்படுத்திக் கொடுப்பதினை நாங்கள் எங்கள் உடம்பிலே கடைசித் துளி இரத்தம் இருக்கும் வரை அனுமதிக்கப் போவதில்லை. தமிழ் மக்கள் எல்லாவழிகளிலும் புறக்கணிக்கப்பட்டு, அடிமை களாக்கப் பட்டிருக்கின்றார்கள். இந்த அடிமை விலங்கினை நீங்கள் பொடிப் பொடியாக உடைத்தெறிய வேண்டும். எங்கள் உரிமைகளினை இந்த ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து மீட் டெடுக்கும் வரை வேறு எந்த சிந்தனைகளுக்குமே இடமளிக்க மாட்டோமென்று நீங்கள் உறுதி பூண்டு கொள்ள வேண்டும்.''

தலைமயிர் காற்றிலே அலைந்து பறக்க அமைதியாக உட்கார்ந்திருந்த நந்தாவதியை பார்வையினால் விழுங்கிக் கொண்டிருந்தாள் சந்திரவதனி.

நந்தாவதி இன்றைக்கு வழமையினை விட வசீகரமான தோற்றத்தோடு சந்திரவதனிக்குத் தென்பட்டாள். அவளி னுடைய முகம் உற்சாகம், தெளிவு, ஆவேசம் என்று உணர்வு களின் குழைவாக இருந்தமையே அதற்குக் காரணமென நினைத்தாள் சந்திரவதனி.

4

பியதாஸாவின் வீட்டிற்குச் சந்திரவதனியும், நந்தாவதியும் சென்றபோது, வீட்டிலே பியதாஸா இருக்கவில்லை. பியதாஸாவின் மனைவி அவர்களிருவரையும் மிகுந்த அன்போடு வரவேற்றாள். அவர்களிற்கு நான்கு பெண்கள், இரண்டு ஆண்கள். சீலாவதியோடு கதைத்துக் கொண்டிருந்த போதுதான், பியதாஸாவின் மகள் பியசீலி, யாழ்ப்பாணத்திலே அவளோடு படித்த தமிழ் இளைஞனைத் திருமணஞ் செய்து கொண்டு வாழ்வதாக நந்தாவதி அறிந்து கொண்டாள். பியசீலி இப்போது தன்னுடைய கணவனான தேவராஜனுடன் நல்லூரிலே வாழ்கிறாள். பியதாஸா குடும்பத்திலுள்ள எல்லோரையும் தமிழையும், சிங்களத்தையும் நன்றாகவே பேசிக் கொள்கிறார்கள்.

"யாழ்ப்பாணத்திலேதான் நான் இவரைத் திருமணம் செய்து கொண்டேன். எங்களினுடைய திருமணத்திற்கு நிறையத் தமிழ் ஆட்கள் வந்திருந்தார்கள். இப்போதுள்ள மாதிரி அந்த நாட்களிலை தமிழருக்கும், சிங்களவருக்குமிடையில் எந்தப் பிரிவினையும் இருந்ததில்லை. ஒரு தாய் பிள்ளைகள் போலை நாங்கள் எல்லோருக்கும் சந்தோஷமாகத்தான் இருந்தோம். இப்போதுள்ள நிலைமைகளை யோசித்துப் பார்க்கின்ற போது எவ்வளவு மனக் கஷ்டமாக இருக்கின்றது தெரியுமா? கடவுளே, முந்தின காலத்தைப் போல இந்த மக்கள் எல்லோரும் ஒற்றுமையாயிருக்கிற நிலைமை திரும்பவும் வர வேண்டும்..."

சீலாவதியின் முதிர்ச்சியடைந்த வட்ட முகத்தினில் உணர்ச்சி மயமான எண்ணங்கள் வடிவங் காட்டியிருந்தன. மிகவும் நிதானத்தோடும், பொறுப்போடும் மனம் உணர்ந்திருந்த சொற்களை வெகு எளிமையாக பியசீலி கூறிக் கொண்டிருந்தாள்:

"எங்களின் திருமணக் கொண்டாட்டங்கள் முடிந்த பிறகு, நாங்கள் எங்கள் சொந்தக்காரர்களுடன் நயினா தீவுக்குச் சென்றோம். அழகான அந்தச் சிறிய தீவு எங்களுடைய சரியான நம்பிக்கைக்கு அடையாளம் என்று என்னுடைய கணவர் அடிக்கடி சொல்லுவார். பழம் பெருமை வாய்ந்த தமிழ்க் கோவிலும், புத்தகோவிலும் அந்தத் தீவிலே இருக்கின்றன. சிங்களவரும், தமிழரும் ஒரே படகினிலே சென்று அந்தக்

கோவில்களை வழிபடுகின்றார்கள்... நாங்கள் புத்த கோவிலுக்குச் சென்று வழிபட்டதன் பிறகு, இந்து கோயிலுக்கும் போய் வழிபட்டு விட்டுத்தான் திரும்பினோம்...''

பியதாஸாவின் இரண்டாவது மகளான கல்யாணி, வெள்ளித் தட்டிலே பிஸ்கட், வாழைப்பழம் ஆகியவற்றைக் கொண்டு வந்து வைத்துவிட்டு, ''சாப்பிடுங்கள்'' என்று புன்னகையோடு கூறிவிட்டு தாய்க்குப் பக்கத்திலே அமர்ந்து கொண்டாள்.

''என்னுடைய சொந்த ஊர் கம்பஹா. ஆனால் எனக்கு என்னுடைய பிறந்த ஊரே மறந்து போய்விட்டது. யாழ்ப்பாணம்தான் எனக்கு இப்போது சொந்த ஊர் போலப் பழகி விட்டது. என்னுடைய வயது முதிர்ந்த தாயாரைக்கூட, அவள் இறந்ததும் இங்குதான் தகனக் கிரியைகள் செய்தோம். அந்த நேரத்தில் எங்களுக்கு முழு உதவியையும் செய்தது தமிழ் ஆட்கள்தான்...''

சீலாவதி இலேசான பெருமூச்சோடு நிமிர்ந்து சுவரிலே தொங்குகின்ற தாயின் புகைப்படத்தை மிக மரியாதையோடு சில கணங்களிற்கு நோக்கினாள்.

அதே வேளையில் குறுகுறுவென்ற கண்களையுடைய சந்தியா எல்லோருக்கும் தேனீர் பறிமாறினாள்.

''அப்படியென்றால் இனக் கலவரம் நடந்த காலத்திலே உங்களுக்கு எவ்விதமான தீங்குமே நேரவில்லை என்று சொல்கிறீர்களா?''

சீலாவதி சிறிது நேரம் மௌனமாயிருந்து விட்டு தன் எதிரே கண்களால் புன்னகை செய்து கொண்டிருக்கின்ற சந்தியாவைப் பார்த்தாள். அந்த இறந்த நாளைய நிகழ்ச்சிகளினை மனதினுள் எடுத்து ஆராய்பவள் போலிருந்துவிட்டு நந்தாவதியைப் பார்த்துக் கூறினாள்:

''யாழ்ப்பாணத்தில், அந்தக் கலவர காலத்திலே சிங்கள மக்களைப் பயந்து நடுங்க வைத்த ஒரே எதிரி வதந்திதான். பொறுப்பு வாய்ந்த பல மனிதர்களே அதற்குப் பொறுப்பாக இருந்தார்கள். இன்னமும் அந்த நாட்கள் எனக்கு நேற்றுப் போல நினைவிலே இருக்கின்றன... நாங்கள், வெளியே இருந்து வந்த புதினங்களைக் கேட்டதும் நன்றாக அச்சப்பட்டோம். ஆனால் அது சில மணித் தியாலங்களுக்குக் கூட நீடிக்க வில்லை. இவர் சில ஆட்களோடு வீட்டுக்கு வந்தார். வந்தவர்கள் மிகப் பரிவோடு எங்களுக்கு ஆறுதல் சொன்னார்கள். பொய்யான

வதந்திகள் தான் அதிகமாகப் பரவுகிறதென்றும், காடையர்கள் அந்தச் சந்தர்ப்பத்தினைப் பாவித்து அப்பாவி மக்களைத் தாக்குகிறார்க ளென்றும், அது நீடிக்கமாட்டாதென்றும் கூறினார்கள் அவர்கள்.

1958ஆம் ஆண்டிலும் இதே கதைதான் நடந்தது என்று கூறிக் கவலைப்பட்ட அவர்கள் எங்களின் வீட்டிற்குக் காவலாக நின்றார்கள். இதே போல இங்கு வாழ்ந்த தமிழ் மக்கள், பெரும்பான்மையான சிங்கள மக்களுக்குப் போதிய உதவியினைச் செய்த போதிலும், சில சிங்களவர்கள் பயத்தின் காரணமாக இந்த இடத்தை விட்டு தங்களின் ஊருக்குப் புறப்பட்டு விட்டார்கள். போனவர்கள் சும்மாவும் போக வில்லை. பயங்கரமான வதந்திகளைக் கொண்டு போய்த் தங்களின் ஊரிலும் பரப்பினார்கள்...''

கல்யாணி இடையிலே குறுக்கிட்டாள்.

''அப்போது எங்களுடைய அப்பா செய்ததைச் சொல்ல வில்லையே அம்மா...''

சீலாவதியின் முகந்தனில் இலேசாக வெட்கம் பரவித் தணிந்தது. சில நிமிஷங்களின் பிறகு வாஞ்சையோடு வெளியாகிற்று அவளுடைய குரல்:

''மகளே! நாங்கள் செய்கிற புண்ணிய காரியங்களைச் சொல்லிப் பெருமை அடையக்கூடாது என்று எத்தனை தரம் சொல்லியிருக்கிறேன். அது உனக்கு மறந்து போய் விட்டதா?''

கல்யாணி மௌனமாகி நந்தாவதியைப் பார்த்தாள். அவளின் முகத்தைப் பார்க்க நந்தாவதிக்குப் பரிதாபகரமாக இருந்தது. மெதுவாக சீலாவதியை நோக்கி கெஞ்சுகிறாற் போலக் கேட்டாள்: ''அதென்ன விஷயம்?''

''இல்லை நந்தா, அது சொல்லக்கூடாத கதையல்ல, ஆனால் இவளுடைய தகப்பனார் அப்படி நாங்கள் சொல்வதை விரும்ப வில்லை. என்றாலும் என்ன... நீர் கேட்டதற்காக அதைச் சொல்கிறேன்... தெற்குப் பகுதியிலை இருந்து, சிங்களக் கடையர்களால் அடித்து விரட்டப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு வந்த தமிழ் அனாதைகளுக்கு அவர்கள் வந்து தங்கியிருந்த தற்காலிக அனாதை முகாம்களில் உணவுக்கு அப்போது பெருந்தட்டுப்பாடு நிலவியது. இந்த நேரத்தில் இவர் தன்னுடைய பாண்பேக்கரியில் பாண் தயாரித்து ஒருவார காலமாக அகதிகள் முகாமிற்கு தானே வானில் பாணை ஏற்றிச் சென்று விநியோகம் செய்திருக்கின்றார்...''

வெகு அடக்கமாகக் கூறப்பட்ட அந்தச் செய்தியினைக் கேட்டதும் நந்தாவதியின் நெஞ்சினுள்ளே பெருமிதம் பொங்கிற்று. சாதாரண மனிதராகக் கருதப்பட்ட பியதாஸா விண்ணிற்கும் மண்ணிற்கும் உருவமெடுத்து வளர்வதாக அவள் உணர்ந்தாள்.

'அது ஒரு சிறிய செயல்தான். ஆனால் அந்தச் சூழ்நிலையின் பின்னணியிலே எவ்வளவு துணிகரம் வாய்ந்த செயல் அது; அந்தச் செயலினுள்ளே பொதிந்துள்ள மனிதாபிமானத்திற்கும், துணிவிற்கும், ஓர் எல்லையிட்டு இதுதான் விஷயமென வரையறையினைச் செய்துவிட முடியுமா?'

அவளின் நினைவு சிறிது விரிவுப்பட்டது. பியதாஸாவைப் போல எத்தனை மனிதாபிமானிகள் சிங்களவர்களுக்குள்ளும் இருந்திருப்பார்கள். பியதாஸாவைப் போலவே எத்தனை பொன்னுத்துரைகளும், குமாரசாமிகளும் தமிழர்களிடையே உலாவி இருப்பார்கள். அத்தகைய மனிதாபிமானம் இல்லாதிருக்குமாயின் இந்தச் சிறிய தீவினிலே சிங்களவர்களும், தமிழர்களும் இவ்வளவு இனக்கலவரங்களின் பின்னரும் உயிர் வாழ்ந்திட முடியுமா...''

சந்திரவதனியின் மனதினுள்ளே பியதாஸாவின் குடும்பமே பரிபூரணம் பெற்று மரியாதைக்குரிய மனிதர்களென உருவ மெடுத்து நின்றது. இன்று வரையிலும் இந்தச் சம்பவம் பற்றி சந்திரவதனி அறிந்திருக்கவில்லை. சிவப்பான, தலைமுடி கருகருத்துச் சுருண்ட பியதாஸாவை இதுவரை காலமும் அமைதியான வருகையையும், வாத்ஸல்யமான வார்த்தைகளை யும் கொண்டிருக்கிற நல்ல மனிதராகத்தான் அவள் அறிந்திருந் தாள். இப்போது அதனையும் ஒரு தவறாக எண்ணினாள் சந்திரவதனி.

தான் ஒரு சிங்களவன் என்கிற உணர்வினையே அடியோடு துறந்து ஒரு மனிதாபிமானியாக வாழ்கிற அவரை சந்திரவதனி இப்போது மிகவும் மதிப்போடு நினைவு கூர்ந்தாள். இப்படி அவள் நினைத்துக் கொண்டிருக்கையிலே கதவின் வழியாக பியதாஸா உள்ளே வந்து அவர்களின் எதிராக புன்னகை மின்னு கின்ற முகத்தினோடு உட்கார்ந்து கொண்டார். அவர்களைக் கண்டது பியதாஸாவைப் பரவசத்தில் ஆழ்த்தி விட்டது. கண்களின் பிரபையினில் மனதின் உள்ளார்ந்த மகிழ்வே சுடர்ந்தது.

''நல்லது, நல்லது. வீட்டுக்கு வருகின்ற போது உங்கள் இருவரையுமே நினைத்துக் கொண்டுதான் வந்தேன். எப்படி குமாரசாமி ஐயா நல்ல சுகமாகத்தானே இருக்கிறார்?''

சந்திரவதனி புன்னகையினால் பதில் சொன்னாள்,

''நாங்கள் எல்லோரும் இன்றைக்குப் பின்னேரம் ஒரு சினிமாப் படத்திற்குப் போக வேண்டும்... சறுங்கலே - 'காற்றாடி' என்ற படம். காமினி பொன்சேகா நடித்திருக்கிற நல்ல கருத்தான படம். இனக் கலவரத்தை மையமாக வைத்து, தமிழ் சிங்கள உறவுகளை விமர்சித்து காமினி பொன்சேகாவே நடராசா என்ற தமிழ் ஆளாக நடித்திருக்கிற படம். படத்தில் அரைவாசிக் காட்சிகள் வரை யாழ்ப்பாணப் பக்கத்திலேயே படமாக்கப் பட்டிருக்கின்றதென நான் பத்திரிகையிலை படித்திருக்கிறேன்...''

சந்தியாவும் கல்யாணியும் மகிழ்ச்சி பொங்கக் கூறினார்கள்:

''எல்லோருமாக இன்றைக்கு படம் பார்க்கப் போகிறது மிகவும் நல்ல விஷயம்...''

5

தகப்பனிடமிருந்து வந்த கடிதத்தினை இரண்டு மூன்று தடவைகள் படித்துவிட்டு யோசனையில் ஆழ்ந்து போயிருந்த நந்தாவதி, சகுந்தலையின் செருமல் ஓசையிலே சிந்தனை கலைந்து சுய நினைவடைந்தாள்.

''என்ன அக்கா, ஒரே யோசனை... நான் வந்ததே உங்களுக்குத் தெரியாமல் கடுமையான யோசனையில் மூழ்கிப் போயிருக்கிறீர்கள்...''

வழமையிலோவெனில் சகுந்தலா, சிங்களம் பேசுவதைக் கேட்டு விட்டு நந்தாவதி, 'ஒன்றுமில்லையே சகுந்தலா' என்று தமிழிலேயே பதிலினைக் கூறியிருப்பாள். இன்றோ அவளின் முகம் வாடிய சிதம்பரத்தைப் பூவைப் போல சாம்பியிருந்தது.

எனினும் நந்தாவதி தன்னைச் சுதாரித்தவளாக, ''சகுந்தலா, வீட்டிலே இருந்து அப்பா கடிதம் எழுதியிருக்கிறார். அதுதான் யோசித்துக் கொண்டிருக்கின்றேன்...'' என்று கூறினாள்.

''ஏன், உன் வீட்டில் யாருக்காவது சுகமில்லையா?''

சகுந்தலாவின் குரலிலே தொனித்திட்ட கவலையை இதமாக வருடிக் கொண்டு பதில் சொன்னாள் நந்தாவதி:

''இல்லை, சகுந்தலா. எல்லாமே பணப் பிரச்சினைதான். உமக்கு இதைப் பற்றி என்ன விளங்கப் போகின்றது; நீர் குழந்தைப் பிள்ளை...''

சகுந்தலா மெலிதான புன்னகையைச் சிந்தினாள்.

''அப்பா கடிதம் எழுதியிருக்கின்றார். இந்த முறை வயல் அறுவடை ஒன்றுமே சரிவர இல்லையாம். மீண்டும் வயலை உழுது எல்லாம் தயார் செய்ய வேண்டுமென்றால் ஒரு தொகை காசு தேவைப்படுமாம்... தன்னால் எதுவுமே செய்ய முடியாதென்று எழுதிவிட்டு, அடுத்த வரியிலேயே உன்னால் ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று கேட்டிருக்கின்றார். படித்துவிட்டு வேலை தேடி அலுத்துவிட்ட மகனிடம் அவர் எதைத்தான் கேட்க முடியும்? நான்தான் கட்டாயமாக ஏதாவது செய்தாக வேண்டும்... ஆனால் என்ன செய்வது...?''

நந்தாவதியின் முகம் இத்தகையதொரு கவலைக்குள் ஆழ்ந்து போய் கலங்கியதை இப்போதுதான் முதற்தடவையாக கண்டு மனம் நெகிழ்வுற்றாள் சகுந்தலா. அவ்வேளையில் அவளின் மனம்தனிலே சில எண்ணங்கள் அரும்பித் துளிர்விட்டன...

இதுவரை காலமும் எங்களுக்குக் கற்பிக்கப் பட்டிருந்தவை எத்தகைய தவறுமிக்க தோற்றங்களாக உள்ளன. சிங்கள மக்களுக்கு எந்தவிதமான குறைவுமில்லை என்றுதானே நாங்கள் எண்ணி இருக்கின்றோம்' அவர்களினால், நாங்கள் எல்லோரும் அநியாயமாக நசுக்கி வதைக்கப் படுகின்றோம்... அரசாங்கங்களின் சகல சலுகைகளும் சிங்களவருக்குத்தான் கிடைக்கிறது. தமிழருக்கு இல்லை என்ற கற்பிதங்கள் உண்மையானவையாக இருந்தால் இதோ எனக்கு எதிரே கலக்கமே வடிவமாயிருக்கின்ற நந்தாவதியினது கவலைகளுக்குக் காரணந்தான் என்ன? அவள் கூறியது போல 1971ஆம் ஆண்டு நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அர்த்தம் என்ன -

''இப்போது நன்றாக யோசித்து ஏன் வீணான தலையிடியைத் தேடிக் கொள்ள வேண்டும்? ஆகக் கூடியதாக ஏதாவது செய்ய முடியுமென்றால் முயற்சியுங்கள். உன்னாலே என்ன செய்ய முடியும்?''

நன்றியோடு சகுந்தலாவைப் பார்த்தாள் நந்தாவதி. ''என்னால் ஆகக்கூடிய விஷயம் என்ன சகுந்தலா... கடன்

சபையிடம் கடன் கேட்டு விண்ணப்பிக்கலாம். அவ்வளவுதான் செய்யக் கூடியது. ஆனால் ஒரு கிழமைக்குள் ஐநூறு ரூபா அவசரமாகத் தேவை என்று அப்பா எழுதியிருக்கின்றார். என்ன செய்வதென்றே எனக்குத் தோன்றவில்லை...''

சகுந்தலாவுக்கு மூளைக்குள் என்னவோ பளிச்சிட்டது போலிருந்தது. மனம் திடீரென்று லேசானதாக உணர்ந்தாள்.

''சரி அக்கா, நீங்கள் கொஞ்சத்துக்கு நித்திரை கொள்ளுங்கள். வீணாக யோசித்து தலையிடியை ஏன் தேடிக் கொள்ள வேண்டும். நான் பிறகு வருகிறேன்.''

சகுந்தலா சொல்லிக் கொண்டு வெளியே போக நந்தாவதி கட்டிலில் சாய்ந்து படுத்துக் கொண்டாள்.

இன்று போல வீட்டைப் பற்றிய கவலைகள் வந்து அவளினுடைய நெஞ்சினை துயரங் கனக்க வைத்ததில்லை. பல இடங்களிற்கும் விஜயபாலா கடனுக்காக அலைந்திருப்பார். ஏமாற்றமே முடிவாகி இருக்கும். இறுதியில் எதுவுமே இயலாத நிலைதனிலே அந்தக் கடிதத்தை தயங்கித் தயங்கி அவர் எழுதியிருப்பாரென்பதனை நந்தாவதி தெளிவாகவே உணர்கின்றாள். அவருக்கு உள்ள வருவாய்க்கான ஒரே ஊற்று அவரது வயற்காணிதான். அந்தக் குத்தகை வயலின் ஆதாரத்திலேதான் - காமினியையும், நந்தாவதியையும் அவர் படிப்பித்தார்.

தகப்பனின் கஷ்டங்களைக் கண்ணெதிரே கண்டு அவருக்கு மகிழ்வு கொடுக்க வேண்டுமென்ற வைராக்கியத்தினை மனதினுள் கொண்டே அவர்களிருவரும் படித்தார்கள். திறமைகளும் உயர்கல்வி முறைகளுக்கும் எவ்வித இணைப்புமில்லாத இவ்வமைப்பு முறையிலே மேற்படிப்புப் பற்றிய ஆசையே அவர்கள் கொள்ள முடியாத உணர்வாகிப் போய் விட்டது.

நந்தாவதி அரசாங்க எழுதுவினைஞர் பரீட்சையில் சித்தியெய்தி உத்தியோகத்தைப் பெற்றுக் கொண்டு விட்டாள். காமினி தன்னுடைய கல்வியைத் தொட முடியாததினால் மிகுந்த கவலையினைக் கொண்டிருக்கின்றான். அவன் கூடிய வரையில் பொறுமையான போக்கினையே கடைபிடிப்பவன். சில வேளைகளில் தகப்பனார் ஏதாவது கோபப்பட்டால் போதும் காமினி உணர்ச்சி வசப்பட்டு விடுவான். அவரை நிமிர்ந்து பார்க்காமல் விண்ணப்பம் ஒன்றினைக் கூறுபவன் போல வார்த்தைகளினை நிறுத்தி நிறுத்திக் கூறுவான்;

''அப்பா, என்னை இப்போது எதற்காக குறை சொல்கிறீர்கள்? ஜி.சி.ஈ. சித்தியெய்தி விட்டு என்னாலே என்ன வேலையினைத் தேடிக் கொள்ள முடியும்...? நீங்கள் அறியவே நான் எத்தனை இன்டர்வியூவுக்குப் போய் வந்திருக்கிறேன்... நான் போகின்ற ஒவ்வொரு இன்டர்வியூவிலும் என்னைவிடப் படித்தவர்கள் என்னைப் போலப் படித்தவர்கள் தொகை தொகையாக வருகிறார்கள். இனி எனக்கு உயிர் போகின்றதாக இருந்தாலும் நான் இன்டர்வியூக்குப் போகவே மாட்டேன்... எல்லாவற்றையும் மறந்துவிட்டு இப்போதும் நான் வயலுக்குள் இறங்கி வேலை செய்வதற்குத் தயாராக இருக்கின்றேன். ஆனால் நீங்களோ அதற்கு அனுமதிக்கிறீர்கள் இல்லை. கல்விக்கும் தொழிலுக்கும் பெரிய இடைவெளி இருக்கிறதாலை நாங்கள் இப்படியொரு சிக்கலுள் அகப்பட்டிருக்கின்றோம்...''

ஆவேசத்தோடு தொடங்கி, குரல் தளதளப்போடு அவன் சொல்லி முடிக்கின்ற போதில் திக்கித்துப் போய் நிற்பார் விஜயபாலா. காமினியை வெறுப்போடு திட்டித் தீர்க்க வேண்டு மென்று என்றுமே நினைத்ததில்லை அவர். வீட்டிலே பிரச்சினைகள் தலையைத் தூக்குகின்ற வேளைகளில், மனதை அரித்துப் பிடுங்குகின்ற வேதனையோடு வயலில் நின்று, பிரமாண்டமாக நிமிர்ந்து நிற்கிற ரூவான் வெலிசாய தாது கோபுரத்தினை பார்த்து மனதினுள்ளே வழிபாடு செய்து கொள்வார் அவர்.

அவருடைய பிரச்சினைகளை அலுப்புத் தட்டாமல் புன்னகையோடு உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருப்பவர் புத்தபிரான் ஒருவர்தான். அவரின் முன்னே கண்களை மூடிக் கொண்டு தன் கஷ்டங்களிற்கு விரைவிலே நிவாரணம் வரவேண்டும் என்று வேண்டிக் கொள்வதிலேயே அவருக்கு மனம் நிறைந்த ஆறுதலிருப்பதாக அவர் உணர்கின்றார். தன்னுடைய மகனுக்காக எந்த அரசியல்வாதியின் பின்னாலும் போய் நிற்பதற்கு அவர் விரும்பியதில்லை; அவரது பிள்ளை களும் ஆர்வப்பட்டதில்லை. அவருக்கு சொந்தக்காரனான அரசியல்வாதி ஒருவரினால் விளைந்திருந்தது அந்த கசப்புணர்ச்சி.

மக்களுக்கு சேவை செய்வதே எனது வாழ்வினது ஒரே இலட்சியம் என்று பிரகடனம் செய்து புறப்பட்ட அந்த அரசியல் வாதி, விஜயபாலாவைப் போல சாதாரண நிலைமையிலேயே

இருந்தார். ஆனால் இப்போது அவர் நிரந்தரமாகக் கொழும்பி லேயே தங்கி நல்ல வசதியாக வீட்டோடும், மோட்டார் காரோடும் வாழ்கின்றார். பிரமுகர் வரிசையிலே ஒருவராகக் கணித்துப் பேசப் படுகின்றார். அவரின் அயோக்கியத்தனங் களை நேருக்கு நேராகக் கண்டு கேட்டு அறிந்ததன் பிறகு விஜயபாலாவின் மனம் அரசியல்வாதிகளின் மீது தீராத வெறுப்புற்று விட்டது. அதன் பலனாகவே இரகசியமாக வேணும் இளைஞர்களின் கிளர்ச்சிகளில் தொடர்புள்ள பல யுவதிகளோடும் நந்தாவதி தொடர்பு கொண்டிருந்த போதும் அவர் அவளைக் கண்டிக்கவில்லை.

''எங்களுடைய காலம் போய்விட்டது. இந்தத் துடிப்பான இளைஞர்கள்தான் இனி வாழப் போகின்றவர்கள். அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை சிறப்பாக அமைத்துக் கொள்ள விரும்பினால் அதற்கு நாங்கள் ஏன் தடையாக நிற்க வேண்டும்?'' என்று யாரிடமாவது விஜயபாலா கூறினால் அவருடைய மனைவிக்குப் பயம் வந்து விடும்.

மெல்ல எதையாவது முணுமுணுப்பாள். அப்போது அவர் புன்முறுவல் செய்தவாறே, ''ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு காரணம் இருக்கின்றது. எங்களுடைய புத்த குரு இதனை அடிக்கடி சொல்லுவதனை நீ மறந்து விட்டாயா?'' என்று கூறுவார் விஜயபாலா.

அவருடைய கிராமத்திலுள்ள புத்தவிகாரையின் குருவான தம்மரத்தின் தேரோவோடு விஜயபாலாவுக்கு மிகவும் நெருக்க மிருந்தது. எதற்கும் அவரிடம்தான் ஆலோசனைக்காக விஜயபாலா ஓடிச் செல்வது வழக்கம். சென்ற ஆண்டு அவர் மரணமடைந்தது விஜயபாலாவுக்கு மிகப்பெரிய இழப்பாகப் போய்விட்டது.

மூங்கில் மரங்கள் அடர்ந்து சரிந்திருக்கின்ற அந்த வயல் வரப்பிலே சம்மாளமிட்டு உட்கார்ந்து விஜயபாலா பல்வேறு விதமான சிந்தனைகளில் மூழ்கியிருப்பார். அவரது சிந்தனையின் ஆணிவேர் அவரது பிள்ளைகளே. மகள் நந்தாவதியைப் பற்றித்தான் மிகவும் கவலை அவருக்கும். அவளுக்கும் பல திருமணங்கள் பேசி வருகின்றன. திருமணமென்பது ஏழை விவசாயிக்கு இலகுவான விஷயமா? அதுவும் அவள் உத்தியோகம் பார்ப்பவள். இன்னொரு உத்தியோகத்தனைத் தான் திருமணம் செய்ய முடியும். திருமணச் செலவுகள், வீடு

திருத்தி வெள்ளை பூச வேண்டும். அவை புது வருஷத்தினோடு சேர்ந்து வருகின்ற நாட்கள். எங்கும் றபான் ஒலி விம்மி, விம்மிக் கேட்கின்ற சூழலிலே நந்தாவதியின் திருமணம்! -

நந்தாவதி புரண்டு புரண்டு படுக்கின்றாள். எத்தனை காட்சிகளும் எண்ணங்களும் அவளின் நெஞ்சினிலே சின்னச் சின்னக் குருவிகளாய் பறந்து திரிந்து மறைகின்றன!

நன்றாக உறங்கிப்போன நந்தாவதியை வெகுநேரமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள் சந்திரவதனி - பெண்ணுக்கு ஆசை தரும் பேரழகு. மெல்ல அவளின் கன்னத்தில் சந்திரவதனி இருமுறை தட்ட நந்தாவதி உறக்கம் கலைந்து, ஆடைகளைச் சரி செய்து கொண்டு கட்டிலிலிருந்து எழுந்தாள்.

''அப்பா, இந்த ஐநூறு ரூபாயை மணி ஓடரில் வீட்டுக்கு அனுப்பச் சொல்லித் தந்திருக்கிறார்'' என்று கூறியவாறு நந்தாவதியின் கையிலே ரூபா நோட்டுக்களைத் திணித்தாள் சந்திரவதனி.

நோட்டுக்கள் ஏந்திய கையை நெஞ்சோடு அணைத்தவாறு நீர்த்திரை கண்களை மறைக்க வார்த்தைகளற்றுப் போயிருந்தாள் நந்தாவதி. எதையுமே பேச முடியவில்லை அவளால்.

6

அண்ணனைக் கண்ட சகுந்தலா எல்லை மீறிய பரபரப் போடும், மகிழ்ச்சியினோடும் அங்குமிங்குமாகத் திரிந்ததை ரசித்துக் கொண்டிருந்த நந்தாவதியின் மனதிலே காமினி தோன்றினான். காமினி இப்போது என்ன செய்து கொண்டிருப்பான் என அவள் நினைத்துப் பார்க்கின்றாள்...

தாயைப் போல திடகாத்திரமான தோற்றமுள்ள, தீட்சண்ய மான கண்களினையுடைய காமினி இப்போது வீட்டின் முன்புறமுள்ள வெள்ளலரி மரத்தின் கீழே நின்று எதையாவது யோசித்துக் கொண்டிருப்பான். அல்லது அவனின் சிநேகிதர் களோடு காட்டுப் பக்கமாக உலாத்திக் கொண்டிருப்பான்...

காமினி சிறு வயதிலேயிருந்து மிகவும் துடிப்பானவன். அணிலையும், குருவிகளையும் சொல்லி வைத்துக் கல்லினால் குறி தவறாது அடித்து வீழ்த்துவான். ஆனால், பதினான்கு

வயதிற்குப் பிறகு அந்தப் போக்கிலிருந்து முழுமாற்ற மடைந்து விட்டான் அவன். படிப்பில் முன்னைவிட அக்கறையும் கூடிக் கொண்டு போயிற்று. ஆசிரியர் சோமபாலா என்பவரையே தன்னுடைய ஆதர்ஸமாகக் கொண்டிருந்தான் அவன்.

சிலும்பி, வாரிவிடுதலுக்கு அடங்கிடாத தலைமுடியுள்ள, கண்ணாடி அணிந்த கறுப்பான இளைஞன் சோமபாலா. கனிந்த முகத்தினில் சினம்அறிந்திடாதவன். சோமபாலா பாடம் படிப்பித்துக் கொண்டிருக்கையில் அவனையே வைத்த பார்வை எடுக்காது நோக்கியவாறிருப்பார்கள் மாணவர்கள்.

எதிலும் ஒரு மீறிட முடியாத கண்டிப்பு; இதைவிட விளங்கும்படி சொல்லிவிட முடியுமா என சவால் விட்டு நிற்கிற இலகுவான படிப்பித்தல் முறை; எதிலும் மனிதாபிமானத்தை முன்னிறுத்தி உதவி செய்கின்ற தயாளம்; பாடத் திட்டங்களிற்கு வெளியே போய் உலக நிலைமைகளை மாணவர்களுக்கு எடுத்து உரைக்கின்ற அறிவு விசாலம். பள்ளிக்கூடம் முடிந்து வீட்டிற்கு வந்தால் நந்தாவதியோடு கதைக்கிற கதைகளில் பெரும்பாலானவை சோமபாலாவைப் பற்றியதாக இருக்கும்.

''கட்டாயம் சோமபாலா மாஸ்டரைப் போலவே நானும் ஒரு காலத்தில் வருவேன்... எல்லோருக்கும் விசாலமான கல்வியைக் கொடுக்கின்ற பணியைத்தான் நானும் செய்வேன்.''

ஆனால் அவனது இளம் பருவத்துக் கனவு பலிதமாகவே இல்லை. குத்தகை வயலையும், இரண்டு எருமை மாடுகளையும் நம்பி வாழ்க்கை நடத்துகின்ற விஜயபாலாவினால் எவ்வளவோ முயன்றும் மகனுடைய ஆசையினை நிறைவேற்றி வைக்க முடியவில்லை. அவன் ஜி.சி.ஈ. பரீட்சை சித்தியெய்திய காலத்திலே நந்தாவதிக்கு உத்தியோகம் கிடைத்திருந்தால் சில வேளை காமினி மேற்படிப்பு படிப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கக்கூடும். அந்த வாய்ப்பு ஏற்படாமை அவனுக்கு மகத்தான இழப்பாகிப் போய்விட்டது...

சோமபாலா மாஸ்டர் மாலை நேரங்களிலும் சில மாணவர் களைத் தனது வீட்டிற்கு அழைப்பித்துப் பாடஞ் சொல்லிக் கொடுப்பார். தனக்கு இலக்கியம், கலைகளிலிருந்த பரிச்சயத்தை மாணவர்களுக்கும் புகட்டிய அவரைப் பற்றி பின்னரே நந்தாவதி அறிந்து கொண்டாள். கண்டியைச் சொந்தமாகக் கொண்ட சோமபாலா மாஸ்டரும் 1971 கிளர்ச்சியிலே ஒரு பிரதேசத்தின் தலைவராக இருந்திருக்கிறார். அதற்காகச் சில காலம் சிறையிலும்

அடைக்கப் பட்டிருக்கிறார். இவையெல்லாம் காமினிக்கு சோமபாலா மீது மேலும் கவர்ச்சியை ஏற்படுத்திய விஷயங்கள் ஆகும்.

''நந்தா அக்கா, இது அண்ணர் கொழும்பில் இருந்து கொண்டு வந்தது. சாப்பிடுங்கள்...''

சகுந்தலா தனக்குத் தந்த சொக்லெட்டையும் எள்ளில் செய்த தலைக்குளியையும் நந்தாவதி எடுத்துக் கொண்ட போது சகுந்தலா - ''இந்தத் தலைக்குளி என்றால் அண்ணனுக்கு நல்ல விருப்பம். எள்ளை லேசாகக் காய வைத்து, சர்க்கரையோடு கலந்து அரைப் பதத்தில் இடித்து தலைக்குளியைப் போல தமிழரும் எள்ளுருண்டை செய்வார்கள். ஆனால் அண்ணன் அடிக்கடி தலைக்குளிதான் வாங்கிக் கொண்டு வருவார். இந்த முறையும் நிறைய வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்'' என்று ஒரே மூச்சில் கூறிமுடித்தாள்.

நந்தாவதி, ''உண்மையாகவா?'' எனச் சிங்களத்திலே கேட்டவாறு புன்னகை செய்தபடியே தலைக்குளியைச் சாப்பிட ஆரம்பித்தாள். மத்தியான வேளையின் போது தான் ராமநாதனை நேருக்கு நேராகக் கண்டாள் நந்தாவதி. புன்னகை அறிமுகத்தின் பின்னர் இரண்டொரு சொற்கள் கதைத்துவிட்டு அங்கிருந்து எழுந்து போன அவனைப் பற்றி நந்தாவதியின் நெஞ்சினிலே மதிப்பும் மரியாதையும் இடம் கொண்டன.

உயரமான, ஒட்ட வெட்டப்பட்ட தலைமுடியுடைய, அமைதியான முகத்தோற்றம் படைத்த இளைஞன் ராமநாதன். லேசான புன்னகை விளங்கும் உருண்டையானமுகம். தாயாரின் ஜாடையினைக் கொண்டிருக்கிறான் என நந்தாவதி நினைத்தாள்.

''நந்தா அக்காவைப் பற்றி அண்ணனுக்கும், அண்ணாவைப் பற்றி நந்தா அக்காவிற்கும் நிறையச் சொல்ல இருக்கிறது. அவர் நாடகத் தயாரிப்பாளர். அத்தோடை ஒரு எழுத்தாளனுமாயிருக் கின்றார்...''

நந்தாவதிக்கு வியப்பாகப் போய்விட்டது. மௌனத்தையே இந்த இரண்டு நாட்களாகவும் சுமந்து திரிகிறவனாகத் தோற்றமளித்த அவன் இத்தனை அம்சங்களுக்கும் உரியவனாக இருப்பது ஆச்சரியமான விஷயந்தான். 'உருவத்தைப் பார்த்து எதனைத்தான் தீர்மானிக்கக் கூடியதாக இருக்கின்றது? எதையும் பொறுத்திருந்து பார்க்கலாம்.'

மாலைப் பொழுதொன்றின் போது எல்லோருமாக உட்கார்ந்து தேநீர் அருந்திக் கொண்டிருக்கையில் சகுந்தலா வெகு ஆர்வத்துடனே, ராமநாதனைப் பார்த்துக் கூறினாள்.

''அண்ணா, நாங்கள் 'சறுங்கலே' என்ற சிங்களப்படம் பார்த்தனாங்கள். நல்ல படம். அதிக நாட்களுக்குப் பிறகு ஒரு நல்ல படத்தைப் பார்க்க முடிந்தது... அதுவும் பியதாஸா மாமா சொன்னதாலைதான்...''

அவ்வேளையிலே அவளின் முகத்திலே மலர்ச்சி புன்னகை செய்தது. ராமநாதன் அந்தரங்கமான சந்தோஷத்தினைப் பகிர்ந்து கொள்பவன் போல சகுந்தலாவைப் பார்த்தான்.

''சில பிழைகள் இருக்கிற போதிலும் ஒரு நல்ல முயற்சி அது. இதைப்போல படங்களைத் தயாரித்து மக்களுக்கு காட்ட வேணும்...''

திடீரென்று நாக்கைக் கடித்துக் கொண்டு அவன் நிறுத்திவிட்டு, ''நான் தமிழிலேயே கதைத்துக் கொண்டிருக் கிறேன். உன்னுடைய சிநேகிதிக்குத் தமிழ் விளங்குமோ?'' என்று சந்திரவதனியைப் பார்த்துக் கேட்டான் ராமநாதன். முகமெல்லாம் பெருமிதம் பொங்க உடனே பதில் சொன்னாள் நந்தாவதி.

''எனக்கு நன்றாகத் தமிழ் தெரியும். நீங்க தமிழிலேயே சொல்லுங்க...''

நந்தாவதியை வியந்து பார்ப்பவள் போலப் பாவனை செய்து கொண்டு, சகுந்தலா வெறுமையாகிப் போன தேனீர்க் கோப்பைகளை உள்ளே வைத்து விட்டு மீண்டும் வந்துஉட்கார்ந்தாள்.

''சறுங்கலே படம் உண்மையிலை ஒரு துணிகரமான முயற்சியேதான். அந்தப் படத்தின் டைரக்டர் சுனில் ஆரியரட்ணாவுடனும், படத்திலை நடித்திருக்கிற காமினி பொன்சேகாவுடனும் நான் நல்லதொடர்பு வைச்சிருக்கிறவன். இவர்களிருவருடைய திறமையை 'சறுங்கலே' நல்லாக எங்களுக்கு அறியத் தருகுது... படத்தைப் பற்றி நான் இவர்களோடை விவாதித்தும் இருக்கிறேன்...''

சில நிமிஷங்கள் மௌனமாயிருந்தான் ராமநாதன்.

''சறுங்கலே படத்திலே அதன் கதாநாயகனும், கதாசிரியரும், டைரக்டரும் சொல்வதற்கு முனைகின்ற விஷயம் என்ன? 'மனிதர்கள் நல்லவர்கள். தரக்குறைவான அரசியல்தான் மனிதரைக் கெடுக்கிறது' என்றதைத் தான் இந்தப்படம் சொல்லுது... அப்படியானால், மனிதர் நல்லவர்கள். அரசியல் கெட்டதென்றால் இந்தக் கெட்ட மனிதர்களும், அரசியலும் எங்கையிருந்து வருகுது...?''

சகுந்தலா குறுக்கிட்டாள்:

''நீங்கள் இந்தப் பிரச்சினையை வேறு என்ன விதமாகக் காட்டலாம் என்று சொல்லுறியள்?''

''கேவலமான அரசியல் போக்கு சிங்கள, தமிழ் மக்களின் முரண்பாடுகளுக்கும், இனக் கலவரங்களுக்கும் காரணம் என்பது ஓரளவுக்குத்தான் உண்மையானது. தேசிய இனங்களை ஒடுக்குவதின் மூலம் ஒரு போதுமே பிரச்சினையைத் தீர்க்க முடியாது. அதாவது சரியான அரசியல் பார்வையின் மூலந்தான் இனவாதத்தைத் தெளிவுபடுத்த முடியும் என்றதை சுனிலும், காமினியும் உணரத் தவறி விட்டதுதான் படத்தைப் பலவீனமாக்கி விட்டது...''

நந்தாவதியின் மனதினுள்ளே பல கருத்துக்கள் துடித்துக் கொண்டிருந்தன. பொறுமையை இழந்தவள் போல நந்தாவதி கேட்டாள்:

''நீங்க இப்பிடிச் சொல்லுறீங்க. ஆனால 'சறுங்கலே படம் பற்றி சிங்களப் பத்திரிகைகளிலை பலவிதமான கருத்து வாறது... இந்தப்படம் ஒரு பக்க நியாயத்தையே சொல்லுறதாகவும், சிங்கள இனவாதிகளைக் காட்டுறது போலை, தமிழ் இனவாதிகளை இந்தப் படத்திலை காட்டவில்லையென்றும் விமர்சனங்கள் வந்திருக்குது. இந்தக் கஷ்டங்களுக்கு மத்தியலைதன் இந்தப் படத்தை எடுத்திருக்கிறாங்கள்... அதை நீங்க உணர வேணும்.''

ராமநாதன் புன்னகை செய்தான்.

''உண்மைதான். நானும் இதே போல கருத்துக்களை ஆங்கிலப் பத்திரிகைகளிலை வாசித்திருக்கிறன். இது போலக் கருத்துக்களுக்கு அடிப்படையான காரணம் இருக்கிறது. மத்தியதர வர்க்கத்து அறிவாளிகள் மத்தியிலையும் எப்படி இனவாதஎண்ணங்கள் புதைந்து போயிருக்கின்றன என்பதை

இந்தக் கருத்துக்கள் நன்றாக வெளிப்படுத்துகின்றன. அல்லா விட்டால் கொழும்பிலையுள்ள நடராஜாவின் வாழ்க்கையை அலைக்கழிக்கிற இனக் கலவரத்திலை, தமிழ் இனவாதிகளைப் பற்றிக் காட்ட முடியுமா? அதோடை நடராஜாவை இரட்டைத் தன்மையுள்ள ஒரு மனிதனாகத்தான் இந்தப்படம் காட்டி யிருக்குது. ஒரு புறம் சாந்த சொரூபியான, இன ஐக்கியத்தை விரும்புகிறவன்... மறுபுறம் சாதி முறையை நம்பி, கிட்டத்தட்ட வெறியனாகிற ஒருவன்... இந்த இரண்டு இயல்புகளும் சேர்ந்த மனிதனாகத்தான் நடராஜா காண்பிக்கப் படுகிறான்... இனப் பிரச்சினை என்பது, இனவாதத்தை முனைப்பாகக் கொண்ட ஆட்சி முறை இருக்கும் வரை இந்த நாட்டிலை இருக்கத்தான் போகுது...''

சகுந்தலாவின் மனதிலே பல கேள்விகள் மெதுவாகவே முளைவிட்டுக் கொண்டிருந்தன.

''இனவாதம் பற்றிய சிந்தனைகள் ஏன் எழுந்தன... தேசிய இனங்களை அடக்கி ஒடுக்குவது பற்றிய விமர்சனம்... மக்களின் இப்பிரச்சினைகள் தீர உள்ள வழி ஆகியவற்றையும், இன வாதத்திற்கான சமூக, பொருளியல் காரணிகளையும் இப்படம் ஆராய முன் வந்திருக்குமா என்றதை யோசித்துப் பாருங்க... எப்படி இருந்தாலும் சிங்களத் திரையுலகின் மிக அபிமானம் பெற்ற காமினி, ஒரு தமிழனாகத் திரையிலே தோன்றுவது பெரிய தாக்கம் தரக்கூடிய விஷயம். இந்த நாட்டின் திரைப்பட வரலாற்றிலை இதற்காகக் காமினி என்றும் நினைவு கூரப்படுவார் என்பது நிச்சயம். இனி வருகிற காலத்திலை, இனவாதக் கருத்துக்கு பக்கம் சாராமல், உண்மையான காரணத்தை வைக்கிற கலை முயற்சிகளுக்கு 'சறுங்கலே' முன்னுதாரணமாக இருக்குமல்லவா...?''

சொல்லிக் கொண்டிருந்த ராமநாதன் எதையோ நினைத்துக் கொண்ட உள்ளே போனான். திரும்பி வந்து சகுந்தலாவின் கையிலே சில புகைப்படங்களைக் கொடுத்தான். காமினி பொன்சேகாவோடு ராமநாதன் சேர்ந்திருந்து எடுத்த அப்புகைப்படங்களை, பெருமிதம் பொங்கிப் பூரிக்கப் பார்த்துவிட்டு நந்தாவதியிடம் கொடுத்தாள் சகுந்தலா. சந்திரவதனி நந்தாவதிக்கு அருகாகக் கதிரையினை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து படங்களைப் பார்த்தாள்.

''சறுங்கலே படத்தினைப் பற்றி நான் காமினியிடம் கேட்ட போது, 1958ஆம் ஆண்டில் நடைபெற்ற வகுப்புக் கலவரத்தின்

போது, தான் நேருக்கு நேராகக் கண்ட சம்பவங்கள் தன்னுடைய மனதிலே தூண்டிய உணர்ச்சிதான் 'சறுங்கலே' படக் கதைக் கான மூலக்கரு என்று கூறினார்... அவர் பேசிக் கொண்டிருப்ப தைக் கேட்டுக் கொண்டிருப்பது ஒரு அற்புதமான அனுபவம். தன்னுடைய இன்னொரு படமான 'உதுமாணினி'யைப் பார்த்துவிட்டு அதைப் பற்றிய அபிப்பிராயத்தையும் சொல்லும்படி அவர் என்னிடம் கேட்டபோது நான சிலிர்த்துப் போய்விட்டேன்...''

அந்தச் சந்திப்பு விளைத்த பரவசம், இப்போதும் அவனது முகத்திலே பரவி, கண்களிலே அந்த நிறைவு அளித்த பிரபை ஒளிர்ந்ததனைத் தரிசித்த நந்தாவதி மிகுந்த பெருமை அடைந்தாள். வெறும் மௌனமே வடிவமாகத் தோன்றிய ராமநாதனின் இன்னொரு கூறு பூரணமாகத் துலங்கிய வடிவம் அவளின் நெஞ்சினில் ஜீவனாக உருக்கொண்டது. நந்தாவதி தன்னுள்ளே நினைத்துக் கொண்டாள்:

'எனக்கு சிங்களக் கதையுலகத்தைப் பற்றி தெரிந்ததைவிட இந்தக் கலைஞனுக்கு எவ்வளவு அதிகமாகத் தெரிந்திருக்கின்றது. யார் யாருக்கு எதிலெதில் அக்கறை இருக்கின்றதோ அதெல்லாம் அவர்களுக்கு நெருங்கி அறியப் பட்டதாகின்றது. மொழியோ, வடிவங்களோ அவர்களுக்கு தடையற்றுப் போய் விடுகின்றது.'

7

ஒருவார கால விடுமுறையில் அனுராதபுரத்திற்கு வந்த மகளை ஆனந்தக் கண்ணீரோடு விஜயபாலாவும், குசுமாவதியும் ஆரத்தழுவி வரவேற்றார்கள். காமினி புன்னகை பூத்த முகத்துடன் நந்தாவதியை எதிர் கொண்டான். மகள் மெலிந்து வாடிப் போயிருப்பதாக குசுமாவதி சொன்னாள். யாழ்ப்பாணத்திலிருந்து குமாரசுவாமி வீட்டுக்காரர் கொடுத்து விட்ட புழுக்கொடியல், பனாட்டு, மாம்பழங்கள், இராசவள்ளிக் கிழங்கு ஆகியவற்றை மிகவும் பெருமையோடு தகப்பனுக்கு நந்தாவதி காட்டிக் கொண்டிருந்தாள். விஜயபாலாவின் முகத்திலே பெருமிதமும், புன்னகையும் கைகோர்த்துப் பொலிந்திருந்தன.

''பியதாஸாவுக்குத்தான் நாங்கள் நிறைய நன்றி சொல்ல வேண்டும். அவர் ஒரு நல்ல இடத்திற்கு உன்னை அனுப்பி

வைத்தால்தான் நாங்கள் இந்த வீட்டில் நிம்மதியாக இருக்க முடிந்தது...''

தகப்பன் கூறியதைக் கேட்ட நந்தாவதியின் முகம் லேசாக மாறிற்று.

''அப்படி இனியும் நினைக்க வேண்டாம் அப்பா. பியதாஸா மாமா எங்களிற்கு செய்தது காலத்தினால் மறக்க முடியாத பெரிய உதவிதான். ஆனால் நீங்கள் நினைக்கிறது போலை யாழ்ப்பாணத்தில் ஒன்றிரெண்டு மனிதர்கள்தான் நல்ல ஆட்களென்றில்லை. பெரும்பான்மையான மக்களாகிய நாங்கள் தமிழர்களுடைய உணர்ச்சிகளை நன்றாகப் புரிந்து கொண்டால் - அரசியல்வாதிகளை இடைத்தரகர்களாகக் கொள்ளாமல் நாங்களே ஒருவரை ஒருவர் உணர்ந்து கொள்ளத் தலைப் பட்டால் எங்களுடைய தேசத்தின் பிரச்சினைகள் தாமாகவே தீர்ந்து விடும்... நீங்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து கொஞ்சக் காலம் அந்த மக்களோடு பழகிப் பார்த்தால் என்னுடைய இந்த முடிவிற்குத்தான் வருவீர்கள்...''

நந்தாவதியைப் புன்னகையோடு பார்த்தான் காமினி. ''நீ சொல்வது எல்லாமே சரியக்கா... ஆனால் அரசியல்வாதிகளைத் தவிர்த்து விட்ட பிறகு இந்த நாட்டிலை ஏதாவது செய்ய முடியுமென்று நீ நினைக்கின்றாயா?''

காமினியை நிமிர்ந்து பார்த்த நந்தாவதிக்கு அவனது கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. இப்பொழுது சற்று கடுமையாகி விட்ட காமினியின் முகத்திலே முன்பு நிறைந்திருந்த விரக்தி மறைந்து ஆர்வமான உற்சாகம் பொலிந்திருப்பதனை அவள் கண்ணுற்றாள்.

வீட்டுத் தாழ்வாரத்தின் ஒதுக்கிலே சடைத்துப் போய் புஷ்பித்துள்ள சூரியகாந்திப் பூவென அவனுடைய முகத்தினை அந்நேரம் உணர்ந்தாள் நந்தாவதி. அண்மைக்காலமாக தனது மகனுடைய போக்கினில் ஏற்பட்டு வந்த மாற்றங்களினைக் கண்டு அதிலே திருப்தியுற்றிருக்கின்ற விஜயபாலாவுக்கு, அக்காவிடம் தம்பி கேட்ட கேள்வி சிரிப்பினையே வரவழைத்தது.

''காமினி சொல்வது சரிதான் மகளே... இப்போதுள்ள பிரச்சினையெல்லாம் இதுதான். பூனைக்கு யார் மணி கட்டுவது...?''

சற்று நேரம் புன்னகையோடிருந்த காமினியினது முகம் இப்போது மெது மெதுவாக மாற்றங் கண்டது. தீவிரமாகப் பல தினங்களிருந்து யோசித்துமுடிவு கண்டவனைப் போல நிதானந் தொனிக்கிற குரலிலே அவன் கூறினான்:

''தங்களினுடைய வயிற்றை வளர்த்து, சொத்துக்களைப் பெருக்குகின்ற அரசியல்வாதிகளுக்குப் பதிலாக, மக்களுடைய உறவினை வளர்த்து தேசத்தினுடைய நன்மையைக் கருதுகின்ற அரசியல்வாதிகள் முன்னணிக்கு வரும்போது கட்டாயமாக எமது மக்களினுடைய பிரச்சினைகள் தீர்ந்தே போகும். ஆனால் இந்த நிலைமை தானாகவே உருவாகுமென்றோ, காலக்கனிவால் ஏற்படுமென்றோ நினைத்திருப்பது முட்டாள்தனம். இந் நிலைமையினை வெகு ஜனங்களே ஒன்றிணைந்து உருவாக்க வேண்டும்...''

நந்தாவதி இப்போது ஒரு விஷயத்தினை தீர்க்கமாகவும், தெளிவாயும் உணர்ந்து கொண்டாள். காமினியின் வார்த்தை களிலே அவனது சிந்தனை மாற்றங்கள் நிர்தாட்சண்யமாகத் தொனிக்கின்றன. இந்த இளவயதிலே இவன் இப்படியொரு முடிவினைக் கொள்வதற்குள்ள பின்புலம் தனி மனிதத் தொடர்பினால் மட்டுமே ஏற்படக் கூடியதல்ல என நந்தாவதி எண்ணிக் கொண்டாள். விரக்தியும் நம்பிக்கையீனமும் கொண்ட இலவம் பழமென ஆகிவிடுகின்ற வாழ்க்கைக்குப் பதிலாக இப்படியானதொரு போக்கிலே காமினி தன்னை உட்படுத்திக் கொள்வதனை நந்தாவதி மனப்பூர்வமாகவே விரும்பினாள்.

புகையிரதத்தில் பயணஞ் செய்த களைப்பினைத் தீர்க்க சற்றே கண்ணயரலாம் என்ற நினைப்போடு கட்டிலில் சரிந்தபோது ராமநாதனின் நினைவு மனதினிலே மெல்ல மெல்லத் தோன்றியது. அவனது உணர்ச்சி பொருந்திய சொற்கள், அர்த்தம் பொதிந்த கருத்துக்களில் தொய்ந்து வந்து காதோடு கேட்டன. மௌனத்திலும் வார்த்தைகளைப் பேசுகிற அவனது துடிதுடிப்பான முகம் கண்களிலே முன் வந்தது. எந்த விஷயத்தையும் காரண காரியங்களோடு நிதானமான குரலிலே கூறுகின்ற அவனுடைய குரலோசை காதுகளோடு ஒலித்து ஒலித்து அவளது நினைப்பினைக் குழப்பித் தேய்ந்து போகிறதாக எண்ணி அவள். கண்ணயர்ந்தாள்.

ஆனால் அவள் நித்திரையில் ஆழ்ந்து போக அடி மனதின் நினைவுகள் விடவில்லை. அவளின் கனவிலே 'சறுங்கலே'

திரைப்படத்து நாயகனான நடராஜா தோன்றினான்... நயினாதீவுக்குப் போகின்ற நடராஜாவோடு அவனது சிங்கள நண்பனது குடும்பத்தினரும் செல்கின்றனர். சுவாமி தரிசனம் செய்துவிட்டு வந்த நடராஜா கடற்கரையோரமாக வந்து நிற்கையிலே தன்னுடைய சிங்களக் காதலியைக் காணுகின்றான். இருவர் மனதிலும் மோகதாபம். மனம் விம்மித் தவிக்கின்றது. மானசீகமாக ஒருவரை ஒருவர் அணைக்கின்றனர். தாங்கள் இருவரும் சிங்கள முறைப்படியும், தமிழ் சம்பிரதாயப்படியும் திருமணஞ் செய்து கொள்வதாக மனக்கண்களிலே கண்டு கொள்கிறார்கள்...

இதென்ன, இப்பொழுது நடராஜா என்ற காமினி பொன்சேகாவிற்குப் பதிலாக ராமநாதனா? உற்றுப் பார்க்கிறாள். அந்தப் புன்னகை; ஆண்மை தவழ்கின்ற முகம்; அடர்ந்த புருவங்கள் - அது ராமநாதன்தான். ராமநாதனிற்குப் பக்கத்திலே நிற்கிற அந்தச் சிங்களப் பெண்: அந்தச் சிங்களப் பெண்...? சந்தேகமில்லை... நான்... நானேதான்! கம்பீரமாகஎன்னை நோக்கி வருவது ராமநாதனே...!

அந்த நடராஜா மாதிரி, சமூக அமைப்பின் அலங்கோல அவதிகள் நிறைந்த அமைப்புக்குள்ளை என்னை நானே ஆமுக்கி அழக்கிறவனல்ல நந்தா! நான் சகல பிற்போக்குத் தனங்களையும் நிராகரிக்கின்றவன். நீ சிங்களத்தியாய் பிறந்துவிட்ட ஒரே காரணத்திற்காக மனம் அழுது புலம்பிட உன்னை விட்டும் பிரிந்து போகின்ற - நடராஜனைப் போன்ற பயங்கொள்ளி அல்ல நான். மனப்பூர்வமாக நான் நம்புவதை வாழ்க்கையாக வாழத் துணிந்தவன்... நந்தா நான் உம்மைக் காதலிக்கின்றேன். இருதய சுத்தியாகக் காதலிக்கின்றேன்...''

''ராமநாதன்! என்னை ஒருபோதும் ஏமாற்றிவிடாதேங்கோ... அந்த நடராஜாவைப் போல என்னை விட்டுப் பிரிந்து, அதே துயரத்தோடை வாழ்ந்திட என்று நினைக்காதேங்கோ...''

கனவிலே கூறிய வார்த்தைகள் நந்தாவதியின் வாய்க்குள் அரைபட்டுத் திக்கின.

''மகள்... மகள், இதென்ன சத்தம்? நித்திரையிலே ஏதாவது கனவு கண்டு பயந்து விட்டாயா?''

தாய் உலுக்கிய உலுப்பலில் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கொண்ட நந்தாவதி நித்திரைக் கலக்கம்தீராத

நிலையில், தமிழிலேயே தாயைப் பார்த்துக் கேட்டாள்: ''என்னம்மா கனவு ஏதாவது கண்டேனா?''

தாய்க்கு மகள் கூறிய சொற்கள் மேலும் குழப்பமூட்டின. அவளின் தடுமாற்றத்தினைக் கண்டு தன்னைச் சுதாரித்தவாறே நந்தாவதி தாய்மொழியிலேயே தான் கெட்ட கனவு கண்டதாகக் கூறியபோது, தாயான குசுமாவதி மிகுந்த பரபரப்புடன், ''கட்டாயம் இன்றைக்கு மாலை நேரமளவில் இதற்கு மந்திரித்து நூல் கட்ட வேண்டும்'' என்று சொன்னவாறு நந்தாவதியின் தலையில் கை வைத்து வாஞ்சையோடு தடவியபடி புத்தபெரு மானை மனதினுள்ளே தோத்தரித்தவளாய் உள்ளே சென்றாள்.

கிணற்றடியில் முகத்தினை அலம்பிக் கொண்டு வெளி வாசலுக்கு வந்த நந்தாவதி வெள்ளலரி கொத்துக் கொத்தாய்ப் பூத்திருந்த மரங்களினை நோக்கினாள். மெலிதான மனதை வருடிக் கவர்ந்திடுகின்ற ரம்மியமான அந்த வாசனை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. இங்கிருந்து திரும்புகின்ற போதிலே இப்பூமரத்திலே இரண்டொரு தடிகள் வெட்டி யாழ்ப்பாணத் திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று மீண்டும் நினைத்துக் கொண்டாள் நந்தாவதி.

யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வந்த மல்லிகைச் செடியினை வீட்டு முற்றத்திலே நட்டிருந்த அவள் சிறிது தண்ணீரை வெகு கவனமாக அதன் பாத்திக்கு வார்த்தாள். அந்த மண்ணிலே இன்னமும் முற்றாக வேரூன்றாமல் அந்நியப்பட்டு பசிய இலைகளைச் சோர்வோடு தளர்த்தி நிற்கிற மல்லிகைச் செடி இன்னமும் சில தினங்களிலே இம்மண்ணிலே முற்றாக வேரூன்றி பசிய இலைகளைப் பரப்பி சிலிர்த்து நிற்கின்ற காட்சியினை நினைத்துக் கொண்டு மனதினுள்ளே நிறைவுற்றாள் நந்தாவதி.

நந்தாவதியின் வீட்டு வாசலிலே நின்று பார்த்தால் ரூவான் யெவலிசார் தாது கோபம் நீலவானிப் பின்னணியிலே வெகு துலக்கமாகவே தோற்றமளிக்கும். அழகிய அப்பிரமாண்டமான தாதுகோபம் அந்த சுற்றாடலிலேயுள்ள மக்களுக்கு வாழ்வின் நீண்ட கால நம்பிக்கையாக, அன்றாட நிகழ்வுகளினோடு இரண்டறக் கலந்த ஜீவனுள்ள வழிகாட்டியாகவே உணரப் படுகின்றது. என்ன கஷ்டநஷ்டங்கள் நேர்ந்தாலும் வானை நோக்கி உயர்ந்திருக்கின்ற அந்தத் தாதுகோபத்தை நோக்கி கைகளை உயர்த்தி மனது நெகிழ்ந்து வாய்விட்டுக் கூறுகின்ற

போதிலேயே தங்கள் துயரங்கள் கரைந்து போவதாக இங்குள்ள மக்கள் நம்புகிறார்கள்.

வலிமையுள்ள இந்த நம்பிக்கையினைப் பற்றி எண்ணிய வாறே அதற்கு எதிராகக் குத்து குத்தாகத் தெரிகின்ற நெடுமலைகளை நந்தாவதி நோக்கினாள். அம்மலைகளினை அடர்காடுகள் நெருங்கி நின்று காவல் காத்தன. அந்த மலைகளையும், கரும்பச்சை நிறக்காடுகளையும் பார்க்கையிலே 1971ஆம் ஆண்டு அவளிற்குப் பளிச்சென்று ஞாபகத்திற்கு வரும். இந்தக் கரும்பச்சைக் காடுகளிலும், நீலமலைத் தொடர்களிலும் தெளித்துச் சிந்தப் பெற்ற சிவப்பு ரத்தத்தினை இன்னமும் அவள் கண்ணெதிரினில் காணுகின்றாள்.

அவளின் எத்தனையோ பால்ய கால சினேகிதிகளையும் ஒன்றாகப் பயின்றவர்களையும் தன்னுள்ளே யாருமேயறிய முடியாதபடி காத்து வைத்திருந்தவை இந்தக் காடுகளும், மலைகளும்! அதனாலேயே துப்பாக்கிக் குண்டுகள் துளைத்துத் துளைத்து ஆயுதப் படையினராலே தேடப் பெற்றவை அந்த அந்தரங்கக் காப்பிடங்கள். கர்ப்பத்திலேயே பல குறைபாடுகளினைக் கொண்டிருந்த அந்த 1971ம் ஆண்டு நிகழ்ந்த எழுச்சி கொடூர அடக்கு முறைகளின் இரத்த இழப்பால் அணைந்து போயிற்று. ஆயினும் இந்த இயற்கையின் பிரதிநிதிகள் உள்ள வரை - மலைகளும், குன்றும், மரங்களும், அருவிகளும் ஓடி நிலைத்திருக்கும் வரையில் அதன் அடைக்கலப் பொருளாயிருந்து உயிர் இழக்கப் பட்டவர்களும் நினைவிலே வைத்திருக்கப் படுவார்கள் என்று நந்தாவதியின் மனம் அடிக்கடி எண்ணிக் கொள்வதுண்டு.

அதனையடுத்து இப்போது அவளின் சிந்தனையிலே இன்னொரு குரல் உரத்து ஒலித்தவாறேயிருந்தது... 'மனிதனை மனிதன் நேசிக்கின்ற, எல்லாத் தேவைகளையும் பெற்று நிறைவோடு வாழ்கின்ற உலகொன்றினைச் சிருஷ்டிக்க விரும்புகின்ற கூட்டத்தின் கனவுகள் எப்போது நிறைவு பெறப் போகின்றன? இனத்துக்கு இனமும், மனிதனுக்கு மனிதனும் பொருதி, வஞ்சித்து வாழ்கின்ற வாழ்வு தகர்ந்து அழிந்து போய் எப்போது ஒரு நிறைவான சமுதாயம் உருவாகப் போகின்றது?'

நந்தாவதியின் மனம் எங்கெங்கெல்லாமோ சுற்றிச் சுழன்றது; எதிரே வான வெளிதனில் தறிகெட்டுத் திரிகின்ற குருவிகளைப் போல நெஞ்சம் பரபரத்துக் கொண்டிருக்கின்றது.

நந்தாவதியின் நெஞ்சப் பரப்பினிலே மீண்டும் ராமநாதன் மெல்லவே தோன்றி முறுவலித்தான். மனிதனுக்கு மனிதன் நேசத்தை வளர்த்து நல்வாழ்வு வாழ வேண்டுமென்று ஆசைப்படுகின்ற அவனது உருவமும், அறிவுப்பூர்வமான வார்த்தைகளும் உருவெளி வடிவங்களாகி ஒலித்து மிதந்தன!

'நான் ஏன் இப்படி ராமநாதனை அடிக்கடி எண்ணித் திருப்தி காண விரும்புகின்றேன்? மனிதாபிமானி என்ற வகையில், கலைகளை நேசிக்கிறவன் என்ற காரணத்திலேதான் ராமநாதனை நான் மதிக்கின்றேன். மரியாதையோடு பழக விரும்புகின்றேன். எங்கள் இருவருக்குமிடையே வெறும் நட்புதான் நிலவுகின்றது; வேறொன்றுமேயில்லை. பிரயாண அலுப்பினாலேதான் நான் என்னென்னவோ கனவுகள் கண்டு விட்டேன். இதிலே அர்த்தங்கள் தேடி வீணே ஏன் களைப்படைய வேண்டும் நான்?'

நந்தாவதி தன்னைத்தானே கேலி செய்து சிரித்துக் கொண்டாள்.

8

அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இன்று தனியாகத்தான் திரும்பிக் கொண்டிருக்கின்றாள் நந்தாவதி. அவளை புகையிரத நிலையத்தில் காமினியும், விஜயபாலாவும் கொண்டு வந்து விட்டனர். புதிதாக யாழ்ப்பாணத்திற்கு இடம் மாறி அந்தப் புகையிரதத்தில் பிரயாணம் செய்து வருகின்ற சிங்களக் குடும்பத்தினருக்கு யாழ்ப்பாண மக்களைப் பற்றி வெகு விஸ்தாரமாகக் கூறிக் கொண்டு வருகின்றாள் நந்தாவதி. சிறில்பெரேரா, வினிதா, சந்தியா என்ற மூவரைக் கொண்ட அந்தக் குடும்பம் கண்டி நகரைப் பிறப்பிடமாகக் கொண்டது.

தகப்பன் சிறில் பெரேரா காங்கேசந்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு இடமாற்றம் பெற்று வருகின்றான். அவனது மனைவி வினிதாவின் முகமோ பேயறைந்து கிடந்தது. நந்தாவதி முதன்முதலாக அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்ட போது எத்தகைய அச்சத்தோடும் பரபரப்போடும் கலங்கியிருந்தாளோ அத்தகைய மனநிலையே இப்போது அவர்களிடையே நிலவுவதனை நன்றாகவே தெரிந்து கொண்டாள் நந்தாவதி.

''ஒருவருக்கொருவர் பக்கத்திலிருந்தும் நாங்கள் அந்நியர்களைப் போலவே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஒருவருக்கொருவர் சந்தேகக் கண்களோடு பார்த்துப் பார்த்தே பழகி விட்டோம். சிங்கள மக்களாகிய நாங்கள் தமிழ் பேசும் மக்களுடைய அடிப்படைப் பிரச்சனைகளை உணராமலும், அவர்களுடைய பல குறைபாடுகளினை தீர்க்க மனமின்றி இருப்பதுவும் இன்றைய பிரச்சினைகளுக்கு ஆணி வேராகும். அவர்களினுடைய பல ஜீவாதாரமான விஷயங்களை நாங்கள் அங்கீகரிக்காமல் வைத்திருப்பதின் மூலம் அவர்களை இரண்டாந் தரமான பிரஜைகள் என்ற உணர்வுக்குட்படுத்தி விரக்தியும் அதிருப்தியும் கொள்ள வைத்திருக்கின்றோம். அவர்களினுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைக்காமல் தேசத்தின் பொதுப் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர ஒரு போதுமே முடியாது...''

வெகு நிதானமாகவும், அடங்கிய குரலிலும் நந்தாவதி சிங்களத்திலே சொல்லிக் கொண்டிருந்தபோது, விஜயன் பத்திரிகைச் செய்திகளை பரபரப்பாகச் சொல்லியவாறு அந்தக் கொம்பார்ட்மென்ற்றுக்குள்ளே வந்தான். நந்தாவதியைக் கவனிக்காமலே பத்திரிகை வேண்டுமா என்று சிறில் பெரேராவைப் பார்த்து சிங்களத்திலே கேட்டான் விஜயன்.

நந்தாவதி புன்முறுவலோடு... ''விஜயன் என்ன எனக்குப் பேப்பர் இல்லையா?'' என்று தமிழிலேயே கேட்டாள்.

விஜயன், ''நான் அக்காவைக் காணவில்லையே...'' என்று கூறியவாறு இன்னொரு பத்திரிகையை அவளிடம் கொடுத்து விட்டு சரளமான சிங்களத்தில் அவளுடையதும் குடும்பத்தினதும் சுகக்ஷேமங்களை விசாரித்துவிட்டு, தான் விசாரித்ததாக அவர்களுக்குச் சொல்லும்படி கூறிவிட்டு அவ்விடமிருந்து சென்றான்.

நந்தாவதி விஜயனுடைய வாழ்க்கை வரலாற்றினை அவர் களுக்குக் கூறி விட்டு எவ்வித மூலகாரணமோ, நியாயமோ இன்றி அனுராதபுரத்திலே நடந்தொழிந்த இனக்கலவரத்தின் கொடுமைகள் பற்றி நெகிழ்ந்த குரலிலே அவர்களிடம் விவரித்தாள். அவள் கூறி முடிய நீண்ட நேர மௌனம் அங்கு விரிந்தது. புகையிரதம் இப்போது கிளிநொச்சியை அண்மித்துக் கொண்டிருந்தது. நந்தாவதி கூறியதை வெகு அமைதியாகவே

கேட்டுக் கொண்டிருந்த வினிதா சுற்றும் முற்றும் பார்த்து விட்டு மெதுவான குரலிலே நந்தாவதியைப் பார்த்துக் கேட்டாள்:

''நந்தா, நீங்கள் சொல்லுவது எல்லாமே சரிதான். ஆனால் என்னுடைய அப்பா அடிக்கடி சொல்லுவார் - அவர் ஒரு இளைப்பாறிய பிரின்சிப்பல் - இலங்கையிலே வாழ்கிற தமிழர்கள், இந்தியாவிலேயே தமிழர்களோடு சேர்ந்து எப்பவோ ஒரு நாள் தமிழ் ராஜ்ஜியமொன்றினை அமைத்துஎங்களை எல்லாம் அடக்கி ஒடுக்குவார்களாம். உலகத்திலே சிங்களவர்கள் இலங்கையிலே மட்டுமே வாழ்வதால் அவர்கள் இந்த நாட்டில் எல்லாவிதமான அதிகாரங்களையுமே வைத்திருக்க வேண்டுமாம். தமிழர்களுக்கோ அப்பிடியில்லை இந்தியாவிலே கோடிக்கணக்கான தமிழர்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்கு இந்தியாவிலே இருந்து எந்த நேரமும் உதவிகள் கிடைக்க வாய்ப்பிருக்குதாம்; அத்தோடை இலங்கையிலே தமிழர்கள் ஏதாவது கிளர்ச்சி செய்தால் அதற்கு ஆதரவாக இந்தியாவில் உள்ள தமிழ்த் தலைவர்களும், பொது மக்களும் ஆர்ப்பாட்டம் செய்கின்ற படங்களைல்லாம் அப்பா எனக்குப் பத்திரிகைகளிலே காட்டியும் இருக்கின்றார்... அந்த நிகழ்ச்சிகளில் எவ்வளவு சனக் கூட்டம்!''

மிக நீண்ட மௌனத்தினைக் கலைத்துக் கொண்டு வினிதா கூறிய சொற்கள் நந்தாவதியைச் சிறிது உலுப்பியே விட்டன. வினிதா சாதாரண அடிமட்டத்திலிருந்து வந்த பெண் அல்ல. தகப்பன் ஒரு கல்லூரி அதிபர். படித்த மனிதரான அவரின் சொற்களில் உண்மையினைத் தவிர வேறொன்றுமேயிருக்க மாட்டாது என்பதனை அவள் மட்டுமல்ல; அவரிடம் பயின்றவர்கள், அவரது நண்பர்கள் யாவருமே இன்னமும் உறுதியாகவே நம்பிக் கொண்டிருப்பார்கள். வினிதா சிங்கள மத்தியதர வர்க்கத்தின் வகை மாதிரிப் பாத்திரமாகக் கருதப் படத்தக்கவள். செக்கச் சிவந்த, சிறிய கண்களுள்ள வினிதாவின் கருத்துக்கள் அவளின் இதய ஆழத்திலிருந்து வந்தன என்பதனை அவளின் உணர்ச்சிமயமான நீண்ட முகம் தெளிவாக விளங்கப் படுத்திற்று.

புகையிரதம் தென்னைமர வரிசைகளிற்கு நடுவே வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. சிறிய குளங்கள் பார்வையிலே பட்டுத் தோற்றமளிக்குமுன் விர்ரென்று பின்னே நழுவி ஓடின.

நந்தாவதி தனது வழுவழுப்பான கழுத்தினைத் தடவியவாறு வினிதாவை நோக்கினாள்.

''வினிதா அக்காவைப் போலத்தான் நானும் முன்பெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தேன். அனேக சிங்களவர்களும் இப்படியேதான் இன்னமும் எண்ணியிருக்கிறார்கள். இலங்கையிலே வாழ்கிற தொண்ணூற்றொன்பது வீதம் மக்களுக்கு இந்தியா எப்படியானதொரு தேசம் என்றே தெரிய மாட்டாது. வேறு சிலர் இந்தியா முழுதிலுமே தமிழர்களே செறிந்து வாழ்கிறார்கள் என நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மையோ நிச்சயமாக அப்படியில்லை. இலங்கைத் தமிழர்களுக்கு நேரடியாகவே வந்து உதவுவதாக யாராவது பொறுப்பேற்ற முறையிலே தென்னிந்தியாவிலிருந்து சொல்லியிருக்கலாம்... ஆனால் இலங்கையின் சாதாரண தமிழ் மக்களோ இலங்கையென்ற தமது தாய் நாட்டிலே சமத்துவமாக வாழ வேண்டுமென்று விரும்புகிறார்களே தவிர வேறெதையுமே நினைக்கவில்லை...

அவர்களுக்கெதிரே இனவாதம் கட்டவிழ்த்து விடப்படுகின்ற போது, தென்னிந்தியாவிலே மட்டுமா ஆர்ப்பாட்டங்கள் நிகழ்கின்றன? பாரிஸில், கனடாவில், லண்டனில், பெர்லினில் கூடத்தான் ஆர்ப்பாட்டங்களை தமிழர்கள் நடத்துகிறார்கள். சரி, பிழை வேறு. ஆனால் அவர்களுக்கு அந்த உரிமை இருக்கின்றது. ஏன், பாலஸ்தீனத்துக்கும், ஆப்கானிஸ்தானத்திற்கும், ஆர்ஜென்டைனாவிற்கும் ஆதரவாக இலங்கையிலே நாங்கள் - சிங்கள மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும், கூட்டங்களையும் நடத்திக் கொண்டு தானே இருக்கிறோம் -

நான் யாழ்ப்பாணத்திலேயிருந்து தமிழர்களோடு பழகிய பின் இந்த முடிவுக்குத்தான் வந்தேன்... அவர்களுக்கும் எங்களுக்கு மிடையே இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகள், பாரபட்சம் என்பன தீர்க்கின்றபோதுதான் அவர்களுடைய கிளர்ச்சிகளும், பொருமல்களும் தானாகவே ஓய்ந்து போய்விடும்... அவர்களும் எங்களைப் போலவே பரம்பரை பரம்பரையாக இந்த மண்ணிலேயே வாழ்ந்து வருகிற நாகரிகமும் பண்பாடும் படைத்த மக்கள், இந்தத் தேசத்தினை அந்நியர்களின் கையிலிருந்து மீட்பதற்காக அவர்களும் இரத்தம் சிந்திப் போராடியிருக்கிறார்கள்...''

என்று கூறிக் கொண்டு போன நந்தாவதியின் நெஞ்சிலே மின்னலென ராமநாதனின் நினைவு விசிறியடித்தது.

அவனோடு பேசிக் கொண்ட பல விஷயங்களினை மனதிலே மீட்டெடுத்தவாறே தொடர்ந்தாள் நந்தாவதி:

''நான் இந்தக் குறுகிய காலத்தினுள்ளே பலதரப்பட்ட, பலதுறைகளைச் சேர்ந்த தமிழர்களோடு பழகியிருக்கிறேன். அவர்கள் தங்களின் மனக்குமுறல்களை ஒளிவு மனைவேதுமின்றி சொல்லக் கேட்டிருக்கின்றேன். தென்னிந்தியாவிலிருந்து வந்து, டன் கணக்காகக் குவிக்கின்ற தமிழ் வியாபார சஞ்சிகைகளை இறக்குமதி செய்வதனைத் தடை செய்ய வேண்டுமென அவர்கள் இயக்க ரீதியாகப் போராடி வருவதனை நான் அறிவேன். ஆபாசமும், வக்கரிப்பும் நிறைந்த தென்னிந்திய இலக்கியக் குப்பைகளை நிராகரிக்க வேண்டுமென அவர்கள் பொது வேண்டுகோளையே விட்டிருக்கிறார்கள். தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதியாகின்ற தரங்கெட்ட சினிமா, தங்களுடைய குழந்தைப் பருவத்திலேயுள்ள சினிமாத் துறையின் கழுத்தையே நெரித்து விடுகின்ற அபாயம் உருவாகியுள்ளதாக அவர்கள் குரல் கொடுத்திருக்கிறார்கள்... ஆனபடியால் அவர்கள் தனித்துவமான பண்புகள் கொண்ட இலங்கையின் தேசிய இனமக்களாக வாழவே விரும்புகிறார்களென்பதை நாங்கள் மனப்பூர்வமாகவே நம்ப வேண்டும்; ஒப்புக் கொள்ளவும் வேண்டும்...''

வினிதாவின் முகத்தில் வெட்கம் திரை விரிப்பதனை நந்தாவதி அனுமானித்துக் கொண்டே, ''நான் சொல்வதை நீங்கள் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றில்லை. உங்களின் வாழ்க்கை அனுபவமே உங்களைத் தெளிவு பெற வைக்கும்'' என்று கூறியவள் ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்துவிட்டு மகிழ்ச்சியும் பரபரப்பும் குரலிலே துள்ளிக் குதிக்க, ''அடடே யாழ்ப்பாணத்திற்கு வந்துவிட்டோமே...'' என்றாள்.

புகையிரதம், வேகத்தை மட்டுப் படுத்திக் கொண்டு வீடுகளின் அணி வகுப்பிற்கூடாக பெருமூச்சினோடு புகையிரத நிலையத்திலே வந்து தரித்தது.

புகையிரத நிலையத்திலே நந்தாவதியின் வருகையினை எதிர்பார்த்து குமாரசாமியும், சந்திரவதனியும், சகுந்தலாவும் காத்துக் கொண்டு நின்றனர். மிகக் கவனத்துடன், தான் கொண்டு வந்த வெள்ளலரிப் பதியத்தை சகுந்தலாவின் கைகளிலே கொடுத்தவாறு அவர்களின் பின்னே ஆர்வம் பொங்குகிற

பார்வையினாலே தடவினாள் நந்தாவதி. ஏமாற்றம் நெஞ்சினுள்ளே மெல்லிய போர்வையென விழுந்தது. தன்னைச் சுதாரித்துக் கொண்டவளாக மனதினுள்ளே நினைத்துக் கொண்டாள் நந்தாவதி...

'நான் எதற்காக ராமநாதனை இப்போது தேட வேண்டும்? குடும்பத்தில் ஒருவர் குறைவாகப் புகையிரத நிலையத்திற்கு வந்திருக்கின்ற காரணத்தினால் நான் ராமநாதனைத் தேடியிருக்கலாம். வேறொன்றுமில்லை...'

புகையிரத நிலையத்திலிருந்து குமாரசாமி வீட்டிற்குச் சென்று வாசலில் இறங்கியபோது, ராமநாதன் வெளியே வந்து காரிலிருந்து பெட்டி, சூட்கேஸைத் தூக்கியவாறு உள்ளே சென்றான்.

அவனைப் பின்தொடர்ந்து போன சகுந்தலா உற்சாகமான குரலிலே, ''அண்ணா, நந்தா அக்கா சொன்னது போலவே 'ரெம்பிள் றீஸ்' பூமரப் பதியமும் கொண்டு வந்திருக்கின்றா...'' என்றாள்.

கையிலே கொண்டு போன பெட்டியையும் சூட்கேஸையும் நந்தாவதி தங்கியிருக்கிற அறையின் வாசலிலே வைத்துவிட்டு, ''ரெம்பிள் றீஸ் பூக்கள், மிருதுவான வாசனையுள்ள எளிமையான அழகு நிறைந்தவை. எனக்கு அப்பூக்களிலே மிகவும் விருப்பம்'' என்றான் ராமநாதன்.

பின்னர் கிணற்றடிப் பக்கமாக நடந்தான். கிணற்றடியில் ஆட்டுக் குட்டிகள் ஒன்றையொன்று இடித்து விளையாடிக் கொண்டிருந்தன. பெரிய கதலிக்குலையினை ஈன்று சரிந்து நின்ற வாழைமரத்துக்குப் பக்கத்தாங்கல் வைக்க வேண்டுமென நேற்றுப் பின்னேரம் கதைத்துக் கொண்டது ஞாபகத்திற்கு வரவே, அங்கிருந்து நல்ல நேரான கம்பு ஒன்றினைத் தேடிக் கொண்டு பின்புறமாக நடந்தான் ராமநாதன்.

தன்னுடைய அறைக்குள்ளே கொண்டு வந்து வைத்த பெரிய பெட்டியினைத் திறந்து கனத்த பார்சலினை வெளியே எடுத்தாள் நந்தாவதி.

''சகுந்தலா, இந்த பார்சல் நிறைய உள்ளதெல்லாம் உமக்குத் தான். என்னுடைய அம்மா உமக்காகவே இதைச் செய்து தந்திருக்கிறா - உமக்கு நன்றாகவே பிடித்த தலைக்குளி...''

எள்ளினை நன்றாக தோல் போகத் தீட்டியெடுத்து சக்கரையை அதனோடு சேர்த்து அரைப்பதமாக இடித்துப் பின்னர் அவற்றைக் கட்டை விரல் பரிமானத்திற்கு உருட்டி, மெல்லிய ரிஷ்யூ கடுதாசியிலுள் சுருட்டி வைக்கப்பட்டுள்ள 'தலைக்குளி'களை சகுந்தலா மிகவும் ஆர்வத்தோடு பார்த்தாள்.

இடையே சந்திரவதனி குறுக்கிட்டு செல்லமான குரலிலே அதட்டுகிறாற்போல கேட்டாள்: ''அதென்னவாம் சகுந்தலா வுக்கு மட்டும் தலைக்குளி. எங்களுக்கு மட்டும் ஒன்றுமேயில் லையா?''

சந்திரவதனியின் சிங்கள உச்சரிப்பு அவசரமாக ஒலிக்க, நந்தாவதி சிரித்தவாறே தமிழிலேயே கூறினாள்:

''இல்லையில்லை சந்திரா, இதோ கொண்டைப்பணிகாரமும் அச்சாறும் உமக்குத்தான் கொண்டு வந்தது. மாமாவுக்கும் மாமிக்கும் தோடம் பழங்கள். நான் யாரையும் மறக்க மாட்டன்தானே...''

சகுந்தலா ஒரு கைக்குள் பார்சலை இடுக்கிக் கொண்டு மறு கைவிரலால் நந்தாவதியின் மோவாயை நிமிர்த்தியவாறே, ''உண்மையாகத்தான் அக்கா சொல்லுறீங்களா?'' என்று கேட்டாள்.

சகுந்தலாவின் தீட்சண்யமான கண்களினை நந்தாவதியால் சந்திக்க முடியாமல் தயக்கம் இறுகிய திரையெனத் தடுத்து நிறுத்தியிருந்தது.

''அப்படி என்னால் அண்ணனுக்கு ஒன்றும் வாங்கி, வரவில்லையா?'' வெடுக்கெனக் கேட்டாள் சகுந்தலா.

தனது முகத்தினை தனது உடலினுள்ளே வைத்து மூடிவிட முடியாதா என்று நினைத்தாள் நந்தாவதி. தன்னை வெட்கம் விடுங்கித் தின்பதனைக் காட்டிக் கொள்ளாமல் சந்திரவதனியைப் பார்த்துக் கொண்டே கூறினாள் நந்தாவதி.

''என்ன சகுந்தலா, என்ன இது?''

நந்தாவதியின் இக்கட்டான நிலைமையினை உணர்ந்த வளாக அதட்டுகிற குரலிலே குறுக்கிட்டாள் சந்திரவதனி.

''இதென்ன சகுந்தலா? நந்தா கொண்டு வந்தது எல்லோருக்குந்தானே... பிறகு ஏன் வீணான கதைகள் கதைத்துக் கொண்டிருக்கிறாய்...?''

சகுந்தலா, சந்திரவதனி சொன்னதையே கேளாதவள் போலத் தன்னுடைய ரிப்பனை அவிழ்த்து உதறிக் கொண்டு உள்ளே போக, வெளியேயிருந்து வந்த ராமநாதன், ''சகுந்தலா, மிஸ்.விஜயபாலாவைத் தேடி யாரோ வந்திருக்கிறார்கள் என்று சொல்லு...'' எனக் கூறியவாறு உள்ளே போனான்.

வீட்டு விறாந்தையிலே உட்கார்ந்திருந்த மூவருக்கும் வணக்கத்தினைத் தெரிவித்தவாறு கதிரையில் அமர்ந்து கொண்டாள் நந்தாவதி. அவள் அங்கம் வகிக்கின்ற தொழிற்சங்கத்தினது முக்கிய அங்கத்தவர்கள் அவர்கள். சுருள் முடியும் திடமான முகமுமுள்ள கிருஷ்ணபிள்ளை. பார்க்கிற எவருக்கும் மரியாதை உணர்வினைத் தோற்றுவிக்கிற சாந்த சொரூபியான டேவிட். பளபளக்கின்ற நீலக் கண்களும், புன்னகை பொலிந்திருக்கிற முகமுடைய சுறுசுறுப்பான சரணபாலா.

நாடு தழுவிய வேலை நிறுத்தம் ஒன்றினை வெகு விரைவி லேயே மேற்கொள்ள வேண்டுமென்று தொழிற்சங்கங்கள் கூட்டாகச் சேர்ந்து முடிவெடுத்திருக்கின்றன. அதற்கு முன்னோடி நடவடிக்கையாக ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தினை நடத்த அவசர ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அது சம்பந்தமான பிரசார வேலைகளினை மேற்கொள்வது சம்பந்தமாக ஆலோசனைகள் பரிமாறிக் கொள்ளவே அவர்கள் அங்கே வந்திருந்தனர்.

வந்திருந்தவர்கள் கதைக்கத் தொடங்கிய போது உள்ளேயிருந்து தேநீர் கொண்டு வந்தாள் சகுந்தலா.

''நந்தாவதிதான் இம்முறை பிரசார ஒழுங்குகளிற்குப் பொறுப்பாக இருக்க வேண்டும். பொது மக்களுடைய ஆதரவும் வேலைநிறுத்தத்தின் வெற்றிக்கு மிகவும் அத்தியாவசியமான விஷயம் எங்களுடைய உறுதிப்பாட்டினைக் காண்பிப்பதன் மூலம், எங்கள் கோரிக்கைகள் வெற்றியடைய நாங்கள் மிகவும் திட்டமிட்ட முறையிலே இந்த வேலை நிறுத்தத்தினை மேற்கொள்ள வேண்டும்...''

சரணபாலாவின் வார்த்தைகள் மிகவும் மெதுவாக வெளிப்பட்ட போதிலும் முகத்திலே உறுதி தொனித்திருந்தது.

இப்போதைய நிலைமைகள் யாவற்றையும் தேர்ந்தறிந்த துணிவான குரலிலே நிதானத்தினைத் தேக்கி சரணபாலா கூறியவற்றினை யாவருமே ஏற்றுக் கொண்டனர். முகத்தினிலே

துலங்கிய திருப்தியினில் அவர்களின் மனநிறைவு தெளிந்து தெரிந்தது.

''இந்த வேலைநிறுத்தம் மிகவும் நிச்சயமான வெற்றியினைத் தருமென்பதில் எனக்கு எவ்விதமான சந்தேகமும் இல்லை. ஏனென்றால் தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள் என்ற பேதமே யின்றி எல்லோரும் ஒரே ஒரே குரலில், கொடியின் கீழே நிற்கின் றனர்'' என்று டேவிட் கூறியதைக் கேட்டு ஆமோதித்தவாறே -

''இப்போது அன்றாட வாழ்க்கையினை நடத்துவதே திண்டாட்டமாகி விட்டது. வாழ்க்கைச் செலவுகள் ஆகாயத்தைத் தொட்டு நிற்கின்றன. அரசியலையும், சமூக, வாழ்க்கைத் தன்மையினையும் கெட்டித்தனமான ஏமாற்றுகளே ஆக்ரமித்துக் கொண்டிருக்கின்றன. பாராளுமன்றக் கதிரைகளையே இலட்சியமாக்கியுள்ள அரசியல்வாதிகள் தங்கள் ஆதாயத்திற்காக எதையும் துணிந்து செய்கிறார்கள்... பொது மக்களோ விரக்தியின் எல்லைக்கே தள்ளப் பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையிலே ஒருங்கிணைந்ததோர் போராட்டம் அவசியந் தானே என்று நிச்சயமாக மக்கள் உணர்வார்கள்'' என்று கூறினான் நந்தாவதி.

''கடந்த சில காலங்களில் வேலைநிறுத்தங்கள் என்றால் இன அடிப்படையிலேயே பார்க்கப்பட்டன. சிங்களவர் வேலை நிறுத்தம் செய்தால் தமிழர் பங்கு கொள்ளாமலும், தமிழர் வேலை நிறுத்தம் செய்தால் சிங்களவர் ஆதரவு கொடாமலும் இருந்து வந்திருக்கின்றனர். இது நிர்வாகங்களுக்கு மிகவும் சாதகமாக இருந்துமிருக்கிறது. இந்த ஆயுதத்தைப் பாவித்து தொழிலாளிகளை ஒருவரோடு ஒருவர் மோதவைத்து தங்களுடைய காரியங்களினை வெகு திறமையாகவே நிர்வாகத்தினர் வென்றெடுத்திருக்கின்றனர். ஆனால் இப்போது நிலைமையானது முற்றாகவே மாற்றமடைந்து விட்டது. தொழிலாளர் பிரச்சினைகளில் தமிழர் பிரச்சினை சிங்களவர் பிரச்சினை என்ற வித்தியாசமே இல்லை. தங்களுடைய பொதுப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக இனவாத உணர்வுகளை கைவிட்டு வர்க்க உணர்வுகளினை அழுத்தமாக ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியம் என்பதனை தொழிலாள வர்க்கம் உணரத் தலைப்பட்டுள்ளது...''

அரசியல் வகுப்பிலே நிதானமாக யோசித்து யோசித்து பாடஞ் சொல்லிக் கொண்டிருப்பவரைப் போல சரணபாலா

கூறிவிட்டு கையிலேயிருந்த ஃபைலைத் திறந்து சில துண்டுப் பிரசுரங்களையும் எடுத்து நந்தாவதியின் கையினிலே கொடுத்தார். துண்டுப் பிரசுரங்களைப் பார்க்கையிலேயே நந்தாவதியின் மனம் விம்மிதமுற்றது. ஒரு பக்கம் சிங்களத்திலும், மறுபக்கம் தமிழிலுமாய் அச்சிடப் பட்டிருந்த அந்தத் துண்டுப் பிரசுரம், தொழிலாள இயக்கத்தின் புதிய சிந்தனைப் போக்கை உணர்ந்தியிருக்கிறதென அவள் நினைத்துக் கொண்டாள்.

அப்பொழுது சந்திரவதனி வந்திருந்தவர்களுக்கு பிஸ்கட்டும், தேநீரும் கொண்டு வந்தாள். அவளை நன்றியுடன் பார்த்த நந்தாவதி வந்திருந்தவர்களுக்கு அவளை அறிமுகப்படுத்தி வைத்தாள்.

9

நெடிய தோற்றமுள்ள நந்தாவதி, பளிச்சென்று துலங்குகின்ற தேங்காய்ச் சொட்டாய் தோன்றி சிரித்ததனை ஆசையோடு பார்த்துவிட்டு சந்திரவதனி, ''என்ன அழகாக நீர் சிர்க்கிறீர்? சிரிக்கிற போது வாய் மட்டுமில்லை, கண்கள், முகம் எல்லாமே சிரிக்குது...'' என்று பரவசமுற்றவள் போலக் கூறிவிட்டு நந்தாவதியையே உற்று நோக்கினாள்.

மனதின் ஒளி கண்களிலே ஒளிர, கையிலே வைத்திருந்த பெரியதான வெள்ளைப் போஸ்டர் தாள்களை மேசையிலே பரப்பிவிட்டு, மிகவும் ஆறுதலான குரலிலே கூறினாள் நந்தாவதி:

''வேலை நிறுத்தம் பற்றிய எல்லாப் போஸ்டர்களையும் கையினாலேயே எழுதவேண்டியுள்ளது. சிங்கள மொழியிலை நான்தான் நல்ல அழகாக எழுதுவேன் என்று சொல்லி என்னிடத்திலேயே எல்லாப் பொறுப்புகளையும் தந்திருக்கிறார்கள். இன்றைக்கே எழுதத் தொடங்கினால்தான் போஸ்டர்கள் காய்ந்து ஒட்டத் தக்கதாயிருக்கும்...''

சந்திரவதனியின் முகத்திலே மகிழ்ச்சி பொங்கியது: தன்னுள்ளேயே ஒரு திருப்தியான உணர்வு பிரவகிப்பதனை அவள் உணர்ந்து கொண்டாள்.

''அதைப் பற்றி நீங்கள் கவலைப்பட என்ன இருக்கிறது? குறித்தபடியே எல்லா எழுத்து வேலையும் முடியும். நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டியதில்லை...''

அவள் சொன்னதை விளங்கிக் கொள்ள முடியாத முக பாவனையிலே நந்தாவதி ஏறிட்டாள்: ''என்ன சொல்லுகின்றீர் நீர்?''

''உங்களுக்கு இந்த விஷயம் தெரியாதுதான். எங்களி னுடைய வீட்டில் அம்மாவைத் தவிர மற்ற எல்லோருக்கும் சிங்களத்திலை நன்றாகவே எழுதத் தெரியும். குண்டு குண்டாகவே நல்ல எழுத்திலே எழுதுவோம்: என்ன விஷயம் எழுதப்பட வேண்டுமென்பதனை தெளிவாக ஒரு தாளிலை எழுதித் தந்தால் நாங்கள் அதைப் பார்த்து போஸ்டரிலே நல்ல அழகாகவே எழுதித் தருவோம்...''

ஒவ்வொரு சிங்கள வார்த்தையையும் அட்சர சுத்தம் தவறாமல் கூறிமுடித்த சந்திரவதனியைப் பிரமிப்போடும், நெகிழ்வோடும் பார்த்தபடி எதையுமே பேச முடியாமலிருந்தாள் நந்தாவதி. அவளின் மனம் அவளையறியாமலே அதிர்ந்து போய்விட்டது. மகிழ்வினில், வியப்பினில் தன்னை மறந்து மலர்ந்து நின்றாள் அவள். இந்த எண்ணம் தன்னுடைய மனத்தினிலே முன்னரே தோன்றவில்லையே என நினைத்து, அரசியல் ஆர்வம் எதுவுமின்றியே தனது கவலைகளின் வட்டத்தினுள்ளேயே நின்று உழன்று தன்னுள்தானே பெருமூச்செறிகின்ற சந்திரவதனி இந்த வேலை நிறுத்தத்திலே ஆர்வங்கொண்டு, தானே உதவி செய்கிற ஆலோசனையி னோடு முன் வந்தது நந்தாவதியை மிகவும் பரவசப்படுத்தி விட்டது.

இதுவும் நல்லதொரு முன்னேற்றத்துக்கான அறிகுறியே என நினைத்துக் கொண்டவளாய், ''இன்னும் கொஞ்ச நேரத்திலே தோழர் கணேஷ் இந்தப் போஸ்டர்கள் எழுதுவதற்கு மையும், பிரஷும் கொண்டு வருவார்... அதற்கிடையிலே நான் போஸ்டரில் எழுதுவதற்கான சுலோகங்கள் என்னென்ன என்பதை ஒரு தாளிலே எழுதித் தந்து விடுகிறேன்...'' என்று கூறியவளாக மேசையின் அருகேயிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள் நந்தாதேவி.

''இந்த வேலைநிறுத்தம் மிகவும் வெற்றியினை அளிக்கு மென்று நாங்கள் எல்லோருமே உறுதியாக நம்புகிறோம். அதற்கான எல்லா சாத்தியப்பாடுகளும் உருவாகியுள்ளன. மத்தியதர வர்க்கம், சொல்ல முடியாத பரிதாபகரமான முறையிலே தன்னுடைய வாழ்க்கையினை நடத்திக்

கொண்டிருக்கிறது. வாயைக்கட்டி, வயிற்றைக் கட்டியும் வாழ முடியாத நிலைமையிலை இருக்கிற அவர்களுக்கு இந்த நிலைமையிலே போராட்டம் ஒன்றினைத் தவிர வேறை வழியே இல்லை...'' கூறிமுடித்த பின்னர் சில கணங்கள் மௌனத்தி லேயே ஆழ்ந்து போயிருந்தாள் நந்தாவதி.

மத்தியதர வர்க்கப் பிரச்சினைகளிலே தொட்ட அவளது சிந்தனை, சொந்த வீட்டுப் பிரச்சினைதனிலே போய்த் தரித்தது. குத்தகை விவசாயியான தனது தகப்பனாரோடு அவள் மனதிலே பலர் வரிசையாகத் தெரிந்தனர். நிராசையும் நம்பிக்கையீனமும் நிறைந்த முகங்களுக்குரியவர்கள், பயம் மிதக்கின்ற நெஞ்சி னோடுதான் வருங்காலத்தை எதிர்கொள்ள வேண்டியிருக் கின்றது. இதனைவிட தொழிலாளிகள், உதிரித் தொழிலாளர்கள், பிரச்சினை வெள்ள்ததினுள்ளே திசை தெரியாது எற்றுப்பட்டுக் கொண்டிருக்கின்ற இளைஞர்வெள்ளம்...இதோ, முடிவு இதுதானென்று சொல்ல முடியாத ஒரு விழித்திருக்கிற பிரச்சினை வடிவமாக என்னெதிரே அமர்ந்திருக்கின்ற சந்திரவதனி, இன்னொரு சந்திரவதனியாகத் தயாராகிக் கொண்டிருக்கிற நான்...

வரட்சி பொங்கச் சிரித்தாள் நந்தாவதி. எதிரேயுள்ள சுவர் ஓரத்தினை நோக்கியபடியே கேட்டுக் கொண்டிருந்த சந்திரவதனி, நந்தாவதி கூறி வந்ததை இடையிலே நிறுத்திவிட்டு யோசித்தவாறு தன்னை மறந்து சிரித்ததும் மனதினுள்ளே நகைத்துக் கொண்டாள்.

''என்ன, கதைத்துக் கொண்டிருந்த நீர் திடீரெனப் பேசாம லிருந்து விட்டு உம்மை சிரிக்கிறீர்? என்ன விஷயம்? மறைக்காமல் எனக்குச் சொல்லலாம்தானே...''

நந்தாவதி தன்னைச் சுதாரித்துக் கொண்டாள். கருணை ததும்பிய பார்வையினை கண்கள் பிரவகித்தன. அந்த நேரத் திலே, அந்த மனம் நைந்த சூழ்நிலையிலே அவளுக்கு, சந்திர வதனியின் சொற்கள். மனம் கைத்துப் போகிற வேளைகளிலே இத்தகைய சொற்கள் எவ்வளவு பெறுமானமிக்கவை!

''இந்த உலகத்தைப் பற்றி நினைத்தேன். வெறுப்பும், ஆத்திரமும், அருவருப்பும், சிரிப்பும் மாறி மாறி வந்தன...''

''ஓ...'' என்றவாறு ஆச்சரியத்தோடு தொடங்கினாள் சந்திர வதனி. அனுபவப்பட்ட உணர்வு குரலினிலே அப்பட்டமாகத் தொனித்தது.

"அப்படியான வெறுப்பும், எரிச்சலும் உமக்கு உண்டாவ தற்கு இன்னும் சில வருஷங்கள் போக வேண்டுமே!... எங்களுக்கு அப்படியான மனநிலையிருப்பதற்குக் காரண முள்ளது, ஆனால் உமக்கு ஏன்?"

இருபத்தெட்டு வயதின் முதிர்ச்சியினோடு, பெருமூச்சு ஒட்டியிருக்கின்ற முகத்தினோடு, குள்ளமாக, வெம்பி வெதும்பிய மாநிற வடிவத்தோடு, தன் முன்னே கவலை ததும்பியிருக்கின்ற சந்திரவதனியைப் பார்த்தாள்; மனதினை ஊடுருவுகிற பார்வை. நேர்மையும், சுயகௌரவமும் உருவாகப் பெற்ற தகப்பனின் நெஞ்சினிலே கனத்திருக்கின்ற கவலை இவள்; உலகின் தகிடுதத்தப் போக்குகளிளை அறியாத தாயின் இதயத்திலே கனவுகளை விளைவித்து கவலையினை அறுவடை செய்து வைத்திருக்கிற மகள் இவள், என்னைப் போலவே இவளுக்கு வளரிளம் பருவத்தின் ஆசைகள் நெஞ்சினிலே கனலென மணந்திருக்கும்.

கண் புதைத்து நாணத்தோடு இவளும் ஒரு இளைஞனை நினைத்திருப்பாள். அந்த நினைவின் இனிமையான கனவுக ளோடு மனம் விம்மி, ராகம் பாடுகிற நெஞ்சோடு பரவச உணர்வுகளை நெஞ்சினிலே லயந் தவறாது மீட்டி மீட்டி இன்பமெய்தித் தன்னை மறந்திருந்திருப்பாள். இப்போது அவையெல்லாம் பொய்யாய், கனவாய், பழங்கதையாய் ஆகி இவளுக்கு துக்கம் தருகின்றனதான நிகழ்வுகளென நெஞ்சினிலே கனத்துக் கனத்துச் சுமைகளினை ஏற்றிஅழுத்திக் கொண்டே யிருக்கும். இவளைப் போலவே என்னுடைய நிலைமை ஆகி விடுமோ?...

ராமநாதனின் வார்த்தைகள் அவளது காதோடு கேட்க நெஞ்சினிலே அவன் வந்து நின்றான். உயரமான, ஒட்ட வெட்டப்பட்ட முடியும், உருண்ட முகமுமுடைய தாயின் இனிய புன்னகையினை முற்று முழுதாகத் தன்னுடைய முகத்தினிலே வைத்திருக்கின்ற ராமநாதன்...

"எதிலைதான் அயோக்கியத்தனமும் சுற்றுமாற்றுத் தனமும் இல்லை. பொய்மையும், போலித்தனமும் தான் உண்மை வேஷங்கட்டி அன்றாட வாழ்வினையே நாசப்படுத்திக் கொண்டு வருகிறது. மனச்சாட்சியும், மனித நேயமும், செயல்திறனும் உள்ள எந்த மனிதனும் இனி வருங்காலத்திலே கையைக் கட்டி தன்னடக்கமாக இருக்க வேணுமென்று யோசித்தால் அதைப்

போல அவன் தனது காலத்திற்கும், இனி வரும் சந்ததிக்கும் செய்கிற துரோகம் வேறெதுவுமே இருக்க முடியாது...''

அவனுடைய ஆவேசம் சகுந்தலாவைத் தூண்டிற்று.

''என்னண்ணா இவ்வளவு ஆவேசம்?''

''இன்றையப் பத்திரிகையைப் பார்த்தால் அது விளங்கும். நாடகங்கள், கலை... நிகழ்ச்சிகள் நடந்தால் அதற்கு மேடை ஒழுங்கு செய்து கதிரைகள் அடுக்குகிற கனகேஸ்வரன், 'கலை இலக்கியத்தின் புதிய பரிமாணம்' என்ற தலையங்கத்திலை ஒரு புத்தகம் எழுதியிருக்கிறானாம். அதைப்பற்றி இவனைப் போலவே 'சீன்' இழுக்கிற பத்மராஜா விமர்சனமொன்று எழுதி, கனகேஸ்வரனை இருபதாம் நூற்றாண்டு கலை இலக்கியத்தின் முன்னோடி என நிறுவியிருக்கின்றான்...''

மிகுந்த ஆத்திரத்தோடு துடித்தன ராமநாதனின் வார்த்தைகள். சகுந்தலாவோ விழுந்து விழுந்து சிரித்தாள்; கண்களில் நீர் மூட்டுகின்ற அளவுக்கு.

''இதற்கே நீங்கள் இப்படிக் கோபித்தால், மற்ற விஷயங்கள்? கோபித்துக் கோபித்தே உங்களுக்கு இரத்தக் கொதிப்பே வந்துவிடும். இந்தியாவிலையிருந்து புத்தகங்கள், சஞ்சிகைகள் வரவழைத்து நல்ல 'கொமிஷன்' வைத்து விற்கிற பரந்தாமன் தன்னைவிட தமிழலக்கியத்திற்கு யாராவது சேவை செய்திருக்க முடியுமா எனக் கேட்டிருக்கிறானே... இப்படியாக எல்லாத் துறைகளிலுமே போலிகளின் ஆதிக்கமே பெருகித்தான் வருகிறது, தனியாக நின்று இதை முறியடிக்கப் போகிறீர்களா? உங்களால் அது முடியுமா...?''

உணர்ச்சி மயமாக ஒலித்தது சகுந்தலாவின் குரல்.

''தனி மனிதனின் எதிர்ப்புக் குரலாலோ, நடவடிக்கைகளாலோ ஒன்றும் ஆகப் போவதில்லை என்று எனக்குத் தெரியும். இவையெல்லாவற்றிற்கும் அரசியல் மாற்றத்தாலேயே பரிகாரம் காண முடியுமென்றாலும் இத்தகைய அயோக்கியத் தனங்களினை அதுவரை அனுமதித்துக் கொண்டிருக்க முடியுமா? இவைகளால் எவ்வளவு ஆத்திரம் உண்டாகிறது...? இவற்றிற்கு எதிராக கூட்டாகக் குரல் எழுப்புவதற்கான முயற்சிகளைச் செய்தே ஆக வேண்டும்...''

நந்தாவதி அண்ணனையும், தங்கையையுமே பார்த்துக் கொண்டிருந்தாள். அவர்களின் கவனம் திடீரென்று அவள்மீது திரும்பியதைப் போல ஏககாலத்திலேயே கேட்டார்கள்:

''உங்கள் பக்கத்தில் எப்படி?''

''இவ்வளவு மோசமாக இல்லை'' என்று சிரித்தவாறே சொன்னாள் நந்தாவதி.

''ஆனால் நிறைய வாக்குவாதங்கள் உள்ளன. சில வேளைகளில் அந்தத் துறை பற்றிய அறிவில்லாதவர்களே அத்துறையிலே பேராசிரியர்கள் போல வியாக்கியானங்கள் செய்வதுமுண்டு... இதற்கு அரசியல்வாதிகளின் ஆசீர்வாதங்களும் நிறையவே உண்டு...''

கசப்போடு சிரித்தான் ராமநாதன், ''அரசியல்... அரசியல்!''

இப்போதும் ராமநாதன் சிரிப்பது போலொரு பிரமை.

''என்ன பிறகும் யோசனை?''

சந்திரவதனி செல்லமாக நந்தாவதியின் கன்னத்திலே தட்டினாள்.

''ஒன்றுமில்லை. எல்லாம் வேலை நிறுத்தத்தைப் பற்றிய யோசனைதான். ஒன்றை யோசிக்கத் தொடங்கினால், மனம் மாறி மாறிப் பல விஷயங்களிலே தொட்டுத் தொடருகின்றது. உலகத்திலை என்ன துறைதான் ஒழுங்காக இருக்கிறது?''

இப்போது தன்னைத் திடப்படுத்திக் கொண்டு விட்டாள் நந்தாவதி. தான் உணர்ச்சி வசப்பட்டு நிற்பதனை இப்போது அவள் விரும்பவில்லை. சில கணங்களிற்கு தன்னிலை மறந்தாலும், மீண்டும் சில நிமிஷங்களில் சுயநிலைக்குத் திரும்பி உறுதி கொண்டு விடுவாள் அவள். அதுவும் தொழிற்சங்க நடவடிக்கைகளிலே பங்குகொள்ளத் தொடங்கியதின் பிறகு இத்தகைய மனநிலை அவளிடத்திலே மெதுவாக உருவம் பெற ஆரம்பித்திருக்கின்றது.

''நிலைமைகள் தொடர்ந்தும் இப்படியிருக்கப் போவதில்லை. எப்படியும் நல்ல எதிர் காலம் தோன்றவே செய்யும்...''

சந்திரவதனி மௌனமானாள். அவளுக்கு நந்தாவதியின் இந்த உறுதியினை மிகவும் பிடிக்கும். நந்தாவதியின் மன இயல்பினைப் பற்றி எண்ணியவளாய் சுவர் ஓரத்தின் பக்கமாக மீண்டும் பார்வையை விழுத்தினாள். தனியே உதிர்ந்து கீழே விழுந்த சருகொன்று காற்றினிலே மிதந்து, தரிப்பதற்கு இடந்

தேடி அலைந்து சுவரினிலே மோதி, அதன் பாதத்திலே விழுந்து உறங்கியதை கணங்களிற்கு பார்த்திருந்துவிட்டு வெளிக் கதவைத் திறந்தவாறு உள்ளே வந்து கொண்டிருக்கிற ராமநாதனை எதிர் கொண்டாள் சந்திரவதனி.

''இன்றைக்கு எங்களெல்லோருக்கும் நல்ல வேலை காத்திருக்குது...'' என்று கூறிய சந்திரவதனியை ஆச்சரியமான முகத்தினோடு என்ன விஷயம் என மௌனத்தினாலேயே வினவினான் ராமநாதன்.

அவனுடைய பார்வை கேட்டதனைப் புரிந்து கொண்ட வளாக, ''வரப்போகிற வேலை நிறுத்தத்திற்கு போஸ்டர்களை சிங்களத்தில் எழுத வேண்டுமென்று நந்தா சொன்னபோது அதை நாங்களும் சேர்ந்து செய்வம் என்று கூறியிருக்கிறேன்... உன்னுடைய சிங்கள எழுத்தும் நல்ல வடிவமானது தானே!'' என்றாள் சந்திரவதனி.

புன்னகையினால் பதிலளித்த ராமநாதன், ''எழுதித் தருவதிலை எனக்கொன்றும் ஆட்சேபணையில்லை. அதுவும் இந்த வேலை நிறுத்தத்தின் எல்லாக் கோரிக்கைகளும் மிக நியாயப் பூர்வமானவைதான்'' என்று கூறிவிட்டு, ''ஆனால் மத்தியதரவர்க்கம் தன்னைப் பற்றி மட்டுந்தான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறது. தொழிலாளி, விவசாயி வர்க்கம் ஒன்றிணைந்து நடத்துகின்ற போராட்டத்தோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளாமல் நடத்துகின்ற எந்தப் போராட்டமும் ஒருபோதுமே பூரண வெற்றியினை அடைய முடியாது... என்றாலும் என்ன, ஒரு கொடுமைக்கெதிரான போராட்டம் என்ற அளவிலை அதற்கு நான் என்னாலான உதவிகளையெல்லாம் செய்து தருகிறேன்...'' என்றவாறு நந்தாவதியைப் பார்த்தான்.

10

அமைதியான முகத் தோற்றமுடைய ராமநாதன், வாழை மரத்துக்கு அருகே கதிரையினை வைத்து நன்றாக முற்றி இடைப்பழம் பழுத்திருக்கிற குலையினை தனது தங்கை சகுந்தலாவின் உதவியோடு வெட்டி இறக்குவதனை ஜன்னலின் வழியாகப் பார்த்துக் கொண்டு நின்றாள் நந்தாவதி. லேசான

புன்னகை விளங்குகின்ற அவனது உருண்டையான முகத்தினில் இவளது கண்கள் இரகசியமாகப் பதிந்திருந்தன.

இரண்டு தினங்களிற்கு முன்னர் போஸ்டர்கள் எழுதிக் கொண்டிருந்தபோது அவனோடு நிறையப் பேசுவதற்கு நந்தாவதிக்கு சந்தர்ப்பம் வாய்த்திருந்தது. ஒட்ட வெட்டிய முடியும், உயரமுமான வடிவமுள்ள சாதாரண இளைஞனாகவே முதற் சந்திப்பில் அவளுக்குத் தோன்றிய அவன், இப்போது முன்னுதாரண புருஷனாகத் தன்னைக் காட்டி நிற்கிறான். அவனுக்குள்ளே எரிமலையொன்று உறங்கிக் கொண்டிருப்ப தனை அவள் மிகத் தெளிவாக அவதானித்தாள்.

ஆழமான அவனது பார்வை, கலையுலகம் சம்பந்தமாக மட்டுமல்லாது அரசியலையும் ஊடுருவி நின்றது. எல்லாவற்றிற் கும் அரசியலே ஆதாரம் என்று கூறிய அவனது ஒவ்வொரு செயலிலும் அவ்வார்த்தைகளே உயிர்ப்பாய் நிறைந்திருந்தன. நாளாக நாளாக அவனது உருவம் அவளின் முன் வளர்ந்தே தோன்றிற்று.

''எந்தத் தனிமனித வீரத் தீரப் போராட்டத்தினாலோ, வெறும் இளைஞர் கிளர்ச்சியினாலோ சாதாரண மனிதனுக்கு விடுதலை கிடைத்து விடப் போவதில்லை... ஒடுக்கப்பட்டுச் சுரண்டப்படுகிற வர்க்கங்கள் தான் எல்லாப் புரட்சிகளிலும் அளப்பரிய பங்கைப் பெற்றுள்ளன...''

போஸ்டரிலுள்ள சுலோகத்தினை எழுதியவாறே அவன் கூறியபோது இடையே குறுக்கிட்டாள் சகுந்தலா.

''அப்படியென்றால் சாதாரண மனிதர்களால் இந்தப் பெரிய போராட்டங்களினை நடத்த முடியுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?''

சந்திரவதனி, சகுந்தலாவைப் பார்த்து லேசாகப் புன்னகை செய்தாள். துறுதுறுவென்ற சகுந்தலா, மனதுள் என்ன வைத்திருக்கிறாள் என்ற மன உணர்வு அப்புன்னகையின் பேசாமொழியாயிருந்தது. சகுந்தலாவின் கேள்விக்கு பதில் சொல்லத் தயாரானவன்போல நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான் ராமநாதன்.

''சகுந்தலா, ஒடுக்கப்பட்டுச் சுரண்டப் படுகின்ற மக்கள்தான் எல்லா சமூகப் புரட்சிகளிலும் மிக முக்கியமான பங்கினை வகிக்கின்றனர்; ஓய்வொழிச்சலில்லாத சுயநலமில்லாத

போராட்டத்தின் மூலமாக அவர்கள் பழைய அமைப்பினைத் தகர்த்து நொறுக்கி நிர்மூலமாக்குகின்றனர்; அவர்கள்தான் எப்போதுமே போராட்டங்களிலே முன்னணியிலே முக்கியமான பாத்திரத்திலே நின்று போராடுபவர்கள். பழைய அமைப்பு களைத் தகர்க்கிற அதே வேளையில், எதிர்ப் புரட்சியாளர்களின் தாக்குதல்களிலிருந்தும் புரட்சியின் சாதனைகளைப் பாதுகாப்ப வர்கள் அவர்கள்தான். அதனால்தான் சுரண்டப் படுகின்றவர் களை எந்த ஆளும் வர்க்கமும் மக்களாக அங்கீகரிப்பதில்லை. ஆனால் உண்மையிலேயே அங்கீகரிக்கப்பட வேண்டியவர்கள் இந்த மக்கள்தான். இவர்கள்தான் எல்லா வல்லமையு முள்ளவர்கள்...''

ராமநாதனுடைய ஒழுங்கான விளக்கத்திலே ஆழ்ந்து போயிருந்த நந்தாவதி, அறைக்குள்ளே தேநீர்க் கோப்பை களுடன் வந்த சகுந்தலாவின் தாயைக் கண்டதும் மரியாதை யோடு எழுந்தாள். தாய் வழமை போலவே முகம் மலரப் புன்னகை செய்தவாறே போஸ்டர்களை மலர மலரப் பார்த்துவிட்டு உள்ளே சென்றாள்.

'இவர்களுக்குத்தான் எவ்வளவு யோசனைகளும், பிரச்சினை களும். எங்களுடைய காலத்திலே வீடுதான் எங்களுக்கு உலகம். எங்களின் சந்தோஷமும், துக்கமும் இந்த உலகத்திற்குள்ளேதான் திருமணமாகும் வரை பெற்றோரும், சகோதரர்களும், பக்கத்து வீட்டிலுள்ள சமவயதினரும், கணவனைத் துணையாகக் கொண்ட பின் அவனது சுகதுக்கங்களும், வீட்டு வேலைகளும் பிள்ளைகளும். இப்போதோ? இப்போதுள்ள பிள்ளைகளோ எத்தனை குழப்பங்களிற்குள் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு சீறித் தெறிக்கிற தணற் பொறிகளாய் வெடித்துக் கொண்டிருக் கிறார்கள்!'

சமையலறைக்குள் போகிற வரையிலே இதை நினைக்க மகேஸ்வரிக்கு சிரிப்பும், வியப்புமே மனதினுள் மாறி மாறி ஏற்பட்டன. ஆயினும் தன்னுடைய பிள்ளைகளின் துடிப்பும், திறமையும், கணவனின் வழி வந்த அறிவும் அவளிற்குப் பெருமையைக் கொடுத்தன.

அண்ணனின் விளக்கங்களைக் கேட்பதிலே சகுந்தலாவுக்கு மிகவும் விருப்பம். எந்த ஆழமான கருத்தினையும் வெகு நிதான மாக, தெளிவாக, ஆற்றொழுக்காகக் கூறிக் கொண்டிருப்பான் அவன். எதைக் கூறுகிற போதிலும் சொற்கள்

பற்றாக்குறையாகத் தடக்குவதில்லை. நன்றாகப் புத்தகங்கள் வாசிக்கிறமையால் உள்ளந் தெளிவாகி அவனுக்கு அப்படியான தொரு இயல்பு வசமாகி விட்டதென்று சகுந்தலா முடிவுக்கு வந்தாள். அவனுடைய நண்பர்களின் மனதிலும் இந்த முடிவே இருந்தது.

கிட்டத்தட்ட அறுபது போஸ்டர்கள் வரை கையினாலேயே எழுதி முடித்தது நந்தாவதிக்கு மிகப் பெரிய சாதனையாகி மகிழ்வினை ஏற்படுத்தியிருந்தது. இந்த வேலை நிறுத்தம், இப்பிரதேசத்திற்கு மட்டுமின்றி இலங்கை முழுவதற்குமே ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்திட வேண்டுமென்று இங்குள்ள தொழிற்சங்க உறுப்பினர்கள் விரும்புவது அவளிற்கு மிகவும் உற்சாகத்தினைக் கொடுத்திருந்தது. அவர்கள் அடிக்கடி கலந்தாலோசிக்கையில் இவ்வார்வம் வெளிப்பட்டு நின்றது.

இன்னொரு விதத்தில் தொழிற் சங்கத்தினர் செய்து கொண் டிருக்கிற முயற்சிகளும் வெற்றியளிப்பதற்காக சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டிருந்தன. அரசாங்க, தனியார் நிறுவனங்களிலே கடமையாற்றுகின்ற ஊழியர்கள் மட்டுமன்றி ஏனையப் பிரிவு மக்களையும் இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்ள வைப்பதற்கு தொழிற் சங்கத் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயங்களையெல்லாம் போஸ்டர்கள் எழுதிக் கொண்டிருக்கையிலே நந்தாவதி கூறிக் கொண்டிருந்தாள்.

பேச்சின் இடையே குறுக்கிட்ட சந்திரவதனி, ''சரி, நந்தா, இப்படியொரு வேலை நிறுத்தத்தினை நடத்தி, அதனால் பல பிரச்சனைகள் உருவாகி உங்களெல்லோரையும் வேலையில் இருந்து நிறுத்தி விட்டால் என்ன செய்வீர்கள்?'' என்றாள்.

சிரித்துக் கொண்டாள் நந்தாவதி.

''அனுராதபுரத்திலிருந்து நான் இங்கே இடமாற்றம் பெறுவதற்கும் அதுதான் காரணம். அங்கேயும் ஒரு வேலை நிறுத்தமொன்று நடைபெற்றது. அதிலே நானும் பங்கு கொண்டேன் தீவிரமாக... எங்களோடு வேலை பார்த்த சக தோழி, ஆராதனா அவள் பெயர் - அவளது கன்னத்திலே நிர்வாக அதிகாரி பலர் முன் அறைந்து அவமானப்படுத்தி விட்டான். அதோடு நின்றுவிடாமல் அவ்விவகாரத்தினை விசாரணைக்கு வராதவாறு தடுத்து விட்டான். அந்த அநீதிக்குத் தகுந்த விசாரணையும், நடவடிக்கையும் எடுக்க வேண்டுமென்று

நாங்கள் வேலை நிறுத்தத்திலே குதித்தோம். வேலை நிறுத்தம் ஒரு அரசியற் பிரச்சினையாக உருவெடுக்குமென்ற பயத்திலே உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டது. இரண்டு மூன்று வாரங்கள் கழிய என்மீது வேறு காரணங்களைச் சுமத்தி தண்டனையாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளேன்...

''எங்களுக்குத் தெரியும்; ஒரு போராட்டத்தின் முதல் முடிவினால் நல்விளைவு மட்டுமே ஏற்படுவதில்லை. பல தோல்விகள் ஏற்படலாம். சில இழப்புகள் ஏற்படலாம். பல காட்டிக் கொடுப்புகள் உண்டாகலாம். ஆனால் இவையேதான் ஒரு போராட்டத்தின் முடிவல்ல. நியாயமான எந்தப் போராட்டத்தினது இறுதி விளைவும் போராளிகளுக்கு சாதகமாகவே அமையும். இது அனுபவம்; வரலாறு; உண்மை...'' கூறிக் கொண்டு வந்த நந்தாவதி சிறிது நேரத்திற்கு மௌனமானாள்.

அவளின் கண்களிலே புதிய ஒளி ஜெலித்திருந்தது. தன் எதிரே பெருந்தொகையான மக்கள் திரண்டிருக்கிற மன நினைப்போடு உறுதி ததும்பக் கூறுவது போல அவள் தோன்றினாள். அவள் உத்தியோகத்திற்கென்று கதிரையிலே வந்து உட்கார்ந்த நாள் முதலே சினமும் எரிச்சலும், அருவருப்பும்தான் அவளைச் சுற்றி நின்று கெக்கலி கொட்டிச் சிரிக்கின்றன. உன்னால் எங்களை என்ன செய்துவிட முடியு மென்று சவால் விடுகிற அயோக்கியத்தனங்கள். ஏமாற்றுகள். இவைகளோடு சமரசம் செய்து கொள்ளுவதுதான் உனக்கு நல்லது என்று கூறுகிற வளைந்து போகிற, ஆத்மாவை சாகக் கொடுத்த நல்லெண்ணமுள்ளவர்கள்...

வெள்ளலரி மரத்தின் கீழே குசுமாவதி - அவளின் தாய்கூட ஒரு நாள் இதைத்தான் அவளிடம் கூறினாள். காமினியும் நின்றான்.

''ஏன் மகளே இப்படி ஆட்களைத் தூக்கி எறிகிறாய்? உனக்கு விருப்பமில்லா விட்டால் அவற்றிலிருந்து விலகிக் கொள். நாங்களெல்லாம் இதுவரை காலமும் சோலிசுரட்டில்லா மல் வாழவில்லையா...?''

அனுதாபத்தோடு தாயைப் பார்த்தாள் நந்தாவதி. 'அம்மா, உன்னுடைய வாழ்க்கை இந்தக் கிராமத்தின் எல்லைக்குள் ளேயே அமைந்தது. வீட்டையும், வயல்வெளியையும், உறவினரின் சடங்காசார வீடுகளையும், எங்கள் வீட்டின் அன்றாட இயக்கத்தையும் தவிர நீ அறிந்தது என்ன?

உன்னுடைய உலகம் இந்தச் சிறிய வீடு. எங்களுக்கோ உலகமே இப்போது வீடாகி, அதன் ஒவ்வொரு பிரச்சினையிலும் நாங்கள் சிக்குப் பட்டிருக்கிறோம்... அவை எங்களையும் தாக்குவதால் அவற்றிற்கெதிராக நாங்கள் குரலெழுப்புவது தவிர்க்க முடியாத தாகி விட்டது...'

''என்னம்மா, இதெல்லாம் நானா தேடிக் கொண்டது? எங்களை எங்கள் பாட்டிலே சும்மா இருக்க யார் விடுகிறார்கள்? எங்களிடம் ஒரு பழமொழி இல்லையா 'சண்டைக்குப் போகாதே. ஆனால் சண்டையிட்டால் பின்னுக்குப் பார்க்காதே' - உங்களின் பிள்ளைகள் ஒரு நாளுமே பின்னுக்குப் பார்க்க மாட்டார்கள். என்ன காமினி? நீ என்ன சொல்கிறாய்?''

காமினி தாயைப் பார்த்தான்.

''அம்மா, இந்தக் குழப்பங்களெல்லாம் வெகு இலேசாகத் தீரக் கூடியவையல்ல. காலத்துக்கு காலம் இத்தகைய போராட்டங்கள் எல்லாத் தேசங்களிலும் நடைபெற்றே வருகின்றன. ஒரு விதத்தில் புத்த பெருமானும் இத்தகைய போக்குடையவர்தான். மக்கள் குடியிருக்கும் உலகமாகிய வீடே தீப்பற்றி எரிவது போல அவர் கருதினார். அப்பெரு நெருப்பை அணைத்துக் குளிரச் செய்வதே தனது வேலை என அவர் எண்ணிச் செயல்பட்டார்...'' என்று கூறிய அவன், ''இன்றைய காலத்தின் கிளர்ச்சிகளெல்லாம் தவிர்க்கக் கூடியவை இல்லை. இவை வந்தே ஆக வேண்டியவை. இவற்றின் முடிவு நல்லாகத்தான் தெரியும். உண்டாகும். இவற்றை நிராகரிக்கிறவர்கள்; இதைப் பற்றிய புதிய வழிவகைகளைக் கூறுகிறவர்கள் - உண்மையிலே கருத்துக் குருடர்கள், அல்லது விஷமிகள்; மனிதகுல விடுதலையை விரும்பாமல் எளியவர்கள் மேலேறிக் குதிரை விட விரும்புகிறவர்கள். ஆயினும் ஓடி வருகிற ஆற்றினை யாராவது பின்னுக்குத் திருப்பி விட முடியுமா...?

''புத்தரே சொல்லியிருக்கிறார் அம்மா! 'தன் காதலி யார் என்று சொல்ல முடியாமலே காதல் கொண்ட ஒருவனைப்' போலவும், அரண்மனை எந்த இடத்தில் அமைக்கப்படும் என்பதை அறியாமலே மாடிக்குப் படிக்கட்டு அமைப்பவனைப் போலவும், ஆற்றைக் கடக்க விரும்பும் ஒருவன் அதைத் தன்னிடம் வருமாறு அழைப்பது போலவும்...'' எனக் கூறிக் கொண்டிருக்கையில், ''என்னவோ உங்களினுடைய போக்கு எனக்குப் பிடிபடவும் இல்லை; விளங்கவுமில்லை'' என்றபடியே குசுமாவதி உள்ளே போய் விட்டாள்.

நந்தாவதி காமினியைப் பார்த்துச் சிரித்தாள். தாயோடு, வயது முதிர்ந்தவர்களோடும் பேசுகின்ற போது அவன் புத்தருடைய வாழ்க்கை வரலாறு. உபதேசங்களிலிருந்துதான் மேற்கோள் காட்டுவது வழக்கம்.

நந்தாவதிக்கு காலையிலே வந்த காமினியின் கடிதம் இப்போதுதான் நினைவுக்கு வந்தது. பத்தாம் திகதி காலையில் தன்னை வந்து யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலே சந்திக்கும்படி எழுதியிருந்தான். இன்று ஆறாந் திகதி. ஏழு, எட்டு, ஒன்பது - இன்னும் மூன்று நாட்களே உள்ளன; சனிக்கிழமை அதிகாலைக்கு.

''சனிக்கிழமை விடியற்புறம் என்னுடைய தம்பி இங்கே வருகிறான்...''

நீண்ட மௌனத்தைக் குலைத்து வெளியான அவளின் வார்த்தைகள் அவ்விடத்திலிருந்தவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி யினைக் கொடுத்தன.

''நல்ல விஷயம்'' என்றான் ராமநாதன். ''இவ்வளவு நேரமுமிருந்து விட்டு இப்போதுதானே சொல்கிறீர்கள்?'' என்ற சகுந்தலாவின் கேள்விக்கு, ''காலையில்தான் கடிதம் வந்தது. மறந்தே போய்விட்டது...'' என்று மன்னிப்பான குரலிலே பதில் சொன்னாள் நந்தாவதி.

மீண்டும் வேலைநிறுத்தம் பற்றி அவர்களின் சம்பாஷணை. போஸ்டரின் மேல் அழுத்தலான சிறு மரத்துண்டுகளை வைத்து விட்டு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள் நந்தாவதி.

''ஒடுக்குமுறையின் மூலமாக எந்தவொரு பிரச்சினை யையோ போராட்டத்தையோ நசுக்கி அழித்தொழித்து விட்டதாகச் சரித்திரமே இல்லை... சந்திரா நினைக்கிறது போலை தொழிற்சங்க நடவடிக்கைகளை இலேசாகத் தூக்கி வீசி எறிந்துவிட முடியாது. முன்பு போல இல்லாமல் இப்போது தொழிற் சங்க இயக்கங்கள் நன்றாகப் பலமடைந்திருக்கின்றன... வேலை நிறுத்தம் செய்கிறவர்களுக்கு எதிராக மிகக் கொடுமை யான பழிவாங்கல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் அதற்குச் சரியான பதிலடி கொடுப்பதற்கு தொழிற் சங்கங்கள் தயாராகவே இருக்கின்றன...''

ராமநாதன் உற்சாகந் ததும்ப நந்தாவதியைப் பார்த்தான்.

''சின்ன வயதிலிருந்தே நான் ஒரு கலகக்காரியாகவே வளர்ந்து விட்டேன். சின்ன வயதில் இத்தகைய சூழல்தான் என்னைச் சுற்றியிருந்திருக்க வேண்டும். மாணவியாக இருந்த நாளிலிருந்தே அடக்குமுறைகளுக்கு எதிரான எல்லாவிதமான கிளர்ச்சிகளிலையும் நான் பங்கு கொண்டிருக்கிறேன். இந்திராணி பெரேரா என்று எனக்கொரு பிரிய சினேகிதி இருந்தாள். நல்ல கெட்டித்தனமும் துணிச்சலுமுள்ளவள். வாழ்க்கையின் சகல பிரச்சனைகளுக்கும் முகங் கொடுத்து துன்பங்களை அனுபவித்த வள்; 1971 ஆம் ஆண்ட நடைபெற்ற இளைஞர் கிளர்ச்சியிலே அவள் பெரும்பங்கு கொண்டிருந்தாள். கடைசியிலை அந்தப் போராட்டத்திலே இந்திராணி கொடுமையான முறையிலே சித்திரவதை செய்யப்பட்டு மரணமடைந்தாள். அவளுடைய மரணம் என்னை உலுப்பியது போல வேறெந்த இறப்பும் என்னை உலுப்பி மனஞ் சிதற வைக்கவில்லை. இப்பொழுது கூட அவளுடைய நினைவுதான் என்னை ஒவ்வொரு முயற்சியிலும் இப்படித் தூண்டி செயற்பட வைத்துக் கொண்டிருக்கிறது...''

முகத்திலே கவலை இலேசாகப் பனித்திரையிட்டுக் கரைய, நந்தாவதி தன்னைச் சுதாரித்துக் கொண்டாள். இந்திராணியின் குரல் காதோடு கேட்டு அழிந்து போயிற்று. அந்த நினைவை மனதிலிருந்து உதவி வீசியவளாய் போஸ்டர்களை ஒழுங்குபடுத்திக் கொண்டு வெளியே பார்த்தாள் நந்தாவதி. வெளியே அரவம் கேட்டது.

தொள தொளக்கிற நாஷனல். வேட்டி. உயர்ந்த தோற்றம். அறிவு சுடரிடுகின்ற கண்கள். பளபளக்கின்ற கறுப்பு நிறம். புன்னகையினோடு வாசற்படியிலே நின்று கொண்டிருந்தார் கணேஷ்.

''தோழர் கணேஷ் வந்திருக்கிறார்... வாருங்கள்... வாருங்கள்...''

நந்தாவதி சிங்களத்திலேயே கூறியவாறு வெளியே போக, எழுதிக் கொண்டிருந்த ராமநாதன் கைகளை உதறியவளாய் வெளி விறாந்தைக்கு வந்தான். வெளியே நின்ற கணேஷ் உள்ளே வந்து உட்கார்ந்தபோது ராமநாதனும் புன்முறுவலோடு அவரின் அருகே சென்று கதிரையில் அமர்ந்தான்.

''வேலை நிறுத்தத்திற்கான ஆயத்தங்கள் வெகு வேகமாக இங்கேயும் நடைபெறுகின்றன. நந்தாவதி நல்ல அழகாக போஸ்டர்கள் தயாரித்திருக்கின்றா. அச்சடிப்படைவிட

கையினால் போஸ்டர்களை எழுதுகிற போது அதிலே ஒரு தனித் துவமான அழகும் கவர்ச்சியீர்ப்புமிருக்கத்தான் செய்கின்றன. ஒவ்வொரு போஸ்டரின் வாசகங்களும் வாசிக்கிறவரோடு நேருக்கு நேராக நின்று வெகு சரளமாகப் பேசுவதைப் போல அமைந்திருக்கின்றன...''

நந்தாவதி அடக்கத்தோடும் நன்றியோடும் அவனைப் பார்த்தாள். இவன் பார்த்துக் கொண்டிருக்கையில் ஒவ்வொரு பொருளிலும் எவ்வளவு அர்த்தங்களை கண்டு கொள்ளுகிறான். இங்கு வந்ததின் பயனாக இவன் மூலம் எவ்வளவு புதிய விஷயங்களையெல்லாம் அறிந்து தெளிய முடிகின்றது? இவனைச் சந்தித்தால் காமினி நிச்சயமாக அளவற்ற மகிழ்ச்சி யினை அடைவான். இவன் அபூர்வமானவன்.

''இந்த வீட்டிலே உள்ள எல்லோருமே வேலை நிறுத்தத் திற்கு ஒவ்வொரு வகையிலும் உதவி செய்து கொண்டிருக் கிறார்கள். இப்படியான ஒத்துழைப்புக் கிடைத்திருக்கிறதற்காக நான் எவ்வளவு மகிழ்ச்சியடைகின்றேன் தெரியுமா...?''

கணேஷ் மிகுந்த பெருமிதத்தோடு ராமநாதனைப் பார்த்தார்.

''ராமநாதனும் எங்களுடைய இயக்கத்திலே நிறைந்த பற்றுதல் உள்ளவர். அரசியல் மாறுதலாலேயே எல்லா மாறுதல்களும் சாத்தியமென்பதை உறுதியாக நம்புகிறவர். தெளிந்த தத்துவ அறிவுள்ளவர். இவை எல்லாவற்றையும்விட தோழர் குமாரசாமியின் பிள்ளைகள், அவரின் நிழலிலும் வழி காட்டலிலும் வளர்ந்த பிள்ளைகள் இப்படித்தானே இருக்க முடியும்?''

11

நீல நிறப் பூக்கள் கொடி விட்டிருக்கின்ற அழகிய 'சாரி'யினை அணிந்திருக்கின்ற நந்தாவதிக்கு அருகிலிலே உட்கார்ந்திருந்த சந்திரவதனி, முழுகிவிட்டு அப்போதுதான் தலைமயிரை நன்றாக உலர்த்தியிருந்தாள். மயிர்க் கற்றைகள் காற்றுக்கு கலைந்து கெம்பிப் பறந்து கொண்டிருந்தன.

அவளுடைய அலைகின்ற கூந்தலினை உற்றுநோக்கி விட்டு அவளிற்கு இன்னமும் கிட்டவாக வந்த நந்தாவதி, ''இன்னும் கொஞ்சம் தலையைக் குனியுங்கள்'' என்றாள்.

ஒன்றுமே விளங்காதவளாக சந்திரவதனி தலையைக் குனிந்த தும் நந்தாவதி அவளது உச்சந்தலையிலிருந்து இரண்டு தலை மயிர்களை லாவகமாகப் பிடுங்கி எடுத்தாள். பிடுங்கியெடுத்த இரண்டு வெள்ளை மயிர்களையும் அவளின் கண்களுக்கெதிரே காட்டிவிட்டு ஜன்னல் வழியாக வெளியே வீசியெறிந்தாள்.

நந்திரவதனியின் முகம் அந்தக் கணத்திலேயே வாடிப் போய் விட்டதனைக் கண்டு கொண்ட நந்தாவதி சூழ்நிலையை மாற்றிட எண்ணங் கொண்டவளாய் சிரித்தபடி, ''இந்த வயதிலே எல்லோருக்கும் இப்படி இளநரை உண்டாவது வழக்கந்தான். ஒன்றிரெண்டு மயிர்தான் நரைக்கும், அதையும் பிடுங்கி எறிந்து விட்டால் சரி...'' என்று கூறி வாயை மூடுமுன், அவளைத் திடீரென்று கட்டி அணைத்துக் கொண்டாள் சந்திரவதனி.

மெதுவாக அவள் விம்மிக் குலுங்குவதை உணர்ந்த நந்தாவதி, சந்திரவதனியை ஆதரவாகத் தடவித் தேற்றினாள். சந்திரவதனி இப்படி மனம் உடைந்திடுவாள் என ஒரு போதுமே நந்தாவதி எதிர்பார்த்திருக்கவில்லை.

மெதுவாக சந்திரவதனி முகத்தை நிமிர்த்தி நந்தாவதியைப் பார்த்தாள். உன்னிடம் எனது துயரத்தைக் கொட்டப் போகின்றேன் என்று ஈனஸ்வரமாகக் கூறின அவளது கண்கள். முகத்தினிலே அளவற்ற துயரம் மௌனமாக உறைந்து இறுகியிருந்தது. நெஞ்சின் எல்லைகளை, அந்தரங்கத் திரைகளினை விலக்கிக் கொண்டு ஒரு குருவியின் வீச்சினோடு கவலை கனத்த சொற்கள் வெளியே வந்து விழுந்தன:

''தலைமயிர் நரைக்கின்றதாலை என்ன? வாழ்க்கையே பட்டுப் போனதின் பிறகு என்னதான் போனால் என்ன?''

நந்தாவதியினால், அந்தச் சொற்கள் விளைத்த தாக்கத்தி லிருந்து உடனடியாகவே விடுபட முடியவில்லை. மனதிலுள்ள அவ்வளவு கவலையையும் இச்சொற்களினுள்ளேயே சந்திரவதனி அடக்கி விட்ட பிறகு அவளாலும் ஒன்றுமே பேச இயலவில்லை. மௌனமே அங்கே மேலும் மன வருத்தத்தினை அதிகரிப்பதாய் திரை விரித்திருந்தது. சுவர்களும் உயிர் பெற்றுப் பெருமூச்சு விடுகிறாற் போலொரு சூழ்நிலை.

மீண்டும் சந்திரவதனியை வாஸ்ஸல்யம் பொங்கப் பார்த்திட்ட நந்தாவதி குரல் கம்மிக் கரைய, ''ஒருநாளும் இல்லாத மாதிரி இன்றைக்கு என்ன வந்தது சந்திராவுக்கு? எனக்கு அதைச் சொல்லக் கூடாதா?'' என்றாள்.

மௌனம் போர்த்த முகத்தினோடு சிறிது நேரம் நந்தாவதி யையே பார்த்துக் கொண்டிருந்தாள் சந்திரவதனி.

'எவ்வளவு அழகான பெண் இவள்! புன்னகையும், உற்சாகமும், கம்பீரமும் மிக்க யுவதி. என்னைப் போலவே இவளும் ஒரு முதிர் கன்னியாகி, அந்தரங்கமாக இருந்து கொண்டு கண்ணீருள்ளேயே கரையக் கூடாது. வாழ்க்கையின் அனற் காற்று இந்தச் சிறிய பூங்கொத்தினை வருத்தி வாடச் செய்யக்கூடாது. இவளிடம் எனது துயரங்களினைச் சொல்லி இவளுடைய மனந்தனை ஏன் நான் வருத்திட வேண்டும்?' என நினைத்துக் கொண்டே அவளைப் பார்த்துக் கூறினாள்:

''எதைச் சொல்வது நந்தா... வயதோ போய்க் கொண்டிருக்கிறது. படித்ததற்கு இன்னமுமே உத்தியோகம் கிடைக்கிற பாடாகத் தெரியவில்லை. என்னைப் பற்றி பெற்றோர் படுகிற கவலைகளும் பெருமூச்சுகளும் - அது எனக்குத் தெரியாமலிருக்க வேண்டுமென்று அவர்கள் படுகிறபாடும் என்னை ஓயாமலே சித்திரவதை செய்த படியிருக்கிறது... எதிர் காலத்தைப் பற்றி யோசிக்கவே பயமாக இருக்கிறது...'' என்று கூறினாள் சந்திரவதனி.

நந்தாவதி சந்திரவதனியை ஊடுருவிப் பார்த்தாள்: பிறகு கவலை ததும்புகிற குரலிலே, ''இவ்வளவு காலமாக உங்களுடைய வீட்டிலே இருந்து உங்களோடு பழகியும் எனக்கு நீங்கள் பொய்தான் சொல்கிறீர்கள். நான் சந்தோஷத்திலை மட்டுமில்லை துக்கத்திலும் பங்கு கொள்ள விரும்புகிறவள். உங்களுடைய குடும்பத்திலை இப்போது நானும் ஒருத்தி போலை ஆகிவிட்ட பிறகும் எனக்கு ஏன் மறைக்க வேண்டும்? எனக்குச் சொல்ல விருப்பமில்லா விட்டால் விட்டுவிடுங்கள்...'' என்றாள்.

சந்திரவதனியின் மனம் நந்தாவதியின்பால் அவ்வேளை யிலே மிகவும் இரக்கமும் வாத்ஸல்யமும் கொண்டது. நந்தாவதி சொல்வது முற்றிலும் உண்மைதான். உண்மையாகவே தன்னுள்ளத்தின் உள்ளே அடைந்து போயிருக்கிற எல்லாத் துயரங்களையும் முதிர்ந்து போன விசாரங்களையும் அவ்விடத் திலே கொட்டித் தீர்த்துவிட வேண்டுமென்ற வேகம், அக்கணத்தினிலே அவள் மனதினுள் விஸ்வரூபமெடுத்து நின்றது. நெற்றியைக் கையினால் வருடிக் கொண்டாள். பிறகு நிமிர்ந்து சுவரிலே தொங்குகின்ற ஜோர்ஜ்கெயிற்சின் வண்ண

ஓவியத்தைப் பார்த்தாள். வலது கையினால் கண் இமையடியில் சொறிந்து கொண்டாள்.

''எனக்கு வயது போகிறதைப் பற்றியோ, தலை நரைக்கிறதைப் பற்றியோ அவ்வளவு பெரிய கவலை இல்லை. இவையெல்லாம் தவிர்த்துக் கொள்ள முடியாத நிகழ்வுகள். ஆனால் நிறைந்த எதிர்பார்ப்போடு என்னைப் பல்கலைக் கழகத்திற்கு பட்டப்படிப்பு படிக்க அனுப்பி பெருத்ததொரு மூலதனத்தை என்மீது இட்டுள்ள அப்பாவைப் பற்றி நினைக்கின்ற போதுதான் என்னுடைய துயரத்தினைக் கட்டுப் படுத்த முடியாமலே உள்ளது... பாவம், ஒரு தெய்வத்துக்குச் சமமானவர் என்னுடைய தகப்பனார்...''

வெளியே ஆட்டுக் குட்டிகள் மழலையிலே... ''ம்ம்...மே...'' எனக் கத்திக் கொண்டிருந்தன. ஜன்னல் வழியாக வந்த மெல்லிய காற்று உடலை வருடி அறையினுள்ளேயே தரித்து வாசற்புறத்தினைத் தேடியது.

''எங்களையெல்லாம் படிப்பித்து ஆளாகிறதுக்காக அவர் செய்த முயற்சிகளும், பட்ட பாடுகளும் எனக்குத்தான் தெரியும். களைப்பையும், வயதின் முதிர்ச்சியையும் பாராது ஓய்வொழிச்சல் இல்லாமலே அவர் வேலை செய்தார். தொழிற் சங்க வேலைகளிலே முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திய அவர் குடும்பத்திற்காகத் தன்னை சக்கையாகப் பிழிந்து கொடுத்தார். 'ஓவர் டைம்' எதனையும் விட்டுவிடவில்லை. டியூஷனும் சொல்லி பணம் சேர்த்திருக்கிறார். அவருடைய ரத்தத்தைத்தான் காசாக மாற்றித் தந்தார். இது எங்களுக்கு நல்லாகவே தெரியும்.''

''இனி இந்தக் குடும்பக் கவலை எல்லாம் எனக்கேயென்று அண்ணன் பலமுறை சொன்னபோதும் அப்பா அதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டு இன்னமும் 'டன்லப் ஸ்டார்' சில் வேலை செய்து கொண்டேயிருக்கிறார்... எனக்கு ஒருசிறிய வேலை யாவது எடுத்துத் தாருங்கள் அப்பா என்றால் அவரின் வார்த்தைகளிலே சினம் பொசுக்கென ஏறி விடுகிறது. என்னிலே அப்பா ஒரு மூலதனத்தினைத்தான் இட்டிருக்கிறார். அதைத் திருப்பிக் கொடுக்க வல்லமை இல்லாதவளாக வழியறியாத வளாக நான் ஆகிப் போய் விட்டேன்... இதனாலேதான் சில வேலைகளில் சின்ன விஷயங்களெல்லாம் என்னைப் பாதித்து உடைந்து போக வைக்கின்றன... அழக்கூட வைத்து விடுகின்றன...''

கன்னங்களிலே கோடிட்ட கண்ணீரை விரலால் துடைத்துக் கொண்டே ஜன்னல் வழியாக வெளியே பார்த்த சந்திரவதனி தன்னைச் சுதாரித்துக் கொண்டு, ''அப்பா வந்து கொண்டிருக் கிறார்'' என்று கூறியபடியே வெளியே சென்றாள் பழைய முகத்தோடு.

கடுகடுப்பேயறியாத புன்னகை பூத்த முகம், தடித்த கண்ணாடிக்குள்ளே தெரிகின்ற சோர்வறியாத கண்கள், கஷ்டப் படுகின்றவர்களுக்கு உதவி செய்வதில் முன்னிற்கிற மனிதாபிமான இயல்பு. தொள தொளக்கின்ற உடைகளி னுள்ளே ஆர்வமாகச் செயற்படுகின்ற சுறுசுறுப்பு, பணிவும் அன்பும் நிறைந்த சொற்களாலேயே எவரையும் பிணிக்கின்ற ஆளுமை.

இந்த அம்சங்களே வடிவமான குமாரசாமியைப் பற்றி இப்போது மேலும் நந்தாவதியின் மனதினுள்ளே மரியாதையும், அன்பும் வளர்ந்து பெருகிற்று. இவ்வளவு பிரச்சனைகளிருந்தும் அதனைப் பிறர் அறியாமலே நடந்து வருகின்ற அந்த மனிதரின் நற்பண்புகளை நினைத்துக் கொண்டிருக்கையில் அவளது தந்தை விஜயபாலா திடீரென நெஞ்சிலே தோன்றினார். வயல் வெளியிலே நின்று ரூவான் மெலிசாயா தாது கோபத்தைப் பார்த்து தனதுமன ஆசைகளையும், கவலைகளையும் ஒப்புக் கொடுக்கின்ற விஜயபாலாவிற்கும் குமாரசாமிக்கும் அடிப் படையிலே என்ன வித்தியாசம்?

12

ஏழரை மணியும் ஆகவில்லை. கிருஷ்ணபிள்ளையும், டேவிட்டும், சரணபாலாவும், குமாரசாமி வீட்டிற்கு வந்து விட்டனர். நந்தாவதி அவசர அவசரமாகத் தலையை வாரி விட்டு வெளியே வந்தாள். அடையாள வேலை நிறுத்தத்திற்கு அரசாங்கம் எவ்விதமான சாதகமான பதிலினையும் வெளிப்படுத்தாவிட்டால் ஒருவார கால அவகாசத்தினுள்ளே பொது வேலை நிறுத்தத்தினை மேற்கொள்வதென்பது தொழிற் சங்க இணைப்புக் குழுவினால் ஊர்ஜிதப் படுத்தப் பெற்று விட்டது. அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலே அடையாள வேலை நிறுத்தத்தையும் முற்றாக முறியடிக்க நடவடிக்கைகளை

இரகசியமாக எடுத்து வருவதாக சரணபாலா கூறினார். மற்றவர்களும் அது உண்மையே என்றனர்.

''நாங்கள் வேலை நிறுத்தக் கோரிக்கைகளை வெகு தெளிவாகப் பிரகடனப் படுத்தியும்கூட இதை அரசாங்கத்திற்கு எதிரான ஒரு சதியாக மக்கள் முன்னர் காட்டி நசுக்குவதற்கே அரசாங்கம் எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருகின்றது'' என கிருஷ்ணபிள்ளை கூறிக் கொண்டிருக்கும் போது பரபரப்போடு அவ்விடத்திற்கு வந்தாள் சகுந்தலா.

''அக்கா, உங்களைப் பொலிஸ் தேடி வந்திருக்கிறது'' என்று தளும்புகிற குரலிலே சொன்னாள்.

அவளின் குரல் எல்லோரது முகத்திலேயும் திகைப்பினை விதைத்து விட்டது.

கணங்களின் பின்னே மௌனத்தைக் குலைத்தவளாய், ''நான் பின்னே என்னவென்று கேட்டு வருகின்றேன்...'' என்றவாறு வெளியே நடந்தாள் நந்தாவதி.

மற்றவர்கள் அவளைப் பின்தொடர்ந்தனர். வெளியே நின்ற சப் இன்ஸ்பெக்டரோடு ராமநாதன் தமிழிலேயே கதைத்துக் கொண்டிருந்தான். சப் இன்ஸ்பெக்டரின் பின்னால் இரண்டு பொலிசார்.

''விசேஷமாக ஒன்றுமில்லை. நந்தாவதியோடு அமைச்சர் ஏதோ பேச வேண்டுமாம். அதுதான் அழைத்துப் போக பொலிசார் வந்திருக்கின்றனர். இவதான் மிஸ்.விஜயபாலா.''

ராமநாதன் சப் இன்ஸ்பெக்டருக்கு நந்தாவதியை அறிமுகப்படுத்தினான். சப் இன்ஸ்பெக்டர் யோகபாலன், ராமநாதனின் பள்ளி நண்பன்.

புன்னகையோடு அறிமுகத்தை ஏற்றுவிட்டு, ''நேற்று மாலைதான் அமைச்சர் வந்தார். உங்களோடு சில விஷயங் களைப் பற்றிக் கொஞ்சம் பேச வேண்டுமாம். அரை மணித்தியாலத்தில் திரும்பி விடலாம்'' என்று சிங்கத்திலே கூறினான்.

நந்தாவதி பின்னே திரும்பினாள். மகேஸ்வரி பேயறைந்தாற் போல நின்றாள். கண்களிலே கண்ணீர் துளிர்த்திருந்தது.

சகுந்தலா தகப்பனைப் பார்த்து, ''அப்பா நீங்களும் நந்தா அக்காவோடை போயிட்டு வாருங்கள்'' என்றாள் கெஞ்சுகிற குரலிலே.

ராமநாதன் அதட்டுகிறாற் போல, ''சகுந்தலா'' என்றபோது, யோகபாலன் அமைதியான குரலிலே கூறினான்.

''யாரும் பயப்பிடத் தேவையில்லை. மிஸ்.விஜயபாலாவை நான் எட்டரை மணிக்குள்ளாக இங்கே கொண்டு வந்துவிட்டு விடுவேன். மிஸ், நீங்கள் சீக்கிரமாகப் புறப்படுங்கள்...''

சரணபாலா அவளை புறப்பட்டுப் போகும்படி கூறிவிட்டு வேகமாக எங்கோ விரைந்து சென்றார்.

ஜீப்பிலே ஏறி உட்கார்ந்ததும் இந்திராணி பெரேராவின் நினைவு மின்னலாய் தோற்றி அவளது மனதிலே வந்து உட்கார்ந்து கனத்தது. அவளையும் ஒரு நாள் அதிகாலைப் பொழுதிலேதான் பொலிசார் கைது செய்தனர். பிறகு அவளுக்கு எவ்வளவு சித்திரவதைகள்...

உங்கள் இயக்கத்தின் தலைவன் யார்? மறைவிடங்கள் எங்கே உள்ளன? சொல்லு... சொல்லு... நகக் கண்களில் ஊசி ஊற்றல்; மர்ம ஸ்தானத்தில் தீக்குச்சிகளால் சூடு; ஊமைக் காயத்தை உண்டாக்குகிற அடிகள்... சொல்லு... உங்கள் மறைவிடம் எதுவென்று சொல்லு? யார் உங்களின் தலைவன் என்று சொல்லு...

இந்திராணி மௌனமாகவேயிருந்தாள். அவளின் இலட்சிய தாகம் உடலை மரக்கச் செய்திருக்க வேண்டும். மௌனமாய், மௌனமாகவே இருந்த அவள் அவர்கட்கு சொன்ன ஒரேபதில்; ''இதற்கெல்லாம் நீங்களெல்லாரும் ஒரு நாளைக்குப் பதில் சொல்ல வேண்டி வரும்...''

இந்திராணி, உன்னுடைய பல போக்குகளில் எனக்கு மன உடன்பாடில்லாமல் இருக்கலாம். ஆனால் உன்னுடைய லட்சிய விசுவாசத்தையும், துணிவையும், மனித நேசத்தினையும் நான் பெரிதும் மதிக்கின்றேன். தலை வணங்குகிறேன். பயின்று எனக்கும் உரியவை ஆக்கித் துணிவினைப் பெற்றுக் கொள்ளு கின்றேன். நீ தான் எனது ஆதர்ஸம்... ஜீப் குலுங்கியடித்து நின்றது.

நந்தாவதி நிமிர்ந்து உட்கார்ந்தாள். யோகபாலன் அவளைக் கீழே இறங்கும்படி சொன்னான். அமைச்சரின் இடம் அதுதான் போலும்.

அந்தச் சுற்றுலா விடுதியிலேயுள்ள முன் விறாந்தையில் நிறைய பேர் உட்கார்ந்திருந்தனர். அமைச்சரின் தரிசனத்திற்காய் தான்.

சப் இன்ஸ்பெக்டர் நந்தாவதியை உள்ளே அழைத்துப் போனார். ஆடம்பரமான அந்தப் பெரிய அறையின் நடுவிலுள்ள புஸுபுஸுவென்ற சோபாவினுள், இரத்தச் சிவப்பு நிறமானது - அமைச்சர் புதைந்து போயிருந்தார் வெள்ளை வெளேரென்ற உடுப்போடு.

''நந்தாவதியைக் கூட்டி வரச் சொன்னீர்கள்'' என்று சப் இன்ஸ்பெக்டர் கூற, ''ஓ... ஓ...'' என்றுஅட்டகாசமாகச் சிரித்த அமைச்சர், ''கருணரட்ணாவைக் கூப்பிடும்'' எனக் கூறுமுன் வாட்ட சாட்டமான ஒருவன் பின் கதவினைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான்.

''சரி... எஸ்.ஐ. நீர் வெளியே போகலாம்... கருணே இதுதான் நந்தாவதி'' என்றார் அதே சிரிப்புக் குறையாமல் அமைச்சர்.

கருணரட்சணாவும் பொசுக்கென்று உள்ளே புதைகிற மற்றொரு சோபாவில் உட்கார்ந்து கொண்டான். அமைச்சர் தனக்கு முன்னேயுள்ள சிறிய மேசையிலிருந்த பச்சை வர்ண 'பேப்பர் வெயிட்' குமிழினை எடுத்துக் கைகளில் மாறி மாறி உருட்டிக் கொண்டிருந்தார். பிறகு ஏதோ நினைத்தவர் போல அருகிலிருந்த டெலிபோனை எடுத்து எண்களைச் சுழற்றிவிட்டு கண நேர தாமதிப்பின் பிறகு பளாரென்று ரிஸீவரை அடித்து வைத்தார். கண்களைக் கசக்கிக் கொண்டு லேஞ்சியினால் அவற்றைத் துடைத்து விட்டார். பின்னர் சிகரெட் ஒன்றை உருவியெடுத்துப் பற்ற வைத்துக் கொண்டார். கருணரட்ணாவோ அவளை அங்குலம் அங்குலமாக உரிந்து அளைந்து கொண்டிருப்பவன் போல அவளிலேயே பார்வையை ஒட்டியிருந்தான்.

லேசாகக் கால்கள் கடுக்கிற்று நந்தாவதிக்கு. மூளைக்குள் நெருப்புத் தகித்தது. நெஞ்சினுள்ளே ஆத்திரம் அலையலையாய் குமுறிக் கொண்டிருந்தது. திடீரென குனிந்து இந்தப் பேப்பர் வெயிட்டை எடுத்து இவனுடைய மூஞ்சியிலே ஓங்கி எறிந்தால்-

''நந்தாவதிக்கு சொந்த ஊர் எது?''

தனது கொப்பளிக்கிற உணர்வுகளினை மிகவும் சிரமப்பட்டு கட்டுப்படுத்திக் கொண்டு பதில் சொன்னாள் நந்தாவதி.

''அனுராதபுரம்...''

''இங்கே இடம் மாறி வந்து எவ்வளவு காலம்?''

சொன்னாள்.

''பனிஸ்மென்ற் டிறான்ஸ்பர்தானே...''

தலையசைத்தாள்.

''அப்பாவின் தொழிலென்ன?''

''விவசாயம்...''

''டிராக்டர் வைத்திருக்கிறாரா?''

''இரண்டு எருமை மாடுகள்; அதுவும் வயது போனது...''

விரக்தியும் கேலியும் கலந்திருந்தன அவளின் சொற்களிலே. அமைச்சர், கருணரட்ணாவை அர்த்த புஷ்டியோடு பார்த்தார்; புன்னகைத்தார்.

''நந்தாவதிக்கு இப்போது மிகவும் கஷ்டமாயிருக்குமே... அதுவும் அந்நிய ஊரிலே வேலை பார்த்தால் ஒரே செலவாகத்தானே இருக்கும்? எங்களுடைய இனத்து ஆட்கள் இப்படிக் கஷ்டப்படுவதை நினைத்தால் ஒரே மனச்சங்கடம் எனக்கு. இதற்கு ஏதாவது செய்ய வேண்டும். நந்தாவதிக்கு ஊருக்கு மீண்டும் மாறிப் போக விருப்பம்தானே?''

''விருப்பமில்லாமல் இருக்குமா ஸேர்... வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ள இந்த நேரத்திலை. அதுவும் இந்த அந்நிய மக்களோடை. நீங்கள் மனம் வைத்து இந்த இடமாற்றத்தைச் செய்து கொடுக்க வேண்டும். நீங்கள் இப்போதேயே அமைச்சருக்கு டெலிபோன் செய்யலாமே...'' என்று கூறியவாறு டெலிபோன் எண்களைச் சுழற்றினான் கருணரெட்ணா.

அவனது நடவடிக்கைகளைப் பார்த்தால் அவன்தான் அமைச்சரின் பி.ஏ. - பெர்ஸனல் அஸிஸ்டெண்டாயிருக்க வேண்டும். சில வேளை அந்தரங்கக் காரியதரிசியாக இருக்கலாம். அனேகமாக அமைச்சரின் மனைவியோ, மகனோ, மகளோ அல்லது மைத்துனனோ தான் அமைச்சருக்கு அந்தரங்கக் காரியதரிசியாயிருக்கிறார்கள்.

இவனது முகத்தைப் பார்த்தாள். அவன் இன்னமும் இவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான். நந்தாவதி எரிப்பது போல அவனைப் பார்த்தாள். அவன் மீண்டும் டெலிபோனில் எண்களைச் சுழற்றினான். அமைச்சர் மீண்டும் சிகரெட்டை உருவி எடுத்து பற்ற வைத்தார்.

''நந்தா... சென்ற முறை யாருக்கு வாக்களித்தது?''

''யாருக்குமேயில்லை...''

அவளது பதில் அமைச்சருக்கு திகைப்பினையும் ஆத்திரத்தினையும் அளித்திருக்க வேண்டும். சிகரெட்டை 'ஆஸ்டிரேயில்' அழுத்தி அணைத்து உள்ளே போட்டார். அரைவாசிக்கு மேல் சிகரெட்டை அவர் புகைக்கவில்லை.

''ஏன்...? படித்தவர்கள் இப்படியா ஜனநாயக உரிமையினை உதாசீனம் செய்வது... வெட்கமில்லை...?''

நந்தாவதி மனதிற்குள் சிரித்துக் கொண்டாள். இதோ இவ்வளவு நேராக என்னை நிறுத்தி வைத்து ஒரு அமைச்சன் என்ற மமதையிலே எனது உணர்வுகளைப் புண்படுத்திக் கொண்டிருக்கிறாயே... ஒரு காரணமுமன்றி நீ என்னை அழைத்துப் பேச உனக்கு அதிகாரங்களிருக்கின்றன. அதனை நான் ஏற்று இங்கே வராவிட்டால் எனக்கெதிராக நடவடிக்கை எடுக்க உனக்கு தாராளமாக வழி வகைகள் உள்ளன. உன்னை எதிர்த்துப் பேசினால் அமைச்சருக்கு எதிராகப் பேசி, அவரை அவமதித்ததென்று கூறி எனக்கு எதிராக உன்னாலேயே ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடியும்... அத்தகைய நீ என்னோடு ஜனநாயக உரிமைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறாய்?

''நந்தா, அந்தக் கதிரையிலே உட்கார், உன்னோடு கொஞ்சம் விரிவாகப் பேச வேண்டும்...''

''இல்லை... நான் நிற்கிறேன். விஷயத்தைச் சொல்லுங்கள்...''

அறைந்தாற் போல வந்த அவளின் பதில் அமைச்சரைச் சுருங்கச் செய்தது. மீண்டும் ஒரு சிகரெட்டை உருவிவிட்டு, வெறுமையாகி விட்ட பாக்கெட்டை காலின் கீழே போட்டு அழுத்தி நசித்தார்.

''நந்தாவைப் பற்றி சி.ஐ.டி. பொலிஸார் மிகப் பயங்கரமான அறிக்கையை அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்திருக்கிறார்கள் தெரியுமா?'' என்றவாறு அவளின் முகத்தினை அமைச்சர் ஊடுருவினார்; நந்தாவதியின், முகத்திலே எந்த மாற்றமுமில்லை. பேப்பர் வெயிட்டையே பார்த்தபடி நின்றாள்.

''எங்கள் இனத்தைச் சேர்ந்த உன்னை கஷ்டப்பட நாங்கள் ஒரு போதுமே விட மாட்டோம். நீ ஏன் வீணாக இந்த வேலை

நிறுத்தத்திலை உன்னைச் சம்பந்தப் படுத்திக் கொள்கிறாய்? இங்குள்ள எனது கட்சியைச் சேர்ந்த பல தமிழர்களே வந்து உன்னைப் பற்றி என்னிடம் முறைப்பட்டபோது எனக்கு மிகவும் வெட்கமாகப் போய்விட்டது... நீ எழுதி ஒட்டிய பல, சிங்கள போஸ்டர்களை நான் பார்த்தபோது மிகவும் ஆத்திரமடைந்து விட்டேன். இங்குள்ள தமிழரோடு சேர்ந்து நீ அரசாங்கத்திற்கு எதிராக நின்று எதைச் சாதிக்கப் போகிறாய்...? வீணாக உனக்கும், உனது சாதிக்கப் போகிறாய்...? வீணாக உனக்கும், உனது இனத்திற்கும் அவமானத்தைத் தேடிக் கொள்ளாதே...''

அமைச்சரின் பிரசங்கம் நீண்டு கொண்டே போனது... ஆனால் இந்த இடத்திலிருந்தே நந்தாவதியின் சிந்தனை அறுத்துப் போய் விட்டது. ஓ, இதுவா விஷயம்? இதற்குத் தானா என்னை இங்கே வரவழைத்து வெகு சாகஸமாக நீ கதைத்துக் கொண்டிருக்கிறாய்? இந்த வேலை நிறுத்தத்தை முறியடிக்க எனக்கு நீ இடமாற்றம் என்றதொரு எலும்புத் துண்டினை எறிந்து என்னை வளைக்கப் பார்க்கிறாய்... எனது இனமென்ற உணர்ச்சியைச் சுட்டிக் காட்டி என்னைத் தனியாகப் பிரித்தெடுக்க நினைக்கிறாய்...

ராமநாதன் சொன்னது போல தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கிய உணர்வினை உடைத்தெறிவதற்கு இனத் துவேஷத் தையே ஆயுதமாகப் பிற்போக்குவாதிகள் கொள்வார்களென் பதை நீ எவ்வளவுக்கு உண்மையென நிரூபித்து விட்டாய். நீயாச்சு; உன் இடமாற்றம் ஆச்சுது; ஆளை விட்டிடு சாமி. நினைத்துக் கொள்கையிலேயே மனத்தினுள் சிரிப்புப் பொங்கியது நந்தாவதிக்கு. விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டது மனம்.

''ஆகையினால் நான் உடனடியாகவே உனக்கு அனுராத புரத்திற்கு இடமாற்றம் பெற்றுத் தருகிறேன்... இப்படியான முயற்சிகளை விட்டு விட்டு பேசாமல் ஒரு உத்தியோக மாப்பிள்ளையைக் கட்டிக் கொண்டு ஊரோடேயே சந்தோஷமாக இருந்து கொள்... இதுநாள் என்னுடைய புத்திமதி...''

நந்தாவதி மௌனமாக நின்றாள். கருணரெட்ணாவுக்கு ஆத்திரத்தாலே உடல் நடுங்கிற்று; கண்கள் சிவந்து போய் நாக்கு நுனியிலே தூஷண வார்த்தைகள் சிதறத் தயாராய்த் திரண்டன.

''அமைச்சர் சொல்கிறார். என்ன பேசாமல் நிற்கிறாய்? இடமாற்றத்தை இன்றே செய்து விடலாம். என்ன சொல்கிறாய்?''

கருணரெட்ணாவை உதாசீனமாகப் பார்த்தாள் நந்தாவதி.

''நான் யாழ்ப்பாணத்திலேயே இருக்க விரும்புகிறேன்...''

அவளது பதிலில் அமைச்சர் நெருப்பானார். வார்த்தைகள் கோபத்தில் தெறித்தன. ''இதுதான் உன்னுடைய முடிவென்றால் இதனால் வரப்போகின்ற விளைவுகளையும் ஏற்றுக் கொள்ள நீ தயாராகிக் கொள்'' என்றவர் மேலும் தொடர்ந்தார்:

''உனக்குத் தெரியுமா, இந்த வேலை நிறுத்தத்தின் மூலம் அரசாங்கத்திற்கு எதிராக அரசியல் ரீதியாக சவால் விடப்பட்டிருக் கிறது? இது ஒரு அராஜக நடவடிக்கை என்பதை நீ மறந்து விடாதே. நான் சொல்வதைக் கேட்காமல் போனதற்காக இரண்டொரு தினங்களில் நீ நன்றாக வருத்தப்படுவாய்...''

அமைச்சர் சொல்லியவாறு எழுந்தார். பின்னர் தனக்குள் தானே முணுமுணுத்துக் கொண்டார்.

''இவளோடு அரை மணித்தியலத்திற்கு மண்ணடித்து விட்டேன். எவ்வளவு பேர் வெளியே காத்திருக்கிறார்கள். அகம்பாவத்திற்கு சரியான பாடம் படிப்பிக்க வேண்டும்...''

நந்தாவதி வெளியே வந்தாள். அவளது பார்வையிலே முதலிலே பட்டவர்கள் பியதாஸாவும், குமாரசாமியும், சரணபாலாவுமே, அவளுக்கு இதற்கு முன்னர் தெரியாத ஒருவனோடு ராமநாதனும் நின்றான். அவளைக் கண்டதும் எல்லோரது முகத்திலும் நிம்மதியான புன்னகை. யோகபாலனை அவ்விடத்திலேயே காணவில்லை. எல்லோரும் மௌனமாக வெளியே, வந்தனர். வெளியே நல்ல காற்று வீசிக் கொண்டிருந்தது. குமாரசாமியே, 'என்ன நடந்தது?' என்று கேட்டுக் கதையைத் தொடங்கினார்.

அவள் யாவற்றையும் விரிவாகக் கூறினாள்.

குமாரசாமியின் சோர்வறியாக் கண்களிலே பெருமிதம் பொங்கிற்று. மனதினுள் ஆனந்தமும், முகத்திலே அதன் பிரதிபலிப்பும் உடனேயே ஒளிர்ந்தது.

அவளைப் பார்த்து, ''நந்தா, உன்னையிட்டு நாங்களெல் லோரும் பெருமைப் படுகின்றோம். யுவதிகளுக்கெல்லாம் நீ முன்னுதாரணம் ஆனவள்... கெட்டிக்காரத்தனம் மட்டும் இன்றைய தேவையில்லை. சுயநலமின்மையும், துணிந்த மனப்போக்கும், நேர்மையான வாழ்வும்தான் எந்த இயக்கத்திலுள்ளவருக்கும் தேவைப்படுகிற விஷயம்... எனக்கு உன்னையிட்டு மிக மிகப் பெருமையாயிருக்கிறது... அமைச்சருக்கு நல்ல பதில் சொன்னாய் நீ!''

சிங்களத்திலே வெகு சரளமாக குமாரசாமி சொல்லிக் கொண்டு போன வார்த்தைகளால் நந்தாவதி மிகவும் பரவசம் கொண்டாள்.

கந்தவனம் ஓய்வு பெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர். குமாரசாமியின் தூரத்து உறவினர். இப்போது ஊரிலே நடைபெறுகின்ற முக்கியமான வைபவங்களிலே அவரது முகம் காணப்படுகின்றது. முன்னைய இறுகிப் போன முகத்திற்குப் பதிலாக இப்போது எந்த வேளையிலும் சிரித்த முகம். யாரைக் கண்டாலும் சுகக்ஷேமங்கள் விசாரித்து, அவர்களின் பழைய தலைமுறையினரது பெருமைகளை விதந்துரைக்கிற குணாதிசயம். பொலிஸ் டிபார்ட்டிமெண்டில் அவர் வேலை செய்து கொண்டிருந்த போது அவரது நண்பர்களால் செல்லமாக 'எம்.ஜி.எம்.சிங்கம்' என்று அழைக்கப்பட்டவர்.

கதைக்கத் தெரியாதவர். உறுமலே சிரிப்பு. உறுமலே கதை. உறுமலே பேச்சு. அவர் எந்தக் குற்றாவளியிலும் கைவைத்து உண்மையினைப் பிடுங்கி எடுக்க வேண்டியதில்லை; வாயைத் திறந்தாலே போதும், குற்றவாளி நடுநடுங்கி கொஞ்சமும் பிசிறில்லாமல் உண்மையை அப்படியே கூறி விடுவான். ஆனால் இப்போது அவரை முதன் முதலாக சந்திக்கின்ற யாருமே எவ்வளவு சத்தியம் செய்து கொடுத்தாலும் இதனை நம்பப் போவதில்லை. இந்த ஆட்டுக் குட்டியின் மீதா இவ்வளவு பொய் வதந்திகள் என்று வியந்து போய் நிற்பார்கள்.

தன்னெதிரே உட்கார்ந்து சாவகாசமாகத் தேநீர் பருகிக் கொண்டிருக்கின்ற கந்தவனத்தை அதிசயமாகப் பார்த்துக் கொண்டிருந்தார் குமாரசாமி. இந்த அதிகாலைப் பொழுதிலே அவர் வீடு தேடி வந்தது மகேஸ்வரிக்கும் மிக மிக அதிசயமாகத்தான் இருக்கின்றது.

தேநீர் கோப்பையினை மேசையிலே வைத்து விட்டு, ''கதிர்காமக் கந்தனே...'' என அழைத்தவாறு அங்குமிங்கும் பார்த்தவராக... ''அந்தச் சிங்களப் பெட்டை நிற்கிறாளோ?'' என்று குசுகுசுத்த குரலிலே கேட்டார் கந்தவனம்.

முகத்திலே ஆச்சரியம் தவழ, நந்தாவதி கிணற்றடிப் பக்கம் நிற்பதாக மகேஸ்வரி சொன்னாள்.

''அதுவும் நல்லதுதான்...''

கந்தவனம் பிடரியைச் சொறிந்து கொண்டார்.

''நேற்று என்னை அமைச்சர் சந்திக்க வரச் சொல்லியிருந்தார். அதுக்கு முதல் உங்களுக்கு ஒரு விஷயம் சொல்ல வேணும். இதை நீங்கள் இப்போதைக்கு யாருக்கும் சொல்லக்கூடாது என்ன?''

குமாரசாமிக்கு ஒன்றுமே புரியவில்லை. மகேஸ்வரி தலையசைத்தாள்.

''அடுத்த தேர்தலுக்கு இந்தப் பகுதிக்கு என்னைத்தான் தங்களுடைய அபேட்சகராக நிறுத்த ஆளுங்கட்சியினர் முடிவெடுத்திருக்கினை. அமைச்சரும் நான் தான் அதற்குச் சரியான ஆளென்று ஒற்றைக் காலிலை நிற்கிறார்... நான் மறுத்தும் விடுகிற பாடாயில்லை. யாழ்ப்பாணம் வந்தால் அமைச்சருக்கு என்னை முதலில் சந்தித்தால்தான் திருப்தி வரும்... சரி.. சரி.. அதெல்லாம் பிறகு கதைக்கிற விஷயம்... நீங்கள் ஏன் இந்த சிங்களத்தியை வீட்டிலை வைத்திருக்கிறியள்? இவளாலை உங்களுக்கு வீணான சங்கடங்களல்லவா வரப் போகுது...?''

மகேஸ்வரி குறுக்கிட்டாள், அவசரம் தொனிக்க.

''ஏன் அப்பிடிச் சொல்றீங்கள்?''

''பின்னையென்ன? அமைச்சர் இவளிலை சரியான கோபம் கொண்டிருக்கின்றார். தேவையான பிரச்சினைகளையெல்லாம் இவள் உருவாக்கிக் கொண்டிருக்கின்றாளாம். முந்தி ஒரு தடவை தன்னுடைய இட மாற்றத்திற்கு உதவி செய்யும்படி இவள் அமைச்சரைக் கேட்டாளாம். அமைச்சர் பல சோலியிலை அதைச் செய்யவில்லை. அந்த ஆத்திரத்திலை இங்கே வந்து ஸ்டிரைக் அது இது என்று கொண்டு நிற்கிறாளாம். இதுவரை

காலமும் இந்தப் பகுதியிலையிருந்த சிங்கள உத்தியோகத்தர்கள் ஆளுங்கட்சிக்குத்தான் விசுவாசமாகயிருந்திருக்கிறார்கள். ஆனால் இப்போது முதல் தடவையாக இவர்களெல்லாம் அரசாங்கத்திற்கு எதிராக மாறியிருக்கிறார்கள். இதுக்கெல்லாம் இவள் தானாம் காரணம்...''

வெள்ளாட்டுத் தோலைக் கழற்றி எறிந்து விட்டு 'எம்.ஜி.எம்.சிங்கம்' இப்போது உறுமிக் கொண்டிருந்தது. குமாரசாமி மிகவும் சுவாரஸ்யமாக சிங்கத்தைப் பார்த்தபடியே ஒன்றும் பேசாதிருந்தார்.

' தமிழாட்கள் இப்பிடியாக ஸ்டிரைக்கிலை ஈடுபடுகிறதாலை என்ன லாபம் வரப்போகுது? இவள் தேவையில்லாமல் இந்தப் பக்கத்திலை இருக்கிற உத்தியோகத் தருக்கெல்லாம் வேலை யில்லாமல் செய்யத்தான் இந்த வழியை எடுத்திருக்கிறாள்... இந்தச் சிங்களத்திக்கு எங்கடை பகுதியிலை என்ன வேலை? சிங்களத்தியின்ரை தலைமையிலைதான் இங்கேயுள்ள ஆண் பிள்ளைகளெல்லாம் ஸ்டிரைக் பண்ண வேணுமோ?... என்னடா இது வெட்கங்கெட்ட வேலை...''

கேட்ட சத்தத்தில் சகுந்தலா வெளியே வந்து பார்த்து விட்டு உள்ளே சென்றாள். குமாரசாமியின் மனதிலே லேசான எரிச்சல் உருவாகிக் கொண்டிருந்தது. அப்பட்டமான பொய்களை வாய் கூசாமலே விஷயங்களைத் தெளிவுபடுத்த வேண்டுமென அவரது மனம் நினைத்தது.

''அமைச்சர் இவள் யார் வீட்டிலை இருக்கிறவள் என்று என்னை விசாரித்தார். நான் சொன்னேன் உம்முடைய வீட்டுக் கஷ்டங்களையும் கூறினேன். இரண்டு பெண்பிள்ளைகள் - அதிலை ஒருத்தி பட்டதாரி. இவர்களுக்கு ஏதாவது செய்ய வேணும் என்று சொன்னேன். அமைச்சர் மிக நல்ல மனுஷன்... தான் கொழும்புக்குப் போய் கட்டாயம் ஏதாவது வித்தியிலை உதவுவதாய் சொல்லியிருக்கிறார்... அந்தாள் ஒரு அற்புதமான ஜென்டில்மேன்!''...

தான் கூறிய வார்த்தைகளால் அவர்களிடையே எவ்விதமான சலனமும் ஏற்படாதிருந்தமையால் மிகவும் ஏமாற்றமடைந்து விட்டார் கந்தவனம். எரிச்சலை மனதினுள்ளே போர்த்து மூடிக் கொண்டு குமாரசாமியை ஊடுருவினார்.

" ஒரு அந்தரங்கமான விஷயத்தை உமக்குச் சொல்கிறேன்... இந்த ஸ்டிரைக் அரசாங்கத்திற்கு எதிரான ஒரு Anti Government நடவடிக்கையென்ற விஷயம் அம்பலத்திற்கு வந்திட்டது. நீரும் அரசாங்கத்திலை பொறுப்பான வேலையிலை இருந்த மனிதன். அரசாங்கத்தைக் கவிழ்க்கிறதுக்கு எடுக்கிற நடவடிக்கைளுக்கு என்ன தண்டனை கிடைக்குமென்பதை நீர் தெரிந்து கொள்ளவேணும்... இத்தகைய சேஷ்டைகளையெல்லாம் அரசாங்கம் பொறுக்குமென்று நீர் நினைக்கிறீரோ?" என்று ஆக்ரோஷத்துடன் கேட்டவாறே கந்தவனம் தனது பேச்சை ஆங்கிலத்திற்கு மாற்றினார்.

"அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு எடுக்கப்படும் இந்த 'ஸ்டிரைக்கு'க்கு எதிராக அரசாங்கம் எவ்வளவு கடுமையான நடவடிக்கை எடுக்க முடியுமோ அதனை எடுக்க நினைத்துள்ளது. உமக்கு நான் ஏன் மறைக்க வேண்டும்? அடையாள வேலை நிறுத்தம் முடிந்து பொது வேலை நிறுத்தம் தொடங்குமானால் அவசரகாலச் சட்டம்-உஹூஉகீஎஉமீஇங பிறப்பிக்கப்படும். எமர்ஜென்சி பிறப்பிக்கப்பட்டால் எனக்கு நடக்குமென்பது உமக்குத் தெரியுந்தானே? அப்போதுதான் துப்பாக்கிகள் உயிர் பெற்று எழுந்து கொள்ளும்..."

உறுமிச் சிரித்தார் கந்தவனம்; பின்னர் சிரித்தபடி உறுமினார்.

"வேறு யாராவதாக இருந்தால் நான் இவ்வளவு கதைத்துக் கொண்டிருக்க மாட்டேன். விறுவிறுவென்று உள்ளே போய் அந்தச் சிங்களத்தியை இழுத்து வந்து வெளியே தள்ளியிருப்பேன்..."

குமாரசாமியின் மூளையினுள் ஏதோ சுருக்கென்று குத்தியது. அவரையறியாத கோபத்தோடு திடுக்கென எழுந்தார். கந்தவனத்திற்கு அருகே சென்றார்.

ஒரு கையை வாசற் பக்கமாக நீட்டி, "இனிமேல் ஒன்றுங் கதைக்கத் தேவையில்லை. You get out என்று ஆக்ரோஷத்தோடு சத்தமிட்டார். உள்ளேயிருந்தவர்கள் அந்தச் சத்தத்தைக் கேட்டு அதிர்வோடு வெளியே ஓடி வந்தனர்.

14

ஞாயிற்றுக்கிழமையன்று தொழிற்சங்க இணைப்புக் குழு தங்களுடைய அலுவலகத்திலே கூடி நீண்ட நேரமாகப் பல விஷயங்களை விவாதித்தது. நாளை அடையாள வேலை நிறுத்தத்திற்கு எதிராக அரசாங்கம் எவ்வெவ்விதமான நடவடிக்கைகளை எடுக்கும்; அதற்கு மாற்றாக எவ்விதமான பதில் முறைகளைக் கையாள்வதென்பது பற்றி மிக விரிவாகவே உறுப்பினர்கள் அலசினார்கள். பொது வேலை நிறுத்தத்தின் கோரிக்கைகளில் ஒன்றாக, நந்தாவதி போன்றவர்களின் மீதான பழிவாங்கல் நடவடிக்கைகளை உடனடியாக வாபஸ் பெற்று, அவளைப் போன்றவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள இடமாற்ற உத்தரவுகளை தாமதம் ஏதுமின்றி ரத்துச் செய்யும்படியான புதுக் கோரிக்கையொன்று சேர்க்கப்பட்டிருந்தது.

நேற்றுத்தான் நந்தாவதியை உடனடியாக மாத்தறையிலுள்ள கம்புறுகம என்னும் இடத்திற்கு இடமாற்றம் செய்யும் உத்தரவு அனுப்பப் பட்டிருந்தது. அனுராதபுரத்தின் வடக்கு எல்லை யாழ்ப்பாணம் என்றால் மறுகோடியான தெற்கு எல்லை மாத்தறைதான். மாத்தறை மாவட்டத்திலும் கம்புறுகம நகரப் பக்கமல்ல. 'தண்ணியில்லாக் காடு' - கம்புறுகம. நந்தாவதி சிரித்துக் கொண்டாள். இன்னுங் கொஞ்சம் அமைச்சருக்கு எரிச்சலை உண்டாக்கியிருந்தால் எவ்விதமான இடமாற்றம் கிடைத்திருக்கும் என நினைத்து அவளின் மனம்.

நேற்றுக் காலையிலே அவளிடம் வந்த காமினிக்கு இந்தச் செய்தி சிறிது அதிர்ச்சியினையே கொடுத்தது. அக்காவைப் பரிதாபமாகப் பார்த்தான்.

கொஞ்ச நேரம் மௌனமாயிருந்து விட்டு, "அக்கா, இனி என்ன செய்வதாக உத்தேசித்திருக்கிறாய்?" என்று கேட்டான், கவலை ததும்புகிற குரலில்.

இனி என்ன செய்வது?

அவனது இக்கேள்வி அவளின் நெஞ்சிலே சில நிமிஷங்களி னுள் அவளையறியாமலே புயலுருக் கொண்டது. எதிரே நிமிர்ந்து பார்த்தாள். தூரதேசம் பயணம் சென்றிருக்கின்ற

கணவனை எதிர்பார்த்திருக்கிற சோகபாவமுள்ள நாயகியின் சித்திரம். ஜோர்ஜ்கெயிற்ஸ் வரைந்தது. அந்த ஓவியத்திலேயே சில நிமிஷங்கள் கண்கள் பதிந்திருந்தன.

அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு உடனடியான இடமாற்றம் வந்தபோது அவள் இப்படி அதிர்ந்து போக வில்லை. இந்த அறவிப்பை அவள் எதிர்பார்திருந்தாளேயா யினும் அந்தக் கடிதம் கடைத்தபோதுஅதனை அவளாலே தாங்கிக் கொள்ள முடியவில்லை. கடிதத்தை வாசித்து விட்டு நிமிர்ந்ததும் அவள் எதிர் கொண்டது ராமநாதனைத்தான். தன்னைச் சமாளித்துக் கொண்டு விஷயத்தை அவள் சொன்ன போது ராமநாதனின் முகம் வாட்டமுற்றதை அவதானிக்கத் தவறவில்லை. வாட்டமில்லை, சுருங்கியே போயிற்று.

மெதுவாக, ''இனி என்ன செய்வது?'' என்று கேட்டான் ராமநாதன்.

இனி என்ன செய்வது? இனி என்ன செயவது? இனி என்ன செய்வது?

மாத்தறையிலே, 'தண்ணியில்லாக் காடான' கம்புறுகமவுக் குப் போவதைப் பற்றிய அச்சமோ தயக்கமோ அவளின் மனதிலே இன்னும் சிறிதளவு கூட அரும்பவில்லை. அதனைப் பற்றி எண்ணிடக் கூட இல்லை அவள். 'எங்கு போனாலென்ன மனிதர்கள் தானே வாழ்கிறார்கள்' என்ற காமினியின் வார்த்தைகள் இப்போது அவளளவில் அனுபவத்திற்குட்பட்ட நிர்த்தாட்சண்யமான உண்மைகளாகி விட்டன. ஆகவே இடமாற்றத்திற்கு வந்திருக்கும் இடமல்ல; இந்தக் காலம்... அதுதான் பிரச்சினை.

அமைச்சரை அவள் சந்தித்த மறுநாளிலிருந்து சரண பாலாவினதோ, ஏனையோரது முகத்திலோ இலேசான வாட்டம் மிதந்து தெரிந்தது. பொது வேலை நிறுத்தம் ஒன்றினை எதிர்நோக்கியிருந்த அவர்களுக்கு பெரும்பலம் ஒன்று பறிபோன துயரம்; வார்த்தைகளில், செயலில், ஒவ்வொரு நடவடிக்கை யிலும்.

''அக்கா, நீங்கள் இங்கே வந்து ஒரு வருஷ காலம் கூட ஆகவில்லை. அதற்குள்ளே உங்களுக்கு ஒரு இடமாற்றமா?... இதென்ன நீதி? மண்ணாங்கட்டி மந்திரி. அதிகாரம் கையிலை இருக்கிற ஒரே ஒரு காரணத்தாலை சட்டங்களையெல்லாம் தூக்கி ஒரு பக்கத்திலை போட்டுவிட்டு தங்களினுடைய

விருப்பம் போல ஆட்சி செய்யிறாங்கள்...! இந்த அநீதியைக் கேட்க ஒரு வழியுமில்லையோ?''

கோபமும், ஆத்திரமும், அழுகையும், சீற்றமும் குரலிலே குழைந்து குமுறக் கேட்ட சகுந்தலாவை புன்னகையோடு நோக்கினாள் நந்தாவதி.

''பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பனவற்றை தாராளமாக அனுமதிக்கின்ற ஜனநாயகத்தில் இதுதான் உண்மையான நிலைமை...''

விரக்தியோடு சிரித்தாள் சந்திரவதனி.

''மாற்றலாகிப் போறதல்ல இப்போ பிரச்சினை... இந்த இடத்தை, இந்த நட்புறவு மிக்க மனிதர்களை என்றுமே மறக்க முடியாத உங்களை விட்டு பிரிகிறதென்பதைத்தான் என்னாலை நினைக்கவே முடியாமலிருக்கிறது. இதுதான் உண்மையான விஷயம்...''

மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு, சொற்களின் தளும்பலினை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கூறிய நந்தாவதி சிறிது யோசித்து விட்டு, ''என்னுடைய சொந்த ஊரை, சொந்தச் சகோதரர்களை விட்டுப் பிரிகிறபோது எப்படியான துன்பம் ஏற்படுமோ, அதை இப்போதுதான் நான் முதல் தடவையாக உணர்கிறேன்...''' என்றாள்.

அவளின் மனதிலே இறந்த கால நிகழ்வுகள் ஒன்று மாறி ஒன்று வந்தன. அனுராதபுரத்திலிருந்து புறப்பட நினைத்தபோது ஏற்பட்ட குழப்பங்கள்; சஞ்சலங்கள பியதாஸா மாமாவும் விஜயபாலாவும் பேசிக் கொண்டு நின்றவை. யாழ்ப்பாணப் புகையிரத்தில் வந்து இறங்கினவை. செயலகத்தில் பணி புரிந்தவை. குமாரசாமி வீட்டின் இனிய வாழ்க்கை. வேலை நிறுத்த ஆயத்தம். அந்த அமைச்சரின் அட்டகாசச் சிரிப்பும், கருணரெட்ணாவின் அழுக்கு நிறைந்த பார்வையும்...

'ஒரு நாள் வரும். அந்த நாளிலே மனிதன் ஒருவனை ஒருவன் மதித்து உள்ளுர அன்பு செலுத்தி மனித நேயத்தினுள் திளைத்து வாழ்வான். இனபேதம், வர்க்க பேதமற்ற அந்த வாழக்கை முறையிலே கலைகளும், மனிதகுல வளர்ச்சிக்கான எல்லாத் துறைகளும் செழித்துப் பெரும் பரிமாணங்களை அடைந்து கொள்ளும்... சஞ்சலங்களும், துயரங்களும், எதிர்கால அச்சுறுத்தல்களுமில்லாத உலகம் அது. அதைத் தோற்றுவிக்கிற

பணி எங்களிடம்தான் கையளிக்கப் பட்டிருக்கிறது. அந்தப் போராட்டத்தில் குதிக்க நீங்கள் தயாரா?'...

ராமநாதன் கேட்கிறான். அவளின் முன்னே தெரிகிற மனவெளியிலே நிற்பவன் ராமநாதன்தான்; என்றும் நிதானமாகப் பேசுகிற ராமநாதன்.

''அக்கா, என்னுடைய ஆசிரியர் சோமபாலாவுக்கும், ராமநாதனுக்கும் அடிப்படையிலே என்ன வித்தியாசமிருக்கிறது? ஒன்றுமில்லை. இவரைச்சந்திக்க நேர்ந்ததிலே எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியும், அறிவின் தெளிவும் தெரியுமா?''

காமினி தளதளத்தபடி கூறினான்.

அவன் மகவும் உணர்ச்சி வசப்பட்டு நின்றான். அவனது உணர்ச்சிகளைப் பிரதிபலிக்க முடியாதவாறு வார்த்தைகள் தடுமாறியதை நந்தாவதி இப்போதுதான் முதல் தடவையாகக் கண்டு அதிசயமுற்றாள்.

''சிங்களவனையும், தமிழனையும் பொய் வேலியிட்டு பிரித்து வைத்திருக்கிற அரசியல்வாதிகள் அவர்களை நிரந்தரமாகவே பிரித்து வைத்திருக்கலாம் எனக் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள்... அப்பாவி மக்களை எவ்வளவு காலம் ஏமாற்ற முடியும்? ராமநாதனும், சோமபாலாவுந்தான் எதிர் காலத்தினதும், இக்காலத்தினதும் வழிகாட்டிகள். இவர்களை யாராலுமே இனித்தோற்கடிக்க முடியாது... இவர்களையே நாங்கள் பலப்படுத்த வேண்டும்...'''

15

திடுக்கென்று விழித்தெழுந்தாள் நந்தாவதி. விளக்கை எரிய வைத்தாள். மணி அதிகாலை மூன்றரை மணி. இன்னும் ஐந்து மணித்தியாலங்களிலே அடையாள வேலை நிறுத்தம் தொடங்கி விடும். இந்த அடையாள வேலை நிறுத்தம் இலங்கை முழுவதி லுமே எதிரொலிக்கப் போகின்றது. தனக்குத் தரப்பட்டட கடமை யினை அவள் பூரணமாகச் செய்து முடித்திருப்பதையிட்டு பெருமிதமுற்றாள்.

நேற்று இரவு தகப்பனுக்கு எழுதிய கடிதத்தை எடுத்து மீண்டும் வாசித்தாள் நந்தாவதி. இறுதியில் வந்த வசனம், 'இனி

என்ன செய்வது?'--அவள் மூன்று தடவைகள் அந்த வரியை வாசித்தாள். பின்னர் ஒரு முடிவிற்கு வந்தவளாக அந்தக் கடிதத்தை கிழித்து வெளியே வீசினாள். நிம்மதியோடு சில கணம் ஜன்னலடியில் நின்றாள்.

வெளியே ராமநாதனின் குரல் கேட்டது: 'அந்தப் போராட்டத்தில் குதிக்க நீங்கள் தயாரா?'

நந்தாவதி நிமிர்ந்து பார்த்தாள். எதிர்பார்ப்போடு நிற்கிற அந்தப் பெண்; ஜோர்ஜ் கெயிற்சின் ஓவியம். சிறிது நேரம் அப்படத்தை பார்த்து விட்டு புன்னகையோடு படுப்பதற்காகச் சென்றாள் நந்தாவதி.

(தொகுதிக்காக, 1981)

500/=
000936